

சாமுவேல் பவுல் ஐயரின்

கிறித்தவ இலக்கியப் படைப்புகள்

முனைவர் வே. பென்னி

சாமுவேல் பவுல் ஐயரின் கிறித்தவ இலக்கியப் படைப்புகள்

முனைவர் **வே. பென்னி**

சாமுவேல் பவுல் ஐயரின் கிறித்தவ இலக்கியப் படைப்புகள்

முதல் பதிப்பு : 2020

அச்சிட்டு வெளியிடுபவர்

முனைவர் வே. பென்னி

தென்னிந்திய கிறிஸ்தவ ஊழியம் (CMSI)

97, முந்திரி சாலை, கோங்கல்மேடு,

ஈகுவார்பாளையம் அஞ்சல், கும்மிடிபூண்டி வட்டம்,

திருவள்ளூர் மாவட்டம் - 601 201.

அச்சிட்டோர் : மெய்ப்பொருள் அச்சகம்

சென்னை-23.

முனைவர் **ஜி. ஜான்சாமுவேல்**
நிறுவனர் மற்றும் இயக்குநர்,
ஆசியவியல் நிறுவனம்,
செம்மஞ்சசரி, சென்னை – 600119.

அணிந்துரை

அருட்பணியாளர் ராவ்சாகிப் சாமுவேல் பவுல் ஐயரின் கிறித்தவ இலக்கியப் படைப்புகள் எனப் பெயரிய இந்த அரிய நூலினை நண்பர் முனைவர் வே. பென்னி அவர்கள் மிகச்சிறப்பாக எழுதி வெளியிட்டிருப்பது நெஞ்சுக்கு நிறைவும் பெருமகிழ்ச்சியும் தருகின்றது.

இந்திய மண்ணை மேலும் வளப்படுத்தி அதில் நவீன இந்தியாவின் உருவாக்கத்திற்குரிய விதைகளை விதைத்து, நீர்ப்பாய்ச்சி, எருவிட்டு, களைநீக்கி, அவற்றைச் செடியாக, மரமாக பேணி வளர்த்த பெரும் முயற்சியில் கி.பி.19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வெளிநாட்டு, நம்நாட்டுக் கிறித்தவத் தொண்டர்கள், அறிஞர்கள், அருட்பணியாளர்கள் ஆகியோரின் பங்களிப்புகள் ஈடுஇணையற்றன.

கீழைத்தேசப் பின்னணியில் மலர்ந்த ஆதிக்கிறித்தவம் பரவி, வளர்ந்து, மறைந்த இந்திய மண்ணில், மேலை நாடுகளின் திருச்சபைகள் சார்ந்த கிறித்தவம் தனது இரண்டாம் வருகையினை கி.பி.16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஆற்றல்மிக்க சமுதாய வரலாற்றுப் பின்னணியோடு நிகழ்த்திக் காட்டியது. மேலை நாட்டு கத்தோலிக்கத் திருச்சபைச் சார்ந்த அருட்தொண்டர்களும் சீர்திருத்தத் திருச்சபை சார்ந்த தன்னலமற்ற இறையன்பர்களும் இறைப்பணியோடு சமுதாயப் பணியினை இணைத்துத் திறம்பட மேற்கொண்டதால், கிறிஸ்து பெருமானின் இறையாட்சி தமிழகமெங்கும் பரந்து பேரொளி பாய்ச்சுவதற்குரிய அறிகுறிகள் கி.பி.17ஆம் நூற்றாண்டிலிருந்தே தெளிவாகத் தென்படத் தொடங்கின.

தரங்கம்பாடியில் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீர்திருத்த மரபுசார்ந்த முதல் லுத்தரன் சபையைத் தோற்றுவித்த சீகன்பால்க் எனும் ஜெர்மன் நாட்டு இறைத்தொண்டர் தமிழ்க் கிறித்தவ இறையியல், வழிபாட்டு மரபுகள் ஆகியவற்றின் வரலாற்றில் பல புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்தார். முதன் முதலாகக் கிறித்தவத் திருமறை நூலைத் தமிழில் மொழிபெயர்த்தமை, இசையோடு இணைந்த தமிழ்ப் பாடல்களைப் பாடி இறைவனை வழிபடும் மரபினைத் தமிழ்க் கிறித்தவத் திருச்சபையில் புகுத்தியமை, அச்சுப் பொறியிணைக் கொணர்ந்து, தமிழ்க் கிறித்தவம் சார்ந்த நூல்களை அச்சிட்டமை போன்ற அவர்தம் புதிய முயற்சிகளால் தரங்கம்பாடியை மையமாகக் கொண்டு கிறித்தவத் தமிழ்நடை என்ற திருச்சபை சார்ந்த புதிய தமிழ் வழக்கு தமிழ்மொழியின் ஓர் இணைபிரியாத அங்கமாகப் பிறந்து தமிழ்க் கிறித்தவ

ஐக்கியத்திற்கும், கிறித்தவத் தமிழ் போதனைகளுக்கும், கிறித்தவ தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அடித்தளமான தகவல் பரிமாற்றக் கருவியாக ஆற்றலுடன் செயல்பட்டது.

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளோடு அந்நியப்படாது, தமிழ்ப் பண்பாட்டினை இறுகத் தழுவிக்கொண்டு தமிழ் மண்ணில் கிறித்தவம் வளர பிறநாட்டு அருட்தொண்டர்களும் வேதநாயகம் சாஸ்திரியார் போன்ற ஏராளமான தமிழ்ச் சான்றோர்களும் இணைந்து 18ஆம் நூற்றாண்டில் மேற்கொண்ட அரிய முயற்சிகள் அடுத்த 19ஆம் நூற்றாண்டில் தமிழ்க் கிறித்தவத்திற்கு வலுவான மொழி, பண்பாட்டு அடித்தளத்தினை அமைத்துக் கொடுத்தன. இக்காலக்கட்டத்தில் பேராயர் கால்டுவெல், அருட்தொண்டர் பெஸ்கி, இறைத்தொண்டர் ஜி.யு.போப் போன்றோர் கிறித்தவ வளர்ச்சி, திருச்சபைகளின் வளர்ச்சி ஆகியவற்றோடு மட்டும் நில்லாது பரந்த நிலையில் தமிழ் மொழியையும், தமிழ் இலக்கிய இலக்கணப் பரப்பினையும் பண்பாட்டு பெருமைகளையும் உலக அளவிற்குப் பரப்பும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

இந்தக் காலக்கட்டத்தில் தமிழ்த் திருச்சபையின் வழிபாட்டு மரபுகளுக்கும், இறையியல் செறிவுக்கும், தேவியல் சிந்தனைகளுக்கும் மேலும் வளமூட்டும் ஆய்வுச் செய்திகளையும் அறவியல் கருத்துக்களையும், சமய நெறிமுறைகளையும் ஆங்கிலம் போன்ற உலகளாவிய மொழிகளில் அமைந்த நூல்களிலிருந்து தமிழில் மொழிபெயர்த்தும், அவற்றைத் தழுவி ஏராளமான தமிழ்ப் படைப்புகளைத் தமிழ் திருச்சபைக்கும், தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் அறிமுகப்படுத்தியும், அயல்நாட்டு அருட்தொண்டர்களின் அரிய முயற்சிகளையும் புதிதாக எழுந்த தமிழ்த் திருச்சபைகளையும் தமிழ்க் கிறித்தவர்களையும் ஒருங்கிணைத்து தமிழ்க் கிறித்தவத்தை மேலும் வளர்ச்சி நிலைகளுக்கு எடுத்துச்சென்ற இணைப்புப் பாலமாகவும், தமிழ்க் கிறித்தவ இறையியல் சிந்தனைகளை மேலும் கூர்மைப்படுத்தி, வளப்படுத்திய பேராசனாகவும் இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து மக்களின் நன்மதிப்பினைப் பெற்று, ராவ்சாகிப் எனும் உயரிய தகுதிப்பாட்டினையும் ஏந்தி, ஈடுஇணையற்ற கிறித்தவ அடியாராகவும், அருளாளராகவும் திகழ்ந்து மறைந்தவர் மறைத்திரு. சாமுவேல் பவுல் ஐயர் என்ற உண்மைநிலை தமிழ்க் கிறித்தவத் திருச்சபை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது.

பேராயர் ஜான்கால்டுவெல் போன்ற பல மேல்நாட்டுக் கிறித்தவ இறைத்தொண்டர்கள் ஆற்றலுடன் பணியாற்றிய திருநெல்வேலி மாவட்டத்தில் கிறித்தவப் பாதிரியாரின் மைந்தனாக 1884ஆம் ஆண்டு பிறந்த சாமுவேல் பவுல் ஐயர் எழுதிய நூற்றுக்கணக்கான கிறித்தவத் தமிழ் நூல்களில் பெரும்பாலானவை கிறித்தவத் திருமறைச் சார்ந்தவைகளாகவும் கிறித்தவ இலக்கியங்களின் தமிழ்மொழிப்பெயர்ப்புகளாகவும், தியானநூல்களாகவும், வழிபாட்டு நூல்களாகவும், சிறுகதைகள் போன்ற பல்வேறு பொருண்மை சார்ந்தனவாகவும் உள்ளன. பன்முகநோக்கில் அமைந்த அவரதுப் படைப்புகள் தமிழ்க் கிறித்தவம்

என்னும் அடிக்கருத்து அல்லது பொருண்மை (Theme) தமிழ் மண்ணில் மிகப்பரந்த நோக்கில் தழைத்து, வளர்ந்து நிலைபெற பலநிலைகளில் துணைசெய்துள்ளன.

மீட்பு (Salvation) எனும் பொருண்மையில் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட ஜான் பனியனின் உலகப் புகழ்பெற்ற "Pilgrim Progress' எனும் அரிய நூலைப் பரதேசியின் மோட்சப் பிரயாணம் எனும் தலைப்பில் மறைத்திரு சாமுவேல் பவுல் ஐயர் 1882இல் தமிழில் மிகச்சிறப்பாக மூல நூலின் உயிரோட்டம் சிறிதும் சிதையாது மொழிபெயர்த்துள்ளார். 1853இல் மறைத்திரு. ஸ்பால்டிங் (Spaulding) அவர்களால் இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளபோதிலும், சாமுவேல் பவுல் ஐயரின் மொழிபெயர்ப்பே தமிழில் பெரும் செல்வாக்கினைப் பெற்றுள்ளது.

கிறித்தவத் திருமறைக்கு அடுத்த நிலையில் உலக அளவில் பெரும் தாக்கத்தினைப் பல்வேறு மொழிக்குழுவினர் மத்தியில் ஏற்படுத்தியுள்ள ஜான் பனியனின் ஆங்கில நூலின் இந்தத் தமிழாக்கம் கிறித்தவ தமிழ் இலக்கிய வரிசையில் தன்னிகரற்ற தமிழ்ப் படைப்புகளாகக் கருதப்படும் இரட்சணிய யாத்திரிகம், முக்திவழி அம்மானைப் போன்ற அரிய தமிழ்க் கிறித்தவக் காப்பியங்கள் தோன்ற அடித்தளம் அமைத்துத் தந்துள்ளது. அதோடு, மீட்பு என்னும் பொருண்மையில் அமைந்த இணையற்ற பல்வேறு கிறித்தவத் தமிழ்ப் படைப்புகளுக்கும் சாமுவேல் பவுல் ஐயரின் இந்த மொழிபெயர்ப்பு நூலே மூல ஊற்றாக அமைந்துள்ளது என்பது பதிவிடத்தக்கது.

1882ஆம் ஆண்டு வெளிவந்து ஏராளமான பதிப்புக்களைத் தொடர்ந்து கண்ட ஆத்தும நேசரின் அங்கமகத்துவம் என்ற தலைப்பில் அமைந்த சாமுவேல் பவுல் ஐயர் அவர்களின் மெய்ந்நெறி நாட்ட நூல் இன்றுவரை தமிழ்க் கிறித்தவர்களையும், தமிழ்க் கிறித்தவ ஆர்வலர்களையும் இறையன்பு, இறைத்தியானம் ஆகிய பொருண்மைகளில் நெறிப்படுத்தி, பக்திப் பெருக்கில் திளைக்கச் செய்யும் மிகப் பெரும் இலக்கிய சாதனையாக அமைந்துள்ளது. இறைவனின் அங்கங்களைத் தலை முதல் அடி வரை ஒவ்வொன்றாக உணர்ச்சிப் பெருக்கோடு பக்திச் சுவை நனிச்சொட்ட சொட்ட பாடிப் பரவசமடையும் இந்திய மெய்யியல் நாட்டக் கவிதைகளைப் போன்று இந்த உரைநடைப் படைப்புக் கிறித்து பெருமானின் அங்கங்களைத் தனித்தனியாக திருமறைச் செய்திகளின் பின்னணியுடன் சிறப்பித்துத் தியானிக்கிறது. இந்தப் படைப்பு இந்திய மெய்ப்பொருள் நாட்ட இலக்கியங்களுக்கு (Mystic Literature) சாமுவேல் பவுல் ஐயர் வழங்கும் புதுமை தழுவிய ஓர் அரிய பங்களிப்பாகவே அமைந்துள்ளது.

மொழிபெயர்ப்பு வாயிலாக தமிழ் மண்ணில் நுழைந்த கிறித்தவதங தமிழ் திருமறையும், கிறித்தவக் கோட்பாடுகளும் மிக ஆற்றலுடன், ஆழமாகத் தமிழ் மண்ணில் வேர்விட்டு வளர்ந்து, கிளைகளும் விழுதுகளும் பரப்பி, தமிழர்கள் வாழ்வியலின் இணைபிரியாதப் பகுதியாக, தமிழ்ப் பண்பாட்டின் அங்கமாக உருமாற்றம் பெற்று வளரத் துணைபுரிந்த ஒரு மாபெரும் மனிதராக மறைத்திரு சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் வாழ்ந்து மறைந்துள்ளார். இறைத்திரு மைந்தர்

அருள்நாதர் இயேசுவின் இறையாட்சி உலகெலாம் விரிவடைந்து சிறக்கத் துணைநின்ற அனைத்துலக இறைச்சான்றோர் வரிசையில் கிறித்தவச் சிந்தனைகளை தமிழ் மண்ணில் உறுதியாக நிலைப்படுத்தி அறம் வளர்த்த மறைத்திரு. சாமுவேல் பவுல் ஐயர் உயரிய இடத்தைப் பெற்றுள்ளார் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

கிறித்தவத்தின் இரண்டாவது வருகை தமிழ் மண்ணில் நிகழவும், தமிழகத்தில் அது பரவவும் மேலைநாட்டு இறைத்தொண்டர்கள் காரணிகளாக அமைந்தனர் என்றால் அதனை இங்கு நிலைப்படுத்தி, இந்த மண்ணின் மைந்தர்களோடும், அவர்தம் வாழ்வியலோடும் தாய்மொழித் தமிழ் வாயிலாக இணைத்து தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளோடு அயன்மையுணர்வு இன்றி ஐக்கியப்படுத்தி வளர்த்தவர்கள் மறைத்திரு. சாமுவேல் பவுல் ஐயர் போன்ற பல்வேறு தமிழ்ச் சான்றோர்களே என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. இத்தகைய தமிழ்ச் சான்றோர்கள் பலரின் பெயர்களும் பணிகளும் காலவெள்ளத்தில் மறைந்துபோயின அல்லது மறக்கப்பட்டோ, மறைக்கப்பட்டோ போயின. இந்நிலையில் இச்சான்றோர்கள் வரிசையில் தலைமையிடம் பெறும் மறைத்திரு. சாமுவேல் பவுல் ஐயர் அவர்களின் வாழ்வினையும் அர்ப்பணிப்பினையும் பங்களிப்பினையும் அரும்பாடுபட்டுத் தேடிக் கண்டுபிடித்து அனைவருக்கும் பயன்தரும் ஒரு நல்ல நூலாக, முனைவர் பட்ட ஆய்வேடாக வடிவமைத்துள்ள நண்பர் முனைவர் வே. பென்னி அவர்களின் அரிய பணிக்கு தமிழ்ச் சமுதாயம், குறிப்பாகத் தமிழ்க் கிறித்தவச் சமுதாயம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

உதிர்ந்துபோன கிறித்தவத் தமிழ் இலக்கிய மலர்களைத் தேடிக் கண்டுபிடித்து அழிவிலிருந்து அவற்றைப் பாதுகாத்து பதிப்பித்து வெளியிடும் நல்ல பணியில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டுவரும் நண்பர் பேராசிரியர் முனைவர் யோ.ஞானசந்திர ஜான்சன் அவர்களின் நெறிப்படுத்துதலின்கீழ் இந்த அரிய நூல் தயாரிக்கப்பட்டிருப்பது அதன் தனித்தன்மைக்கும், உயரிய தரத்துக்கும், விழுமிய நோக்கிற்கும், சமுதாயப் பொறுப்புணர்விற்கும் சான்றாக அமைந்துள்ளது.

நண்பர் முனைவர் வே. பென்னி அவர்கள் இதுபோன்ற நல்ல பல படைப்புக்களை வெளிக்கொண்டுவந்து தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புக்களை நல்கியுள்ள மேலும் பல கிறித்தவத் தமிழறிஞர்களின் சாதனைகளை உலகறியச் செய்யவேண்டும் என்பது என் அன்பான வேண்டுகோளாகும்.

சென்னை, அன்புடன்,

12-04-2020 **ஜி. ஜான்சாமுவேல்**

முனைவர் **யோ. ஞானசந்திர ஜாண்சன்**
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)
கிழக்குத் தாம்பரம், சென்னை – 59

வாழ்த்துரை

இந்திய வரலாற்றில் திருப்பங்கள் பல ஏற்பட்ட காலக்கட்டத்தில், திருநெல்வேலிச் சீமையில் புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளர்கள் தங்கள் ஆளுமைகளின் மூலம் எண்ணற்ற, வரலாற்றில்தனித்துவம் பெற்ற, பல படைப்புகளைப் படைத்துள்ளனர். இப்பகுதியிலுள்ள எச். ஏ. கிருஷ்ண பிள்ளை, பாரதியார், சாமுவேல் பவுல் ஐயர், சுவீகரனார் போன்ற பல படைப்பாளர்களின் படைப்புகளால் தமிழ் இலக்கியம் வீறுநடை போட்டது. விடுதலைப் போராட்ட காலக்கட்டத்தில் பாரதியின் படைப்புகள் மக்கள் மத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது போன்று, கிறித்தவ இலக்கிய உலகில் சாமுவேல் பவுல் ஐயரின் படைப்புகளும், அவரின் மொழிபெயர்ப்பு நூலினை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட இரட்சண்யயாத்திரிகம், முக்திவழிஅம்மானை போன்ற நூல்களும் கிறித்தவ இலக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இரட்சண்ய யாத்திரிகம் என்னும் தழுவல் காப்பியத்திற்கு, ஜான்பனியனின் பில்கிரிம்ஸ் புராகிரஸ் என்னும் ஆங்கில நூல் அடிப்படையாக இருந்தாலும், சாமுவேல் பவுல் ஐயர் தமிழில் மொழிபெயர்த்த 'மோட்சப்பிரயாணம்' என்னும் நூல் கிருஷ்ணபிள்ளைக்குக் கிடைத்தமையால் தான் அவரால் இரட்சண்ய யாத்திரிகத்தைப் படைக்கமுடிந்தது என்பது உண்மை. சாமுவேல் பவுல் ஐயரின் பல பதிப்புகளைக் கண்ட 'ஆத்தும நேசரின்அங்கமகத்துவம்' என்னும் நூல் ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தியான நூலாக அமைந்ததுமட்டுமன்றி, அவர்களது ஆன்மிக வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ளத் துணை நின்றுள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் எழுதப்பட்ட இவ்விரு நூல்களையும் மக்கள் இன்றும் படித்துப் பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு நூல்களின் உரைநடை இன்றைக்குப் படிக்கின்றவர்களாலும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

வேதநாயக சாஸ்திரியார் தமது படைப்புகளில் பெத்லகேம் குறவஞ்சி, ஞானஉலா, பேரின்பக் காதல் என்னும் மூன்று நூல்களில் கேசாதிபாத வருணனையை அமைத்துள்ளார். இதில் பெத்லகேம் குறவஞ்சியிலுள்ள வருணனை சீயோன் மகளை வருணிப்பதாக உள்ளது. அடுத்துள்ள இரண்டு நூல்களிலும் இயேசு கிறிஸ்துவை வருணிப்பதாக அமைந்துள்ளது. பொதுவாக இறைவனை பாதாதி கேசமாக வருணிப்பது வழக்கு. ஆனால் இதற்கு மாறாக, இவ்விரு வருணனை முறைகளும் இயேசுகிறிஸ்து, மரியாளின் வயிற்றில் பிறந்து, மனிதனாக வாழ்ந்தார் என்னும் கருத்தினை எடுத்தியம்ப

இயேசுகிறிஸ்துவைக் கேசாதிபாதமாக வருணித்துள்ளார். ஆனால் இதற்கு மாறாக சாமுவேல் பவுல் ஐயரின் ஆத்துமநேசரின் அங்கமகத்துவம் அமைந்துள்ளது. இந்நூலில் ஆண்டவரின் அங்கங்களைப் பற்றிய 28 தியானங்கள் உள்ளன. இவை பாதாதிகேசம் என்னும் முறையில் அமைந்துள்ளன. இயேசு கிறிஸ்துவின் பாதம் தொடங்கி, சிரசில் முடியும் இத்தியானக் களஞ்சியத்தில் ஆண்டவரின் பாதம், கால், முழங்கால், அரை, வயிறு, மார்பு, விலா, முதுகு, தோள், கை, கைவிரல், காது, கன்னம், வாய், கண், முகம், சிரசு என்னும் பதினேழு உறுப்புகள் தியானிக்கப் படுகின்றன. வேதநாயக சாஸ்திரியார் வருணனை முறையிலும் சாமுவேல் பவுல் ஐயர் தியான முறையிலும் இயேசு கிறிஸ்துவின் அங்கங்களை விவரித்துள்ளனர். இருவரின் இலக்கியங்களும் வெவ்வேறு வகையின.

சாமுவேல் பவுல் ஐயர் ஏராளமான நூல்கள் எழுதியிருந்தாலும் கிறித்தவ இலக்கிய உலகில் இன்று மறக்கப்பட்டவராகவே காணப்படுகிறார் என்பது வருத்தத்திற்குரியதே. இவரின் குறிப்பிடத்தக்க சில நூல்கள் பல பதிப்புகளைக் கண்டு மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளன. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னையிலுள்ள கிறித்தவ இலக்கியச் சங்கத்திற்குச் சென்றிருந்தால் இந்நூல்களின் விற்பனையைக் கண்ணுற்றிருக்கலாம். கிறித்தவம் தொடர்பான ஏராளமான நூல்களை இவர் இயற்றியிருப்பினும் சில நூல்களே இன்று நமக்குக் காணக் கிடைக்கின்றன. கிறித்தவ இலக்கிய உலகில் இது மிகவும் துயரமானது. இதுபோன்று ஏராளமான கிறித்தவப் படைப்பாளர்களின் படைப்புகளைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

அண்டிரிக் அடிகளாரின் காலத்திலிருந்து மெல்ல எட்டிப் பார்க்கத் தொடங்கிய கிறித்தவ இலக்கியம், வீரமாமுனிவரின் காலத்தில் ஓட்டம் பிடிக்கத் தொடங்கி, வேதநாயக சாஸ்திரியாரின் காலத்தில் விரைவாக ஓடி, இருபதாம் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்தது. இருபத்தியோராம் நூற்றாண்டில் சோர்வடைந்து இங்கொன்றும் அங்கொன்றுமாக கிறித்தவ இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. இன்று, கிறித்தவப் படைப்பிலக்கியங்கள் வெளிவருவது இல்லை என்று சொல்லும் அளவிற்கு உள்ளது. அந்த அளவிற்கு இன்றைக்கு கிறித்தவ இலக்கியங்களின் நிலை காணப்படுகிறது. இது வருத்தத்திற்குரியதே.

எனவே, பழைய கிறித்தவ இலக்கியங்களைக் கண்டுபிடித்து, அவற்றை மக்களுக்கு அறிமுகம் செய்வது இன்றையக் கிறித்தவர்களின் தலையாய கடமையாகும். சாமுவேல் பவுல் ஐயர், வேதநாயக சாஸ்திரியார், ஜான் பால்மர் போன்ற எண்ணற்ற படைப்பாளர்களின் கிறித்தவ இலக்கியங்கள் மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் இருப்பதை, மீண்டும் பதிப்பித்து வெளிக்கொணர வேண்டும். இக்காலக்கட்டத்தில் இப்பணியைச் செய்யாவிடின், இந்நூல்கள் அழிந்துவிடும் என்பது உறுதி. அண்மையில் ஆசியவியல் நிறுவனம் கிருஷ்ண பிள்ளையின் ‘இரட்சண்ய யாத்திரிகம்’, ஜான் பால்மரின் ‘கிறிஸ்தாயனம்’ என்னும் இரண்டு காப்பியங்களையும் காணக்கிடைக்காத பழைமையான 18 கிறித்தவச் சிற்றிலக்கியங்களைத் தொகுத்து ‘கிறித்தவச் சிற்றிலக்கியத் திரட்டு’ என்னும் தலைப்பிலும் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது.

கிறித்தவ இலக்கியங்கள் அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்னும் நல்எண்ணத்தில் நண்பர் முனைவர் வீ. பென்னி அவர்கள் நல்முயற்சியெடுத்து, சாமுவேல் பவுல் ஐயரின் நூல்களைப் பல ஊர்களுக்கும் சென்று அலைந்து திரிந்து கண்டுபிடித்து, அவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ்வாய்வு நூலைப் படைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. இந்நூல் சாமுவேல் பவுல் ஐயரின் கிறித்தவ இலக்கியப் பணிகளை முழுமையாக எடுத்துரைக்கின்றது.

முனைவர் வீ. பென்னி அவர்களின் உடன்பிறந்த மூத்த சகோதரர் முனைவர் வீ. ஞானசிகாமணி அவர்கள் எச். ஏ. கிருஷ்ண பிள்ளையின் நூல்கள் குறித்து ஆய்வு செய்து 1976ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் மூலம் முனைவர் பட்டம் பெற்றவர்; சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் முன்னாள் மாணவர்; இரட்சண்ய யாத்திரிகச் சான்றோன் என்னும் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றவர். அவர்கள் பல கிறித்தவ இலக்கியங்களை மறுபதிப்பு செய்து வெளியிட்டு, தம் வாழ்வைக் கிறித்தவ இலக்கியத்திற்காகவே அர்ப்பணித்தவர். அத்தகைய பெருமகனாரின் சகோதரர் முனைவர் வீ. பென்னி அவர்களும் தமது சகோதரரின் பாதையில் சென்று, கிறித்தவ இலக்கியப் பணியாற்றி வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

இந்நூலுக்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிகுந்த பாராட்டிற்குரியன. இன்றைய கிறித்தவ இலக்கிய உலகத்திற்கு இந்நூல் மிகவும் தேவையானது. நூலாசிரியர் இதுபோன்று இன்னும் பலநூல்களைப் படைத்து, கிறித்தவ இலக்கிய உலகத்திற்கு மேன்மேலும் பணியாற்ற இறைவன் அனைத்து அருட்கொடைகளையும் அவருக்கு வழங்க வேண்டுகிறேன்.

தாம்பரம், நிறைந்தஅன்புடன்,

11-6-2020 **யோ. ஞானசந்திர ஜாண்சன்**

முனைவர் **து. மேஷாக்**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)
கிழக்குத் தாம்பரம், சென்னை - 59

மதிப்புரை

18ஆம் நூற்றாண்டின் தொடக்கமுதல் தமிழ் உரைநடையில் புதுமை இடம்பெற வித்திட்டவர்கள் மேலை நாட்டு அருட்தொண்டர்கள் அவர்களைத் தொடர்ந்து தமிழகத்தில் பலரும் தமிழ்மொழியில் புதுமையோடு பல்வேறு இலக்கிய வகைமைகளில் உரைநடையை எளிமைப்படுத்தி மொழிக்கும் சமுதாயத்திற்கும் சமயத்திற்கும் பல நிலைகளில் தொண்டாற்றினர். அவ்வகையில் கிறித்தவம் தழுவிய சிலர் இறைத்தொண்டர்களாக மாற்றம் பெற்று ஆற்றிய அருட்பணி, தமிழ்ப்பணி அளப்பறியது.

அவர்களில் சிலர் பலவகையான பின்புலத்தோடு சமுதாயத்திற்கு அறிமுகமாயினர். வாழுங்காலத்தில் சிலருடைய பணிகளும் படைப்புகளும் வேண்டிய அறிமுகம் இல்லாததாய் இருந்தன. பிற்காலத்தில் சிறப்புடனும் பட்டங்களுடனும் இருப்பினும் வேண்டிய அறிமுகமற்று இருந்த ராவ்சாகிப் சாமுவேல் பவுல் ஐயரின் அனைத்துப் படைப்புக்களையும் முழுமையாக ஆய்வு செய்து வே. பென்னி தமிழ் உரைநடை வளர்ச்சி வரலாற்றில் சாமுவேல் பவுல் ஐயர் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார் என்பது அவருடைய நூல்களின்வழி அறியமுடிகிறது. இறைத்தொண்டரான பவுல் ஐயர் 18 உரைநடை நூல்களை எழுதியுள்ளார். 100க்கும் மேற்பட்ட சிறுநூல்களையும், ஒற்றைத்தாள் சிந்தனை பிரதிகளையும் எழுதியுள்ளார்.

சாமுவேல் பவுல் ஐயரின் கிறித்தவ இலக்கியப் படைப்புகள் என்னும் இந்நூல் அவருடைய படைப்புக்களை, தியானநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், விவிலிய விளக்க நூல்கள் என பகுத்து அவற்றின் சிறப்பினையும் தனித்தன்மையையும் கூறுவதாக அமைந்துள்ளது. நூலாசிரியர் வே. பென்னி அவர்கள் தனது முதுகலைப் பட்டத்தை அமெரிக்காவில் சின்சினாட்டி கிறித்தவ பல்கழைக்கழகத்திலும் கிறித்தவ இறையியல் கல்வி பயின்றவர். முழுநேர இறைப்பணியில் ஈடுபட்டு வருபவர். விவிலியம், இறையியல் சார்ந்த விளக்க நூல்கள் பதிப்பிக்கும் பணியையும் தொடர்ந்து செய்து வருபவர். தமிழ், தெலுங்கு மொழி பேசும் பகுதிகளில் திருச்சபைகளை உருவாக்கி நற்செய்தி பணியையும் மேற்கொண்டு வருபவர். அவருடைய கல்வி அறிவின் வழியும், நடைமுறை வாழ்வியில் மூலமாகவும், கற்ற இறையியல் நூலின் வழி நேர்த்தியாக வெளிப்படுவதை அறிய முடிகிறது.

சாமுவேல் பவுல் ஐயரின் கிடைத்த நூல்கள் சிலவற்றை அருட்திரு. தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்கள் கிறித்தவ இலக்கிய சங்கத்தின் வழி மறுபதிப்பு செய்துள்ளார். அவருடைய அறியப்படாத நூல்களான

வேதோபகரணம், துக்கசாகரத்தோணி முதலிய நூல்களை நூலாசிரியர் கண்டறிந்து விளக்கப்படுத்தியுள்ள முறைமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிறித்தவர் தங்களுடைய பக்தி வாழ்வை செழுமைப்படுத்தி கொள்வதற்கான செய்திகளை உள்ளடங்கிய தியான ஆலயம், தியானச்சோலை, ஆத்தும நேசரின் அங்கமகத்துவம், இயேசுகிறிஸ்துவின் ஜீவியம், கர்த்தருடைய ஜெபம் முதலிய நூல்களைப் பகுத்து நடைமுறை வாழ்வியலைக் கற்றுக் கொள்வதற்கும் கடைபிடிப்பதற்கும் ஏற்ற வகையில் விளக்கியிருப்பது நூலின் தனிச்சிறப்பாகும்.

விவிலியத்தில் இடம்பெறும் மாற்றங்களை அவர்களுடைய பண்பு நலனுடன் வெளிப்படுத்தும் பழைய ஏற்பாட்டு புருஷர் (இரண்டு பாகம்), புதிய ஏற்பாட்டு புருஷர் முதலிய நூல்கள் இயேசு கிறித்துவை பின்பற்றுபவர்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டியவை என்பதை இந்நூல் எடுத்துரைக்கிறது. ஜான் பனியன் எழுதிய பில்கிரிம்ஸ் பிராகிரஸ் என்ற ஆங்கில உரைநடை நூலின் தழுவலாக தமிழ்மொழியில் பல நூல்கள் வந்திருப்பினும் 1882ஆம் ஆண்டில் வெளிவந்த சாமுவேல் பவுல் ஐயரின் மொழிபெயர்ப்பே இன்றளவும் நிலைத்து நிற்பதை பிற நூல்களுடன் ஒப்பிட்டு ஆசிரியர் விளக்கம் தருகிறார்.

இந்நூல் சாமுவேல் பவுல் ஐயர் எழுதிக் கிடைத்த மற்றும் கிடைக்காத அனைத்து நூல்களையும் கண்டறிந்து பட்டியலிட்டிருக்கிறார். 19ஆம் நூற்றாண்டு தமிழ் உரைநடை வளர்ச்சி வரலாற்றில் குறிப்பிடத்தக்கவராக விளங்கியவர் சாமுவேல் பவுல் ஐயர் என்பதை எடுத்துரைக்கிறது. வே. பென்னி அவர்களின் இந்நூல் தமிழ் இலக்கிய ஆர்வலர்களும் கிறித்துவ இறையியல் கற்பவர்களும், கற்பிப்பவர்களும், நற்செய்தி பணியாற்றுகிறவர்களும், கிறித்துவை பின்பற்றுகிறவர்களும் படித்து அறிந்துகொள்ள வேண்டிய வரிசையில் இடம்பெற வேண்டிய முக்கிய நூலாகும்.

மாறாத அன்புடன்
து. மேஷாக்

என்னுரை

எழுதப்பட்ட இலக்கியப் படைப்புகளில் சில மட்டுமே காலம் காலமாக எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும் தன்மையுடையன. அந்நிலையில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாமுவேல் பவுல் ஐயரின் வாழ்வும், தொண்டும் இலக்கியப் படைப்புகளும் தனித்துவம் பெற்று விளங்குகின்றன. கவிதையோ என்று கருதத்தக்க அவரது கிறித்தவ தமிழ் இலக்கிய படைப்புகள் ஆற்று ஒழுக்கான நடையில் அமைந்துள்ளன.

சாமுவேல் பவுல் ஐயர் முழுநேர இறைப் பணியை வயிற்றுத் தொண்டாக கருதாமல் இறை வாழ்வுத் தொண்டாக கருதி செய்தவர். வேதபுத்தகத்தில் ஆழங்கால் பட்ட அவர் அங்கு மறைந்து கிடந்த முத்துக்களை எடுத்து இலக்கியப் போக்கில் தந்தது வேதத்திற்கும், இலக்கியத்திற்கும், இறை மக்களுக்கும் நல்லதொரு 'மின்னல் வெளிச்சம் காட்டியது போன்றதாகும். சாமுவேல் பவுல் ஐயர் எழுதியுள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படத் தக்கன. அதை மறந்தும், மறைத்தும் வைத்திருந்த நிலையிலிருந்து வெளிக்கொணர வெளிச்சம் தேவைப்பட்டது.

அந்த நட்சத்திர வெளிச்சத்தை ஓரளவுக்காயினும் மக்கள் மத்தியில் புலப்படுத்த இறைவன் எனக்குத் தந்த அவருடைய வழி நடத்துதலுக்கு நன்றி செலுத்துகிறேன்.

சாமுவேல் பவுல் ஐயரின் படைப்புகள் குறித்த முனைவர்பட்ட ஆய்வுத் தொடங்கப்பட்டபோது எஸ். ஜி. தானியேல் அவர்களின் 'சாமுவேல் பவுல் ஐயரின் வாழ்க்கை வரலாறு' என்னும் நூலின் வழி அவர் எழுதிய நூல்களின் விவரம் தெரிய வந்தன. மேலும் அவருடைய நூல்கள் சிலவற்றைத் தேடி மீண்டும் பதிப்பித்த அருள்திரு. முனைவர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களின் பங்கு நினைவுகூரத்தக்கது.

பிற நூல்களைத் தேட முற்பட்டபோது செய்திகள் கிடைத்தில. தொடர் முயற்சியின் காரணமாக துக்கசாகரத் தோணி, வேதோபகரணம் ஆகிய நூல்கள் கிடைத்தன. வேதோபகரணம் நூலின் பிரதி நகல் பெங்களூருவில் உள்ள UTC வேதாகம கல்லூரியில் கிடைத்தது. இவ்விரண்டு நூல்களின் மறுபதிப்புகளை வெளியிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறேன். அரிய பொக்கிஷமாகிய இத்தகைய நூல்கள் இறையியல் கற்பவர்களுக்கும் சபை போதகர்களுக்கும் பயன்தரக்கூடிய முக்கிய நூல்களாகும். இன்றைய தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக செய்திகள் எளிமையாகக் கிடைப்பதின்வழி தகவல் திரட்டுவதும் நூலாக்கம் செய்வதும் எளிதானது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின்

முற்பகுதியில் எழுதப்பட்ட நூல்களின் தகவல்களும் நூலாக்க முறையும் நமக்குக் கிடைத்திருக்கும் அரிய பொக்கிஷமாகும்.

1958இல் சுவிசேஷ ஊழிய நூல் நிலையம், சென்னை 600007 இல் பதிப்பிக்கப்பட்ட 677 பக்கங்களைக் கொண்ட சாமுவேல் பவுல் ஐயரின் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு என்னும் புத்தகத்தின் பிரதி எங்கும் கிடைக்காத நிலையில் பாளையங்கோட்டை சுவிசேஷகர் குருசிங் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்று ஆய்வு செய்யப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு நோக்கிலும் இறையியல் நோக்கிலும் மிக விரிவாக விளக்க தமிழில் வெளிவந்த முதல் நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைப்பணியை இறைப்பணி என்று முற்றும் கருதாமல் முத்து, பவளங்கள் சேர்த்து இணைக்கப்பட்ட தங்கச் சங்கிலி போல இலக்கிய இழையோட்டமான நிலையை கொடுத்தது பாராட்டுக்குரியது. இது இன்றைக்கு மட்டும் அல்ல பின்வரும் சந்ததிக்கும் உதவ வேண்டும் என்ற நோக்குடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இன்று நூல் வடிவில் உங்கள் கரங்களில் மலர்ந்து இருக்கிறது. இதுபோல மறைக்கப்பட்ட நூல்கள் மக்கள் மன்றத்தில் உலாவ வேண்டும் என்பது என் வாஞ்சை. அதற்கு ஆய்வுலகம் துணை நின்று தூண்டுகோளாய் அமையும் என்று நம்புகின்றேன்.

கிறித்தவ தமிழ் இலக்கிய வரலாற்றை மிக நேர்த்தியாக பதிவு செய்து இந்த ஆய்வு நூலுக்கு வளம் சேர்க்கும் வகையில் மிகச் சிறப்பு வாய்ந்த அணிந்துரை வழங்கிய பேரன்புக்குரிய முனைவர் ஜி. ஜான் சாமுவேல் அவர்கட்கு நன்றிகள் பல. பேரறிஞர்களின் படைப்புகள் கிறித்தவ இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைப் புலப்படுத்தி இந்த ஆய்வு நூலுக்கு வழிகாட்டி வாழ்த்துரை வழங்கிய நெறியாளர் மேனாள் சென்னைக் கிறித்தவக் கல்லூரி துறைத்தலைவர் பேராசிரியர் யோ. ஞானசந்திர ஜாண்சன் அவர்கட்கு என் நன்றிகள்.

நல்லதொரு மதிப்புரை வழங்கிய சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தமிழ்த்துறை துணைப் பேராசிரியர் முனைவர் து. மேஷாக் அவர்கட்கு என் நன்றி.

ஆய்வுக்கு அடித்தளம் இட்ட நண்பர் மேனாள் தாவரவியல் துறைத்தலைவர், பேராசிரியர் முனைவர் து. நரசிம்மன், மற்றும் நண்பர் வழக்கறிஞர் D.S.N. காந்தி ஆகியோர் என்றும் என் நினைவில் நிற்பவர்கள்.

கிறித்தவ தமிழ் அறிஞர், இரட்சணிய யாத்திரிகச் சான்றோன், மறைந்தும் தம் அரிய கிறித்தவ இலக்கிய பதிவுகளால், படைப்புகளால், இறைத்தொண்டால், அறியப்பட்ட என் மூத்த சகோதரர் பேராசிரியர் முனைவர் வீ. ஞானசிகாமணி என்றும் நினைக்கப்பட வேண்டியவர்.

சாமுவேல் பவுல் ஐயர் எழுதி புத்தக வடிவில் வந்தும், கிடைக்கப் பெறாத நூல்கள் ஆய்வுக்கு கிடைக்கக் களப்பணியில் பெரும் உதவி செய்த இறையியல் பேராசிரியர் R. வேதகிரி அவர்களுக்கு என்றும் என் நன்றி.

இந்த ஆய்வு நூல் முழுமைபெற துணைநின்ற மனைவி எலிசபெத் ராணி, மகள் Dr. ஹெலன் கிரேஸ், மகன் ஹாரி கிறிஸ்டோபருக்கு என் வாழ்த்துக்கள்.

இந்த நூலை தட்டச்சுச் செய்து சிறப்பாக வடிவமைத்து கொடுத்த கா. திருமாறனுக்கு என் வாழ்த்துக்கள். நூலை அச்சடித்து கொடுத்த என் நண்பர் D. தேவவரம் அவர்களுக்கு (மெய்ப்பொருள் அச்சகம்) என் நன்றிகள்.

கிறித்தவ தமிழ் இலக்கியங்களில் முதற்பொருளாய் விளங்கிய எல்லாம் நிறைந்த இறைவன் இந்த ஆய்வுக்கு தொடக்கமாய் இருந்து, நிறைவு செய்து, நூல் வடிவமும் பெற காரணமான அவருக்கே போற்றுதலும், நன்றிகளும் என்றென்றும் உரியன.

பொருளடக்கம்

இயல்	பொருள்	பக்கம்
1.	கிறித்தவ இலக்கியப் பணி	19
2.	தியான நூல்கள்	42
3.	மொழிபெயர்ப்பு நூல்	90
4.	விவிலிய விளக்க நூல்கள்	128
5.	உரைநடைத்திறன்	206
	பின்னிணைப்புகள்	230
	துணைநூற்பட்டியல்	247

DEDICATION

LATM

Board Members & Staffs

Chris DeWelt
& Phil Casey

சாமுவேல் பவுல் ஐயரின் வாழ்வும் படைப்பும்

முன்னுரை

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கிறித்தவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் தமிழ்மொழியில் புலமை மிக்க சில தமிழ்க் கிறித்தவர்கள் தம் சமய உண்மைகளையும் அதனால் தாம் அடைந்த அனுபவங்களையும் விளக்கும் வண்ணமாகத் தமிழ்மொழியில் வடித்து அவற்றிற்கு இலக்கிய வடிவம் தந்துள்ளனர். இப்பின்புலத்தில் தமிழ்ப் பணியையும் இறைப்பணியையும் சிறப்புற மேற்கொண்ட சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். சாமுவேல் பவுல் ஐயரின் பணிகளும் நூல்களும் அறியப்படாத நிலையில் காணப்படுவதால் அவருடைய முழுமையான பணிகளை வெளிக்கொணர வேண்டும் என்ற என் பல நாள் எண்ணம் இந்நூலின் மூலம் முழுமையானது.

தமிழ்மொழி இலக்கிய, இலக்கண வரலாற்றின் வளர்ச்சியில் பதினெட்டாம் நூற்றாண்டில் கிறித்தவர்களின் பங்களிப்பு சிறப்பானதாகக் கருதப்பெறுகின்றது. தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பற்தலொமேயு சீகன்பால்கு, பெப்ரிஷியஸ், வீரமாமுனிவர், கால்டுவெல், எல்லிஸ், ஹென்றிபவர், டாக்டர் ஜாண் மார்டாக் முதலிய அயல்நாட்டுப் பாதிரிமார்களும் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, எச். ஏ. கிருஷ்ணபிள்ளை முதலிய உள்நாட்டுக் கிறித்தவர்களும் அடித்தளம் அமைத்தனர். இவர்களின் வரிசையில் தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும், இறையியலுக்கும் தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர்களுள் சாமுவேல் பவுல் ஐயர் குறிப்பிடத்தக்கவர்.

திருத்தமுறைக் கிறித்தவம்

கிறித்தவம் கத்தோலிக்கம், திருத்தமுறை என இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. இருபிரிவினரும் தமிழ்மொழி, இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர். அவ்வகையில் தமிழில் முதன்முதலாக நூல் இயற்றியவர்கள் கத்தோலிக்கத் திருத்தொண்டர்களாகவே உள்ளனர். சீகன்பால்கு முதலாவதாகத் திருத்தமுறைக் கிறித்தவத்தின் சமயப் பணியையும் இலக்கியப் பணியையும் வளர்ச்சி பெறச் செய்தார். சீகன்பால்கு, 40,000 சொற்கள் கொண்ட ஒரு தமிழ் அகர முதலியைத் தொகுத்துத் தமிழ்ச் சொற்களுக்குச் செர்மானிய மொழியில் பொருள் தந்துள்ளார். 1708 ஆம் ஆண்டின் இறுதியில் புதிய ஏற்பாட்டை முதன்முதல் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். 1711, மார்ச்சு, 21 ஆம் நாளுக்குள், புதிய ஏற்பாடு முழுவதையும்

தமிழாக்கம் செய்து முடித்தார். 1712-இல் இவருக்கு இங்கிலாந்திலிருந்து ஓர் அச்சகம் அமைத்தளிக்கப்பட்டது. 1715-இல் புதிய ஏற்பாடு தமிழில் அச்சானது. இந்திய மொழிகளில் முதன் முதல் தமிழிலேதான் வேதாகமம் அச்சானது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. சீகன்பால்கு பழைய ஏற்பாட்டில், ரூத்து ஆகமம் வரையில் மொழிபெயர்த்தார். எனவே, இவரே திருத்தமுறைக் கிறித்தவ இலக்கியத்தின் தோற்றத்திற்குக் காரணமானவர் எனலாம். திருத்தமுறைத் திருத்தொண்டர் தமிழ்ப்பணி இவ்வாறு தொடங்கியதாகக் கிறித்தவ ஆய்வியல் அறிஞர்களின் வழி அறிய முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாடு ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டது என்றாலும், அவர்கள் கிறித்தவம் பரவுதலின் மூலம் தங்கள் குடிமக்களைக் கலக்கமடையச் செய்ய விரும்பவில்லை, ஆதலால், கிறித்தவத்தின் பரவலுக்கு எதிர்பார்த்தவாறு இடமளிக்கவில்லை என்று முன்னாள் நெல்லைப் பேராயர் தேவான் நீல் கூறுகிறார். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் பெரிதும் குன்றியிருந்த நற்செய்தித்தொண்டு சுவார்ட்சு ஐயர் திருநெல்வேலியில் செய்த தொடக்கத்துடன் புதுத் திருப்பம் பெற்றது. அக்காலகட்டத்தில் அருட்பணி செய்யவந்த இரேனியசு ஐயர் அவர்களின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

சி.டி. இரேனியசு ஐயர்

1816-இல் ஜேம்ஸ் யூக்கு (James Hough) என்பவர் பாளையங்கோட்டைக்கு வந்தவுடன் சமயப்பணி மீண்டும் புத்துயிர் பெற்றது. அவர் பல கல்விக்கூடங்களைத் திறந்தார்; தாம் நாட்டைவிட்டுச் செல்லும் தருவாயில், அக்காலத்தில் சென்னையில் பணியாற்றி வந்த திருத்தொண்டர் கழகத்தினரைத் (Church Missionary Society) திருநெல்வேலிக்கு வந்து பணியாற்றுமாறு வேண்டினார். அதன் விளைவாக ஆங்கிலக் கழகத்தினர் 1820ஆம் ஆண்டில் செர்மானியரான சி.டி.இரேனியசு ஐயரைத் திருநெல்வேலிக்கு அனுப்பினர். சிறந்த தமிழ்ப் புலமை பெற்ற இவர், இம்மாவட்டத்தில் திருத்தமுறைக் கிறித்தவம் உறுதியாகக் காலூன்றச் செய்தார். இவர்களின் வழியைப் பின்பற்றி, ஐரோப்பியர் அல்லாத தமிழ்க் கிறித்துவர்களும் தமிழ்த் தொண்டினை ஆற்றியுள்ளார்கள். இரேனியசு ஐயரின் உதவியால் சாமுவேல் பவுல் ஐயரின் தந்தை தானியேல் பவுல் ஐயர் கல்வியிலும் பிறநிலையிலும் வளர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கியம் என்பது, ஏடுகளில் எழுதப்படும் யாப்புக்கட்டுக்குரிய சந்த நடைச் செய்யுளாக இருந்த காலங்களில், ஐரோப்பிய கிறித்தவத் தொண்டர்களே உரைநடைக்குள் தமிழை உருமாற்றம் செய்ததை *மயிலை சீனி. வேங்கடசாமி* அவர்கள், "தமிழ்நாட்டிற்கு வந்த பாதிரிமார்கள் தமிழ்மொழியைக் கற்றுத் தேர்ந்து தமிழில் பேசவும், சொற்பொழிவு நிகழ்த்தவும், நூலியற்றவும் தொடங்கினார்கள். இவ்வாறு தமிழ் மொழிக்கும், ஐரோப்பிய பாதிரிமார்க்கும் ஏற்பட்ட தொடர்பினால், தமிழிற் சில மாறுதல்கள் அல்லது முன்னேற்றங்கள் ஏற்பட்டன. தமிழ்மொழிக்கு

ஏற்பட்ட மாறுதல் அல்லது வளர்ச்சி அனைத்தும் பாதிரிமார்களால் உண்டானவையே. கிறித்தவர்களால் தமிழுக்கு ஏற்பட்ட அபிவிருத்தி எல்லாம் பாதிரிமாரைச் சேர்ந்ததே."[1] என்று *கிறித்தவமும் தமிழும்* எனும் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

தானியேல் பவுல் ஐயர்

சாமுவேல் பவுல் ஐயரின் தந்தையார் தானியேல் பவுல் ஐயரைக் குறித்து *எஸ்.ஜி. தானியேல்* அவர்கள், "ஆசீர்வாதபுரம் சேகரத்திலுள்ள கலுங்குவிளை என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்து, இளம் வயதில் படிப்பில் நாட்டமில்லாமல் இளைஞனாகும்வரை தமது சொந்தப் பணியைப் பார்த்து வந்தார். அப்போது தாம் படிக்காமல் இருப்பதைக் குறித்துக் கவலையடைந்து தாய் தந்தையின் அனுமதி பெற்று பள்ளிக்கூடம்போய் நாள்தோறும் சிறிது நேரம் படிக்கவும் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார்."[2] என்று குறிப்பிடுகிறார்.

1834ஆம் வருடம் இரேனியஸ் ஐயரின் உதவியால் இவர் பள்ளியில் சேர்க்கப்பட்டு பின் அவர் தலைமையின்கீழ் உபதேசியாராக நியமிக்கப்பட்டு அவரின் கண்காணிப்பிலிருந்த காலமெல்லாம் உண்மையாய் வேலை செய்து வந்தார். அதன்பின் பெற்றிட் ஐயர், தாமஸ் ஐயர் கண்காணிப்புக்குள்ளும், இடையில் இங்கிலாந்து சென்றிருந்த காலத்தில் ஜேம்ஸ் ஸ்பிராட் ஐயர் கண்காணிப்புக்குள்ளும் பாட்டக்கரை, நாலுமாவடி, வெள்ளாளன் விளை முதலான பிரதான சபைகளில் தமக்கு ஒப்படைக்கப்பட்ட உபதேசிப் பணியை உண்மையோடும் விழிப்புணர்வோடும் செய்து வந்தார். உபதேசிமாருடைய படிப்புக் கூட்டங்களுக்குத் தவறாமல் வருவதிலும், வேதாகமத்தை நாள்தோறும் வாசித்து ஆராய்வதிலும், போதகர்மாரால் சொல்லப்படும் உபதேசங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதிலும், அவைகளைப் பிறரிடத்தில் வினாவிக் கொள்வதிலும், கிறிஸ்தவர்களுக்காகவும், பிற மதத்தினருக்காவும் ஜெபம் செய்வதிலும், சமுதாய ஜெபம் நடத்துவதிலும், இந்துக்களுக்கு நல்வழியைப் போதிப்பதிலும், வெகு முயற்சி உள்ளவராய் இருந்தார்.[3] இவ்வாறாகத் தானியேல் பவுல் ஐயர் தனி ஜெபம், வேதாகமம் வாசித்தல், அயரா உழைப்பு என்பவைகளால் உபதேசியாராக ஆகுமளவிற்குத் தன்னை உயர்த்திக் கொண்டார். குறிப்பாக கிறித்தவர்களுக்கும் கிறித்தவர் அல்லாதவருக்குமான போதகராக விளங்கினார் என்பதனை அறிய முடிகிறது.

தானியேல் பவுல் ஐயரின் பல்வேறு அருளுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்த *கனம் ஜே. தோமஸ் ஐயர்* தனக்கு அவைகளினால் அனேகந்தரம் எழுப்புதல் உண்டானதென்றும், பவுல் தானியேல் செய்த அருளுரைகளைப் போலொத்த அருளுரைகள் லண்டன் நகரத்துப் பொற்பங்களில் செய்யப்படுமாகில் ஆலயங்களில் இடம் காணாதேபோம் என்றும் இங்கிலாந்து முதலிய இடங்களுக்கு எழுதின ரிப்போர்ட்டுகளில் காட்டியிருக்கிறார்.[4] ஒருவேளை இந்தியாவிலிருந்து எழும்பின குருக்களில் இவர் சிறப்புடையவராக இருந்து இருக்கலாம் என்பது அறிய முடிகிறது.

சாமுவேல் பவுல் ஐயரின் தோற்றம்

சாமுவேல் பவுல் ஐயர் திருநெல்வேலி மாவட்டம் தென்கரைத் தாலுகாவைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் கிராமத்தில் 1844-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி பிறந்தார். இந்தக் கிராமம் திருநெல்வேலி மாவட்டம் சர்ச்சுமிஷன் சங்கத்தாரின் முக்கிய புனித தளங்களில் ஒன்றான மெய்ஞ்ஞானபுரத்திற்கு அருகே உள்ளது. இது நிலவளம், நீர்வளம் பொருத்தி மாந்தோப்புகள், அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர் ஆகும்.

கல்வி

சாமுவேல் பவுல் ஐயர் தம் தந்தையார் போதகராக இருந்த பாட்டக்கரை கிராமத்தில் அடிப்படைக் கல்வி கற்றுக்கொண்டார். அங்கிருக்கையில் ஒவ்வொருநாள் மாலையிலும் இவருடைய தந்தை இவருக்கு வேதபாடம் சொல்லிக் கொடுத்து நாள்தோறும் வேண்டுதல் செய்யவும் போதித்து வந்தார். வேண்டுதல் செய்யத் தவறுகிற நாளில் சாப்பாடு குறையும் என்ற தண்டனையும் விதிக்கப்பட்டு அப்படியே நடந்து வந்தது என்பதையும் அறிய முடிகிறது. ஏழு வயதாயிருக்கும்போது விவிலியத்திலுள்ள மோசே எழுதின ஐந்து ஆகமங்களிலுள்ள சரித்திரங்கள் அனைத்தையும் நன்றாய் மனப்பாடம் செய்திருந்தார். இயேசு கிறித்துவினுடைய வாழ்க்கை வரலாறு அக்காலத்தில் அவருக்குச் சரித்திரமாகச் சொல்லிக்கொடுக்கப்பட்டிருந்தது. எட்டாவது வயதில் தமிழும் ஆங்கிலமும் கற்றுக்கொள்வதற்காக மெஞ்ஞானபுரம் ஆண்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

தகப்பனாரின் மேலிருந்த மதிப்பு எந்தச் சூழலிலும் குறையவில்லை. அதனால் அவரைப்பற்றிய மாதாந்திர குறிப்புகள் ஆசிரியரிடமிருந்து போய்க் கொண்டிருந்தது. மேலும் மாதாந்திரக் கூட்டத்துக்காகத் தந்தை மெஞ்ஞானபுரத்துக்குப் போகும்பொழுதெல்லாம் உற்சாகப்படுத்தி, போதித்து அறிவுரை கூறி வந்தார். இந்த அன்புள்ள தந்தை தன் குமாரனைப் பள்ளிக்கூடத்தில் பார்க்கச் செல்லும் பொழுதுகளில், ஒருமுறையாவது அவரோடு முழங்காலில் வேண்டுதல் செய்யாமல் திரும்பியதில்லை. இது தந்தைக்கும் சாமுவேல் பவுல் ஐயருக்கும் ஒருங்கே அமைந்திருந்த இறை பக்தியைக் காட்டுகிறது.

"மெஞ்ஞானபுரம் பள்ளியிலிருந்து 1861ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 25ஆம் தேதி 17ஆம் வயதில் பாளையங்கோட்டை பிரிப்பாரண்டைக் கல்விச்சாலைக்கு அனுப்பப்பட்டார். அக்காலத்தில் அந்தக் கல்விச் சாலைக்குத் தலைமையாயிருந்த சார்ஜென்ட் ஐயரவர்களின் கீழ் வேத சாஸ்திரங்கற்று அவ்விடத்துப் படிப்பை 1863ஆம் வருடம் மே மாதம் 1ஆம் தேதி முடித்தார். அங்கிருக்கும்பொழுது வடதிருநெல்வேலியிலுள்ள இந்து மதத்தினருக்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படியாகப் பென் ஐயரோடும், மெக்டானல்ட் ஐயரோடும், தேசாந்திரப் பிரசங்கியாக அனுப்பப்பட்டார். அங்கே குடும்ப

ஜெபங்களில் அருளுரைகள் மிகவும் சிறப்பாகச் செய்து வந்துள்ளார். சாமுவேல் பவுல் ஐயர் பள்ளிக்கூடங்களில் கற்ற கல்வியனைத்தையும்விட இந்தக் குடும்ப அருளுரைகளில் கற்ற கல்வியே மேலானதும் நிலையானதுமாயிருந்ததென்று பிற்காலத்தில் உணர்ந்து எழுதிவைத்திருக்கிறார்."[5] என்னும் கூற்றின் வழி அறிய முடிகிறது.

இவ்வாறாகத் தெய்வபக்தி என்றால் என்ன? பிறருக்கு உறுதுணையாக மனிதன் எவ்விதம் வாழவேண்டும்; மெய்க் கிறித்தவனுடைய கடமைகள் என்ன? என்பவைகளைக் கல்விக் கூடங்களிலும், தந்தையின் மூலமாகவும் பிறர் மூலமாகவும் கற்றுக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார்.

அன்றாட வாழ்க்கை முறை

சாமுவேல் பவுல் ஐயர், தினமும் அதிகாலையில் ஐந்து மணிக்கு எழுந்து கடவுளிடத்தில் வேண்டுதல் செய்து, ஆறுமணிக்குள் குளித்துவிட்டு, ஏழு மணிக்குத் தேவாலயத்தில் காலை ஆராதனைக்குச் சென்று, எட்டு மணிக்குக் காப்பி சாப்பிட்டுவிட்டு அலுவலக அறைக்குச் சென்று வாசிப்பதிலும், புஸ்தகங்கள் எழுவதிலும், கணக்குப் பார்ப்பதிலும், சபையின் வழக்குகளைத் தீர்ப்பதிலும், இனத்தார், சிநேகிதருக்குக் கடிதங்கள் எழுதுவதிலும் பன்னிரண்டு மணிவரையிலும் நேரத்தைச் செலவிடுவார்[6] என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செய்திகளின் வழி சாமுவேல் பவுல் ஐயர் குடும்பத்தாரோடு அதிக நேரம் செலவழிக்காமல் தேவாலய மக்களோடும் இவரைத் தேடி வரும் பிற மக்களோடுமே அதிக நேரம் கழித்திருக்கிறார். குறிப்பாகக் கிறித்தவ ஊழியத்தைச் செய்யவே வந்தேன் என்கிற நிலையில் தம் வாழ்வை அமைத்துக் கொண்டிருக்கிறார் என்பதனை இதன் வழி அறிய முடிகிறது.

இறைப்பணி

சாமுவேல் பவுல் ஐயர் "முதன்முதல் 1863ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் நாள் மெஞ்ஞானபுரம் சர்க்கிளைச் சேர்ந்த சத்திய நகரம் என்னும் கிராமத்துக்குத் தலைவரானார்."[7] அதன்பின்பு 1864ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ஆம் நாள் கிருபாபுரத்துக்குச் சீடராகவும், உபாத்தியாயராகவும் விளங்கினார். இவரது அருளுரைகளைக் கேட்பது கனம் ஜே. தாமஸ் ஐயருக்கு மிகவும் விருப்பமாக இருந்தது. காரணம், அரிய கருத்துக்கள் உள்ளடக்கியதாகவும், கேட்பவர்களின் இருதயத்தைப் பரவசப்படுத்துகிறதாகவும் இருந்ததனை அறிய முடிகிறது. *கனம் தாமஸ் ஐயர்*, "பவுல் ஐயரின் பிரசங்கங்கள் தாம் முன் கேள்விப்படாத அநேக நூதன கருத்துக்கள் அடங்கியவனவாகக் காணப்படுகின்றன"[8] என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். "நான் இளைஞனாயிருக்கும்போது இவரது பிரசங்கம் கேட்டிருக்கிறேன். உரத்த தொனியுடன் தெளிவாகவும் விளக்கமாகவும் நல்ல தமிழ் நடையில் பேசுவார்"[9] என்று *டாக்டர் சவரிராயன் ஏசுதாசன்* தன் நூலில் குறிப்பிடுகிறார்.

சென்னை வருகை

சாமுவேல் பவுல் ஐயர் பிற்காலத்தில் சபைக்குப் பயனுள்ளவராய் இருக்கக் கூடுமென்ற எண்ணம் தாமஸ் ஐயருக்கு மனதில்பட்ட காரணத்தினால் இவரைச் சென்னைப் பட்டணத்துக்கு அனுப்பத் தீர்மானித்துக் கொண்டார். ஆனால் தகப்பனார் மறைவினால் தாயார் மகனைத் தூரமான இடத்துக்கு அனுப்ப விரும்பவில்லை. மேலும் அக்காலத்தில் இரயில் மார்க்கம் கிடையாது. ஆகவே பயணம் செய்வது மிகவும் கடினமான செயலாக இருந்தது. ஏழு நாள் மாட்டு வண்டியிலும் இரயில் வண்டியிலும் கடும் பிரயாணம் செய்து எட்டு நாட்களுக்குப்பிறகு 1865 ஜனவரி 21ஆம் தேதி சனிக்கிழமையன்று சென்னைப் பட்டணம் வந்து சேர்ந்தார். இக்காலத்தில் சென்னைப் பட்டணத்தில் சர்ச் மிஷன் சபையில் சுதேசக் குருவாயிருந்தவர் புகழ்பெற்ற உ.தோ. சத்தியநாதன் ஐயர். இவரும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கிறித்தவராகி அங்கே சிலகாலம் தேவ ஊழியத்தை நடப்பித்து, பின்பு சென்னைப் பட்டணத்தில் 1892ஆம் ஆண்டு வரையில் உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரராகப் பணியாற்றியவர்.

சாமுவேல் பவுல் ஐயர் சென்னைப் பட்டணம் வந்து சேர்ந்த உடனே கனம் சத்தியநாதன் ஐயரின்கீழ் உபதேசியாராக நியமிக்கப்பட்டார். சபைகள் அதிக விருத்தியடையும்படியாக அக்காலத்தில் கனம் சத்தியநாதன் ஐயருடன் உண்மையாகவும், ஊக்கமாகவும் உழைத்தவர் இவரே என்பதனைப் பல குறிப்புகளின் வழி அறிய முடிகிறது.

திருமணம்

சத்தியநாதன் ஐயரின் கீழ் மூன்று ஆண்டுக் காலம் உபதேசியராக வேலைபார்த்தபின், திருநெல்வேலி கனம் பரமானந்தர் சிமியோன் ஐயரின் மகளை 1868ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் நாள் அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்தார். பின்பு சென்னையில் நற்செய்திப்பணி செய்யும்படி வந்தார். இவரின் மனைவியும் தேவபக்தியில் வளர்க்கப்பட்டிருந்தபடியால் இவர்கள் இருவரும் இணைந்து நற்செய்திப் பணியினை மேற்கொண்டனர்.

குடும்பம்

சாமுவேல் பவுல் ஐயர் தன் மனைவி மக்களிடத்தில் அதிக அன்புடையவராயிருந்தார். உணவு உண்ணும் வேளைகளில் சிறுகுழந்தை முதல் பெரியவர் வரையில் அனைவரும் ஒன்றாகத் தன்னோடு அமர்ந்து உண்ண வேண்டும் என விரும்புவார். குறிப்பாகக் குடும்பத்தைத் தேவபக்தியில் நடத்துவதில் அதிக அக்கறை கொண்டிருந்தார். அதாவது குடும்பமாக ஞானப்பாட்டுகள் பாடுவது, புத்தகங்கள் வாசிப்பது, குடும்ப ஜெபம், பரிசுத்த வேதாகம தியானம், இரவில் தாம் எழுதிய தஞ்சகீதம் என்னும் ஞானப்பாட்டைச் சொல்லி முடிப்பது என்கிற நிலையில் குடும்பத்தை நேர்த்தியாக நடத்தியமையினை அறிந்துகொள்ள முடிகிறது. (ஞானப்பாட்டு பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது)

திருமணத்திற்குப் பின்பு நற்செய்திப் பணி

1868-ஆம் ஆண்டு முதல் சென்னைப் பட்டணத்திலுள்ள சி.எம்.எஸ். மிஷன் பள்ளிக்கூடங்களுக்கு விசாரணை உபாத்தியாயராகக் கனம் ஆர். சி. மெக்டானல்ட் ஐயரவர்களின் கீழ் வேலை பார்த்து வந்தார். இக்காலத்தில் பள்ளிகளின் வளர்ச்சி, சபையின் வளர்ச்சி என்று பலநாட்கள் கண்விழித்து அதிக உற்சாகத்தோடு உழைத்ததாக அவருடைய தினசரி குறிப்புகளால் தெரிந்து கொள்ள முடிகின்றது. இதேபோல் சன்மார்க்கச் சிறுபுத்தகச் சங்கத்தாருக்கு ஒற்றைத்தாள் பிரதிகளும், வேதாகமப் பரீட்சைகளுக்குப் படிப்பதிலும் தன் காலத்தை முக்கியமாய்ச் செலவிட்டார். குறிப்பாக 1871ஆம் ஆண்டு குருப்பட்டத்திற்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் 1874-இல் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் அபிஷேகம் செய்யப்பட்டார்.[10] குருப்பட்டத்துக்குப் பின்னுள்ள இவரது நற்செய்திப் பணியினை மலை நற்செய்திப்பணி, நகர நற்செய்திப்பணி, நாட்டுப்புறச் நற்செய்திப்பணி என்பதாகப் பகுக்கலாம்.

மலைப் பகுதியில் நற்செய்திப் பணி

1874-1883 இக்கால கட்டங்களில்தான் பவுல் ஐயர் நீலகிரி மலையில் உதகமண்டலத்துத் தமிழ்ச்சபைக்குக் குருவாயிருந்தார். பவுல் ஐயரவர்களால் உவைநாடு சபை உருவாக்கப்பட்டு விரிவடைந்தது. நெடுவட்டம், கூடலூர், தேவல்லா ஆகிய இடங்களில் தேவ ஊழியக்காரரை நியமித்தது மட்டுமல்லாமல் அடிக்கடி அவ்விடங்களுக்குப் போய்ச் சபையைச் சந்தித்துப் புத்தி போதனைகள் கூறி அருளுரை வழங்கி வந்துள்ளார்.

கள்ளிக்கோட்டை

1882-ஆம் ஆண்டு சென்னை மகா கனம் ஜெல் அத்தியட்சரவர்களின் உத்தரவுப்படி கள்ளிக்கோட்டைக்குச் சென்று அங்கே அரசாங்கக் கல்லூரி ஒன்றின் தலைமை உபாத்தியாயராயிருந்த தாவீது இயோசேப் என்பவரின் அரிய முயற்சியால் சேர்த்திருந்த தமிழ்ச் சபையைச் சிலகாலமிருந்து வளர்ச்சிபெறச் செய்துள்ளார்.

குன்னூர்

குன்னூரில் அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்திருந்த சர்ச் மிஷன் சபையாரைப் பிரத்தியேகப்படுத்தி அவர்கள் விருப்பத்தின்படி அவர்களுக்குத் தனியே செபம் முதலிய காரியங்கள் நடக்கும்படி ஏற்பாடு செய்து, அவ்விடத்தில் ஒரு உபதேசியாரையும் நியமித்துக் குன்னூரில் சர்ச் மிஷன் சபையை உருவாக்கியுள்ளார்.

வேலைக்காரர் மிஷன்

“உதகமண்டலத்தில் ஐரோப்பியருடைய வீடுகளில் வேலை செய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக்கும்படியாக *வேலைக்காரர் மிஷன்* என்று ஓர் மிஷனை ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருக்கான சம்பளம் முழுவதும் மிஷனில் பெறாதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீடுகளிலும் மாதம் ரூ.1/- வசூல் செய்து உபேதசியாருடைய சம்பளத்தில் பாதி இவ்விதமாய்ப் பெறும்படி ஒழுங்கு செய்தார்.”[11] பிற மதத்தினருக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பல வழிகளைக் கையாண்டார். ஹோபார்ட் பள்ளிக்கூடத்தில் இரண்டு வாரத்துக்கொருதடவை தமிழிலாவது ஆங்கிலத்திலாவது மற்ற மதத்தினருக்குப் போதனைச் செய்து வந்தார்.

வாரந்தோறும் மிஷன் உறுப்பினர்களின் துணையுடன் சந்தைக் கூட்டங்களில் புற மதத்தினருக்கென்று பிரசங்கம் நடத்துவார். மாதத்துக்கொரு முறை பௌர்ணமி தின இரவுகளில் சந்திர வெளிச்சத்தில் சதுர்ப்பிரசங்கம் நடத்துவார். அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கித்து இவ்வாறாக இச்சபையை நடத்தின காலத்தில் சபை சகல வகையிலும் விருத்தியடைந்ததேயன்றி எவ்விதத்திலும் தாழ்ச்சியடையவில்லை என்பதனைத் தெளிவாக அறிய முடிகின்றது.

நகர நற்செய்திப் பணி

1883-1887 இக்காலகட்டமானது பவுல் ஐயர் சென்னைப் பட்டணம் வடசேகரத்துச் சபைக் குருவாயிருந்த காலமாகும். இவ்விடத்தில் மனந்திரும்பாதவர்கள் மனந்திரும்பவும் விசுவாசிகள் தேவனுடைய கிருபையில் நிலைகொண்டிருக்கவும் தேவ ஒத்தாசையை முன்னிட்டுச் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதித்து வந்தார்.

இவர் நான்கு ஆண்டுகள் மட்டும் இவ்விடத்தில் குருவாயிருந்தபோதிலும் சபை தொகையிலும், பணவரவிலும், அறிவிலும், தேவ பக்தியிலும் கிறிஸ்தவ அனுபவத்திலும் அதிகமாக வளர்ந்திருக்கிறது.

“பவுல் ஐயர் இந்தச் சேகரத்திற்கு வந்தபோது 1883இல் சபையின் தொகை 488, நற்கருணைப் பெறுகிறவர்கள் 285; இப்போது 1887ல் சபையின் தொகை 577, நற்கருணை பெறுகிறவர்கள் 296 பேருமாய் இருக்கிறார்கள். 1883ஆம் ஆண்டில் சபை நிதிக்காகச் சேகரிக்கப்பட்ட தொகை ரூ.485. ஆனால் 1887ஆம் ஆண்டில் சபையார் கொடுத்தது மாத்திரம் ரூ.734. இவ்வாறு சபை வளர்ச்சியடைந்துள்ளது.

மேலும் டக்கர் கோவிலில் இவர் நடத்தி வந்த ஆராதனைகளும் அருளுரைகளும் அதிக பக்தி உருக்கமும் எழுப்புதல் உள்ளவைகளாயிருந்தன. “இவர் காலத்தில்தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டு கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதன்முதல் நடத்தப்பட்டன.”[12] சென்னைப் பட்டணத்தில்

வடசேகரத்துச் சபையில் நான்கு ஆண்டுகள் அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் இறைப் பணியை நடப்பித்தார். அதன்பின்பு திருநெல்வேலி சபைக்குக் குருவாக இருக்க அழைக்கப்பட்டு அங்கே ஊழியம் செய்தார்.

நாட்டுப்புற நற்செய்திப் பணி

1887-1890 இக்காலக்கட்டத்தில் பவுல் ஐயர் வட திருநெல்வேலியில் குருவாக ஊழியம் செய்தார். வடதிருநெல்வேலியில் சர்ச் மிஷன் சபையை மேல் விசாரணை செய்து வந்த கனம் வீ. வேதநாயகம் ஐயர் மறுமைக்குட்பட்டபோது 1887ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் நாள் சாமுவேல் பவுல் ஐயர் அத்தியட்சரவர்களால் தெரிந்துகொள்ளப்பட்டு மேற்படி சபைக்குக் குருவாக நியமிக்கப்பட்டார்.

1887ஆம் ஆண்டு சென்னை சர்ச்சு மிஷன் வடசேகரத்துச் சபையார் பவுல் ஐயரை வடதிருநெல்வேலிக்கு வழிவிட்டனுப்பும் சமயத்தில் அவருடைய அருளுரைகளைப் பற்றிப் பின்வருமாறு நற்சாட்சி பகர்ந்தளித்ததனை இங்குக் குறிப்பிடுவது மிகவும் அவசியமாகிறது.

"பிரசங்கியாக நீங்கள் இந்த இடத்தில் முதல் இடம் பெற்றீர்கள், தெளிவும் சாதூரியமுமுள்ள வாசகங்களும் சிறந்த கருத்துகளும் அமைந்த தீர்க்கமான குரலாலுச்சரிக்கப்பட்ட தங்கள் அருளுரைகள் வெதுவெதுப்பான இருதயங்களை அனலாக்கி, கவலையற்ற நெஞ்சங்களைக் கரிசனையுள்ளவைகளாக்கின. தங்களது பக்தியும் உத்தமமும் விளங்கிய நடக்கையினாலும், ஆழ்ந்த கருத்துகளடங்கிய சாதூரிய அருளுரைகளினாலும் தெளிவும் தீர்க்கமுமுள்ள உபதேசங்களினாலும் பெருந்தன்மையும் பரோபகாரமும் நிறைந்த இதயத்தினாலும், தைரியமும் சுறுசுறுப்பும் விளங்கிய கிருத்தியங்களினாலும், பொறுமையோடும் விடாமுயற்சியோடும் காணப்பட்ட வழக்கங்களினாலும், சபையார் பேரில் உங்களிருக்கிருந்த அன்பினாலும் பாசத்தினாலும், துன்பப்படுகிறவர்களுக்கு நீங்கள் காட்டின உருக்கத்தினாலும் நீங்கள் எங்கள் மனதைக் கவர்ந்து மாறாத நிலையான நல்லெண்ணத்தை எங்களிருதயத்தில் பதித்திருக்கிறீர்கள்."[13] வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக் கொடுத்த புண்ணிய ஆத்துமாவாகிய கனம் ராக்லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள் வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குச் சாட்சி பகரும் ஞாபகஸ்தம்பமாக விளங்கி நிற்கும் வண்ணமாகச் சிவகாசிக்கருகில் சாட்சியாபுரம் என்னும் கிராமத்தில் இவர் உருவாக்கினார். அக்காலத்தில் வட திருநெல்வேலியை விசாரித்து வந்த கனம் ஏ.கே. பின்னிமோர் ஐயருக்கு ஆலோசனைக்காரராகவும், தேசாந்தரப் பிரசங்கியாகவும் இருந்தார். 1890இல் வட திருநெல்வேலி திருச்சபை ஆலோசனைக் குழுப் பிரதி முதலாளியாக நியமிக்கப்பட்டார். 1892-ஆம் ஆண்டு சாட்சியாபுரம் வாகைக்குளம் ஆகிய இரண்டு சர்க்கிலுக்கும் சென்னைத் தகவல் பரிமாற்ற குழு முதலாளியாக நியமிக்கப்பட்டு மரணபரியந்தம் அப்படியே நடத்திக் கொண்டிருந்தார். வட திருநெல்வேலி சபையை முன்னுக்குக் கொண்டு

வரும்படியாக அவர் செய்த முயற்சிகள் ஏராளம் என்கிற அரிய பதிவுகளைத் தெளிவாக அறிய முடிகிறது.

தவச உற்சவம் (திருவிழா)

“தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல்முதல் ஆலோசனை சொன்னவர் பவுல் ஐயராவர். இவருடைய ஏற்பாட்டின்படி தவச உற்சவம் 1891ஆம் ஆண்டு ஜுன் மாதம் சாட்சியாபுரத்தில் முதல் தடவையாகக் கொண்டாடப்பட்டது.”[14] இவ்வித உற்சவமானது அதன்பின்பு திருநெல்வேலியின் பல இடங்களில் மட்டுமல்லாமல், சென்னைக்குட்பட்ட பற்பல இடங்களிலும் நடந்தேறி வருகிறது.

சர்ச் மிஷன் மரண சகாய சங்கத்திற்குப் பொதுச் செயலாளராக இருந்தார். இவருடைய அரும்பெரும் முயற்சியினால்தான் இச்சங்கமானது நல்ல சீரான நிலைக்கு வந்தது. “சாட்சியாபுரத்தில் இருந்த சிறு தேவாலயத்தைப் பெரிதாக்கிச் சிறந்த சிலுவை வடிவமான ஆலயமாகக் கட்டி முடித்தார்.”[15] மிஷன் கூட்டத்தார் தாங்கள் சோர்வடையாமல் முயற்சியுள்ளவர்களாயிருக்கும்படி போதனை-களினாலும், புத்திமதிகளினாலும் பல நூதன ஏற்பாடுகளினாலும் அவர்களை உற்சாகப்படுத்தி நடத்தி வந்தார்.

வட திருநெல்வேலியில் சி.எம்.எஸ். மிஷனை மேல் விசாரணை செய்துவந்த கனம் ஜே. பார்ட்டன், டி. உவாக்கர், இ.எஸ். கார் என்னும் மூன்று ஐரோப்பிய மிஷனெரிமாருக்கும் வலது கையைப் போலிருந்து, சென்னை அத்தியட்சரவர்களுடைய வேதாகமப் போட்டித் தேர்வுக்கும், குரு பட்டாபிஷேகம் பெற ஆயத்தப்படுகிறவர்களுடைய தேர்வுக்கும் அநேக ஆண்டுகளாகத் தேர்வு செய்கிறவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

மேலும் “1893ஆம் ஆண்டு பம்பாயில் கூடிய பத்தாண்டு மிஷனரி சங்கக் கூட்டத்திற்கும் 1898ஆம் ஆண்டு அலகாபாத்தில் கூடிய பஞ்சாண்டு மிஷனரி சங்கக் கூட்டத்திற்கும், 1900ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னைப் பட்டணத்தில் கூடிய தென்னிந்திய மிஷனரி சங்கக் கூட்டத்திற்கும் தென்னிந்தியாவிலிருந்து போன பிரதி காரியதரிசிகளில் சாமுவேல் பவுல் ஐயரும் ஒருவராவார்.”[16] என்கிற குறிப்பிலிருந்து தெளிவுபட அறிந்துகொள்ள முடிகிறது.

சி.எம்.எஸ். காரியதரிசி

சபையாருக்குள்ளும் குருக்களுக்குள்ளும் உண்டாகும் சிக்கல் காரியங்களைத் தீர்ப்பதற்காகக் கனம் சென்னை அத்தியட்சரவர்களாலும், திருநெல்வேலி-மதுரை அத்தியட்சரவர்களாலும் பல தடவைகளில் கமிஷனராக நியமிக்கப்பட்டு அவைகளைத் திருப்திகரமாகவும் சரிவரவும் முடித்திருக்கிறார். இவ்வாறு தன்னுடைய நாட்டுப்புற ஊழியத்தைக் கண்ணும் கருத்துமாக நிறைவேற்றினார். இவ்வாறு சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் வியாதிப் படுக்கைக்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்குச் சாட்சியாபுரத்தில் தன் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து

அவர்களுக்கு வேண்டிய உதவிபுரிந்து அவர்களோடு வேண்டுதல் செய்தார். இதுவே அவருடைய இறைப்பணியின் இறுதிப் பணியாகும்.

சாமுவேல் பவுல் ஐயரின் அருளுரைகள்

சாமுவேல் பவுல் ஐயரைப் பற்றிக் கேள்விப்பட்ட யாவருக்கும் இவருடைய பிரசங்கத்தின் வல்லமையைப் பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கும். இவரின் அருளுரைகள் என்றால் கோவில் நிறைந்த சபையென்று சகலரும் சொல்வார்கள். பலமுறை ஆங்கிலக் கோவில்களிலும் பிரசங்கம் செய்து ஆங்கிலேயர்களாலும் இவருடைய அருளுரைகள் நன்கு மதிக்கப்பட்டு உயர்வாகக் கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆழ்ந்த கருத்துகளைக் கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எளிதாக மனதில் பதியும்படியாகவும் சபைக்கும் சமயத்துக்கும் ஏற்றவிதமாகவும் பிரசங்கிப்பதில் தனிச்சிறப்பு பெற்றவராகத் திகழ்ந்தார்.

1899ஆம் ஆண்டு பாளையங்கோட்டை திரித்துவ ஆலயத்தில் நடந்த தேவாலயத்தில் செய்த அருளுரையில் 'நிலைகொண்டிரு' என்கிற தலைப்பில் அருளுரை செய்கிறவர்களைப் பற்றியும் கதை கேட்கிறவர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். தீமோத்தேயு புத்தகம் சொல்லும்வண்ணம் தன் சொந்த ஆத்தும இரட்சிப்பைக் குறித்து எச்சரிக்கையாய் வாழ்ந்தால் பிற மார்க்கத்தினரும் வியப்பார்கள் என்று அருளுரையினை முடித்துள்ளார்.

மேலும் இவரது அருளுரையில் தன்னுடைய குணம், நடத்தை குறிப்பாக வாயின் வார்த்தை இவைகளில் எச்சரிக்கையாய் இருப்பவர்களால்தான் எல்லா நன்மையையும் பெறமுடியும் என்கிற செய்தியினைப் பரிசுத்த பவுலின் தேவ ஊழியத்தினை உதாரணமாக வைத்துப் பேசியுள்ளார். அதாவது "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்" (1 தீமோ.3:5) என்கிற வசனத்திற்கேற்ப உன் சொந்த குடும்பத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு என்கிற நிலையில் தம் அருளுரையினை மேற்கொண்டுள்ளார். இவ்வாறாக இவர் செய்த அருளுரைகள் "*தெளிவான பிரசங்கங்கள்*" எனும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

நற்போதகம் இதழாசிரியர்

சாமுவேல் பவுல் ஐயர் தாம் இளைப்பாறும் நேரத்திலெல்லாம் தமிழ்க் கிறித்தவர்களுக்கு எழுப்புதலுடன் நடைமுறையில் பயன்படுத்தும் வகையில் பல நூல்களை எழுதியிருக்கிறார். இவர் ஆசிரியராக இருந்த நற்போதகம் இதழ் 1849ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தது. 1890 முதல் 1893 வரை நற்போதகத்தின் ஆசிரியராக இவர் பணியாற்றினார்.

ராவ்சாகிப் சாமுவேல் பவுல் ஐயரின் கிறித்தவத் தமிழ் இலக்கியத் தொண்டுக்காகக் கவர்னர் ஜெனரலவர்கள் 1898ஆம் ஆண்டு இவருக்கு இந்திய தேசத்தின் சார்பாக 'ராவ்சாகிப்' என்னும் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது

குறிப்பிடத்தக்கதாகும். ராவ் என்பதன் பொருள் தலைவர் அல்லது இளவரசன் என்பதாகும். *(Rao meaning chief or prince)*[17] இந்தியாவில் இந்தச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது சுதேச குரு இவரேயாவார்.

முதல் சிறுகதை ஆசிரியர்

'தமிழில் முதல் சிறுகதை எது' என்னும் நூலில் டாக்டர் ஆர்.எஸ். ஜேக்கப் அவர்கள், தமிழ்ச் சிறுகதைகளுள் மிகப் பழமையானது, ஜுலை 1877ஆம் ஆண்டு நற்போதகம் இதழில் வெளியாகிய *'சரிகைத் தலைப்பாகை'* என்னும் சிறுகதை. ஆர்.எஸ். ஜேக்கப் ஆய்வின்படி இதனையே, "தமிழில் தோன்றிய முதல் சிறுகதை என்றும், அதன் ஆசிரியர் அருள்திரு சாமுவேல் பவுல் ஐயர் என்றும் தீர்மானிக்கிறேன்"[18] என்று குறிப்பிடுகிறார். மேற்கூறப்பட்ட கூற்றின் வழியாகவும் பலமொழிபெயர்ப்புக் கதைகளை வெளியிட்டுள்ளமையாலும் சாமுவேல் பவுல் ஐயர் சிறுகதை ஆசிரியராகவும் விளங்கியமை அறியமுடிகிறது.

கிறிஸ்தவ வீடு

சிவகாசியில் 1898ஆம் ஆண்டில் மதக் கலவரம் உண்டானது, அப்பொழுது 800 வீடுகளுக்குமேல் சேதப்படுத்தினர். சாமுவேல் பவுல் ஐயர் அவர்களுடன் பேசிச் சமாதானப்படுத்தினார். அப்பொழுது கிறிஸ்தவர்கள் வீடு காக்கப்பட்டது. இது "கிறிஸ்தவர் வீடு" என்று வீட்டின் முன்னால் எழுதி வைத்தனர். அதனால் கலகக்காரர் கிறிஸ்தவர் வீட்டை அடிக்கவில்லை. இவ்வாறு கிறிஸ்தவர்கள் சாமுவேல் பவுல் ஐயர் அறிவுரையினால் பாதுகாக்கப்பட்டனர்.

சாமுவேல் பவுல் ஐயரின் மறைவு

தமிழ்க் கிறிஸ்தவ சபையின் வளர்ச்சியைக் *'கிறிஸ்துவைப் போல் ஜீவித்தல்'* என்னும் புத்தகமாக எழுதும்படியும் குறிப்பாக இந்துதேசச் சீர்திருத்தலுக்கென்று எழுதும்படியும் கனம் டாக்டர் மர்டாக் துரை விரும்பினார். அதன்படி, பவுல் ஐயர் தம் சுயமாய் எழுத எண்ணங்கொண்டு, ஆறுமாத காலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடினார். பிறகு அதனை எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில், திடீரென்று காய்ச்சல் ஆரம்பித்து, மூளைக்காய்ச்சலும் இருமலும் கலந்து, மருத்துவர்களின் எவ்விதமான முயற்சிக்கும் இவ்வியாதி அடங்காமல் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவருடைய மூளை பலவீனப்பட்டுச் சிதைந்திருக்க வேண்டுமென்று மருத்துவர்கள் எண்ணினார்கள். ஆனாலும் அவருடைய சிந்தை, பேச்சு, வார்த்தை எல்லாமே மிஷனையும் சபையையும் அடுத்ததாகவும், பரம காரியத்தைப் பற்றினதாகவுமே இருந்தது. தாம் ஞாயிற்றுக்கிழமை நிச்சயமாய் மரித்துப்போவது உண்மை என்றே வற்புறுத்திக் கூறினார். வியாதிப்படுக்கையில் இருக்கும்பொழுது அவர் செய்த கடைசி செபத்தில்,

"ஆண்டவரே சிறுவயது முதல் என்னை உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணைகூர்ந்தீர்.

இப்போதும் என்னை உமது சமுகத்துக்கழைத்துக் கொள்ளச் சித்தங்கொண்டீர். ஆனால் இன்னும் சிலகால மாத்திரம் நான் ஜீவித்திருப்பேனானால் நான் இயற்றத் துவக்கின இரண்டு புத்தகங்களை (Imago Christi and Imitation of Christ) முடித்துத் தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர்நோக்கிக் கொண்டிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது" [19] என்றார்.

கடைசியாக அருகிலிருந்த தமது உடனூழியனாகிய டி. அருளப்பன் உபாத்தியாயரைப் பார்த்து,

> **"சகோதரனே, இந்தக் கூரையைப் பார்த்தீரா? என்ன கேவலமாயிருக்கிறது. இது என் வீடல்ல, நான் போகும் மாளிகைக்கிது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. கோவில் மணியடிக்கிறது. அவ்விடத்துக்கு நான் போகவேண்டும். கோவிலுக்கு நான் போகிறேன்"[20] என்று சொன்னார்.**
>
> **அப்பொழுது அவருடைய மனைவி அவரிடம் வந்து, "தனக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்"[21] என்று கேட்க, தன் கையை உயர்த்திக்காட்டிக் கண்ணை மூடினார். பின்பு உடல் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டது. கல்லறைப் படம் பின்னிணைப்பில் உள்ளது.**

நற்சாட்சி

சாமுவேல் பவுல் ஐயரின் மரணச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அவருடைய பல நண்பர்கள், உறவினர்கள், அவருடன் பழகிய ஐரோப்பிய அருட்தொண்டர்கள் முதலானவர்கள் எழுதின கடிதங்கள் பலவாகும்.சில கடிதங்களில் அவரின் புகழுக்குரிய செயல்களை அறிய முடிகிறது.

மகா கனம் ஜெல் அத்தியட்சரவர்கள்

"கடந்த ஞாயிற்றுக்கிழமை உம்முடைய கணவர் மரித்துப்போனது பற்றிய அறிவிப்பை அறிந்து மிகுந்த துக்கப்பட்டேன். உமக்கு உண்டாயிருக்கும் துக்கத்திலும் துயரத்திலும் நான் உம்மோடுகூட அனுதாபப்படுகிறேன். இயேசு கிறிஸ்து மரித்தோரை விட்டெழுந்திருக்கிறார். அவருடைய அன்பான பக்தியுள்ள ஊழியர்காரர்களில் உம்முடைய கணவரும் ஒருவரென்பது உமக்குத் தெரியும். இப்போது அவருடைய ஆவி சகல பாவபாரமும் சங்கடமும் நீங்கி அருமை இரட்சகரின் சந்நிதானத்தில் ஒளியையும் சமாதானத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய சரீரம் மகிமையையும் சாவாமையையும் தரித்துக்கொள்ள உயிர்த்தெழுதலுக்குக் காத்துக் கொண்டிருக்கிறது."[22] என எழுதியுள்ளார்.

ஆர்ச்சு டீக்கன் எல்விஸ் ஐயர்

"கனம் பால் ராவ்சாஹிப் ஐயரின் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு நான் மிகவும் துக்கப்படுகிறேன். அநேக வருஷங்களாக நான் அவரை அறிவேன். என்னுடைய அன்னியோன்னிய சினேகிதனாகவும் என்னுடைய உடன் சகோதர குருவாகவும் அவரை மதித்து வந்தேன். அவர் மரணம் பெரிய நஷ்டம். அவரைப் போல வேலை பார்க்க அவருடைய ஸ்தானத்திற்கு ஆள் ஒருவருமில்லை" [23] என்று கூறுகிறார்.

கனம் இ.எ. டக்ளஸ் ஐயர்

"கடைசியாக அத்தியட்சருடைய கூட்டத்தில் நான் அவரைக் கண்டபோதும், அச்சமயத்தில் அவர் வழக்கம்போல் தீர்க்கமும் உற்சாகமுமாகச் செய்த பிரசங்கத்தைக் கேட்டபோதும், கடைசிநாளில் பரமராஜாவின் சந்நிதி முன் நான் போய் நிற்கும் வரையில் அவரைத் திரும்பக் காணக்கூடாதிருக்குமென்று கிஞ்சித்தேனும் எண்ணவில்லை. நாம் அவரை இழந்துவிடத்தக்க ஸ்திதியிலில்லை. அவர் மேன்மையான சற்குணமும், அனேக விஷயங்களில் மற்றவர்களை வழிநடத்தக்கூடிய சிறந்த தன்மையும் உடையவராயிருந்த படியால், அவருடைய ஸ்தானத்துக்குத் தகுந்த ஆள்கிடைப்பதரிது. புஸ்தகங்கள் எழுதுவதில் அவருக்கிருந்த மேலான வல்லமை எங்களெல்லாராலும் அதிசயிக்கப்படத் தக்கதாயிருந்தது. அவருடைய மரணத்தால் இந்தியத் திருச்சபை வறுமையடைந்தது என்று சொல்லலாம்"[24] என வருத்தத்தோடு குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் சா. சத்தியநாதன்

"அவருடைய வல்லமை, விடாமுயற்சி, சாமர்த்தியம், முதலிய நற்குணங்களுக்காக அவரை மிகுந்த மதிப்புடன் எண்ணிவந்தேன். ஒவ்வொரு நல்விஷயத்தில் அவர் அனேக சமயங்களில் எனக்கு உதவி செய்திருக்கிறார்"[25] என நன்றியோடு பதிவு செய்கிறார்.

சுதேச சங்க ரிப்போர்ட்

"இந்த ஆலோசனைச் சங்கத்துக்கும், பொதுப்படத் தமிழ்ச் சபைகளுக்கும் இவர்களின் மரணத்தால் உண்டான நஷ்டம் இம்மட்டென்று சொல்லக்கூடாது. ஜனங்கள் உற்சாகமடைய ஆவிக்குரிய எழுப்புதலான கூட்டங்கள் வைத்து நடத்துவதற்கு ஏதுவாகத் தவச உற்சவம் ஏற்படுத்தி அது சித்தியடைவதற்காக இவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசை இவ்வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. இவர்களுடைய அபூர்வத்திறமையும் ஆழ்ந்த புத்தியுமே இது ஒருவாறு அனுகூலமடையக் காரணமாயிற்று. சென்னை மிஷனெரி கான்பிரன்ஸ் கூட்டங்களுக்கும், அலகபாத்து கான்பிரன்ஸ் கூட்டத்துக்கும் திருநெல்வேலிச் சபையில் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிகளில் இவர்களும் ஒருவர். ஆலோசனை சங்கக் குழுக்கூட்டங்களிலும் இவர்கள் முக்கியமானவர்களா- யிருந்தார்கள். இப்பேர்ப்பட்ட கூட்டங்களிலெல்லாம் இப்பொழுது

அவர்களில்லாதது வெறுமையாய்த் தோன்றுகிறது. நமது சபைகளில் மாத்திரமல்ல எங்கும் அவர்கள் புகழ் படைத்தவர்கள்தான் அவர்கள் நிமித்தம் தமிழ்ச்சபை முழுவதும் துக்கித்துப் புலம்புகிறதென்று சந்தேகமறச் சொல்லலாம்."[26] எனச் சான்று பகிர்கிறார்.

சாமுவேல் பவுல் ஐயரின் படைப்புகள்

இறைப்பணிக்கென்று தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் சாமுவேல் பவுல் ஐயர். இவர் இறைப்பணியோடும் தமக்குச் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் இலக்கியப் பணியையும் திறம்பட ஆற்றியுள்ளார்.

1875 முதல் 1898 வரை சுயமாய் எழுதின நூல்கள் பதினெட்டு, 1873 முதல் 1899 வரை மொழிபெயர்த்த நூல்கள் இருபத்தாறு, 1867 முதல் 1900 வரை இவர் எழுதின சிறுநூல்கள் இருபத்திரண்டு, இதேபோல் மொழிபெயர்த்த சிறு நூல்கள் மொத்தம் நூறு, ஒற்றைத்தாள் பிரதிகள் இருபத்தேழு, மகமதியருக்காக இவர் எழுதியது எட்டு. (காண்க. பின்னிணைப்பு, ப.)

தியான நூல்கள்

I. ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்

1882ஆம் ஆண்டு 154 பக்கங்களைக் கொண்டதாய் முதலில் வெளிவந்த இந்நூல் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தால் பதின்மூன்று பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. பக்தர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றதாக இந்நூல் அமைந்துள்ளது. ஆத்தும நேசரின் அங்க மகத்துவம் என்னும் நூல் 130 ஆண்டுகளாகக் கிறித்தவர்களின் ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டும் நூலாகவும், பலம் சேர்க்கும் நூலாகவும் காணப்படுகின்றது.

இவரே "இயேசுகிறிஸ்துவினுடைய சரீர உறுப்புகளும் உறுப்புகளின் மகத்துவங்களும், சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி காட்டப்பட்டிருக்கிற படியால் இந்நூலுக்கு **'ஆத்தும நேசரின் அங்கமகத்துவம்'** என்று பெயர் சூட்டினேன்"[27] என்று தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளது நூலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

இந்நூலில் இயேசு கிறித்துவின் அங்கங்களைக் குறித்த 28 தியானங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. அவரின் பாதம் தொடங்கிச் சிரசில் முடியும் 17 உறுப்புகளாகிய பாதம், கால், முழங்கால், அரை, வயிறு, மார்பு, விலா, முதுகு, தோள், கை, விரல்கள், காது, கன்னம், வாய், கண், முகம், சிரசு ஆகியவைகளை முறையே தியானிப்பதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு தியானத்திற்கும் அடிப்படையாக அமையும் வேதப்பகுதி, போதனை, செபம், துதி ஆகிய அனைத்தும் காணப்படுகின்றன. "நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் என்றாலும் இப்போது படிக்கின்றவர்களுக்கு நூற்றுக்கு நூறு விளங்கக்கூடிய நடையில் அமைந்திருக்கிறது"[28] என்று தி. தயானந்தன் பிரான்சிஸ் குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக இயேசு கிறித்துவின் கைகளில் ஆணிகள் அடிக்கப்படும் காட்சியை இத்தியானத்தில் நம் கண்முன்னே கொண்டுவந்து நம் அனைவரின் நெஞ்சமெல்லாம் உருகும் வண்ணம் படைத்திருக்கிறார்.

தியானக் கருத்துக்களை அடுக்கடுக்காக எடுத்துரைப்பது இந்நூலின் சிறப்பாகும். இன்றளவும் ஒவ்வொரு தபசுக் காலத்திலும் ஆலயங்களில் வாசித்து பலரும் பயனடைகிறார்கள்.

2. தியானச் சோலை

இந்நூல் சாமுவேல் பவுல் ஐயரால் 1895ஆம் ஆண்டு மற்றும் 1963 ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. 67 பக்கங்களைக் கொண்ட இந்நூலை 1996ஆம் ஆண்டில் ஆசிரியரின் 152ஆவது பிறப்பின் வெளியீடாகக் கிறித்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்டுள்ளது.

இந்நூலில் இயேசுவின் வழிநடைப் போதனை தொடங்கி, மரண உபதேச வசனங்கள் வரையிலான 15 தலைப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தலைப்பும் திருமறை வார்த்தைகளோடும் மற்றும் தியானத்தோடும் அமைக்கப்பட்டுள்ளன.

அதாவது "தியானச் சோலைக்குள் உனக்குக் கிடைக்கும் எல்லா வாழ்விலும் விருந்துண்பதே பெரிய வாழ்வாய் இருக்கிறது. அந்தப் பெரிய வாழ்வை நீ பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தகுந்த ஆயத்தத்தோடே அதற்குள் பிரவேசிக்க வேண்டியது அவசியம்" [29] என்ற போதனைகளோடு தியானச் சோலையைத் தொடங்குகின்றார் பவுல் ஐயர். மேலும் அந்த ஸ்தலம் சாதாரணமான ஒரு சோலையல்ல, அங்குள்ள நதி, விருட்சம், கனி, வீசும் காற்று எரிக்கும் வெயில் அங்குப் பேசும் பாஷையும் பாடும் கீதமும் உண்ணும் உணவும் மாம்ச சம்பந்தமானவை அல்ல. அவையெல்லாம் ஆவிக்குரியவைகளாய் இருக்கின்றன என்று பதிவு செய்கிறார்.

தியானச் சோலையில் காணப்படும் விண்ணப்பக் கொத்து, பாவமன்னிப்பு வாசகங்கள், வாழ்த்து வாசகங்கள் இந்நூலுக்கு மேலும் சிறப்பூட்டுகின்றன. கிறித்தவர்களின் ஆவிக்குரிய வாழ்வுக்குத் தவிர்க்க முடியாத தியானநூலாக விளங்குகிறது.

3. தியான ஆலயம்

1896 ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் 1955 ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. 354 பக்கங்கள் கொண்ட இப்பதிப்பைக் கிறித்தவ இலக்கியச் சங்கம் 1996ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

இயேசு கிறித்துவின் பாடுகளைப் பற்றிய வரலாறுகள் அனைத்தும் ஒரு தேவாலயம் போல் பாவிக்கப்படுகிறது. அதாவது முன்மண்டபம், பிரகாரம்,

பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தியான ஆலயம் என்னும் நூலாக இயற்றப்பட்டுள்ளது. இயேசு கிறித்துவினுடைய பாடுகளின் தியானத்தில் தன்னை ஆட்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு ஒரு சிறந்த தியான நூலாக இது அமைகிறது.

சிலுவைப் பாடுகளின் மூலமாகக் கடவுளின் ஆழமான அன்பினைத் தியானம் செய்கின்றபொழுது அது மனத்திற்கு நிலையான ஆறுதலைத் தருகின்றது. இயேசு கிறித்துவின் கெத்சமனே பயணம், விசாரணையின் பயணம், பரியாசத்தின் பயணம், சிலுவையின் பயணம், இயேசு கெத்சேமனே தோட்டத்தில் முழங்கால்படியிட்டு மூன்றுதரம் ஜெபித்தல் ஆகிய அவருடைய உருக்கமான தியானங்களை வாசகர்களின் நெஞ்சங்கள் கரைவதுபோலப் படைக்கப் பட்டுள்ளமை கருதுதற்குரியது.

மேலும், இயேசுகிறித்து சிலுவையில் அடையும் தாகத்தினைப் பல நிலைகளில் கூறுகிறார். பாடல்களின்மேல் ஏற்பட்ட தாகமாகத் தியானித்துக் கூறியிருக்கும் நிலை சற்று வித்தியாசமாகக் காட்டப்படுகின்றது.

> **“இந்தத் தியானங்களில் நமது நேசரின் பாடுகளையடுத்த விஷயங்களை எல்லாம் பக்தி வினயமாகவும், மன எழுப்புதலுக்கேற்றதாயும் அமையும்படி என்னால் ஆனமட்டும் தேவ ஆவியை முன்னிட்டு முயன்று இருக்கிறேன்”[30] என்று தம் முகவுரையில் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.**

4. கர்த்தருடைய ஜெபம் (The Lord's Prayer)

சார்லஸ் ஸ்டேன் எழுதிய நூலினைத் தழுவி *“கர்த்தருடைய ஜெபம்”* என்னும் நூலைச் சாமுவேல் பவுல் ஐயர் எழுதியுள்ளார். இந்நூல் சென்னை சன்மார்க்கச் சிறு புத்தக சங்கத்தின் மூலமாக 1898ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பவுல் ஐயர் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் வெளிவந்தது. பின்னர் 1996ஆம் ஆண்டு ஐயரின் 152ஆம் ஆண்டு பிறப்பாண்டு நினைவு வெளியீடாகக் கிறித்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்டது.

சாமுவேல் பவுல் ஐயர் கர்த்தருடைய ஜெபத்தின் பேரில் சார்லஸ் ஸ்டேன் போர்ட் என்னும் வேத சாஸ்திரியார் எழுதிய பிரபந்தத்தை மேற்கோளாக வைத்துக்கொண்டு, தமிழ்க் கிறித்தவர்களுக்கு உபயோகமாக இதை எழுதிப் பிரசித்திப்படுத்துகின்றேன் என்று தம் முகவுரையில் குறிப்பிடுகிறார். இந்நூலில் ஏழு விண்ணப்பங்களை விளக்கிச் சொல்லும் பத்து அதிகாரங்கள் உள்ளன. இப்பகுதியின் முடிவில் பொழிப்புரையும் காணப்படுகின்றது.

சாமுவேல் பவுல் ஐயரின் தியான இலக்கியங்கள் நன்கு கற்றவர்களுக்கும் சாதாரணக் கல்வியறிவு உள்ளவர்களுக்கும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. தம்முடைய நூல்களின் பொருள் மக்களுக்குச் சென்று அடைதலே பெரிய நோக்கமாக இருந்ததனைப் பல்வேறு நிலைகளிலும் அறிந்துகொள்ள முடிகிறது.

5. துக்கசாகரத் தோணி

துக்கசாகரத் தோணி என்னும் தலைப்பிலமைந்த நூல் தி ரிலிஜியஸ் டிரக்ட் & புக் சொசைட்டி (The Religious Tract & Book Society) பதிப்பகத்தால் 1898ஆம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்டுள்ளது. 96 பக்கங்களைக் கொண்டதாய் அமைந்த நூலின் முகப்புப் பகுதியில் துன்பம், துக்கம் முதலிய சங்கடங்களினால் அவஸ்தைப்படுகிறவர்கள் வாசித்து உணர்ந்து கொள்ளத்தக்க பல போதனைகள் அடங்கியிருக்கின்றன எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்நூலில் ஆசிரியர் முப்பது தலைப்புகளின்கீழ் விவிலிய வசன மேற்கோள்களோடு விளக்குகிறார். துன்பம், துக்கம் ஆகியவற்றுக்கான தொடக்கம் முதல் நடைமுறை நிகழ்வுகளோடு விளக்கி, அதிலிருந்து விடுபடுவதற்கான சூழலையும் தெளிவாக்குகிறார்.

துக்கம் - சாகரம் (கடல்) உலகம், தோணி (படகு) - இயேசு கிறிஸ்து துக்கமாகிய கடலிலிருந்து கரையேறுவதற்கு விவிலிய வசனங்களும், சாமுவேல் பவுல் ஐயரின் விளக்கங்களும் படகாய் அமைந்துள்ளதை நூல் முழுவதும் காணமுடிகிறது.

6. தெளிவான பிரசங்கங்கள்

தெளிவான பிரசங்கங்கள் என்னும் நூல் 159 பக்கங்களைக் கொண்டதாய் 1957ஆம் ஆண்டு நாகர்கோவிலில் வெளியிடப்பட்டது. வெளியீடு பற்றிய பிற தகவல்கள் கிடைக்கவில்லை. இந்நூல் தெளிவான பிரசங்கங்கள் என்னும் தலைப்பின்கீழ் பதினெட்டு உட்தலைப்புகளும், பொறுக்கு மணிகள் என்னும் தலைப்பின்கீழ் முப்பத்தைந்து உட்தலைப்புகளைக் கொண்டதாய் அமைந்துள்ளது. பொறுக்கு மணிகள் என்னும் தலைப்பிலமைந்த பகுதியில் சிலவற்றை நீக்கி, '*உங்களோடு ஒரு நிமிடம்*' என்னும் தலைப்பில் நூலாக 1996ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்டுள்ளது. இவ்வாய்வில் 'தெளிவான பிரசங்கங்கள்' என்னும் நூல் தலைப்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. இயேசுவின் வாழ்வையும் போதனைகளையும் யதார்த்த நிலையில் விரிவாகவும் சுருக்கமாகவும் கூறி விளக்குவதாய் இந்நூல் அமைந்துள்ளது.

சில தலைப்புகள் ஒரு நிமிட அளவிலே தினமும் வாசிக்கக்கூடிய பல கேள்விகள் அடங்கிய இந்நூல் மிகவும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. மாறுபட்ட கோணத்தில் அமைந்த ஒரு தியானநூல் என்பதனை வாசகர்கள் ஒவ்வொரு பகுதியையும் வாசிக்கும்பொழுது உணர முடியும்.

மனித வாழ்க்கையின் இயல்பான குணத்தை 'நீ ஒரு பச்சோந்தி' என்னும் பகுதியில் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார்.

உன் ஆத்துமா சுகமா? நீ குணப்பட்டவனா? நீ என்றைக்குப் பிறந்தாய்? உன் பேரென்ன? உன் தேசமெது? எனப் பல கேள்விகள் அடங்கிய தலைப்புகளுடன் ஆழமான தியானக் கருத்துகளையெல்லாம்

உள்ளடக்கியுள்ளது. இக்கருத்துகளை சாமுவேல் பவுல் ஐயர் மிகவும் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கிறார்.

மொழிபெயர்ப்பு நூல்கள்

ஓர் இலக்கியத்தைப் படைப்பதைக் காட்டிலும் அதனை மொழிபெயர்ப்பது சிக்கலான பணியாகும். ஒரு மொழியின் அகராதியை மட்டும் வைத்துக்கொண்டு இலக்கியத்தை மொழிபெயர்த்த சாமுவேல் பவுல் ஐயருடைய மொழிபெயர்ப்புப் பணி குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கிலத்திலிருந்து உரைநடைத் தமிழில் மொழியாக்கம் செய்யும் கலைக்கு ஓர் உரைகல் போன்றவர் சாமுவேல் பவுல் ஐயர் ஆவார். சாமுவேல் பவுல் ஐயர் 26 நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். பரதேசியின் மோட்சப் பிரயாணம் தவிர்த்த நூல்கள் கிடைக்கவில்லை.

I. பரதேசியின் மோட்சப் பிரயாணம்

இங்கிலாந்து நாட்டினரான *ஜான் பனியன்* எழுதிய ‘பில்கிரிம்ஸ் புரோகிரஸ்’ என்று ஆங்கில மொழியில் எழுதப்பட்ட நூலினைப் பவுல் ஐயர் ‘பரதேசியின் மோட்சப் பிரயாணம்’ என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். ஜான் பனியனுடைய ஆங்கில மொழிநடை மற்றும் வர்ணனை சாமுவேல் பவுல் ஐயரின் கையிலே தமிழ் நடைக்கும் தமிழர் பண்பாடு மற்றும் மரபுக்கும் தகுந்தபடி மாறியிருப்பது மொழிபெயர்ப்புக் கலைக்கு ஒரு முன்மாதிரியாகவும் பாராட்டத்தக்க வகையிலும் அமைந்துள்ளது.

“மறைதிரு எல். ஸ்பால்டிங் என்பவரால் 1853இல் மொழியாக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த நூல் 20ஆம் நூற்றாண்டில் அறிஞர் சிலரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த போதிலும், இன்று வரை அனைவரும் விரும்பிப் படிப்பது சாமுவேல் பவுல் ஐயர் 1882இல் செய்த மொழிபெயர்ப்பு ஆகும். பனியனைப் பவுல் ஐயர் மொழிபெயர்த்தார் அல்லர், தமிழாக்கியிருக்கிறார் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது”[31] என்று *சுவீகரனார்* தமது கவிதையின் முகவுரையில் கூறியிருப்பது நோக்கத்தக்கது. இப்பதிவுகளின் மூலம் ஆங்கிலமும் தமிழும் முற்றிலும் வேறுபட்ட மொழிகளாக இருப்பினும், இந்த வேறுபாடு தோன்றாதவாறு மொழிபெயர்ப்புச் செய்திருப்பது பவுல் ஐயரின் திறமைக்குத் தக்க சான்றாக அமைகிறது.

விவிலிய விளக்க நூல்கள்

1. பழைய ஏற்பாட்டுப் புருஷர் முதல் காண்டம்
2. பழைய ஏற்பாட்டுப் புருஷர் இரண்டாம் காண்டம்
3. புதிய ஏற்பாட்டுப் புருஷர்
4. இயேசு கிறிஸ்து
5. வேதோபகரணம்

என ஐந்து நூல்களை இயற்றியுள்ளார்.

1. பழைய ஏற்பாட்டுப் புருஷர் முதல் காண்டம்

உலகப் படைப்பு முதல் தாவீது காலம் வரையிலுமுள்ள சுமார் மூவாயிரம் வருட வரலாற்றைக் கூறுகிறது. இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஆதாம் முனிவர், காயீன், ஆபேல், பரமேறி முனிவர், பிரளய முனிவர், விசுவாச முனிவர், லோத்து, ஈசாக்கு முனிவர், யாக்கோபு முனிவர், சொப்பன முனிவர் யோசேப்பு, மோசே முனிவர், முதல் ஆசாரியன், ஜோஷியமுனி, தளகர்த்த முனிவர், ஆகான், கிதியோன், ஜடாமுனி, ஏலி, சாமுவேல் தீர்க்கதரிசி, சவுல் அரசன், இராஜ புலவர் முதலான 20 தலைவர்களின் வரலாற்றை விவரிக்கிறது. இந்நூலில் திருமறைப் பகுதிகள், கட்டளைகள், வாக்குத்தத்தங்கள், பழமொழிகள் முதலியன விளக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளன.

2. பழைய ஏற்பாட்டுப் புருஷர் இரண்டாம் காண்டம்

இந்நூலில் சாலொமோன் அரசன் காலம் முதல் இஸ்ரவேலர் பாபிலோனில் சிறைப்பட்டுப்போன காலம் வரையிலுள்ள சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு இடையே வாழ்ந்து வந்த சாலொமோன், ரெகொபெயாம், யோசபாத்து அரசன், ஆகாப், எலியா, எலிசா, நாகமான், எசேக்கியா இராஜா, யோசியா, எஸ்றா, யோபு - பொறுமை பக்தன், ஏசாயா தீர்க்கதரிசி, எரேமியா - புலம்பும் பக்தன், தானியேல் மந்திரி, யோனா ஆகிய 16 தலைவர்களின் வரலாற்றினைக் கூறுகின்றது. திருமறைப் பகுதிகளும் அதற்கான விளக்கங்களும், வரலாற்றுச் செய்திகளும் ஆங்காங்கே விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

3. புதிய ஏற்பாட்டுப் புருஷர்

1890 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள இந்நூல் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தாரால் 1963, 1997ஆம் ஆண்டுகளில் 386 பக்கங்களுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நூலில் சகரியா, சிமியோன், சாஸ்திரிகள், யோவான் ஸ்நானகன், அந்திரேயா, நாத்தான்வேல், மத்தேயு, சகேயு, சீமோன் பேதுரு, யோவான் அப்போஸ்தலன், யூதாஸ்காரியோத், பொந்தியு பிலாத்து, குணப்பட்ட கள்ளன், ஸ்தேவான், பவுல் அப்போஸ்தலன், கொர்நேலியு, தீமோத்தேயு, ஒநேசிமு ஆகிய 18 பேருடைய வரலாறு விளக்கப்பட்டுள்ளது. இந்த வரலாறுகள் பழைய ஏற்பாட்டு வரலாற்றை விடச் சற்று வேறுபட்ட நிலையில் கூறப்பட்டுள்ளன. "இந்த நூலை வாசிக்கிறவர்கள் நிலையான பக்தியிலும் பரிசுத்தத்திலும் விருத்தியாகி, கிறித்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, காலம் கழிந்த விசுவாசிகளின் மாதிரியைப்போல் நடந்து தங்கள் ஜீவ காலத்தைப் பின்னிட வேண்டுமென்பதே எனது நோக்கம்"[32] என நூலாசிரியர் தம் முகவுரையில் குறிப்பிடுகிறார்.

இதேபோல் எளிய நடை, தெளிவாகக் கருத்துக்களைக் கூறும் போக்கு ஆகியவற்றோடு ஆண்டவரை நெருங்கி வாழ்ந்த ஆன்மீக வளம் மிகுந்த

வாழ்க்கையும் தாம் இவர் எழுத்துக் கிடைக்கும் வெற்றிக்குக் காரணம் எனவும் இந்தத் தலைமுறை சேர்ந்த கிறித்தவர்களும், இளைஞர்களும் தங்கள் அன்றாடத் தியானத்திற்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுத்தக் கூடிய நூல்களை எழுதியுள்ள அருள்திரு சாமுவேல் பவுல் ஐயர் அடுத்து வரும் நூற்றாண்டுகளிலும் தாம் படைத்த நூல்களின் வழி ஒரு சிறந்த கிறித்தவச் சிந்தைனையாளராகப் போற்றப்படுவார்[33] என்று உறுதியாகச் சொல்லலாம் என்று *தி. தயானந்தன் பிரான்சிஸ்* குறிப்பிட்டிருப்பது இவருடைய நூல்களுக்கான முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

4. இயேசு கிறிஸ்து

'இயேசு கிறிஸ்து' என்னும் தலைப்பிலமைந்த நூல் 1894ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வெளிவந்துள்ளது. பின்னர் இரண்டாம் பதிப்பாக 1958ஆம் ஆண்டு சுவிசேஷ ஊழிய நூல் நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் காப்பிய அமைப்பு முறையில் காண்டம், தீட்சை காண்டம், மத்திய காண்டம், புறத்தேச காண்டம், அந்திய காண்டம், கடைசி வார காண்டம், யாக காண்டம், வெற்றிக் காண்டம், ஒழிபியல் என ஒன்பது தலைப்பாகப் பகுக்கப்பட்டுள்ளது. எண்பத்து ஏழு பருவங்களாகப் பிரிக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையை விவரிக்கிறது. ஒவ்வொரு பருவத்திலும் கூறப்படும் செய்திகளுக்கான விவிலியத் திருவசனங்கள் முதலில் அடைப்புக் குறிக்குள் கூறப்பட்டுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயேசுவின் வாழ்க்கையை உரைநடையில் விளக்கமாகக் கூறும் முதல் நூல். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ இலக்கிய உலகில் *'உரைநடை வேந்தர்'* [34] என்னும் ஆர்.எஸ். ஜேக்கப் அவர்களின் கருத்து இங்கு எண்ணத்தக்கது.

5. வேதோபகரணம்

'வேதோபகரணம்' என்னும் நூல் 445 பக்கங்களுடன் 1882ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் தம் பெயரை *'படுபாவி'* என்றும் இடத்தை *'பாதகர்மண்டலம், இரக்ஷண்ய ஸ்ரீ 1882'*[35] என்றும் குறிப்பிடுகிறார். வெளியீடு பற்றிய பிற விவரங்கள் கிடைக்கவில்லை. கிறித்தவர்களின் மறைநூலான விவிலியத்தைப் பற்றிய மேற்கோள் விவரங்களுடனான விரிவான விளக்க நூலாக அமைந்துள்ளது. இந்நூல் ஐந்து பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சாமுவேல் பவுல் ஐயர் தம்முடைய ஒவ்வொரு நூலையும் அக்காலச் சூழலில் அமைந்திருந்த வெவ்வேறு பட்ட நூல் அமைப்புகளுடன் படைத்திருப்பதை அறிய முடிகிறது. முதலாம் பங்கு, வேதாகமத்தின் பேர், பிரிவு, புராதனம் (மூலம்), வேதாகமம் கொடுக்கப்பட்டதின் நோக்கம், ஆங்கில மொழிபெயர்ப்பு முதலானவற்றை விளக்குகிறது.

இரண்டாம் பங்கு பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது நூல்களை ஐந்து பிரிவுகளாக்கி விளக்குகிறது. மூன்றாம் பங்கு புதிய ஏற்பாட்டை ஐந்து பிரிவுகளாக்கியும், நான்காம் பங்கு இரண்டையும் இணைத்தும் விளக்குகிறது.

ஐந்தாம் பங்கு படிப்பதற்கும், விளங்கிக் கொள்வதற்குமான இருபத்தைந்து வழிமுறைகளை விளக்குவதாய் அமைந்துள்ளது. பின்னிணைப்பில் விவிலியம் பற்றிய பல்வேறு தகவல்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வியலில் கூறப்பட்ட செய்திகளிலிருந்து கீழ்க்காணும் கருத்துகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தமிழகத்தில் கிறித்தவ சமய, இலக்கிய வளர்ச்சியும் திருத்தமுறைக் கிறித்தவத்திற்கு வித்திட்ட சீகன்பால்குவின் சமயப்பணியும், தமிழ்ப்பணியும் விளக்கப்பட்டுள்ளன. சாமுவேல் பவுல் ஐயரின் தந்தையார் தானியேல் பவுல் ஐயரின் கிறித்தவ சமய ஈடுபாடும், வளர்ச்சியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சாமுவேல் பவுல் ஐயரின் தோற்றம் - வாழ்க்கை முறை - இறையியல் பணி - திருமணம் - குடும்பம் - நற்செய்திப்பணி - இதழ்ப்பணி முதலியவை விளக்கப்பட்டுள்ளன. இந்து சமயக் கோயில்களில் நடைபெற்று வந்த தவச உற்சவம் என்னும் திருவிழா நிகழ்வினை முதன் முதலில் கிறித்தவ ஆலயங்களிலும் நடைபெற வழிகாட்டியுள்ளார். ஐயரின் மறைவினை அறிந்து ஆழ்ந்த இரங்கலை வெளிப்படுத்திய பலருடைய கடிதங்கள் அவருடைய குணநலன்களை எடுத்துக்காட்டி நற்சாட்சி பகருகின்றன. சாமுவேல் பவுல் ஐயரின் படைப்புகள் பட்டியலிடப்பட்டு, கிடைக்கப்பெற்ற நூல்களின் அறிமுகம், நூல்பகுப்பு முறையில் கூறப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. சீனி. வேங்கடசாமி, கிறித்துவமும் தமிழும், ப.13.
2. எஸ்.ஜி.தானியேல், *சாமுவேல் பவுல் ஐயர் வாழ்க்கை வரலாறு*, ப.1.
3. மேலது, ப.2.
4. மேலது, ப.3.
5. மேலது, ப.8-9.
6. மேலது, ப.40.
7. மேற்படி, ப.8.
8. மேற்படி, ப.8.
9. சவரிராயன் ஏசுதாசன், *திருச்சபை பிதாக்கள்*, ப.216.
10. தொ.ஆம. ஜெயசந்திரன் & ம.இஸ்ரவேல் சீனிவாசகம், *உலகம் போற்றும் உத்தமர்கள்*, ப.21.
11. எஸ்.ஜி.தானியேல், மு.நூ., ப.20.
12. மேற்படி, ப.21.
13. மேற்படி, ப.27.

14. மேற்படி, ப.28.

15. மேற்படி.

16. மேற்படி, ப.30.

17. Christian Missionary Society (CMS) Report - 1899, p.478

18. ஆர்.எஸ். ஜேக்கப், *தமிழில் முதல் சிறுகதை எது?*, ப.26.

19. எஸ்.ஜி.தானியேல், மு.நூ., ப.37.

20. மேற்படி.

21. மேற்படி.

22. எஸ்.ஜி.தானியேல், மு.நூ., ப.96.

23. மேற்படி.

24. மேற்படி.

25. மேற்படி, ப.98.

26. மேற்படி, ப.99.

27. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்கமகத்துவம்*, முகவுரை, ப.ix.

28. தி. தயானந்தன் பிரான்சிஸ், *கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் : சில செய்திகள்*, ப.58.

29. சாமுவேல் பவுல், *தியானச் சோலை*, ப.1.

30. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, *முகவுரை*, ப.V.

31. *இறை அருள் தொண்டர்கள், இவர்களைத் தெரியுமா?*, ப.166.

32. சாமுவேல் பவுல், *புதிய ஏற்பாட்டுப் புருஷர்*, ப.XI.

33. தி. தயானந்தன் பிரான்சிஸ், *கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் : சில செய்திகள்*, ப.58.

34. ஆர். எஸ். ஜேக்கப், மு.நூ., ப.25.

35. சாமுவேல் பவுல், *வேதோபகரணம்*, ப. எண் இல்லை.

தியான நூல்கள்

தமிழ் மொழியில் 'தியானம்' என்னும் சொல்லை அறிஞர்கள் 'ஆழ்சிந்தனை' என்ற பொருளில் குறிப்பிடுகின்றனர். இதன் நேரிய ஆங்கிலச் சொல் 'Meditation' என்பதாகும். இச்சொல்லுக்கு ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் பல விளக்கங்கள் கூறப்படினும், "Focus our mind for a period of time for spiritual purpose - ஒருவனுடைய மனதை ஆன்மீகச் செயலில் குறிப்பிட்ட காலம் வரை ஈடுபடுத்துதல்"[1] என்னும் வரையறை பொருந்துவதாக அமைகிறது. ஒரு பொருளை 'ஆழ்ந்தாராய்ந்தல்' என்பதையும் தியானம் என்று கொள்ளலாம்.

சிந்தனையின் பிறப்பிடம் மனம். இதனை உள்ளம், நெஞ்சம், இதயம், எண்ணம் என்றும் கூறலாம். இதயம் இரத்த ஓட்டத்தின் மூலமாக அமைந்த உடல் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொறுப்பு வகிப்பதால் இதயத்தை மையப்படுத்தினர். ஆனால் இதயத்திற்கு எண்ணத்தைச் சார்ந்த செயல்களில் ஈடுபாடில்லை. மனம் எப்போதும் எதையாவது சிந்தித்துக் கொண்டே இருக்கும். இச்சிந்தனை ஓட்டத்தைச் சில சமயங்களில் கட்டுப்படுத்த முடிவதில்லை. ஆனால் இச்சிந்தனைகளைத் தியானங்களின் வழி கட்டுப்படுத்தலாம் எனப் பல சமய ஆன்றோர்களும் கூறியுள்ளனர்.

தியானம் – அறிமுகம்

தியானித்தல் என்பது ஒரு பொருளைக்குறித்து ஆழமாகப் பரந்த அளவில் அதனுடைய நன்மை, தீமை குறித்து இடைவிடாமல் நினைப்பது ஆகும். இந்தத் தியானத்தின் முடிவில் நாம் அடைகின்ற அல்லது பெறுகின்ற அனுபவம் நம்முடைய வாழ்க்கையில் ஒரு சிறந்த மாற்றத்தை உண்டுபண்ணும். ஒருவேளை அது நமக்குப் பயன்படுவதைப் போலவே மற்றவர்க்கும் பயன்பட்டுச் சமுதாயத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும்.

அண்மைக்காலங்களில் சமுதாயத்தில் தியானத்தைக் குறித்து வெகுவாய் விவாதிக்கப்படுகிறது. உடல் சார்ந்த எல்லாக் கவலைகளையும், அவைகளால் ஏற்படுகின்ற துன்பமான நினைவு, வியாதிகள், மன உளைச்சல் இவைகளை எல்லாம் போக்கிக் கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டு வருகின்றது.

இத்தகைய தியானத்தை ஒரு நாளில் கைவசப்படுத்திக் கொள்ள முடியாது. நம்முடைய அன்றாட வாழ்வில் ஒரு நிகழ்ச்சியாகத் தியானித்தல் என்ற நிலைப்பாடு பழக்கப்படுத்திக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

கிறித்தவ சமயத்தில் நிகழ்ச்சிகள் வரையறுக்கப்பட்டது. சான்றாக, கிறித்து பிறப்பதற்கு முன்னான (அட்வந்து) காலம் கிறித்து வருகின்ற (பிறக்கின்ற காலம்) என்ற தலைப்பில் சிந்திப்பதற்குரிய வேதப்பகுதிகள் தியானப் பொருளாக அமைகிறது. இவைகளில் இயேசு கிறித்து பிறப்பதற்கு முன்னரே பல்வேறு காலகட்டங்கள் தேவ ஆவியினால் திருக்காட்சிகளைக் கண்ட தீர்க்கதரிசிகள் உரைத்த செய்திகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இயேசுவின் பிறப்பைக் குறித்துத் தீர்க்கதரிசிகளுக்கு அருளப்பட்ட காட்சிகளின்படி அதை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

அடுத்து இயேசுவானவர் ஊழியம் செய்த பகுதிகள் இடம்பெறுகின்றது. இதில் அவர் தம்முடைய 30ஆம் அகவைத் தொடங்கிச் சிலுவை மரணம்வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகள் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. இதற்குப் பின்னர் தூய ஆவியால் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. ஆதிசபை உருவாக்கம், திருத்தூதுவர் ஈடுபாடுகள், பெந்தெகொஸ்தே அனுபவம் இவைகள் கூறப்படுகின்றன.

பின்னர் இயேசு கிறித்துவினுடைய இரண்டாம் வருகை, இரகசிய வருகை, முடிவிலா இன்பப் பெருவாழ்வு, நியாயத்தீர்ப்புகள் முதலியவைகள் இடம்பெறுகின்றன. இதில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது மனிதனுடைய பாவத்தை இயேசு சுமந்து நீக்கிவிட்டது. பாவியான மக்களைக் கர்த்தர் நீதிமான்கள் ஆக்குவதை மனிதன் ஏற்றுகொள்வதில்தான் மீட்பு அமைந்திருக்கின்றது. இப்படிப்பட்ட காரியங்களைத் தியானிப்பதற்குக் கிறித்தவ இறையியல் நூல்கள் பயன்படுகின்றன.

தியானிக்கும் முறை

நாம் வேதத்தைத் தியானிப்பதற்கு அல்லது பக்தி இலக்கியங்களைத் தியானிப்பதற்கு நமக்குத் துணை செய்வது தியானப் பொருளைப் பகுத்து அதன் தன்மைகளை நோக்கும் முறையாகும். சில சிறு சொற்கள் நமக்குப் பெரும் தியானப் பொருளை வழங்குவதாக அமைந்துள்ளன. சான்றாக, யாக்கோபு என்னும் அடியவரைக் கர்த்தர் ஒரு நாளில் சந்திக்கின்றார். எல்லாவற்றையுமே இழந்து துயருற்ற நிலையில் தனிமையாய் ஒரு இரவில் தங்க நேரிடுகின்றது. அவருக்கு உண்டான தரிசனத்தில் கர்த்தர் நான் உன் தேவன் என்று கூறுகின்றார். இங்கு நமக்குத் தியானத்திற்கு உதவியாய் இருக்கும் சொற்கள் 'நான்' என்ற தன்மை 'நீ' என்னும் முன்னிலைச் சொற்கள். நான் என்று சொல்லுவது ஆண்டவருடைய அருளைப் பற்றிய தன்மையும், அன்பும், ஆற்றலும், அடங்கிய அச்சொல் ஆதரவற்ற நிலையிலிருந்த யாக்கோபுக்கு ஆதரவான ஒரு சொல்லாக அமைந்தது.

உனக்கு என்று சொல்லும்போது இறைவனுடைய அத்தனை அறிவும், பெலமும், வழிகாட்டு நெறியும் தனக்கு உரியவையாய் ஆகின்றது என்பதை மனிதனால் உணரமுடிந்தது.

நான், உனக்கு என்ற சொற்களை நினைத்துப் பார்க்கும்பொழுது தன்மை முன்னிலைகள் ஒரு நெருக்கமான உறவைப் பக்தனுக்கு ஏற்படுத்துகின்றது. இதுதான் தியானம். எவ்வாறு ஆண்டவர் மனிதனை ஆற்றுகின்றாரோ அந்த ஆறுதலை மனிதன் உணர்ந்து சொல்வதுதான் தியானப் பொருளின் நோக்கம். இந்த உணர்வுதான் தியானத்தின் முதற்படி, அதற்குப் பிறகுதான் என்னென்ன பேறுகள் கிடைக்கின்றன என்பதைச் சிந்திக்கின்றோம்.

வேதாகமத்தை முறையாகப் படிப்பதும் தியானிப்பதும் முக்கியமான அம்சமாகும். வேதத்தைப் படிப்பது வேறு. வேதத்தைக் கற்பது வேறு, வேதத்தைத் தியானிப்பது வேறு, இவை ஒவ்வொன்றிற்கும் வேறுபாடு உண்டு.

படிப்பது என்பது மேற்போக்கான காரியங்களை அறிந்துகொள்வது, கற்பது என்பது கிறித்தவ வேதத்தைப் பற்றி அறிந்துகொள்வது. தியானித்தல் என்பது வேதம் கூறும் பொருளைத் தனக்குரியதாக ஆக்கிக்கொண்டு இறைவனின் அருள்கொடைகளை நாம் பயன்படுத்திக் கொள்வதாகும்.

தியானத்தை ஒரு வகையில் இறைவனுடன் கலந்து வாழ்கின்ற வாழ்க்கை என்றே கூறலாம். ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையினர் என்று கூறப்படும் ஏனோக்கு 65 வயதில் மெத்துசலா என்ற மகனைப் பெற்றான். அந்த மகனுடைய பிறப்பிற்கு முன்னர் அவர், அவருடைய சிந்தனை தேவனுடன் ஒன்றித்துப் போனது. சஞ்சரிப்பது, வாசிப்பது என்பது மனிதன் தன்னைக் கடவுளுடன் இணைத்துக் கொள்வது.

கடவுள் மனிதனோடு உலாவி, அவர்களோடு வாசம்பண்ணுவார் என்று வேதம் கூறுகின்றது. இவ்வாறாகத் தன்னை மனிதனுடன் இணைத்துக் கொள்ளும் கடவுள் தன்மையை மனிதன் ஏற்றுக்கொண்டு வாழ்வதற்குத் துணையாக அமைதுவதுதான் தியானம்.

சாமுவேல் பவுல் ஐயரின் தியான நூல்கள்

கிறிஸ்தவர், இந்துக்கள், முகமதியர் யாவருக்கும் பயன்படும் விதமாகச் செந்தமிழில் சொற்சுவையும், பொருட்சுவையும் பொருந்திப் படிப்போரின் மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கதாய் இவர் எழுதிய நூல்களும், சிறு துண்டுப் பிரதிகளும் அமைந்துள்ளன.

இவர் தமக்கிருந்த வேலைகளில் எச்சரிக்கையுள்ளவராயிருந்தும், தமிழ்ச் சபையின் வளர்ச்சியைக் கருதித் தான் ஓய்வெடுக்கும் நேரங்களில் எழுதிய தியானங்களையும், சரித்திரங்களையும், கதைகளையும் மற்றும் நூல்களையும் கவனிக்கும்போது இவர் சிறப்பான வரம்பெற்ற மகான் என்றே சொல்ல வேண்டும். சுயமாய்ப் புஸ்தகங்கள், சிறு சங்கியைகள், ஒற்றைத்தாள் பிரதிகள் எழுதுவதிலும், சன்மார்க்கப் புஸ்தக சங்கத்தார், கிறிஸ்துமதக் கல்வி அபிவிர்த்தி சங்கத்தார், கிறிஸ்தவக் கலை ஞான சங்கத்தார், சர்ச்மிஷன் சங்கத்தார் ஆகியோர் மொழிபெயர்க்கும்படி கொடுக்கும் புத்தகங்களைத் தமிழில் எழுதுவதிலும்

இவருக்கு மிகுந்த அவாவும் சிறப்பான வரமும் இருந்ததை அறிய முடிகிறது.

சாமுவேல் பவுல் ஐயரின் ஆத்தும நேசரின் அங்கமகத்துவம், தியான ஆலயம், தியானச்சோலை, வேத ஸ்திரீகள், வேதபுருஷர், தெளிவான பிரசங்கங்கள், ஜெப புஸ்தக சரித்திரம், ஜெப புஸ்தகத் திறவுகோல், வேத உதாரணங்களுடன் வேதமார்க்கப் பிரமாணம், கூடாரமும் தேவாலயமும், வியாதிப்படுக்கைத் தோழன், துக்கசாகரத் தோணி ஆகியவை குறிப்பிடத்தக்க தியான நூல்களாகும். இவற்றுள் கிடைப்பவை,

1. ஆத்தும நேசரின் அங்க மகத்துவம் (1882)
2. தியானச்சோலை (1895)
3. தியான ஆலயம் (1896)
4. கர்த்தருடைய ஜெபம் (1898)
5. துக்கசாகரத் தோணி (1898)
6. தெளிவான பிரசங்கங்கள் (1957) ஆகிய நூல்களாகும்.

இந்நூல்கள் புலப்படுத்தும் தியான நிலைகள், தியான வெளியீட்டு முறை, தியான பயன்பாட்டு முறை, தியான நூல்களின் தனித்தன்மை, ஒப்புமை நோக்கு ஆகியவை இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே தியானங்கள் காணப்படுகின்றன. தியானத்தை ஒரு ஆலயமாகப் பாவித்தும், தியானச் சோலைக்குள் செல்வது போலவும், மாதிரி ஜெபத்தோடு தியானித்தும், ஆத்தும நேசரின் அங்கங்களோடு தியானத்துக்கு உட்படுத்தியும், பல கேள்விகள் மூலமாகத் தியானங்களை விளக்குவதாகவும், துக்கக் காலங்களில் தியானிக்கும் முறை பற்றியும் தியானங்கள் காணப்படுகின்றன.

கடவுளால் மண்ணுக்கு அனுப்பப்பட்ட ஆன்மா மீண்டும் இறைவனை அடைய வேண்டும். அவ்வாறு அடைய, ஆன்மா பல தடைகளைக் கடந்த பிறகே இறைவனை அடைய முடியும். இக்கருத்தை உணர்த்தும் வகையில் சாமுவேல் பவுல் ஐயரால் இயற்றப்பட்ட ஐந்து தியான நூல்களும் உலகின் மாயைகளை அறிந்து அவைகளை அகற்றி இறைவனோடு பரலோகத்தில் சேருவதற்கு வழி நடத்துவனவாக உள்ளன. இத்தகைய இந்நூல்களின் ஆக்கத் தன்மைகளின் சிறப்பைப் பின்வருவனவற்றுள் காண்போம்.

தியான நூல்கள்

ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்

இயேசுகிறித்துவின் அங்கங்களைக் குறித்த இருபத்தெட்டு தியானங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. இயேசுகிறித்துவின் பாதம் தொடங்கி தலை முடிய

பதினேழு உறுப்புகளைத் தியானிக்கிறார் சாமுவேல் பவுல் ஐயர். அவை முறையே பாதம், கால், முழங்கால், அரை, வயிறு, மார்பு, விலா, முதுகு, தோள், கை, கைவிரல், காது, கன்னம், வாய், கண், முகம், சிரசு என முடிக்கின்றார். தியானத்தைத் துவங்கும் முன்பு, தியானபீடம் பகுதியில் தன் ஆத்துமா நேசரை நினைத்து எப்படியெல்லாம் உருகுகிறது என்று மனம் நெகிழக் கூறுகின்றார்.

"ஆத்துமாவே! உன் இரட்சகராகிய இயேசு நேசரைவிட வேறே விருப்பம் உனக்கு இல்லையென்று அறிவேன். அவரைப் பார்ப்பதற்கு நீங்காத ஆசை உனக்குண்டு. அவரை நினைத்து நினைத்து வேதனைப்படுகிறாய், நீ உனக்குள் கலங்குகிறாய் – நேச பாசத்தால் வியாதியாயிருக்கிறாய்; ஆ, என் ஆத்தும நேசரை இந்தக் கண்ணால் கண்டேனில்லையே என்கிற சோகத்தாலும் ஏக்கத்தாலும் உன் ஆத்துமா பெருமூச்சுவிட்டு மெலிகிறது"[2] எனவும்,

"ஆத்துமாவே! உன் நேசரை நீ பூரணமாய்ப் பார்க்கும்படி கல்வாரி மலைக்குத் தியானப் பிரயாணஞ்செய். அந்த ஒரே இடத்தில் மாத்திரம் நீ உன் இரட்சகரின் மானிட தேகத்தையும், அதிலே அவர் உனக்காக அனுபவித்த குரூரமான பாடுகளையும் தெளிவாகக் கண்டுகொள்வாய். அதையே உன் தியான ஸ்தானமாக்கிக் கொள்"[3] என்கிறார். இதனையடுத்து இயேசுவின் ஒவ்வொரு அங்கங்களையும் வரிசையாகத் தியானிக்கின்றார்.

ஒவ்வொரு உறுப்பையும் தியானிக்கும்போது ஒவ்வொரு பகுதியிலும் வேதம், போதனை, தியானம், விசுவாச வணக்கம், துதி என்னும் முறையைக் கையாளுகின்றார். சான்றாக, ஆத்துமநேசரின் பாதத்தைத் தியானிக்கும்போது,

1. இயேசுகிறித்துவின் பாதத்துக்குக் கல்லும் பஞ்சு போன்றதுதான்
2. இயேசுவின் பாதம் பிணியாளிகளின் வைத்தியசாலை
3. இயேசுவின் பாதம் பிணி நீங்கினவர்களின் பள்ளிக்கூடம்

என்று இயேசுவின் பாதத்தின் சிறப்பைக் கூறுகின்றார்.

ஆத்தும நேசரின் முழங்கால் என்னும் பகுதியில், "அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார்; அவருடைய சீஷரும் அவரோடேகூடப் போனார்கள். அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி; நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் அப்புறம் போய், முழங்கால்படியிட்டு, பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்."[4] என்று குறிப்பிடுகின்றார்.

ஆத்தும நேசரின் அங்க மகத்துவம் குறிப்பாக நேசரைக் குறித்ததான ஒரு அரிய முழுமையான தியான நூல். கிறித்தவர்களின் ஆன்மீக வாழ்வுக்கு வழிகாட்டும் நூல்.

தியானச்சோலை

தியானச்சோலையில் தியானப் பகுதிகளை இயேசுவின் வழிநடைப் போதனை தொடங்கி மரண உபதேச வசனங்கள் வரை பதினைந்து தலைப்புகளாகப் பிரித்து தியானத்திற்கு உட்படுத்தியுள்ளார். கிறித்தவ வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாப் பகுதிகளாகத் தியானங்கள் காணப்படுகின்றன. தியானச்சோலைக்குள் வரத் தியானம் பண்ணுவோம் என (தியானச்சோலைக்குள்) அழைத்துச் செல்கிறார். அதனை, "தியானச் சோலைக்குள், உனக்குக் கிடைக்கும் எல்லா வாழ்விலும் விருந்துண்பதே பெரிய வாழ்வாயிருக்கிறது. அந்தப் பெரிய வாழ்வை நீ பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தகுந்த ஆயத்தத்தோடும் அதற்குள் பிரவேசிக்க வேண்டியது அவசியம். நீ உன் இஷ்டத்தை இன்று எனக்கு ஒப்புவித்து விடுவாயானால், நான் அதற்குரிய பொதுவான குறிப்புகளையும் போதனைகளையும் உனக்கு உணர்த்தி, உலக சிந்தையிலிருந்து உன் மனதைப் பிரித்துத் தியானச் சோலைக்கு நேரே திகையாமல் நடத்தக்கூடுமென்று நம்புகிறேன்"[5] என்று குறிப்பிடுகிறார்.

ஒவ்வொரு தலைப்புக்குள்ளும் பல உட்பிரிவுகளோடு விளக்கியுள்ளார். 'ஞானக்கல்விகள்' என்னும் இரண்டாம் தலைப்பில்,

1. ஜெபம்

2. விசுவாசம்

3. கற்பனைகள்

4. கீழ்ப்படிதல்

எனப் பல பிரிவுகளோடு தியான முறையினை விளக்குகிறார். ஒவ்வொரு தலைப்பிலும் பல உட்தலைப்புகளுடன் வெவ்வேறான தியான முறையைக் கையாளுகின்றார்.

திருமறை

'மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது.' 'பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும்' என்னும் திருமறை வசனத்தைத் தியானம் என்னும் தலைப்பிட்டுத் தொடர்புடைய திருவசனங்களின் வழி விளக்குகிறார்.

தியானம்

நீர் என் பாவங்களை மன்னிக்குமுன்னே என்னை மகன் என்று அழைக்கிறது எவ்வளவு தயாளம். பாவ மன்னிப்பைக் காட்டும் பாவி இயேசுவுக்கு மகனாம்! அல்லேலூயா! இந்த இனமுறையை நான் இழந்து போகாதபடி பாதுகாத்துக் கொள்வேனாக. பாவமன்னிப்பின் அதிகாரத்தோடு, ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே நிலையங்கி தரித்து பொற்கச்சை கட்டியிருந்த

மனுஷ குமாரனுக்கொப்பனவராய் விளங்கிய தேவகுமாரனே, இதோ பாவபாரத்தால் இளைத்து நொந்துபோய் உமது கிருபாசனத்தண்டை சாஷ்டாங்கமாய்க் கிடக்கும் அடியேன்மேல் பாவ விமோசன வாசகம் கூறுவீராக!

இயேசு : 'மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது.'

பாவி : ஆமென்.[6]

என உரையாடல் அமைப்பில் எடுத்துக் கூறுகின்றார்.

பன்னிரண்டாம் தலைப்பை வாழ்த்து வாசகங்களால் தியானிக்கிறார். சான்றாக,

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்."[7] மற்றும்

"அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். இஸ்ரவேலே நீ பாக்கியவான்; கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்?"[8]

"ஜீவ அப்பம் நானே."[9]

இவ்வாறாகத் திருமறை வார்த்தைகளைக் கொண்டு இவ்வாழ்த்து வாசகங்களைச் சாமுவேல் பவுல் ஐயர் அமைக்கின்றார்.

தியான ஆலயம்

'தியான ஆலயம்' என்னும் நூலில் தியானங்கள் ஓர் ஆலயமாக பாவிக்கப்பட்டு முன்மண்டபம், பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என்னும் நோக்கில் கூறப்பட்டுள்ளன. கிறித்துவின் பாடுகளைத் தியானிக்கும் நோக்கில் அவருடைய பிறப்பு முதல் மரணம் வரை தியானிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தியானமும் அக்காட்சியினுடேயே கொண்டு செல்லப்படுகிறது. இயேசு கிறித்துவோடு இருந்தது போன்ற உணர்வை ஏற்படுத்துமாறு விளக்கப்பட்டுள்ளது. முன் மண்டபத்தில் இயேசு கிறித்துவின் பாடுகளினால் கிட்டும் பயனையும், பிரகாரத்தில் இயேசுகிறித்துவின் பிறப்பு மற்றும் வாழ்க்கையினையும், கெச்செமனே நோக்கிய மரணப் பயணத்தினையும், சிலுவைப்பாடுகள், மரணம், அடக்கத்தினையும் தியானத்துக்குட்படுத்துகிறார்.

'ஒருவன் பக்தனானுலும் சரி, படுதோஷியானாலும் சரி; அவன் இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கக் கடமைப்பட்டவனாயிருக்கிறான்' என உலகத்தில் யாராய் இருப்பினும் தியானிக்க வேண்டும்[10] என்று வலியுறுத்துகிறார்.

இயேசுகிறித்துவின் பாடுகளைத் தியானிக்கும்போது மனதிலே கேட்க வேண்டிய ஐந்து கேள்விகளைச் சுட்டிக்காட்டுகின்றார்.

1. பாடுபடுகிற இவர் யார்?

2. அவர் என்ன பாடுபடுகிறார்?

3. இவரைப் பாடுபடுத்துகிறவர் யார்?

4. இவர் யாருக்காகப் பாடுபடுகிறார்?

5. என்னவிதமாய்ப் பாடுபடுகிறார்?

தியானத்தின் ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் இறைவனை நோக்கி வேண்டுவதைக் காணமுடிகின்றது. தியானத்திற்குரிய திருமறை வார்த்தைகளை ஒவ்வொரு பகுதியிலும் கூறுகின்றார். தியானத்தினையும் திருமறை வார்த்தைகளையும் இறைவனை நோக்கி வேண்டும் நிலையினையும் ஒருங்கே ஒவ்வொரு தியானப் பகுதியிலும் கூறியுள்ளமையினை அறிய முடிகிறது.

வேதம், போதனை, தியானம், ஜெபம் என்னும் முன்வைப்பின்படி சாமுவேல் பவுல் ஐயரின் தியானம், தியான ஆலயத்தில் காணப்படுகின்றது. முன் மண்டபம் பகுதி எட்டுத் தியான உட்தலைப்புகளோடும், பிரகாரம் பகுதி பதினாறு தியான உட்தலைப்புகளோடும், பரிசுத்த ஸ்தலம் பகுதி இருபத்தைந்து தியான உட்தலைப்புகளோடும் மகா பரிசுத்த ஸ்தலம் பகுதி பதினெட்டு தியான உட்தலைப்புகளோடும் விளக்கப்படுகின்றன. இஸ்ரவேலர்களின் ஆசரிப்புக் கூடார அமைப்பு நிலையில் நம்மையும் நமது ஆவி ஆத்துமா சரீர நிலையை வகைப்படுத்தித் தியானத்துக்குட்படுத்தும் நிலை சிந்தித்தற்குரியது.

"இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதால், பிதாவாகிய தேவன் நமதுமேல் பாராட்டிய அளவில்லாத அன்பை நாம் உணர்ந்துகொள்ளக் கூடியவர்-களாகிறோம்"[11] என்கிறார் சாமுவேல் பவுல் ஐயர்.

"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"[12] என்னும் திருமறை வாக்கியத்தை இங்கு நினைவூட்டுகின்றார்.

பரம பிதாவாகிய தேவனே, தேவரீருடைய குமாரன் மூலமாய் நீர் என்னை நேசிக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். நான் உமது நேசத்துக்கல்ல உமது கோபத்துக்குப் பாத்திரனாயிருந்தும், அந்தப் கோபத்தையெல்லாம் உமது திருக்குமாரன் பேரில் செலுத்திவிட்டீர். நீர் என்னை நேசிக்க உமது குமாரனை மறந்த காரணமென்ன? தேவரீருடைய அளவில்லாத அன்புதான் அதின் காரணம்"[13] என மனமுருக வேண்டுகின்றார்.

கர்த்தருடைய ஜெபம்

கர்த்தருடைய வேண்டுதலின் பேரில், சார்லிஸ் ஸ்டான்போர்ட் (Charles Stanford D.D.) என்னும் போதகர் (வேத நூல் அறிஞர்) எழுதிய நூலை (The Lord's Prayer) மேற்கோளாக வைத்துக்கொண்டு 'கர்த்தருடைய ஜெபம்' என்னும் நூலைச் சாமுவேல் பவுல் ஐயர் எழுதியுள்ளார்.

இயேசு கிறித்துவை, வேண்டுதலைக் கற்றுக்கொடுப்பவராக முன்வைத்து இந்நூலைச் சாமுவேல் பவுல் ஐயர் படைக்கின்றார்.

"கர்த்தருடைய ஜெபத்தின் வாசகங்களைப் பற்றியும் அதின் சரித்திர சம்பவங்களைப் பற்றியும் இதில் அங்குமிங்கும் அற்ப சொற்பமான குறிப்புகள் மாத்திரம் அடங்கியிருக்கும் என்றாலும் இதினால் அநேகருடைய மனம் பரவசப்பட ஏதுவாயிருக்குமென்று நம்புகின்றேன். இந்த ஜெபத்தின் மூலமாய் இரட்சகர் போதிக்கும் ஞான போதனைகளை அறியவும், நமது ஆவியானது இந்த மகத்துவ ஜெபத்தைத் தக்கபிரகாரம் உணர்ந்துகொள்ளவும் பரிசுத்த ஆவியானவர் நம்மை ஏவி எழுப்பி விடுவாராக"[14] என்கிறார் சாமுவேல் பவுல் ஐயர்.

இந்த ஜெபத்தின் இரகசியங்களை ஜனங்களுக்குப் பிரசங்கமாக முறையே சொல்ல உதவிசெய்யும்படி அந்தந்தப் பாகத்துப் போதனையின் முடிவில் பொழிப்புரை எழுதி வைக்கப்பட்டுள்ளது எனத் தம் முகவுரையில் குறிப்பிடுகின்றார்.

சான்றாகப் 'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே' என்னும் கடவுள் வணக்கப் பகுதியின் பொழிப்புரையானது,

"எங்கள் பிதாவே" என்பதில்,

1. *தேவன் ஒரு சத்துவல்ல ஒரு ஆள் என்றும்*
2. *தேவன் எல்லா மனுமக்களுக்கும் தகப்பன் என்றும்*
3. *அவர் இயேசுகிறித்துவின் மூலமாய் நமக்கு விசேஷ பிதா என்றும்*
4. *இயேசு நமக்குள்ளிருக்க வேண்டிய சகோதர பந்தத்தை உணர்த்துகிறார் என்றும் உணருவோமாக.*

"அவர் பரலோகத்திலிருக்கிறார்" என்பதில்,

1. *தேவன் அன்பில் பூரணர் என்றும்*
2. *தேவன் துணை, உதவி செய்வதில் பூரணர் என்றும்;*
3. *அவர் நம்மைக் கவனிப்பதில் கரிசனையுடையவர் என்றும்*
4. *நாம் பயமில்லாது ஜீவிக்கலாம் என்றும்*
5. *பரலோகம் நமது நிலையான வீடு என்றும் உணர்ந்து கொள்வோமாக.*[15]

இயேசு கிறித்து யார்? (செபத்திற்குத் தலைவர்), இயேசுகிறித்துவின் சீடர்கள், தேவனுடைய அரசு, கிறித்துவின் போதனை, சீடர்களின் கேள்வி, கிறித்துவின் பதில், கிறித்துவின் செபவாழ்வு, கிறித்துவின் மாதிரி செபம், இயேசு கிறித்து செபத்தின் உபாத்தியாராகவும் கர்த்தருடைய செபத்தை ஒரு மாதிரியாகவும் வைத்துக் கடவுள் வணக்கத்தை முன்வைத்து ஏழு விண்ணப்பமாகக் கொண்டு சென்று ஆழமான தியானத்தை நமக்குமுன் வைக்கின்றார். கிறித்தவ செப வாழ்க்கைக்குக் 'கர்த்தருடைய ஜெபம்' ஒரு மிகச்சிறந்த செபத்தியான நூல். பல உட்தலைப்புகள் கேள்விகளோடும் பாடற்கவிகளோடும் திருமறைப் பகுதிகளோடும் உவமைகளோடும் கர்த்தருடைய செபத்தியானம் காணப்படுகின்றது.

துக்கசாகரத் தோணி

உலகில் பிறப்பெடுத்த ஒவ்வொரு மனிதனுக்கும் துன்பம், துக்கம் என்பது தவிர்க்கவும் விலக்கவும் முடியாதது. இன்பத்தில் துணைவேண்டுவதைக் காட்டிலும் துன்பத்தில் துணை அவசியமாகிறது. துன்பக் காலங்களிலேயே இறை பக்தியும் ஆறுதலும் தேவைப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு சாமுவேல் பவுல் ஐயர் துக்கத்துக்கான காரணங்களில் தொடங்கி விடுபடுவதற்கான வழியையும் பலநிலைகளில் விளக்கிக் காட்டுகிறார்.

துன்ப துக்கங்களால் நாம் அறிவாளிகளாகிறோம் என்னும் தலைப்பில், உலக வாழ்வுகள் எப்போதும் நமது மனதைக் குருடாக்கிவிடுவதால், அதைத் திறக்கப்பண்ணும் கலிக்கமாக எப்போதும் நமக்குத் துன்பங்களும், துக்கங்களும், வருத்தங்களும் தேவையாயிருக்கின்றன. நாம் அநுபவிக்கும் துன்ப சஞ்சலங்களின் தன்மைக்கும் தொகைக்கும் தக்கதாக நமக்கு ஞானமும், விவேகமும், தெளிந்த புத்தியும் நல்லொழுக்கமும் உண்டாகி வளரும் எனக் குறிப்பிடுகின்றார்.

துன்ப துக்கங்கள், பாவங்களைப் பற்றிய சரியான அறிவையும் மெய்யான மனந்திரும்புதலையும் நமக்குள் பிறப்பிக்கின்றன எனவும், மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டவும் பொறுமையாயிருக்கவும் நம்மை ஏவுகின்றன எனவும் பல தலைப்புகளின்கீழ் விளக்குகிறார்.

தியானங்கள் ஒருவனைத் தனிப்பட்ட நிலையில் எவ்வாறு செம்மைப் படுத்துகின்றன என்பதனை உணர்த்த முற்படும்போது, பக்தி நிலையில் துன்பங்கள் விசுவாசத்தைப் பெருகப் பண்ணுகின்றன, நல்லொழுக்கமாய் ஜீவிக்க ஏவுகின்றன, உறுதியும் பலமும் உள்ளவர்களாக்கி, தெளிந்த புத்தியையும் மட்டாய்ப் புசிப்பதையும் போதிக்கின்றன எனக் குறிப்பிடுகிறார்.

"துன்பம், துக்கம், கவலை முதலிய உபத்திரவங்கள் எல்லோராலும் அறிந்து உணரப்பட்டிருக்கின்றன. சகல ஆண்களுக்கும் பெண்களுக்கும் இவற்றில் பங்குண்டு. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய உபத்திரவகாலத்தில் அதின் காரணத்தையும், நடத்துதல்களையும், முடிவையும்பற்றி அறிந்து கொள்ளவும் அக்காலங்களில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டியவைகளைக் குறித்து சில ஆலோசனைகளைச் சொல்லவும் நோக்கமாக இதை எழுதியிருக்கிறோம்"[16] என்று இந்நூலின் முகவுரையில் இதன் நோக்கத்தை சாமுவேல் பவுல் ஐயர் குறிப்பிடுகின்றார்.

இந்நூலில் அடங்கியுள்ள அனைத்துச் செய்திகளும் முதலாவதாக செர்மானிய மொழியில் எழுதப்பட்டு பின்பு சீர்திருத்தலின் காலத்தில் வாழ்ந்த கவர்டேல் என்பாரால் ஆங்கில மொழியில் திருப்பப்பட்டுமிருக்கிற ஒரு சிறிய நூலின் ஆராய்ச்சியிலிருந்து அமைக்கப்பட்டிருக்கின்றன.

துன்ப காலத்தில் கூறவேண்டிய செபங்கள், கீதங்கள் எனத் தொடங்கி துன்பத்தினால் ஏற்படும் பல்வேறு சூழல்களையும் அதனைச் சார்ந்த திருமறை வார்த்தைகளோடு முப்பது தலைப்புகளிலும் இறுதியாகத் துன்பம் நீங்கின பின் செலுத்த வேண்டிய ஸ்தோத்திரங்களையும் கூறி இந்நூலினை முடிகின்றார். சான்றாக, "நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சையும், துயரப் படுகிறவர்களின் விருப்பத்தையும் புறக்கணியாத தேவனே, இரக்கமுள்ள பிதாவே! துன்பங்களும், இடுக்கண்களும் எங்களை வருத்தும்போதெல்லாம் நாங்கள் உம்மை நோக்கிச் செய்யும் ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளும். உமது அடியாராகிய நாங்கள் எந்த உபத்திரவங்களினாலும் சேதப்படாமல் உமது பரிசுத்த சபையில் எப்பொழுதும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாகப் பிசாசும் மனுஷரும் எங்களுக்கு விரோதமாக நடப்பிக்கும் உபாய தந்திரங்களெல்லாம் உமது தயவுள்ள விசாரணையினாலே அவமாய்ப் போகும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்."[17] எனத் துன்பகாலத்தில் கூறப்படும் செபமானது இவ்வாறாகக் காணப்படுகின்றது.

தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன் என்கின்ற விவிலியத் தொடர் துயரக்கடலின் கரை சேரவும், நெருக்கக்கால இக்கட்டிலிருந்து விடுபடவும் தேவன் துணை செய்யும் நிலையைக் கூறுவதாகத் தியானிக்க முடிகிறது.

தெளிவான பிரசங்கங்கள்

தெளிவான பிரசங்கங்கள் 53 தலைப்புகளைக் கொண்ட ஓர் இனிமையான தியான நூலாகும். பிற்காலத்தில் இந்நூலில் பொறுக்கு மணிகள் என்கிற தலைப்பின்கீழுள்ள சிலவற்றை நீக்கி வெளியிடப்பட்ட *உங்களோடு ஒரு நிமிடம்* எனப்படும் இந்நூல் அற்புதமான ஒரு நிமிட தியான நூலாகும். பல கேள்விகளோடு இத்தியான நூலை அமைக்கின்றார் சாமுவேல் பவுல் ஐயர். கேள்விகளைக் கேட்டு அந்தத் தலைப்புகளுக்குள்ளாகவே விடையையும் தருகின்றார். சான்றாக,

உன் பேரென்ன? :

கிறித்து சபையில் சேருகிற ஒவ்வொருவனும் ஞானஸ்நானம் பெறுகையில் ஒரு பேரைத் தரித்துக் கொள்கிறானே. உன் பேரென்ன?

என் பேர் சாமுவேல் அல்லது பவுல், யோசுவா அல்லது தானியேல், யோசேப்பு என்று சொல்லுகிறாயோ? நல்லது. அந்த மகாத்மாக்களுடைய குணங்களுண்டா பார். என் பேர் ஏசுதாசன் அல்லது ஏசுவடியான் என்கிறாயோ? நல்ல பேர். உன் பேரின்படி நீ இயேசுவின் தாசனா? இயேசுவின் அடியானா? என் பேர் அன்னாள் அல்லது மரியாள் என்கிறாயோ? அன்னாளுக்குள்ளிருந்த தேவபயம் இருக்கிறதா? மரியாளைப்போல நல்ல பங்கைத் தெரிந்திருக்கிறாயா?

என் ஊரில் திரவியமுத்து என்று பேருடைய ஒருவன் உண்டு, அவன்தான் எல்லாரிலும் பிச்சைக்காரன். வீரசூரப் பெருமாள் என்று ஒருவன் உண்டு. அவனுக்கு ஒரு துரும்பைக் குனிந்தெடுக்கக்கூடச் சக்தியில்லை.

இப்படி பேர் வேறு, குணம் வேறாக இருந்தால் என்ன பிரயோசனம்?

பேர் மரியாளும் குணம் மார்த்தாளுமாயிருந்தென்ன பிரயோசனம்?

உன் பேர் கிறிஸ்தவன் அல்லவா? அந்தப் பேர் உனக்குத் தகுதியா சொல்லு? [18] என்பதோடு மட்டுமல்லாமல்,

உன் பேர் என்ன? என்ற எளிதான கேள்விக்குக் கிறித்தவ நோக்கில் எத்தனை ஆழமான விடையைத் தந்து நம்மை மேலும் சிந்திக்க வைத்துத் தியானத்துக்குள் ஆழ்த்துகின்றார். பதினொரு கேள்விகளைக் கேட்டு அதைப் படிக்கின்ற ஒவ்வொரு கிறித்தவனும் சிந்தனைக்குத் தூண்டப்பட, இவரது நோக்கம் கேள்விக்குக் கேள்வியும், பதிலுக்குப் பதிலுமாக அமைகின்றது.

'மினுங்குகிறதெல்லாம் பொன்னல்ல' என்ற பழமொழியைக் கூறி அப்பகுதியில் அதனைத் தக்க சான்றுகளுடன் எடுத்து இயம்புகின்றார். இது நம் சிந்தனையைத் தூண்டும் ஆழமான தியானப்பகுதியாகும். சான்றாக ஒரு யதார்த்தமான நிகழ்வைச் சுட்டுகிறார்.

"நான் ரோட்டில் நடந்துபோகையில் பளபளவென்று மினுமினுப்பான ஒரு சங்கிலியைக் கண்டெடுத்து தட்டானிடத்தில் போய் ரகசியத்தை வெளியிடாமல் மதிப்புப் பார்த்தேன். அவனும் அதன் மினுமினுப்பைப் பார்த்து மயங்கி, இது நல்ல தங்கம், பசும்பொன் உயர்ந்த மாத்திருக்கும் என்று சொல்லி உரைத்துப் பார்க்க, மின்னுங்கிறதெல்லாம் பொன்னல்ல" என்கிறான். மினுக்குள்ளதைப் பொன்னென்று நினைத்தவன் உரைத்துப் பார்த்துப் பொன்னல்ல என்று கண்டுகொண்டான்.

"சிநேகிதனே! கிறித்து என்னும் உரைகல்லில் உரைத்துப் பார்த்தால் உன் மாற்றுத் தெரியும். இதினாலே யார் மாயக்காரனென்றும் யார் தேவனுடைய உத்தம பிள்ளையென்றும் தெரியவரும்"[19] என்கிறார்.

இப்படிப்பட்ட நிலையில் தியானிக்கும்போது நம்மைக் குறித்து நாமே அறிய முற்படுகிறோம். அது நமக்கு நன்மையாய் முடிகிறது. இந்த ஒரு நிமிட அளவிலான தியானங்கள் நம்மைச் சரிபார்த்துக்கொள்ள மிகவும் துணைபுரிகின்றன.

நூல்கள் புலப்படுத்தும் தியான நிலைகள்

சாமுவேல் ஐயரின் தியான நூல்கள் ஐந்தும் கிறித்துவையும் அவர்தம் பாடுகளையும், அப்பாடுகளாலும் மரணத்தாலும் கிடைத்த விண்ணரசின் உறுதிப்பாட்டையும், இறைவன் மனிதர் மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணுவதாகவும் உள்ளன. மேலும் பின்வரும் ஒவ்வொரு நூலும் தனித்தனி மையப் பொருளில் எழுதப்பட்டுள்ளது.

ஆத்தும நேசரின் அங்க மகத்துவத்தை ஆழமாய் தியானிப்பதே இந்நூலின் நோக்கமாகும். ஆத்தும நேசரின் பாதம் துவக்கி சிரசு முடிய தியான நிலைகள் ஆராயப்படுகின்றன. வேதம், போதனை, தியானம், ஜெபம் என்னும் முறையே சீராகப் பின்பற்றுகின்றார். தேவையான இடங்களில் பாடல்களையும் தருகின்றார். தியானபீடப் பகுதியின் ஒவ்வொரு வார்த்தையும் ஆழமான தியானங்களே. ஆத்தும நேசரின் மார்பைக் குறித்த தியானம் உற்று நோக்குதற்குரியது.

"அவருடைய சீடரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான். யாரைக் குறித்து சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன்பேதுரு சைகை காட்டினான். அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு ஆண்டவரே, அவன் யார் என்றான்."[20] என்ற பகுதியை,

"ஆத்துமாவே! நீ இயேசுவின் பாதத்தையும், காலையும், முழங்காலையும், வயிற்றையும் நோக்கித் தியானித்தாய்; இப்போது உன் கண்களைச் சற்றே நிமிர்த்தி, அவருடைய திருமார்பை நோக்கித் தியானம்பண்ணு"[21] என்று விளக்குகிறார்.

யோவான் இயேசுகிறித்துவின் மார்பில் சாய்ந்ததற்கான காரணங்களைத் தம் தியானத்தில் கூறுகின்றார்.

1. என் ஆத்தும நேசர் என் பேரில் வைத்த அன்பு.
2. நான் என் ஆத்துமநேசர் பேரில் வைத்த அன்பு.

இவ்வாறாக ஏன்? யோவான் மாத்திரமே சாயவேண்டுமா, நாம் சாயக்கூடாதோ? ஆம் நாமும் சாயலாம் என்று கிறித்துவின் மீதுள்ள விசுவாசத்தை முதன்மைப்படுத்திப் பேசுகிறார்.

விசுவாசத்தால் சாய்தல்

"ஆ! என் ஆத்தும நேசரே! உமது மகத்துவ மார்பை அடியேனுக்குச் சற்றே தாரும், நானொரு பாவி, என்னில் தயவாய் அன்புகூரும், நானும் உம்மில் அன்புகூருகிறேன். ஆ, என் ஆண்டவர், தமது மார்பில் நான் சாயும்படி சம்மதிக்கிறார். ஐயா யோவான் அப்போஸ்தலனே, நீர் சற்றே ஒதுங்கி, எனக்கு நடுமார்பில் சாய இடங்கொடும்; நான் உம்மிலும் நோயாளி, உம்மிலும் பெலவீனன், உம்மிலும் களைத்துப் போனவன்; என் நோவு குணமாகவும், பெலவீனம் தீரவும், களைப்பு ஆறவும், என் ஆத்தும நேசரின் மார்பில் இதோ சாய்கிறேன்.

அன்பர் அவர் மார்பில் சாயாதிரார்
அன்பருக்கு அவர் மார்பைச் சாய்க்காதிரார்."[22]

இப்பகுதியைத் தியானிக்கும் நிலையிலேயே நாம் இயேசுகிறித்துவின் மார்பில் சாய்ந்ததாக உணருகின்றோம்.

ஆத்தும நேசரின் மார்பில் சாயும் காட்சி தியானித்ததில் அப்படி நம் கண் முன்னரே தோன்றுகின்ற காட்சியாய் உணர முடிகின்றது. ஆத்தும நேசரின் அங்கமகத்துவ தியானங்கள் சற்று வித்தியாசமாகக் காணப்படுகின்றது. இயேசுகிறிஸ்துவின் விலாவைக் குறித்ததான தியானம் மனமுருக வைக்கின்றது.

"இதோ பறந்து கொல்கொதா மேட்டிலே நிற்கிறேன். ஆத்தும நேசரே! ஆத்தும நேசரே! ஆத்தும நேசரே! இந்தத் துயரக் காட்சியை என் ஆத்துமா தன் ஜீவ காலத்தில் கண்டதேயில்லை. ஆ, என் இரட்சகருடைய விலா எவ்வளவு ஆழமாய்க் குத்தப்பட்டிருக்கிறது.

நீர் பட்ட ஈட்டிக் குத்தும்.
நீர் விட்ட இரத்தச் சொட்டும்.
என் நெஞ்சைப் பிளக்குதே." [23]

என்று இயேசு கிறித்து மக்களுக்காகத் துன்பப்பட்டதனையும் அவருடைய உள்ளத்தையும் சாமுவேல் பவுல் ஐயரின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

தியானம்

ஆத்துமாவே! என் இரட்சகருடைய விலா குத்தப்பட்டதைத் தியானி. இரட்சகருடைய தேகத்தில் இம்மட்டும் வடுப்படாதிருந்த பாகம் அவர் விலாதான். அது யூதருடைய மிலாரடிக்குத் தப்பினாலும், ரோமைச் சேவகரின் ஈட்டிக்குத் தப்பவில்லை. மோசேயின் கோலடியால் மேரிபாவில் தண்ணீர் புறப்பட்டது. இயேசுவாகிய ஞானகன்மலையினின்று போர்ச்சேவகனுடைய ஈட்டியின் குத்து, ஜலத்தையும் இரத்தத்தையும் புறப்படச் செய்தது. என் ஈட்டிதான் என் இரட்சகரைக் குத்தினது, ரோமச் சேவகனுடைய ஈட்டியல்ல.

என் பாவமாகிய ஈட்டியப்பா
என் பாவமாகிய ஈட்டியப்பா
இனி நான் என்னையே நொந்துகொள்வேனாக. [24]

தன் பாவமாகிய ஈட்டியால் கிறித்துவின் விலா குத்தப்பட்டதை எண்ணியெண்ணி மனம் நொந்து அந்த விலாவின் வேதனை வலியைத் தன் விலாவில் ஏற்பட்ட வேதனையின் வலியாக எண்ணித் துடிக்கின்றார் ஐயர்.

தியானச்சோலையில் வழிநடைப் போதனை, ஞானக்கல்விகள், தியானச்சோலை ஸ்நானம், விண்ணப்பக் கொத்து எனப் பல நிலைகளில் கிறித்துவ வாழ்க்கையோடு ஒன்றித்துத் தியானங்கள் புலப்படுத்தப்பட்டுள்ளன. முதலாவதாகக் கிறித்தவக் கோட்பாட்டினைப் போதிக்கின்றார். அடுத்த நிலையில் அதற்குத் தேவையான ஞானக்கல்வியை அளிக்கின்றார். பின்னர் பாவ அழுக்கு நீங்கப்பெற ஸ்நானம் எடுத்துக்கொள்ளச் சொல்கிறார். பின்பு தான் அழிந்துபோகாதபடி எனக்காக வழக்காடி, மன்றாடி என்மேல் பாவமன்னிப்பைக் கூறும் எனத் தொடர்ந்து இறைவனை நோக்கி மன்றாடும் நிலையைக் காணலாம்.

ஞானக்கல்வியில் கிறித்தவ வாழ்க்கைக்குத் தேவையான பத்து கட்டளைகளைக் குறித்துக் கூறுகின்றார். ஜெபம், விசுவாசம், கற்பனைகள், கீழ்ப்படிதல் ஒவ்வொரு கிறித்தவனிடமும் காணப்பட வேண்டும் என்கிறார். புதிய ஏற்பாட்டின் கற்பனைகளையும் தெளிவுபட விளக்குகின்றார்.

கற்பனைகள்

1. *"தேவனை விசுவாசிக்கிறவர்கள், அவர் தங்களுக்குப் பிதாவாக இருக்கிறதினிமித்தம், முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு மனதோடும் அவரில் அன்புகூர வேண்டும்.*

2. *தேவன் நம்மை நேசித்து அன்புகூருகிறதினிமித்தம் நாம் அவரவர், நம்மில் அன்புகூருவதுபோலப் பிறரிடத்திலும் அன்பு வைக்க வேண்டும்."* [25]

தேவனிலும் மனுஷனிலும் அன்புகூருகிறவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தும்படி அவர் பத்துக் கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார். 'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுவான்' என்று இயேசு அறிவித்திருக்கிறதைச் சாமுவேல் பவுல் ஐயர் சுட்டிக்காட்டுகிறார். மேலும்,

1. *என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்*
2. *மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாவது யாதொரு விக்கிரகத்தையாவது நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.*
3. *உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.*
4. *ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.*
5. *உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.*
6. *கொலை செய்யாதிருப்பாயாக.*
7. *விபசாரம் செய்யாதிருப்பாயாக.*
8. *களவு செய்யாதிருப்பாயாக.*
9. *பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.*
10. *பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக.* [26]

என்று இந்தக் கற்பனைகளை நாம் கைக்கொள்ள இயலாதவர்களாயிருக்கிறோம். ஆகையால் நாம் இந்தக் கட்டளைகளை நினைவுகூரும்போதும், நாம் காதில் கேட்கும்போதும், 'கர்த்தாவே எனக்கு இரங்கி இந்தக் கட்டளைகளைக் கைக்கொள்ள என் இருதயத்தை ஏவியருளும்' என்று விண்ணப்பம் செய்ய வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

"உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்."[27] என்ற திருமறைப் பகுதியை இணைத்து விளக்கியுள்ளார்.

"இரட்சகா! நான் ஒரு இரத்தாம்பரப் பாவியாயிருக்கிறேன்; நான் ஜன்மப் பாவமும் கருமப் பாவமுமாகிய இரட்டைச் சாயமேறின பாவி ஐயா! உமது இரத்தத்தால் என்னைக் கழுவியருளும். பஞ்சமா பாதகனாகிய என்னை உமது இரத்தத்தால் பஞ்சுபோல வெண்மையாக்கியருளும்"[28] எனத் திருமறை வார்த்தைகளுக்கேற்ப தியான நிலையைப் புலப்படுத்துகிறதைக் காணலாம்.

ஞான உடுப்பு அறை என்னும் பகுதியில் பின்வருமாறு தியானநிலை காணப்படுகின்றது. பாவ உணர்வால், பாவ அறிக்கை செய்து, ஆத்துமாவைக் கழுவின சகோதரன், இனி தரித்து அலங்கரித்துக் கொள்ள வேண்டிய ஆடையாபரணங்களைக் குறித்தும் பேசுகின்றார்.

"நீதியைத் தரித்துக் கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாயிருந்தது."[29] எனச் சுட்டப்படுகிறது.

ஜெபத்தியானம்

கர்த்தாவே, நீதியை எனக்கு உடையாகவும், நியாயத்தை எனக்குச் சால்வையாகவும் தந்தருளும்.

அடுத்ததாக விருந்து மண்டபத்திற்குச் செல்லும்போது அங்கே கிடைக்கும் விருந்தின் இன்பத்தைப் பற்றிச் சீஷனும் போதகரும் பேசும் உரையாடலைத் தியானமாகப் பதிவு செய்கிறார், இவ்வாறான பல தியான நிலைகள் தியானச் சோலையில் காணப்படுகின்றன.

தியான ஆலயத்தில் கிறித்துவின் வாழ்க்கை முழுமையும் தியான நிலைகளாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன. முன் மண்டபம், பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என நான்கு நிலைகளில் தியானிக்கப்படுகிறது. ஒவ்வொரு தலைப்பிலும் பல நிலைகள் தியானத்துக்குட்படுத்தப்படுகின்றன.

முன் மண்டபம் : தியான ஆலய மணிநாதத்தில், "ஸ்தோத்திரத்துக்குப் பாத்திரரான இயேசு சுவாமியின் பாடுகளைத் தியானிக்கும்படி ஆசைகொள்ளும் ஆத்துமாவே! உன்னைப் போலப் பாக்கியவான் ஒருவனுமில்லை – கிரீடமணிந்த அரசன் கத்தி முனையிலிருக்கிறான் – விருதுபெற்ற வீரன் மாயையைத் தொடர்ந்து திரிகிறான் – உலகஞானி தேவன் எழுதி வைத்திருக்கும் பைத்தியக்காரர் அட்டவணையிலிருக்கிறான் – நீயோ தேவனுடைய பார்வையில் பிரியமாயிருக்கிறாய் – உன் கண் ஜீவ விருட்சத்தின் கனியை நோக்குகிறது – உன் காது கொல்கதா சரித்திரத்துக்குச் சாய்கிறது – உன் மனம் ஜீவனுள்ள இரட்சகர் மேல் தாகமாயிருக்கிறது – இது நல்லது தான் – இப்படிப்பட்ட ஆத்துமாவின் பேரில் தேவன் பிரியம் வைக்கிறார்"[30] என்று தியானப் பிழம்பை வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது.

பிரகாரம் : இயேசுவின் ஜனனப் பகுதியில், "தேவன் மனுஷனானார். ஆத்துமாவே, இதெவ்வளவு தாழ்வு! உன்னதமானவர் தாழ்ந்துப் போனார் – பரிசுத்தர் என்னிமித்தம் பாவமானார் – அரூபவஸ்து ரூபமெடுத்தார் –

சர்வவல்லவர் பலவீன மனுஷனானார் – சிருஷ்டிகர் சிருஷ்டியானார் – அளவில்லாதவர் அளவுக்குட்பட்டார் – சர்வவியாபி ஒரு கர்ப்பத்துக்குள் அடங்கினார் – நீண்ட ஆயுசுடையவர் ஆயுள் அளவுக்குட்பட்டார். இது அதிசயம்தான், இது இரகசியம்தான்.

தேவன் தமக்காக மனுஷனாகவில்லை – அவர் தமக்காக மனுஷனாக வேண்டியதுமில்லை – ஆத்துமாவே, அவர் எனக்காக என்னைப்போல மனுஷனானார்"[31] என இயேசுகிறித்துவின் பிறப்பின் நோக்கத்தைத் தியானிக்கும் நிலை இங்குக் காணப்படுகின்றது.

பரிசுத்த ஸ்தலம் : கெத்செமனே ஜெபம் என்னும் இடத்தில், என் நேச இயேசுவே, நீர் இவ்வளவு பணிவாக முழங்காற்படியிட்டு நிற்பானேன்? உமக்கு வந்த ஆபத்து என்ன? ஆ! என்னை மீட்கும் நாள் வந்தது. என் பாவங்கள் உமது கால்களில் மோதி உம்மை முழங்காலில் நிறுத்துகின்றன. தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்க வேண்டிய நீர் உமது பிதாவுக்கு முன் முழங்காலில் நிற்கிறீர். என் கைதி நிலைமையில் இன்று நீர் இருக்கிறீர். என் பாவம் உமது தோளின்மேல் ஏறவே, அதின் பாரம் பொறுக்கமாட்டாமல் உமது கழுத்தும் முதுகும் வளைந்ததோடு, உமது காலும் முழங்கால்படியிடுகிறது. உமது பிதா நீட்டும் பாடுகளின் பானத்தை மரியாதையோடு வாங்கிக் குடிக்க முழங்கால்படியிடுகிறீர். என் பாவம் இன்னும் உமதுமேல் ஏறுகின்றது; முழங்காலில் நின்ற நீர் முகங்குப்புற விழுகிறீர். உன் பாவத்தை ஏற்றும்படி என் சிரசிலும் தோளிலும் இடமில்லை. நான் முகங்குப்புறப் படுக்கிறேன் – என் முதுகின்மேல் உன் பாவ மூட்டைகளை ஏற்று என்று நீர் சொல்லுகிறீராக்கும்"[32] என நம் பாவத்தைச் சுமந்த கிறித்துவின் கெத்செமனே வேண்டுதலைத் தியானத்திற்குட்படுத்துகின்றார்.

மகா பரிசுத்த ஸ்தலம் : இயேசு சிலுவை சுமந்த காட்சியானது, "என் மீட்பர் கடைசியாகப் பிலாத்துவின் அரண்மனையில் நிந்திக்கப்பட்டு, மரணாக்கினைக்குட்பட்டு, தாம் அறையப்பட வேண்டிய சிலுவையைச் சுமக்கிறார். இந்தப் பாரமான சிலுவை என் பாவபாரச் சுமையோடு அதிகரிக்கப்பட்டது, என் மீட்பர் என்னுடைய பாவத்தையும், அதின் தண்டனையையும் சுமந்து போகிறார். நான் அவர் பிறகே போவேனாக!!

ஆ, சத்துருக்கள் அவருக்குச் சற்றுமுன் உடுத்தின சிவப்பான அங்கியை மறுபடியும் கழற்றுகிறார்கள். பச்சையாயும் இரத்தமாயுமிருந்த அவருடைய காயங்களை மூடும்படி தரிப்பிக்கப்பட்ட இந்த அங்கி கழற்றப்பட்டபோது, மறுபடியும் அந்தக் காயங்கள் புதிதாக விளங்கின. ஏனெனில் அது காயங்களோடும் இரத்தத்தோடும் ஒட்டிக் காய்ந்து போயிருந்ததால், அதைக் கழற்றும்போது தோலை உரிக்கிறது போலிருந்தது என்று சொல்லலாம்.

ஆத்துமாவே, சிவப்பங்கி களைந்து நிற்கும் உம் மீட்பரைச் சற்றே கண்ணோக்கு! மாம்சக்கண் இந்தப் பரிதாபக் காட்சியைப் பார்க்கத் துணிகிறதில்லை. உன் மாமிசக் கண்ணை மூடி ஆவியின் கண்ணால் பார்ப்பாயாக! ஆ, நான் என் மீட்பரின் காயங்களைக் கண்ணோக்கி

எண்ணுவேனாக!! ஐயோ எண்ணத் தொலையாத காயங்கள். அவருடைய தலையெல்லாம் காயம் – உடம்பெல்லாம் காயம் – முதுகெல்லாம் காயம் – இந்தக் காயங்களின் தொகையை எண்ண என்னால் கூடாது! ஆனால் இந்தக் காயங்கள் என் ஆத்துமாவுக்கு வாசனை வீசும் இரட்சண்ய ரோசாப்புஷ்பங்கள் போலிருக்கின்றன!"[33] என்று மாம்சத்தில் அல்ல ஆவிக்குரிய நிலையில் அக்காட்சிகளைக் கண் முன்னே கொண்டுவந்து தியானத்தில் நிறுத்துவோமாக என ஆழமான தியான நிலைக்குட்படுத்துகிறார்.

கர்த்தருடைய ஜெபம் என்னும் நூலில் பல்வேறு தியான நிலைகள் காணப்படுகின்றன. இயேசுவை ஜெபத்தின் உபாத்தியாயராகக் கர்த்தருடைய ஜெபம் காட்டுகிறது. கடவுள் வணக்கம், முதலாம் விண்ணப்பம், இரண்டாம் விண்ணப்பம், மூன்றாம் விண்ணப்பம், நாலாம் விண்ணப்பம், ஐந்தாம் விண்ணப்பம், ஆறாம் விண்ணப்பம், ஏழாம் விண்ணப்பம் என்னும் நிலைகளில் தியானிக்கப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.

கடவுள் வணக்கம்	:	*பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே*
முதலாம் விண்ணப்பம்	:	*உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*
இரண்டாம் விண்ணப்பம்	:	*உம்முடைய இராஜ்யம் வருவதாக.*
மூன்றாம் விண்ணப்பம்	:	*உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல, பூலோகத்திலேயும் செய்யப்படுவதாக.*
நாலாம் விண்ணப்பம்	:	*எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.*
ஐந்தாம் விண்ணப்பம்	:	*எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.*
ஆறாம் விண்ணப்பம்	:	*எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாதிரும்.*
ஏழாம் விண்ணப்பம்	:	*தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்.*

தியானத்துக்கு மேலும் உதவ ஒவ்வொரு தலைப்பின் முடிவிலும் பொழிப்புரைத் தருகின்றார். ஆங்காங்கே சில கவிப்பாடல்களையும் சான்றாகச் சுட்டுகிறார். கடவுள் வணக்கப் பகுதியில் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களின் ஐக்கியத்தைக் குறித்துப் பேசும்பொழுது, ஜான் பனியன் என்பவர் செய்த கடைசிப் பிரசங்கத்தைச் சுட்டுகின்றார். "தேவனுடைய சாயல் ஒரு ஆத்துமாவில் இருக்கிறதாக நீ கண்டால் அவனை நேசி, நேசி; அந்த மனுஷனும் நானும் ஒரு நாள் தேவ சந்நிதியில்கூட நிற்க வேண்டும். ஒருவரையொருவர் நேசித்து, ஒருவருக்கொருவர் நன்மை செய்யுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

"ஒன்றும் ஒன்றும் இரண்டென்றே
உபாத்தி மாரும் சொன்னாரே
ஒன்றும் ஒன்றும் ஒன்றென்றே
அன்பின் சட்டம் சொல்லிற்றே" [34]

இதனைத் தொடர்ந்து வரக்கூடிய செய்தியும் உற்றுநோக்குதற்குரியது. "காலம் செல்லச் செல்லத் தேவகிருபையானது அநேகரை ஒன்றாக்குகிறது. அநேகரான நாம் மரணத்தில் ஒன்று கூடுகிறோம். அலைகள் அநேகமானாலும் கடல் ஒன்றுதான்; கொடிகள் பலவானாலும் திராட்சச்செடி ஒன்றுதான்; கற்கள் அநேகமாயினும் கட்டடம் ஒன்றுதான்; பிள்ளைகள் அநேகமாயினும் குடும்பம் ஒன்றுதான்; ஆகவே நாமனைவரும் ஒரே குடும்பத்தாராக "எங்கள் பிதாவே" என்றழைக்கிறோம்.

கர்த்தருடைய மாதிரி செபத்தின் தியான நிலைகளே இங்கு ஆழமான தியானங்களாக விளங்குகின்றன. ஒவ்வொரு தலைப்பின் முடிவிலும் போதனைகளின் குறிப்பு தொகுப்பாகக் காட்டப்பட்டுள்ள நிலையில் அப்போதனைகள் இன்னும் எளிதாக மனதில் பதியுமாறு அமைந்துள்ளன. ஒவ்வொரு விண்ணப்பத்தையும் பல உட்பிரிவுகளுடன் தியானிக்கும் நிலை இங்குக் காணப்படுகின்றது. வாசகத்தின் கருத்தும் பூரணமாய் அறியும்படி இதிலுள்ள வாசகங்களும் வார்த்தைகளும் தனித்தனியாக ஆராயப்பட்டுள்ளன.

துக்கசாகரத் தோணி, துன்ப துக்கங்கள் குறித்ததான தியானங்களாக இந்நூலில் காணப்படுகின்றது. துன்ப துக்கங்கள் நமக்கு என்ன கற்றுத் தருகின்றன என்பதை மிகச் சீராகத் தெளிவுபடுத்துகின்றார். துன்ப துக்கக் காலங்களில் நமது தேவை என்ன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். துன்பக்கால ஜெபங்களும் கீதங்களும் துன்பம் நீங்கினோரின் ஸ்தோத்திர ஜெபங்களும் கீதமங்களமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சான்றாக, துன்ப துக்கங்களால் நாம் அறிவாளிகளாகிறோம் என்னும் பகுதியில் கூறப்படும் தியானம் மிகவும் சிந்தித்தற்குரியது.

சகல அறிவிலும் தன்னை அறிதலே மிகவும் அவசியமான கல்வி. இந்த அறிவு வாழ்வினால் அல்ல வருத்தங்களை அனுபவிப்பதால் மாத்திரம் பெருகுகிறது. வாழ்வு நமது மனதின் கண்களைக் குருடாக்குகின்றது; துன்பப் துக்கங்களோ அவைகளைத் தெளிவாக்குகின்றன. துன்ப பாரத்துக்குள்ளிருக்கும் ஆள் தன் சரீரத்தின் உருவழிதலையும், ஜீவனின் நிலையாமையையும், அறிவின் பலவீனத்தையும் தன் சுயபலத்தின் தாழ்ச்சியையும் நன்றாய் அறிந்துகொள்ளத்தக்க நிலையிலிருக்கிறான்.

தன்னை அறியும் அறிவுடன் தேவனை அறிகிற அறிவும் துன்பத்தினால் பெருகி வளருகிறது. துன்பக் காலத்தில் தான் தேவன் நம்மை ஆதரிப்பதும், நம்மில் அன்புகூருவதும் நமக்கு நன்றாகத் தெரிகிறது. அவருடைய வல்லமையை நாம் பூரணமாய் அறியக்கூடியதும், அவருடைய உருக்க இரக்கங்களைத் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடியதுமான சமயம் துன்பக் காலங்கள்தான்.[35] பெர்னாட் என்னும் ஒரு பக்தன் சொன்னதைக் கேளுங்கள்: "உன்னத வானத்தில் வீற்றிருப்பவர் நம்மோடு வந்து வாசம்பண்ணுகிறதை நாம் எதினாலே அறிகிறோம்- நாம் அனுபவித்துவரும் துன்ப துக்கங்களினால்தான். ஏனெனில் தேவன் நம்முடனிராவிட்டால், நம்முடைய துன்பங்களையும் உபத்திரவங்களையும் நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது" என்பதேயாகும்.

உலக வாழ்வுகள் எப்போதும் நமது மனதைக் குருடாக்கிவிடுவதால், அதைத் திறக்கப்பண்ணும் கலிக்கமாக எப்போதும் நமக்குத் துன்பங்களும், துக்கங்களும், வருத்தங்களும் தேவையாயிருக்கின்றன. நாம் அநுபவிக்கும் துன்ப சஞ்சலங்களின் தன்மைக்கும் தொகைக்கும் தக்கதாக நமக்கு ஞானமும், விவேகமும், தெளிந்த புத்தியும், நல்லொழுக்கமும் உண்டாகி வளரும்.

தெளிவான பிரசங்கங்கள் நூலில் ஒரு நிமிட அளவில் படிக்கக்கூடிய பல கேள்விகளோடு இத்தியான நூலை அமைக்கின்றார் சாமுவேல் பவுல் ஐயர். கேள்விகளைக் கேட்டு அந்தத் தலைப்புகளுக்குள்ளாகவே பதில் கூறும் வினா விடை முறையில் அமைத்துள்ளார்.

'உங்களோடு ஒரு நிமிடம்' ஒவ்வொரு கேள்வியும் ஒவ்வொரு நிமிட தியானமே. உன் ஆத்துமா சுகமா? என்னும் மிகவும் அற்புதமான தியானம் நம்மைச் சற்று சிந்திக்க வைக்கிறது. முப்பத்திமூன்று தலைப்புகளுடன் பல தியானத் தலைப்புகள் கேள்விகளாகவே காணப்படுகின்றன. இப்பகுதிகளில் காணப்படும் சில தியானங்களைக் காண்போம். உன் ஆத்துமா சுகமா? என்று யார் கேட்கின்றார் என்பதைக் குறித்து,

"நாம் நம் சிநேகிதரையோ உறவினரையோ சந்திக்க நேர்ந்தால் ஐயா சுகமா? தம்பி சுகமா? என்று கேட்கிறோம். ஆனால் உன் ஆத்துமா சுகமா? என்ற கேள்வியை யாராவது கேட்கிறீர்களா? இல்லையே பின்னே யார் கேட்பது?

"உன் ஆத்துமா சுகமா?" இயேசு அடிக்கடி இப்படிக் கேட்கிறதுபோல் இருக்கிறது. அவர் ஏன் அப்படிக் கேட்கிறார்? வைத்தியானாச்சுதே கேட்க வேண்டாமா? தமது இரத்தத்தைத் தந்தவரல்லவா? கீலேயாத்தின் பிசின் தைலம் பூசின இரண வைத்தியனல்லவா? மருந்து பலித்ததாவென்று அறிய வேண்டாமா?

அடுத்து "உன் ஆத்துமா சுகமா?" என்று என் சரீரம் என் ஆத்துமாவைக் கேட்கிறது. ஏன் அப்படிக் கேட்கிறது. ஆத்துமா சுகமில்லாவிட்டால் சரீரமும் நரகத்தில் அவதிப்பட வேண்டியது வருமே. அது சுகமாயிருந்தால் மோட்சத்தில் இதுவும் வாழுமே. அதற்காக ஆசைப்பட்டுக் கேட்கிறதாக்கும்.

இறுதியாக, "உன் ஆத்துமா சுகமா?" என்று என் மனசாட்சி கேட்கிறது. இவன் கேட்கிறது பரியாசம். பாவம் செய்யாதே, செய்தால் ஆத்தும சுகம் கெடுமென்று சொன்னேனே. அதைக் கேளாமல் செய்தாயோ இப்போ உன் ஆத்துமா சுகமா? என்று கேலி பண்ணுகிறதுபோல் இருக்கிறது. வார்த்தை கேளாத மட்டுக்கு வசை சொன்னால் ரோசம், அதேன்.[36] என வினவுவதோடு,

ஒரு நிமிட அளவிலே உன் ஆத்துமா சுகமா? என்ற கேள்விக்கு மூன்று விடை அளித்து நாம் தியானிக்க ஏதுவாக வழிவகுக்கின்றார். இம்மூன்று நிலைகளில் நாம் எந்த இடத்தில் இருக்கிறோம். நாமே சற்றே தியானித்துப் பார்க்க வேண்டும்.

ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? என்று கிறித்து நம்மை நோக்கிக் கேட்பதுபோலத் தியானிக்கின்றார். ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? இந்தக்

கேள்வியைக் கிறித்து தமஸ்குவுக்குப் போகும் வழியில் சவுல் என்பவரிடத்தில் கேட்டார். இன்றைக்குத் தேவன் என்னையும் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கிறார். ஆண்டவரே நான் எதினாலே துன்பப்படுத்துகிறேன்? என்று கேட்கிறேனே. அப்பொழுது அவர் மொத்தமாய்ச் சொன்னால் நான் விரும்புகிறதை நீ செய்கிறதில்லை. நான் வெறுக்கிறதை நீ செய்கிறாய். இவ்விதமாய் என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்று விளக்கமளிக்கிறார்.

இது நிசமான வார்த்தை. நான் கடவுள் விரும்புகிறதைச் செய்கிறதில்லை. அவர் வெறுக்கிறதைச் செய்கிறேன். ஆ! கர்த்தாவே என் குற்றத்தைப் பொறுத்து நீர் விரும்புகிறதை நான் விரும்பவும், நீர் வெறுக்கிறதை நான் வெறுக்கவும் கிருபை புரியும். உம்மைத் துன்பப்படுத்துவது என் பிரியமேயல்ல. இனி துன்பப்படுத்தவேமாட்டேன் என்று ஆணையிடுகிறேன்"[37] என்றவாறு தியானம் அமைந்துள்ளது. இப்பகுதி உண்மையிலேயே நம்மைச் சிந்திக்க வைத்துக் கடவுளிடம் நம்மை முழுமையாக ஒப்படைக்கத் துணைபுரிகின்றது.

தியானநிலை வெளியீட்டு முறை

ஆத்துமநேசரின் அங்க மகத்துவம் என்னும் நூல் ஆத்தும நேசரின் ஒவ்வொரு அங்கங்களையும் சற்று மாறுபட்ட கோணத்தில் வெளிப்படுத்தும் ஆழமான தியானமாக விளங்குகின்றது. ஒவ்வொரு அங்கங்களின் சிறப்பையும் உயர்வையும் அதன் பாடுகளையும் துன்பங்களையும் மிகவும் நேர்த்தியாகப் புலப்படுத்துகிறார். அங்கங்களின் செயல்பாடுகளையெல்லாம் உணர்வுகளாகக் கொட்டுகிறார். பதினேழு அங்கங்களாகப் பாதம் துவங்கி சிரசு வரை முறைப்படி கொண்டு செல்கிறார்.

"ஆத்தும நேசர் இயேசுவின் அங்க அழகையும், அதன் பண்புகளையும் கற்பனை வளத்தோடு அதே நேரத்தில் ஆழ்ந்த திருமறைப் புலமையோடு இந்நூலின் ஆசிரியர் விவரித்திருப்பது அவர் ஆத்தும நேசர்பால் கொண்டிருந்த பாசத்தையும், அந்த நேசருக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்த சாட்சி வாழ்க்கையையும் பிரதிபலிக்கிறது"[38] என்று முன்னுரையில் *அருள்திரு. லாரன்ஸ் ஜெபதாஸ்* குறிப்பிடுகின்றார்.

இதில் அடங்கியுள்ள தியானங்கள் உள்ளத்தை உருக்குகின்றன. அவை வேதாகம அறிவையும் பக்தியுணர்ச்சியையும் ஊட்டுகின்றன. எண்ணங்களை யெல்லாம் ஒருநிலைப்படுத்துகின்றன.

இதனைக் கவனமாகவும் சிறப்பாகவும் நோக்கினால் மானிட தேகமெடுத்த இயேசுகிறித்துவின் உடலின் சாயலைத் தெளிவாய் அறிந்து உணர்ந்துகொள்ள முடியும்.

இயேசுவின் அங்க மகத்துவப் பரீட்சையால் அந்தந்த அங்கத்தில் அவர் நமக்காக அனுபவித்த பாடுகளும் வெளியாகின்றன. அதினாலே நாம் நமது அவயங்களால் செய்த பாவங்களையும், அதின் சாபங்களையும்,

தண்டனைகளையும் முன்னிலும் அதிகத் தெளிவாய்க் கண்டுகொள்ளுவோம். இயேசுவின் பாடுகளே பாவம் பார்க்கும் கண்ணாடி என்று சொல்ல வேண்டும்.

இயேசுவின் பாதத்தைக் குறித்து, "இயேசுவின் பாதம் பாவி முகரும் புஷ்பக்கொத்தாயிருக்கிறது. கேடு செய்யும்படி முத்தமிட்ட யோவாபுக்கும், யூதாசுக்கும் கனமுள்ள கன்னம் புஷ்பம் போலிருந்தது. மட்டற்ற உலக அன்பு கழுத்தைப் பிடித்துக் கொண்டு முத்தமிட ஏவுகிறது; இரட்சண்ய அன்போ இயேசுவின் பாதத்தைப் புஷ்பமாய் வைத்து முத்தமிடுகிறது."[39] என்றவாறு கூறுகிறது. மேலும் அவற்றைத் தியானம், திருமறை என்று தலைப்பிட்டு விளக்குகிறார்.

தியானம்

இரட்சகா! உமது பாதத்தண்டை இரட்சண்யம் உண்டு; பாவியான ஸ்திரீயை நான் பின்பற்றுவேனாக. பாவத்துக்காக நான் சிந்தும் கண்ணீரே என் இரட்சகருக்கு நான் பூசப்போகும் பரிமள தைலம். ஸ்திரீகளின் கனமுள்ள தலைமயிருக்கொத்த என் உயர்ந்த கிரியைகளையும், சுயநீதி எல்லாவற்றையும் என் இரட்சகரின் பாதங்களைத் துடைக்கும் கந்தைகளாகப் பிரயோகிப்பேனாக. பாவியான ஸ்திரீயைப் போல் சாஷ்டாங்கமாய் விழுந்து, அந்தப் பரிசுத்த பாதங்களை முத்தமிடப் போகிறேன்.

"ஆ! என் ஆத்துமாவின் மல்லிகை மலரே, முல்லைப்பூவே, கல்வாரிமலைத் தாமரையின் மலர்ந்த புஷ்பமே, உமது பாதமே கதி. இதோ, அதை முத்தமிடுகிறேன். முத்தமிடுகிறேன். ஆ,என் நேசர் பாதம் எவ்வாறு பரிமளிக்கிறது! நான் ஒரு தைலத்தையும் பூசவில்லையே! ஆ, இதென்ன பரிமளம்! இதென்ன பரிமளம்! பாவியான ஸ்திரீ அநேக ஆண்டுகளுக்குமுன் பூசின நளத தைலத்தின் பரிமளமோ?... இல்லை, இல்லை இரட்சண்ய பரிமளம்! இரட்சண்ய பரிமளம்."[40] என்று வருணிப்பதனை அறியமுடிகிறது.

திருமறை

"அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று, அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள்."[41] என்று பல நிலைகளில் ஒன்றோடு ஒன்றினை இணைத்துக் கூறுகிறார்.

ஆத்தும நேசரின் பாதங்களை இத்துணை ஆழமாக உணர்வுபூர்வமாக ஆச்சரியம் ஊட்டும் விதமாகத் தியானித்து உள்ளத்தில் பக்தி எழச் செய்கிறார்.

இயேசுகிறித்துவின் பாதம் இரட்சண்ய பாதம்
இயேசுகிறித்துவின் பாதம் பரிசுத்தமான பாதம்
இயேசுகிறித்துவின் பாதம் அபிஷேகம் பண்ணப்பட்ட பாதம்

சாமுவேல் பவுல் ஐயர் ஆத்தும நேசரின் அங்கமகத்துவங்களில் பாதத்தை முதலாவதாக ஏன் வைக்க வேண்டும் – அதில் ஆணிகள் கடாவப்பட்டது. அதினால் தான் பாதம் முதல் சிரசு வரை எனும் அமைப்பில் விளக்க முற்படுகிறார்.

நேசரின் பரிசுத்தமான அபிஷேகம் பண்ணப்பட்ட பாதத்தில் இரட்சண்யம் தெரிகிறது. அதில் பின்தொடர வேண்டிய ஜீவப் பாதை தெரிகிறது. இடுக்கமான பாதைத் தெரிகிறது. ஆத்தும நேசரின் பாதம் எவ்வளவு அழகானது!

“சிலுவையினருகே நின்றவர்களில் மகதலேனா மரியாளும் ஒன்று. இம்மாது அதிகமாகப் பாவம் செய்தவள், அதிகமாக மனஸ்தாபக் கண்ணீர் சிந்தினவள், அதிகமாக ஆண்டவரில் அன்புகூர்ந்தவள். ஒருநாள் ஆண்டவர் பரிசேயனாகிய சீமோன் வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். மகதலேனா மரியாள் அந்த வீட்டிற்கு அழைப்புப் பெறாமல் வந்தாள். அவள் பாவியான ஸ்திரீ என்று அங்குள்ள “நீதிமான்களான பரிசேயர்” திகைத்து நிற்கிறார்கள். இவள், ஒருவரையும் கவனியாமல் சாய்ந்து உட்கார்ந்திருந்த அருமை ஆண்டவரிடம் நேரே சென்று, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து விலையுயர்ந்த பரிமள தைலத்தைப் பூசினாள். அன்று அவள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுப் புது மனுஷியானாள். இனி அவள் பாவத்திற்குச் செத்தவள். ஆண்டவருக்கு அடிமை. பழைய மனுஷனைச் சிலுவையிலடித்துக் கொன்றாகி விட்டது. பரிசுத்தவாட்டியாகி விட்டாள், இதுமுதல் இவள் ஆண்டவரோடு தான் அதிகமாக இருந்து அவருக்கும் சீஷருக்கும் ஊழியம் செய்து வந்தாள்”[42] என்று மகதலேனா மரியாள் தன் பாவங்கள் மன்னிக்கப்பட கிறித்துவின் பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசின நிகழ்வை தம் தியானத்தில் *இர. ஆ. மனுவேல்* கொண்டு வருகிறார்.

ஆத்தும நேசரின் சிரசு பரிமள தைலாபிஷேகம் பெற்றது. இயேசுவின் திருப்பாதத்தை நாம் உற்றுப்பார்த்தபோது ஒரு ஸ்திரீ அவருடைய பாதத்தில் பரிமள தைலம் பூசி அதை முத்தமிட்டாள். இப்பொழுது அவருடைய சிரசு பரிமள தைலாபிஷேகம் பெறுகிறது. பாதாபிஷேகம் இயேசுவின் ஊழியத்தின் முதலாம் வருடத்திலும், சிரசாபிஷேகம் அவர் பாடுபடுவதற்கு நான்கு நாட்களுக்கு முந்தியும் செய்யப்பட்டது. பாதாபிஷேகம் செய்தவள் ஒரு தயவு வேண்டுமென்று விண்ணப்ப முறையாய்ச் செய்தாள். சிரசாபிஷேகம் செய்தவள் ஒரு தயவு பெற்றதையிட்டு ஸ்தோத்திர முறையாய்ச் செய்தாள் என்று இரண்டு சங்கதிகளையும் பரிசோதிக்கிறதினால் தெரிய வரும். பிதாவாகிய தேவன் தமது குமாரனை பரிசுத்த ஆவியாகிய ஆனந்த தைலத்தால் அபிஷேகம் செய்தார். யோவான் ஸ்நானகன் அவரை யோர்தானின் ஜலத்தால் அபிஷேகஞ் செய்தார்; பாவியான ஸ்திரீயும், மரியாளும் அன்று நளத தைலத்தால் அபிஷேகஞ் செய்தார்கள்.

தியானம்

"ஆத்துமாவே! இரட்சகர் நளது என்னும் பரிமள தைலத்தால் அபிஷேகம் பெற்றதை என் ஆவி உணர்ந்து கொள்ளுகிறது. இந்த நளது என்னும் செடி இந்துகுஷ் மலையடிவாரத்திலும், கங்காநதியோரங்களிலுமுள்ள ஒரு மருந்துச் செடி என்று பூதத்துவ சாஸ்திரிகளும் தேறின வைத்தியரும் சொல்லியிருப்பது என் மனதை மகிழ்ச்சியால் நிரப்புகிறது. இந்தியா முழுவதும் குணப்பட்டு, என் இரட்சகரின் சிரசில் ஆனந்த தைலமாய் ஊற்றப்பட்டு, அவருடைய தாடியின் வழியாய் ஒழுகும் என்பதற்குச் சந்தேகமில்லை என்று என் ஆத்துமா உணருகிறது. ஆ, இந்தியாவே! நீ பூலோகத்திலுள்ள அநேக தேசங்களிலும் பாக்கியமுள்ளது; உன் மண்ணின் சாரம் என் இரட்சகரை ஒருநாள் மகிழச் செய்தது. உன் தேசத்தாருடைய முதற்தரமான பாவங்களெல்லாம் நளது தைலமாகப் பாவநாசர் தலையில் வார்க்கப்பட்டாயிற்று என்று சொல்ல வேண்டியது. இந்தியாவுக்கும் இரட்சகருடைய திருச் சிரசில் இடங்கிடைத்தது என்ன பாக்கியம்!"[43] என்று வரலாற்றோடு பதிவு செய்கிறார்.

திருமறை

"அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜன பந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும், உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்."[44] என்னும் விவிலிய செய்தியையும் பதிவு செய்துள்ளார்.

தியானச்சோலையில், "என்னோடுகூட நீ தியானச் சோலைக்கு வருகிறது நிச்சயமானால், நாம் இருவரும் அங்குள்ள ஜீவநதியில் ஸ்நானம் செய்து, நம்முடைய அங்கிகளையும் வெளுத்துக் கடைசியாக, ஒரு விருந்து மண்டபத்துக்கும் போய், ருசியுள்ள மன்னாவையும் தெளிந்த திராட்சரசத்தையும் அருந்தி, களையாறி, பலப்பட்டுத் திரும்பிவிடலாம்"[45] எனத் தியானச் சோலைக்குள்ளான ஒரு தியான வேளைக்கு அழைத்துச் செல்கிறார். சான்றாக, பாவமன்னிப்பு வாசகங்கள் என்னும் தியானம்,

வேதம்

"உன் பாவங்களினால் என்னைச் சங்கடப்படுத்தி, உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய். நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப் போடுகிறேன். உன் பாவங்களை நினையாமலுமிருப்பேன்."[46] என்னும் திருவசனத்தை, நான் உமக்குண்டாக்கின எல்லாச் சத்துருக்களையும் மன்னியும், பிதாவே! உமக்குச் செய்த வருத்தங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளுமையா! என்னிமித்தம் எனக்கு மன்னிப்பே இல்லை. உமது நிமித்தமே எனக்கு மன்னிப்புண்டு. என்னால் எனக்கு லாபமொன்றுமில்லை; உம்மால் மாத்திரம் எனக்கு லாபமுண்டு. நான் குணப்படும்

மட்டும் என் பாவம் உமது முகத்துக்கு முன் ஈய எழுத்தால் எழுதப்பட்டிருந்தது. குணப்பட்டபோது அதை உமது குமாரனுடைய இரத்தத்தால் கழுவி அழித்துக் குலைத்துப் போடுகிறீர். "உன் பாவங்களை நினையாமலுமிருப்பேன்" என்று சொல்வது எவ்வளவு தயாளம். அதற்காக உமக்கு ஸ்தோத்திரம்! ஆனால் நான் அவைகளைத் தினந்தோறும் நினைவுகூர்ந்து வரும்படி என் இருதயத்திலே அவைகளை எழுதியருளும்[47] என்றவாறு விளக்குகிறார்.

"உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன். என்னிடத்தில் திரும்பு, நான் உன்னை மீட்டுக்கொண்டேன்; பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன்; நீ என்னுடையவன்."[48] என்னும் பகுதியை, வெண் மேகங்களும், கார்மேகங்களும் காற்றினால் அடிபட்டு அகன்று போகிறதை நான் காணும்போதெல்லாம் இந்தத் தயவான வாக்குத்தத்தத்தை நான் நினைவுகூர்ந்து உம்மை ஸ்தோத்தரிப்பேனாக. என்னை மீட்டுக்கொண்ட இயேசுவே, உம்மிடத்தில் என்னைத் திருப்பியருளும், அப்பொழுது நான் திரும்புவேன். 'நீ என்னுடையவன்' என்று சொந்தம் பாராட்டிப் பேச எனக்குக் கிடைத்த சிலாக்கியமே போதும். இன்றுமுதல்,

நீர் என்னுடையவர்
நான் உம்முடையவன்
என்னை மீட்டுக்கொண்டீர்.[49]

என இவ்வாறு பாவமன்னிப்பு வாசகங்கள் தியானத்தில் நீண்டுகொண்டே போகிறது. அத்துணை ஆழமாகத் தன் பாவத்தை உணர்ந்து தன் பாவங்கள் கழுவப்பட்டு தனக்குச் சொந்தமான பந்தம் கிடைத்ததையெண்ணிப் பெரும் பேறுபெற்றவராய் உள்ளம் பூரிக்கிறார்.

தினத்தியானம் என்னும் நூல் பாவத்தினால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுகின்றது. செய்யும் பாவங்களினால்தான் வியாதி வருகிறது என்ற நம்பிக்கை முற்காலத்தில் இருந்தது. பாவம் ஏற்படுத்தும் விளைவுகளாவன. 1) தேவ கோபத்தை ஏற்படுத்துகிறது. 2) மாம்சத்தில் ஆரோக்கியமாயிருக்காது. 3) வேதனையை உண்டாக்குகிறது. 4) தவிப்பு ஏற்படுகிறது. 5) குழப்பம் நிறைந்திருக்கும். நம் பாவங்களினால் ஏற்படும் விளைவுகளுக்குத் தேவனையோ, பிறரையோ குற்றப்படுத்துவது சரியல்ல[50] என்றவாறு விளக்குகிறார். தியானச் சோலையின் பாவமன்னிப்பு, பாவமன்னிப்பினால் கிடைக்கும் பெரும்பேற்றினைக் கூறுகின்றது.

தியான ஆலயத்தில் தியான நிலைகள் முன் மண்டபம், பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என நான்குப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு தியானிக்கப்படுகிறது. முன்மண்டபத்தில் கிறிஸ்துவின் பாடுகள் தியானிக்கப் படுகின்றன. சான்றாக, கிறித்துவின் பாடுகளைத் தியானிக்கும்போது கேட்கப்படும் கேள்விகளும் அதற்கான தியானமும் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளன.

பாடுபடுகிற இவர் யார்?

மகிமையின் இராஜாவாகிய இயேசுகிறித்துதான் பாடுபட்டார். சகல நல்ல குணங்களுக்கும் இராஜாவும் வானத்துக்கும் பூமிக்கும் அதிபதியும், மகா பரிசுத்தரும் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனுமே பாடுபட்டார். தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியும், மெய்த்தேவனில் மெய்த்தேவனுமான இயேசு தேவனே பாடுபட்டார். என் தேவனும், என் மீட்பரும், என் ஆண்டவரும், என் இரட்சிப்பின் தகப்பனுமே பாடுபட்டார்.

என்ன பாடுபட்டார்?

அவர் படாதபாடு ஒன்றும் உலகத்தில்லை. பசியோ - தாகமோ - அவமானமோ - நிந்தையோ - அடியோ - குட்டோ எல்லாம் பட்டார். பரியாசமோ - பழிப்போ - துக்கமோ - வியாகுலமோ - பெருமூச்சோ - அழுகையோ - குத்தோ - காயமோ - எல்லாம் பட்டார். மறுதலிப்போ - புறக்கணிப்போ - விலைக்கூறப்படுவதோ - விற்பனையாவதோ - சிலுவை சுமப்பதோ - சிலுவையில் தொங்குவதோ - ஆ, சிலுவையில் மரிப்பதோ எல்லாம் பட்டார். ஒரு பாட்டைப் பேர்சொல்லி இதை அவர் படவில்லை என்று சொல்லக் கூடாதபடி எல்லாப் பாடுகளையும் என் மீட்பர் பட்டார்.

இவரைப் பாடுபடுத்தினது யார்?

யூதர் அவரைப் பாடுபடுத்தினார்கள்; அவர் தமது சொந்தத்தில் வந்தார், சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. நீதியை நிலைநிறுத்த வேண்டிய பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவும், நீதியைப் பொய்யாய் மாற்றி இரட்சகரைத் துன்பப்படுத்தினார்கள். ஆகவே இராஜாக்கள், நியாயாதிபதிகள், நீதி சாஸ்திரிகள், வேதியர், பொய்யர், உதாசினர், சேவகர் எல்லாரும் ஏகமாய்ச் சேர்ந்து, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்கள்.

யாருக்காகப் பாடுபடுகிறார்?

நமக்காக அவர் பாடுபடுகிறார். நமக்காக என்று பொதுவாகச் சொல்வானேன்?

எனக்காகப் பாடுபட்டார்

என்மேல் அவருடைய ஆத்துமா பிரியங்கொண்டது. நான் சாத்தானுக்கு அடிமைப்பட்டுச் சங்கப்பட்டேன் என்னை மீட்டுக் கொள்ளும்படி இயேசு வந்தார். உலகமும் சாத்தானும் என்னை விடுதலையாக்க மனமற்று அவரோடு போர் புரிந்தன. அவர் இவனுக்காக நான் சங்கடப்பட வேண்டியதென்ன என்று போய்விடாமல் எனக்காக வழக்காடி, போராடி அந்தப் போராட்டத்தில் சகல அவமானங்களையும் நிந்தைகளையும் சகித்து இரத்தம் சிந்தி என்னை மீட்டார். ஆ, இதென்ன உன்னத அன்பு. இதெவ்வளவு தயாளமாயிருக்கிறது.

என்னவிதமாய்ப் பாடுபட்டார்?

பூரண பரிசுத்தர் முழுப்பாவிபோலப் பாடுபட்டார். பாவமறியாதவர் படுதோஷிபோலக் காணப்பட்டார். அவர் வையப்பட்டபோது பதில் வையாமலும், பாடுபட்டபோது பயமுறுத்தாமலும் பொறுமையோடு தமக்கு நேரிட்ட பாடுகளையெல்லாம் சகித்தார். தாம் என்னென்ன விதமாகப் பாடுபட வேண்டுமென்று பிதாவானவர் சித்தங்கொண்டிருந்தாரோ அச்சித்தத்துக்கு இசைந்தவராக எல்லாப் பாடுகளையும் பட்டார்.[51] இதற்கான திருமறைப் பகுதியினை பின்பகுதியில் குறிப்பிடுகிறார்.

“ஆண்டவர் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் யார்? யூதாஸ், ரோமப் போர்ச்சேவகர்கள் முதலியோர் அவர் சிலுவையிலறையப் படுவதற்குக் கருவிகளாயிருந்தனர். காரண கர்த்தாக்களல்ல. கருவிகளைவிடக் கர்த்தாக்களே விசேஷம். ஆண்டவரின் மரணத்திற்கு முதல் காரணர் பிரதான ஆசாரியரும், பரிசேயரும், ஆலோசனை சங்கமும்தான். இவர்கள்தான் யூதத் திருச்சபை அதிகாரிகள். மோசேயின் நியாயப்பிரமாணங்களையும் பாரம்பரியங்களையும் சரிவரக் கைக்கொண்டவர்கள் தேவாலயத்திலேயே இவர்களை அடிக்கடி பார்க்கலாம். யெகோவாவின் மார்க்கத்தின் பேரில் பக்தி வைராக்கியமுள்ளவர்கள்”[52] எனக் கிறித்துவைப் பாடுகளுக்குட்படுத்தினவர்களை *இர.ஆ.மனுவேல்* தவக்காலத் தினசரி தியானங்கள் என்னும் தியான நூலில் கூறியுள்ளார். அங்ஙனமே தினத்தியான நூலில் (மாலை வேளைக்குரியது) கிறித்துவின் பாடுகள் குறித்ததான செய்தி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

“கிறித்து தேவகரத்திலிருந்து நேராய் கெத்செமனேக்கு வந்து துன்பங்களை ஏற்கத் தொடங்கினார். கல்வாரியில் பாவிகளால் பாடுபடுத்தப் பட்டார். அடிக்கக் கொண்டுபோகிற ஆட்டுக்குட்டியைப்போலக் கொண்டு செல்லப்பட்டார். அவர் களைத்து, சோர்ந்து, பலவீனப்பட்டு, பாரசிலுவையைத் தோளில் சுமந்து, எருசலேம் வீதிகளில் நடந்து போகிறதைப் பாருங்கள். கொலைக்கள மேட்டிற்கு ஏறிப்போனார். சிலுவை மரத்திலே தமது கைகளையும் கால்களையும் ஆணிகளால் அடிக்க ஒப்புக்கொடுத்தார். அவரின் எலும்புகள் எல்லாம் ஆணிகளால் பிளக்கப்பட்டன. வலியால் தவித்துக் கதறித் துடிதுடிக்கும் மேனியைப் பாருங்கள். அவர் உடல் முழுவதும் காயங்கள், கண்கள் இருண்டு கன்னங்கள் குழிவிழுந்திருக்கின்றன. தலையில் முள்முடி, சரீரம் இரத்தத்தால் நனைந்திருக்கிறது. பயங்கர மரண அவஸ்தைப்படும் அருள்நாதரின் முகத்தைப் பாருங்கள்.”[53] எனப் பாடுபடும் கிறித்துவை நம் முன்னே காட்டுகிறார்.

இவ்விரண்டு தியானநூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஒரே கருத்தை மையப்படுத்தியிருந்தாலும் சாமுவேல் பவுல் ஐயரின் தியானப்போக்கு அதன் நடையிலும் அமைப்பிலும் கூறும் பாங்கிலும் முற்றிலும் வேறுபட்டதாகப் புலப்படுவதைக் காணமுடிகின்றது.

கர்த்தருடைய ஜெபம் ஒரு மாறுபட்ட கண்ணோட்டத்தில் தியானிக்கப் படுகிறது. இயேசுகிறிஸ்துவை செபத்தின் உபாத்தியாயராகவும், கர்த்தருடைய வேண்டுதல் மாதிரியாகக் கொடுக்கப்பட்டு - ஏழு நிலைகளாக விண்ணப்பங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

கடவுள் வணக்கம்

தேவ வணக்கமாகிய இந்த விண்ணப்பத்தில் இரண்டு பங்குகள் அடங்கியிருக்கின்றன. அதில் ஒன்று தேவன் நமக்குப் பிதா என்பதும், மற்றொன்று அவர் பரலோகத்தில் இருக்கிறார் என்பதுமேயாகும். "எங்கள் பிதாவே" பகுதியில் காணப்படும் தியானத்தின் ஒருபகுதி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "எங்கள் பிதா" என்ற வாசகமானது, கிறித்துவின் பள்ளிப் பிள்ளைகளெல்லாரும் தேவன் ஒரு வஸ்துவாயிருக்கிறார் என்று ஒப்புக்கொண்டு வருகிறதை உணர்த்துகிறது. அநேகர் மனதில், தேவன் சத்துவேயின்றி வஸ்துவல்ல என்கிற எண்ணமிருக்கிறது. இந்த எண்ணம் மனதில் பலப்படும்பொழுது, ஜெபம் அவசியமில்லை என்றாகிறது. ஏனெனில் அவர் ஒரு சத்துருவைப் பார்த்து யார் ஜெபிப்பார்? அன்பின் ஆவலைப் பார்த்தாவது, கவர்ச்சியின் பலத்தைப் பார்த்தாவது ஜெபிப்பாருண்டா? உலகம் உனக்கு சேஷமமாயும், ஜீவன் இன்பமாயுமிருக்கும்போது ஜெபத்தைப் பற்றிய எண்ணம் எங்கிருந்து வரும்? ஆனால் பலமான உபத்திரவங்களையும், இருட்டான ஆபத்துக்களையும் நீ கடந்துபோக நேரிடும்போது, தேவனை நோக்கவும், கெஞ்சவும், கேட்கவும், நீ ஏவப்படுவாய் அல்லவா?"[54] என வினா எழுப்புகிறார்.

நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.[55] என வேண்டுதலைத் தொடங்குகிறார். பின்னர் அவ்வேண்டுதல்களைத் தனிநிலையில் ஒவ்வொன்றாக விளக்குகிறார். சான்றாக, ஏழாம் விண்ணப்பம் என்னும் தலைப்பில் "தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்"[56] என்பதை விளக்குகிறார். இந்தத் தீமை என்கிற இப்பதத்தின் மூலக் கருத்தின்படி இவ்வார்த்தை மற்றத் தீமைகளை விலக்கி ஒரு விசேஷித்த தீமையைச் சுட்டிப் பேசுகிறதாயிருக்கிறது. மேலும் "தீமை" என்று ஒருமையில் பேசியிருக்கிறதேயன்றி "தீமைகள்" என்று பன்மையில் பேசப்படவில்லை. ஆகவே இயேசு ஏதோ ஒரு விசேஷித்த தீமையை இங்கே உணர்த்துகிறாரென்பது தெளிவாகின்றது என விளக்குகிறார்.

அந்த ஒன்றைப் பற்றித்தான் அவன் பயத்தோடும், எச்சரிப்போடும் ஜீவிக்க வேண்டியது; அதை அவன் விழிப்போடிருந்து வெறுக்க வேண்டியது; அதற்காக ஜெபிக்க வேண்டியது; அந்தந்த ஆத்துமாவின் சம்பந்தமான பிரதான ஒரு தீமையைத்தான் உணர்த்துகிறது. இங்கே தீமை என்பது பாவந்தான்."[57] எனத் தெளிவுபடுத்துகிறார்.

"உன் வலது கண் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும்

உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது நலமாயிருக்கும், உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதுப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்."[58] எனத் திருமறையின்வழி அறிவுரைக்கிறார்.

இன்று இந்நூலைப் படிக்கும்போது அதில் அடங்கும் கருத்துக்கள் யாவும் நமக்கு விளங்கவே செய்கின்றன. ஐயரின் ஆற்றொழுக்குப் போன்ற தெளிந்த தமிழ் நடையையும், அதில் சுரந்தெழும் பக்தி நயத்தையும் நாம் கண்டு மகிழ முடிகிறது.

"தேவன் வேண்டுதல்களுக்கு விடை தருகிறவராக இருக்கிறார். அளவில்லா ஞானத்தையும், அன்பையும், வல்லமையையும் நாம் உடையவர்களாயிருந்தால், வேண்டுதலுக்கு என்ன பதிலைத் தருவோமோ அதே பதிலைத்தான் அவரும் தருகிறார். சில நேரங்களில் அதினினும் சிறப்பானவற்றைத் தருகிறார். ஆனால் எப்பொழுதும் நமக்கு எது தேவையோ அதனைத் தருகிறார். சில வேளைகளில் நமது மன்றாட்டிற்கு உடனடியாகப் பதில் கொடுக்கிறார். மற்ற வேளைகளில் நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டுமென்று நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

கர்த்தராகிய இயேசு கிறித்துவின் திருப்பெயரில் நாம் தேவனிடத்தில் வேண்டுதல் செய்வது, அவர்தாமே தமது பிதாவினிடத்தில் வேண்டுதல்களைச் சமர்ப்பிப்பதற்கு ஒப்பாயிருக்கிறது. இந்த உண்மையே, நமது வேண்டுதல்களுக்குச் சிறப்பையும் வல்லமையையும் அளிக்கிறது. ஆகவேதான் மற்ற வேளைகளைக் காட்டிலும் வேண்டுதல் வேளைகளில் மகா வல்லமையுள்ள தேவனை நாம் மிகவும் நெருங்கி வருகிறோம். நித்தியத்திலும்கூட நாம் மகா வல்லமையைப் பெறப் போவதில்லை என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், கர்த்தராகிய இயேசு கிறித்துவின் திருப்பெயரால் மன்றாடுகிற வேளையில், அளவில்லா வல்லமையை நாம் உடையவராயிருக்கிறோம்"[59] என்று மனவலிமை ஏற்படுத்துகிறார். ஜெப வல்லமையையும் கிறித்துவின் திருப்பெயரால் மன்றாடுவதையும் ஜெபத்திற்கான பதிலையும் *இன்றைய இறைத்தூது மெய்வாழ்வு* தியானப்பகுதி சுட்டிக்காட்டுகிறது.

சாமுவேல் பவுல் ஐயர் இயேசுகிறித்து கற்றுக்கொடுத்த மாதிரி ஜெபத்தின் தன்மையை விளக்குகிறார். எவ்வேளையிலும் கடவுளை நோக்கிக் கெஞ்ச, கேட்க, ஏவப்படுவோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். "எங்கள் பிதா" எனும் வாசகத்தை மிக நேர்த்தியாகக் கூறுவதைக் காணமுடிகின்றது.

'தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்' எனும் விண்ணப்பத்தில் 'தீமை' என்பது ஒருமையைக் குறிக்கின்றதே தவிர 'தீமைகள்' எனப் பன்மையில் பேசப்படவில்லை என்றும் இங்குத் 'தீமை' என்பது 'பாவத்தைக் குறிக்கிறது' என்று கூறும் போக்கு சற்று வித்தியாசமாகக் காணப்படுகின்றது.

"முந்தின ஜெபங்கள் கேட்கப்படவில்லை என்ற காரணத்திற்காக ஜெபத்தில் ஊக்கம் குன்றினால் அந்த ஜெபம் விசுவாசமற்ற ஜெபமாகிறது. விசுவாசத்தோடு செய்யும் ஜெபத்திற்கு உடனே பதில் வராவிட்டாலும் அது விரைவிலேயே வரும் என்று நம்பலாம். மறுபடியும் மறுபடியும் ஜெபித்துத் தினமும் புதிதாக வேண்டுதல் செய்து முந்தின வேண்டுதல்களிலிருந்து பலனடைந்து ஜெபியாவிட்டால் அதனால் பயனில்லை என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு நமக்குக் கூறியிருக்கிறார், முன்மாதிரியாகக் காட்டியுமிருக்கிறார்" [௬0] என்று வில்லியம் ஆர்தரின் கருத்தைத் *திருமதி சார்லஸ் இ. கவ்மேன்* விசுவாசமற்ற செபநிலையைக் குறித்துத் தியானிக்கும்போது கூறுகிறார். செபம் தொடர்பான தியானமானது மூன்று ஆசிரியர்களிடமும் வேறுபடுவதைக் காணமுடிகின்றது.

ஜெபமே மனிதரைத் தேவனோடு இணைக்கும் சங்கிலி. நமக்குமுன் உள்ள ஒவ்வொரு படுகுழியின் மேலும் ஆபத்தான ஒவ்வொரு பாதாள குழியின் மேலும் நாம் கடந்து செல்லும் ஒரு பாலமாக இருந்து நம்முடைய தேவைகளில் நமக்கு உதவுவது ஜெபமே.

போராடும் ஜெபம் அற்புதங்கள் செய்யும்
பெரும் போராட்டத்தில் விடுதலை அளிக்கும்.
போராடும் ஜெபம் இரும்புக்கம்பிகளை வளைத்து
வெண்கலக் கதவுகளை உடைக்கும் [௬1]

என ஜெப வாழ்க்கையின் பலனைப் புலப்படுத்துகின்றார்.

துக்கசாகரத் தோணி கூறும் தியான நிலைப்பாடு பலவித உபத்திரவங்களாலும், துன்பங்களாலும் வருத்தப்படுவோர் ஆவிக்குரிய நன்மைகள் பெற்று வாழவேண்டும் என்னும் நோக்கோடு புலப்படுத்தப்படுகிறது. அந்த நன்மைகள் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது.

துன்பங்களும் உபத்திரவங்களும் நம்முடைய முந்தின பாவங்களை நம்மை விட்டு விலக்கி, இனிப் பாவஞ் செய்யாதபடித் தடைபண்ணி, நற்குணங்களும் செய்கைகளும் நமக்குள் ஆரம்பித்து வளரும்படி துணைசெய்கின்றன. நமது மாமிசத்துக்கு எவ்வகையான துன்பமும் அதிக வருத்தத்தையே கொடுக்கின்றன; யாதொரு துன்பமும் தொல்லையு மில்லாமலிருக்க வேண்டுமென்பது தான் நமது மாம்சத்தின் வாஞ்சையா யிருக்கிறது. ஒவ்வொரு மனுஷனும் தன் சுய இச்சையின் ஏவுதலால் தான் தனக்குள் பல துன்பங்களையும் துக்கங்களையும் இழுத்துக் கொள்ளுகிறான்; இதை ஞான உணர்ச்சியுள்ளவர்கள் மாத்திரம் தெளிவாய் அறிந்துகொள்ளவார்கள். இந்த அறிவினாலே அவர்கள் "ஒருதரம் பட்டால் ஒதுங்கி வாழ்" என்ற பழமொழிப்படி தாங்கள் புத்தியாய் ஜீவித்துவரத் தீர்மானித்துக் கொள்ளுகிறார்கள்.

கட்டுப்பட்ட தண்ணீர் நாற்றமெடுக்கிறது; எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரோ சத்தமும் சகத்துக்கு ஏற்றதுமாயிருக்கிறது. அதுபோல ஒருவன்

எவ்வளவு பக்தனாயினும் பலவிதமான துன்பங்களில்லாவிட்டால் அவன் சோம்பிப் பிரயோசனமற்றவனாகி விடுவான். அவன் ஆத்துமா மந்தமடைந்து, ஆவியும் சோம்பிப்போகும். ஆனால் துன்ப துக்கங்களின் மத்தியிலிருக்கும் பக்தனின் விசுவாசமும், அன்பும், தாழ்மையும் மற்றெல்லா நற்குணங்களும் அதிகச் சிறப்பாயும் அலங்காரமாயும் விளங்கிக்கொண்டிருக்கும்.

"ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்."[62] என்று குறிப்பிடுகிறார். அவை ஒரு நிமிட அளவிலே நீண்ட நேரம் தியானிக்கக்கூடிய ஆத்தும தியானங்களாகக் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் நேரடியாக நம்மோடு பேசுவதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. இந்தத் தியானங்களை ஒரு உயிரோட்டமான எண்ணங்களாகத் தெளிவானப் பிரசங்கங்கள் என்னும் நூலில் பதிவு செய்கிறார்.

நீ என்றைக்குப் பிறந்தாய்? என்னும் தலைப்பில், "என்ன? இந்தக் கேள்வியைக் கேட்டவுடனே வருஷம் மாதம் தேதியைச் சொல்லுகிறாயே. அது எனக்கு என்னத்துக்கு? அது வேண்டாம், அதைச் சொல்லாதே. நீ என்றைக்கு மறுபடியும் பிறந்தாய்? அதற்கு உத்தரவு சொல். அதைத்தான் நான் அறிய விரும்புகிறேன். 'அது தெரியாது அதை நான் யோசிக்கவில்லை' என்று மெதுவாய்ச் சொல்லுகிறாயே. ஐயோ! இன்னும் பிறக்கவில்லையாக்கும், நீ இவ்வுலகத்தில் பிறந்தது 1840ஆம் வருஷம் ஆவணி மாதம் 3ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணி என்று உன் தகப்பனார் எழுதி வைத்திருக்கிறார். நீ மறுபடியும் பிறந்த வருஷம், பிறந்த மாதம், பிறந்த தேதி, பிறந்த நாள், பிறந்த மணி, பிறந்த நிமிஷம், உனக்குத் தெரிய வேண்டும் என்று நினைக்கிறேன். பெரிடின் என்ற ஒருவர் 'நான் பாவத்திலே பிறந்தது 1714, நான் பரா பரனிற் பிறந்தது 1730' என்று எழுதிவைத்தார். வேறொருவர் 'எனக்கு வயது 80, நான் பிறந்து நாலு வருஷமாயிற்று'

நீ மறுபடியும் பிறந்த காலம் உனக்குத் தெரியவில்லை என்றால் உன்னைப் பெற்ற பரிசுத்த ஆவியைக்கேள், அவர் எழுதி வைத்திருப்பார். நீ மறுபடியும் இன்னும் பிறக்கவில்லையென்றால் உனக்காகத் துக்கப்படுகிறேன். பரிசுத்த ஆவியை வேண்டிக்கொள். வேறே உபாயம் எனக்குத் தெரியாது"[63] என்று தெளிவுபடுத்துவதனைக் காணமுடிகிறது.

ஆவியில் பிறந்தவன் என்னும் தலைப்பில், "ஜென்ம சுபாவமான மனிதன் மறுபிறப்பை அடையாதவன். அவன் தேவனுடைய ஆவியைப் பெறவில்லை. ஆவிக்குரிய உண்மைகள் அவனுக்கு மதியீனமாகத் தோன்றுவதால் அவற்றை ஏற்றுக்கொள்ள மனதற்றவனாயிருக்கிறான். அது மட்டுமின்றி ஆவிக்குரிய உண்மைகளை அவனால் புரிந்துகொள்ளவும் முடியாது. ஏனெனில், அவற்றைப் பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தில் மட்டுமே ஒருவனால் புரிந்துகொள்ள முடியும்.

தேவனைப் பற்றிய உண்மைகளை மறுபடியும் பிறவாதவன் அறிந்திட விருப்பமற்று இருப்பது மட்டுமில்லை; அவற்றை அறிந்திட இயலாதவனாகவே அவன் இருக்கிறான். அவனுடைய உள்ளார்ந்த தன்மையில் அவற்றை அறிந்திடப் பலனற்றவனாக இருக்கிறான்."[64] எனக் கூறுவதோடு,

உலகப் பிரகாரமான பிறப்பைவிட ஆவிக்குரிய பிறப்பையே நீ பதிவு செய்திருக்க வேண்டும் என்று சாமுவேல் பவுல் ஐயர் இங்கு வலியுறுத்துகின்றார். மறுபடியும் பிறந்தவனே ஆவிக்குரிய உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியும் அதற்குப் பரிசுத்த ஆவியின் வெளிச்சம் அவசியம் என்று ஆவிக்குரிய பிறப்பை வில்லியம் மெக்டொனால்டு மெய்வாழ்வுத் தியானத்தில் வலியுறுத்துகின்றார்.

தியானநிலைப் பயன்பாடு

சாமுவேல் பவுல் ஐயர் கிறித்துவின் சிலுவைப் பாடுகளையெல்லாம் நெஞ்சார்ந்த உணர்வோடு எண்ணியெண்ணித் தன்னை தியானநிலைக்குட் படுத்துகின்றார்.

என் மீட்பரின் கால் முறிக்கப்படாமலும், மார்பில் அடிபடாமலும், அவர் அதற்குமுன் மரணமடைந்தது எனக்குச் சந்தோஷம் என்று இயேசுகிறித்து ஊனமான ஒரு சரீரத்தை எனக்காகப் பலி செலுத்தாமல் தமது பூரணமும், மாசில்லாததுமான சரீரத்தை எனக்காகப் பலியிட்டார் என ஒரு பூரணமான பலியாக இயேசு கிறித்துவை வெளிப்படுத்துகின்றார். இந்தத் தியானங்களால் நாம் அடையும் பயன் யாது என்பதை அவருடைய வார்த்தைகளாலே காண்போம்.

ஆத்தும நேசரின் அங்க மகத்துவங்களின் தியானம் ஆன்மீக ஈடேற்றத்துக்குப் பெரிதும் துணைபுரிகின்றது. ஆத்தும நேசரைப் பார்க்கத் தியான ஏணியில் ஏறிச் செல்கின்றனர். நேசரைப் பூரணமாய்ப் பார்க்கக் கல்வாரி மலைக்குத் தியானப் பிராயணஞ்செய் என்கிறார். அவர் உன் தியானத்தில் இல்லாவிட்டால் நீ கண்ணாரக் கண்டும் அறியாதவனாயிருப்பாய் என்று கூறுவதனால் ஆத்தும நேசரைக் குறித்ததான தியானம் கிறித்தவ வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியம் என்பதைக் காணமுடிகின்றது.

ஆத்தும நேசரின் அங்கமகத்துவங்களில் விலாவைக் குறித்ததான தியானத்தை மாறுபட்ட போக்கில் மிகவும் ஆழமாகத் தியானித்து, நேசரின் விலா குத்தப்பட்டக் காட்சியைக் கண்முன்னே கொண்டு வருகிறார். அதனைப் பல நோக்கில் படிப்படியாகத் தியானிப்பதைக் காணமுடிகின்றது.

ஆத்துமநேசரின் விலா[65] என்னும் பகுதி, போதனை, விசுவாசக் காட்சி, தியானம், ஆனந்த மௌனம் என்னும் தலைப்புகளில் அமைந்துள்ளது.

போதனை :

இரட்சகரின் விலாவைப் பற்றிய ஒரே குறிப்பு மாத்திரம் சுவிசேஷத்தில்

வருகிறது. போர்ச் சேவகரிலொருவன் ஈட்டியினால் அவருடைய விலாவைக் குத்தினான். அங்கிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது[66] என்று பரிசுத்த யோவான் அறிவிக்கிறார். கிறித்துவின் விலா குத்தப்பட்டபோது இயேசுவின் பட்சத்தைச் சேர்ந்தவர்களில் இவர் ஒருவர்தான் கிட்ட நின்றதாகத் தோன்றுகிறது.

விசுவாசக்காட்சி :

ஆத்துமாவே! நீ உன் அன்பின் செட்டைகளை விரித்தெழும்பி கொல்கொதாவுக்குப் பறந்துபோ. நீ இம்மட்டும் பாவப் பஞ்சு மெத்தையில் படுத்திருந்தது போதாதா? உன் இரட்சகர் சாவையும், அவர் விலாவின் குத்தையும், அதிலிருந்து ஓடும் இரத்த ஊற்றையும் போய்ப் பார்க்க எழும்பு, பாவியே எழும்பு.

இதோ, பறந்து கொல்கொதா மேட்டிலே நிற்கிறேன். ஆத்துமநேசரே! ஆத்துமநேசரே! ஆத்துமநேசரே! இந்தத் துயரக் காட்சியை என் ஆத்துமா தன் ஜீவகாலத்தில் கண்டதேயில்லை. ஆ, என் இரட்சகருடைய விலா எவ்வளவு ஆழமாய்க் குத்தப்பட்டிருக்கிறது.

நீர் பட்ட ஈட்டிக் குத்தும்

நீர் விட்ட இரத்தச் சொட்டும்

என் நெஞ்சை பிளக்குதே!

தியானம் :

ஆத்துமாவே! என் இரட்சகருடைய விலா குத்தப்பட்டதைத் தியானி. இரட்சகருடைய தேகத்தில் இம்மட்டும் வடுபடாதிருந்த பாகம் அவர் விலாதான். அது யூதருடைய மிலாரடிக்குத் தப்பினாலும், ரோமைச் சேவகரின் ஈட்டிக்குத் தப்பவில்லை. மோசேயின் கோலடியால் மேரிபாவில் தண்ணீர் புறப்பட்டது. இயேசுவாகிய ஞானக்கன்மலையினின்று போர்ச்சேவகனுடைய ஈட்டியின் குத்து, ஜலத்தையும் இரத்தத்தையும் புறப்படச் செய்தது. இரட்சகா! என்னிமித்தம் பாடுகளைச் சகிக்க நீர் உமது அவயவங்களில் ஒன்றையும் மறைத்துக் கொள்ளவில்லை. முதலாம் ஆதாமின் விலாவின் எலும்பினால் ஒரு மணவாட்டி அவனுக்கு உருவாக்கப்பட்டாள். நீர் உமது விலாவின் ஜலத்தாலும் இரத்தத்தாலும் திருச்சபையாகிய மணவாட்டியை உருவாக்கினீர்.

உமது விலாவை ஒரு போர்ச் சேவகனுடைய ஈட்டி பிளந்துவிட்டது. தேவநீதி என்னும் ஆலை உம்மைக் கெத்செமனேயில் அரைத்து இரத்தமெடுத்தது. ரோமைச் சேவகனின் ஈட்டி உம்மைக் குத்தி இரத்தமும் ஜலமும் எடுத்தது. நான் ரோமைச் சேவகனை ஏன் குற்றப்படுத்த வேண்டும்?

குத்தினவன் நான்தான்:

ரோமைச் சேவகன் குத்தினபோது நான் அவன் இடுப்பில் இருந்தேன். என் ஈட்டிதான் என் இரட்சகரைக் குத்தினது, ரோமைச் சேவகனுடைய ஈட்டியல்ல,

என் பாவமாகிய ஈட்டியப்பா!!
என் பாவமாகிய ஈட்டியப்பா!!
இனி நான் என்னையே நொந்து கொள்ளுவேனாக!

என் இரட்சகருடைய திருவிலாவிலிருந்து இரத்தமும் ஜலமும் புறப்படுகிறது. இரட்சகருடைய விலாவிலிருந்து பாவத்தையும் அழுக்கையும் தீர்க்கிறதற்கு ஊற்று வருகிறது. நான் அங்கே போய் முழுகி ஸ்நானஞ் செய்வேனாக. நாகமான் தன் குஷ்டரோகந் தீர ஏழுதரம் யோர்தானில் முழுகினான். நான் ஒரேதரம் முழுகுவேனாக. ஆ, இரட்சகரின் விலாவின் காயம் எவ்வளவு அகலமும் ஆழமுமாயிருக்கிறது. உள்ளங்கையை வைத்தாலும் அது மறையவில்லை. என் பாவம் எவ்வளவு ஆழமும் அகலமுமாய் இரட்சகரை வேதனைப்படுத்தி விட்டது! பாவியாகிய நான் எந்நாளும் தங்குமிடமா யிருக்கும்படி அது அவ்வளவு அகன்று இருக்கிறதாக்கும். என் அவிசுவாசம் நீங்கவும் அது அவ்வளவு பெரும் காயமாயிற்று என்று உணருகிறேன். இரட்சகா! உமது விலாவில் இடந்தாரும். உமது விலாவே நான் ஒதுங்கும் குகை.

ஆனந்த மௌனம் :

வாசிக்கிறவனே! இப்பொழுது நீ சற்றுநேரம் முழங்காலில் நின்று தலைகுனிந்து அல்லது குப்புற விழுந்து அல்லது சாஷ்டாங்கமாய் விழுந்து உன் உதடுகள் அசையாதபடி காபந்துபண்ணி, பாவமன்னிப்புக்காகத் திறக்கப்பட்ட இரட்சகரின் விலாவை விசுவாசத்தால் கண்ணுற்று ஆவியில் ஆனந்தங் கொள்வாயாக என மகிழப்பண்ணுகிறார்.

கிறித்துவின் விலா குத்தப்பட்டபோது அவர் அருகே நின்றவர் யோவான் ஒருவரே. கிறித்துவின் விலா குத்தப்பட்ட கொடிய காட்சியைப் பார்க்க நெஞ்சே நீ எழும்பு. எங்கள் அனைவர் நிமித்தமும் பாடுகளைச் சகிக்க அவர் தமது அவயவங்களில் ஒன்றையும் மறைக்கவில்லை. திருச்சபையாகிய மணவாட்டியை உருவாக்கக் கிறித்து விலாவில் குத்தப்பட்டுப் பின்னர் மரித்தார். அன்று நாகமான் தன் குஷ்டரோகம் நீங்க யோர்தானில் ஏழுதரம் மூழ்கினான். ஆனால் கிறிஸ்தவன் கிறித்துவினுடைய விலாவிலிருந்து சிந்துண்ட இரத்தத்தில் ஒரே தரம் முழுகினால் போதும் சுத்தமாவோம் எனப் பல அரிய கருத்துக்களையெல்லாம் சாமுவேல் பவுல் ஐயர் உள்ளான ஆழமான உணர்வோடு தியானிக்கிறார் .

தியானச்சோலை

சாமுவேல் பவுல் ஐயர் தியானச் சோலைக்குள் நம்மை அழைக்கக் காரணம் நாம் சற்று நேரம் இளைப்பாறிக் களைப்பு நீங்கிப் பலப்பட்டுத் திரும்பிவிடத்தான். அந்நேரத்தில் ஜீவநதியில் ஸ்நானம் செய்யவும் அங்கிகளை வெளுக்கவும் விருந்து மண்டபத்திற்குச் சென்று மன்னாவையும் திராட்ச ரசத்தையும் அருந்த அழைப்பதையும் காணமுடிகின்றது. பல நிலைகளில் தியானச் சோலையில் தியானங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக ‘இயேசுவின்

இரத்தவெள்ளம்'[67] என்னும் பகுதியில் இயேசுவின் மரண சம்பந்தமான தியானத்தில் விலாவில் குத்துண்ட நிலையினைச் சற்று நெகிழ்வாகக் கூறுவதைக் காணமுடிகின்றது.

திருமறை :

போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினால் அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.

தியானம் :

என் பாவத்தையும் அழுக்கையும் நீக்க இப்பொழுது ஒரு நல்ல ஊற்று கிடைத்ததற்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம். நான் இனி அன்றாடம் பாவத்தால் அழுக்காகும்போது இந்த ஊற்றண்டை வந்து என்னையும் என் அங்கியையும் கழுவிச் சுத்தமாக்குவேனாக. இயேசுகிறித்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரிக்கிறது.

ஜெபம் :

என் நேசரே, நீர் ஜீவனாலும் சாவாலும் எனக்கு நன்மை செய்கிறீர். உம்முடைய சாவு என்னுடைய ஜீவன், நீர் மரித்தபின் உமது ஜீவனை உமது விலாவின் வழியாய் எனக்கு ஊட்டுகிறீர். என் நெஞ்சை உமது நேச அம்பால் எய்து காயப்படுத்தி, உமது விலாவின் தைலத்தை என் விலாவில் செலுத்தும். விலாவோடு விலா ஒட்டினால் உமது அன்பு எனக்குள் செல்லும்.

தியான ஆலயம்

இயேசுகிறித்து சிலுவையில் துன்பத்தைச் சகித்துப் பாடுகளை ஏற்றுக்கொண்டாரே, அதினாலே என்ன பயன்? பாவமறக் கழுவித் தூய்மையாக்கப்படவே என்ற இந்தப் பயனைப் பவுல் ஐயரின் தியானமும் முழுமையாய் அளிக்கிறது.

என் பிதா தமது பிள்ளையாகிய நான், தினம்தோறும் ஸ்நானம் செய்யவும், என் ஆத்துமாவாகிய அங்கியை வெளுத்துக் கொள்ளவும் தமது திருக்குமாரன் விலாவிலே ஒரு நீருற்றை வெட்டித் தந்தார். அல்லேலூயா! என் ஆத்துமாவே நீ அழுக்கானால் இந்த ஊற்றிலே குளித்துக்கொள்; தாகமானால் இதிலே மொண்டு குடித்துக் கொள். நரக உஷ்ணம் உன்னை வருத்தப்படுத்தினால் பிளவுண்ட இந்த மலையில் தங்கிக்கொள். இங்கிருந்து வீசும் காற்று இன்பமானது. உன் வியாதிக்கு இங்கே அமிழ்தமிருக்கிறது. இது இரட்சண்ய ஊற்று. இந்த ஊற்றின் மகத்துவம் இவ்வாறு விளங்குகின்றது.

1. இந்த இரத்தத்தால் ஒரு சபை சம்பாதிக்கப்பட்டது. – அப்.20:28
2. இது பாவமன்னிப்புண்டாகும்படி சிந்தப்பட்டது. – மத்.26:28

3. இதனால் நீதிமான்களாக்கப்பட்டோம். – ரோமர் 5:9

4. இதனால் ஒரு புது உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டது. – எபி.13:20

5. இதனால் மீட்புண்டாயிற்று. – கொலோ.1:14

6. இதனால் தேவனுக்குச் சமீபமாகிறேன் – எபே.2:23

7. இதனால் தைரியமடைகிறோம் – எபி.10:20

8. இது நம்மைப் பரிசுத்தம் செய்கிறது. – எபி.10:29

9. இது பாவங்கள் அற நம்மைக் கழுவுகிறது – 1 யோவான் 1:7

10. இது நமது அங்கிகளை வெளுக்கும் தெப்பம் – வெளி.7:14

11. இந்த இரத்தத்தைப் பூசிப்போராடுகிறவர்களுக்கு எப்போதும் ஆவிக்குரிய ஜெயம் கிடைக்கிறது. – வெளி.12:11

12. ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசி, மத்தியஸ்தம் செய்கிறது. – எபி.12:24

இப்பகுதி, ஆ, இந்த இரத்தத்தின் மாட்சிமையை என்ன சொல்ல! இதில் ஸ்நானம் செய்யவும், இதில் பானம் பண்ணவும் எனக்குப் பாக்கியம் கிடைத்ததே. இதில் நான் ஸ்நானம் பண்ணும்போதே என் நிறம் மாறுகிறது; என் சிந்தை இப்பொழுதுதான் பிறந்த பிள்ளையின் சுபாவத்தைப் போலாகிறது. இதை நான் விசுவாசத்தால் பானம் பண்ணவே என் ஆத்துமதாகம் தீருகிறது; நான் புதிய பெலனடைகிறேன்[68] எனக் கிறித்துவின் விலா குத்தப்பட்டதால் வெளிப்பட்ட இரத்தத்தினால் கிடைத்த அரும் பேற்றை யெண்ணியெண்ணித் தியானித்து அதினால் அடைந்த பயன்களையெல்லாம் பட்டியலிடுவதைக் காணமுடிகின்றது.

'அன்றன்று வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.' இதில் 'எங்களுக்குத் தாரும்' என்ற வாசகமானது மேலுள்ள தம்முடைய சாருதலை உணர்த்துகிறது. இது, பிதாவே, அன்றன்று நீர் படியளக்காவிட்டால், எங்களுக்கு ஒன்றுங்கிடையாது, நாங்கள் பட்டினிதான் என்று அறிக்கையிடுகிறது போலாகிறது. "அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும் என்ற விண்ணப்பமானது, கையில் செலவுக்கு ஒரு காசும், பானையில் ஒரு பிடி தானியமுமில்லாதவன் வாயிலிருந்து வரவேண்டிய விண்ணப்பமாயிருக்கிறது; களஞ்சியம் நிறையத் தானியம் வைத்துக் கொண்டிருக்கிறவனுக்கும், கப்பல் வர்த்தகனுக்கும் நிலச் சுவானுக்கும் இது ஏற்றதாயிருக்குமா? தாவீது காட்டில் பசியும் பட்டினியுமாயிருக்கையில் இப்படிக் கேட்க ஏவப்பட்டாலும், சகல மகிமையும் பொருந்திய அவன் மகன் சாலொமோன் இப்படி ஜெபிக்க வாய் வருமா? யோபு தன் மக்கள் வீட்டில் வரிசையாக விருந்துண்டு மனங்களித்த காலத்திலும், யோசேப்பு தன் களஞ்சியங்களைத் திறந்து தானிய மூட்டைகளின் மேல் குதித்து விளையாடுகிற போதும் இந்த விண்ணப்பம் அவசியமா? என்று சிலர்

எண்ணலாம். ஆம், எல்லோருக்கும், எல்லாக் காலத்திற்கும் இது ஏற்ற பொதுவான விண்ணப்பமாகவே இருக்கிறது."[69] என்கிறார்.

'அன்றன்று வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்' என்ற மற்றொரு மாதிரி செபத்தின் பயன் யாது? ஏழை, பணக்காரன் என்றில்லாமல் எல்லோரும் எல்லாக் காலத்திலும் ஏறெடுக்கக்கூடிய ஒரு செபமாகவே இது காணப்படுகிறது. இந்தச் செபத்தினால் கடவுள் நமக்கு உணவளிக்கிறார் என்று உணருகிறோம். எனவே தான் அன்றாடமும் இந்தச் செபத்தைக் கூறுகின்றோம்.

'தன்னை நோக்கிக் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார்'[70] என்ற விவிலியத் தொடர் இங்குப் பொருந்துவதை உணர முடிகின்றது.

துன்ப துக்கங்களால் நாம் அடையும் பயன் தான் என்ன? அதனால் எவ்வாறு மக்கள் பக்குவப்பத்தப்படுகிறார் என்பதை விரிவாகத் தொகுத்தளிக்கிறார்.

- துக்க சாகரங்களின் புருஷோத்திரம்.
- தேவன் நம்மைத் துக்க சாகரத்தில் ஜீவிக்க வைக்கிறார்.
- துன்பங்களைக் கொண்டு தேவன் நம்மைத் திருத்துகிறார்.
- துன்ப துக்கங்களால் நாம் அறிவாளிகளாகிறோம்.
- துன்ப துக்கங்கள், பாவங்களைப் பற்றிய சரியான அறிவையும் மெய்யான மனந்திரும்புதலையும் நமக்குள் பிறப்பிக்கின்றன.
- துன்ப துக்கங்கள் நமது விசுவாசத்தைப் பெருகப் பண்ணுகின்றன.
- துன்ப துக்கங்கள் நம்மை ஜெபிக்கவும் துதிக்கவும் எழுப்பி விடுகின்றன.
- துன்ப துக்கங்கள் நாம் தேவபக்தியும் நல்லொழுக்கமாய் ஜீவிக்க ஏவுகின்றன.
- துன்ப துக்கங்கள் தேவனுக்குப் பயப்படவும் அவரில் அன்புவைக்கவும் உதவி செய்கின்றன.
- துன்ப துக்கங்கள் நம்மைச் சாந்தத்திலும் தாழ்மையிலும் பழக்குகின்றன.
- துன்ப துக்கங்கள் மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டவும், பொறுமையாயிருக்கவும் நம்மை ஏவுகின்றன.
- துன்ப துக்கங்கள் நம்மை உறுதியும் பலமும் உள்ளவர்களாக்கி, தெளிந்த புத்தியையும் மட்டாய்ப் புசிப்பதையும் போதிக்கின்றன.
- துன்ப துக்கங்கள் இவ்வுலகத்தைப் புறக்கணித்துத் தள்ளி தேவபக்தியாய் ஜீவிக்கும்படி ஏவுகின்றன.
- துன்ப துக்கங்கள் இவ்வுலக ஜீவியத்திலுங்கூட அமைதியையும், வசதியையும் கொடுக்கின்றன.[71]

நாம் எல்லா வகையிலும் திருத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆதிமனிதர் பாவத்தில் விழுந்திராவிட்டால் நாம் திருத்தப்பட வேண்டிய அவசியமிராது. இப்போதோ காரியமெல்லாம் மாறியிருக்கிறது. பாவமே சகலத்தையும் மாற்றிவிட்டது. ஆகவே “அசுத்தமானவைகளில் சுத்தமான ஒருவனைக் கண்டுபிடிக்கத்தக்கவன் யார்?” என்று ஒரு ஞானி கேட்டார். வேறொரு பக்தன் “நீதிமான் ஒருவனாகிலுமில்லை; உணர்வுள்ளவன் ஒருவனாகிலு-மில்லை”[72] என்று சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட மனிதர்களை நன்மை செய்யப் பழக்கும்படிக்கு இறைவன் பலவித துன்பங்களைக்கொண்டு பழக்குவிக்கிறார் என்பதைத் தெளிவாக்குகிறார்.

தெளிவான பிரசங்கங்கள்

உங்களோடு ஒரு நிமிட தியானம் ஒவ்வொரு நொடியும் நம்மைச் சிந்திக்கத் தூண்டும் உயிரோட்டமான தியானங்களைக் கொண்டுள்ளது. இந்தத் தியானம் வாழ்க்கையின் பயனை விளக்குகிறது.

ஒரு கிறித்தவன் தன் வாழ்க்கைப் பயணத்தில் தன்னைக் காத்துக் கொள்ளும்படி, ‘தனி வழி போகாதே’ என்ற புத்தியைச் சொல்லுவேன். கிறித்தவன் தனிமையாய்ப் படுக்கவும் கூடாது, அவனுக்குத் தனி வழியே உதவாது. அவனுக்கு வழித்துணை அவசரம். ஏனென்றால் அவன் சத்துருக்கள் அநேகர். அவனை வழிமடக்கக் காத்திருக்கிறவர்கள் கோடி என்றவாறு ஆன்மீகமும் உலகியலும் இணைந்த வாழ்க்கையை வலியுறுத்துகிறார்.

“மடியில் கனமிருந்தால் வழியில் பயமிருக்கும்” என்று ஒரு பழமொழியுண்டு. அது சரிதான். இவனுடைய மடியிலே கனமுண்டு. கிறிஸ்தவனே! விலைமதிக்கப்படாத ஆத்துமாவை மடியில் வைத்துக் கொண்டிருக்கிறாயே. இதைத் தட்டிப் பறிக்கச் சாத்தான் வழியோரங்களிலும், சந்துகளின் முடங்குகளிலும் பதிவிருக்கிறான். ஆகையால் நான் உன்னைப் பார்த்துத் தனிவழியே போகாதே என்கிறேன். உனக்கு ஒரு துணை ஆள் வேண்டும். அவர் யார்? தேவன்; அவரை நீ கூட கூட்டிக் கொண்டு போனால் நீ புத்திசாலி, தாவீது என்பவர் எப்போதும் தேவதுணையோடு தமது ஜீவ காலத்தைக் கழித்தார். சிநேகிதனே, உன் ஆத்தும பக்தி போகாதிருக்க வேண்டுமானால் தனி வழி போகாதே.”[73] என அறிவுரை வழங்குவதோடு,

மேலும், “ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. இரண்டு பேராய்ப் படுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும். ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி? ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது”[74] என்ற வேத வசனங்கள் இந்தத் தியானத்தை மேலும் ஒளிபெறச் செய்வதை அறிய முடிகிறது.

திருமறை :

"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை."[75] எனும் வாசகத்தையும்,

"நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். ஏனெனில் தேவரீர் என்னோடிருக்கிறீர்."[76] எனும் வாசகத்தையும் முன்வைக்கிறார்.

இத்தகைய விளக்க நிலைகளில் ஒவ்வொரு சொல்லும், வாக்கியமும் நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படுகின்றனவாய் மனிதனைச் செம்மைப்படுத்தும்வண்ணம் அமைந்திருப்பதனை அறியமுடிகிறது.

தியான நூல்களுள் ஒப்புமை நோக்கு

தியான ஆலயம், தியானச்சோலை, கர்த்தருடைய ஜெபம், ஆத்தும நேசரின் அங்கமகத்துவம், உங்களோடு ஒரு நிமிடம் ஆகிய ஐந்து தியான நூல்களுமே ஆழமான தியானப் பகுதிகளைக் கொண்டுள்ளன. இவைகள் தியான நோக்கில் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய்க் காணப்படுகின்றன. "ஒரு நூலில் மற்றொரு நூலின் செல்வாக்கு என்பது மேலோட்டமானது. ஆனால் அதன் தாக்கம் என்பது ஆழமானது"[77] என்கிறார் சச்சிதானந்தன்.

ஆத்துமநேசரின் அங்கமகத்துவம் இயேசுகிறித்துவின் 17 உறுப்புகளைக் தியானத்துக்குட்படுத்துகின்றது. தியான ஆலயம் கூறும் தியானம் இயேசு கிறித்துவின் பாடுகள் குறித்ததான வரலாறும் ஒரு தேவாலயம் போல் பாவிக்கப்பட்டு முன்மண்டபம், பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என நான்கு பிரிவுகளாக அமைத்துத் தியானிக்கப்படுகின்றன. வழிநடைப் போதனை தொடங்கி இயேசுவின் மரண உபதேச வசனங்கள் வரையிலான தியானங்கள் தியானச்சோலையில் காணப்படுகின்றன. ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும் தியானப் பகுதிகள் பல கேள்விகளோடு தியானிக்கும் நூலாகக் காணப்படுகிறது உங்களோடு ஒரு நிமிடம். சார்லஸ் ஸ்டேன் என்பவரின் நூலினைத் தழுவி 'கர்த்தருடைய ஜெபம்' என்னும் நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும் இந்நூல் கர்த்தருடைய மாதிரி செபத்தை முன்வைத்து தியானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து தியான நூல்களிலுமே இயேசுகிறித்துவை மையமாக வைத்து அவருடைய பிறப்பு, வாழ்க்கை, உபதேசம், சிலுவைப் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் எனப் பல நிலைகள் தியானிக்கப்பட்டுள்ளன. எனினும் கிறித்துவின் சிலுவைப்பாடுகளே மிகுதியாகத் தியானிக்கப்பட்டுள்ளது. ஒப்புமை நோக்கிச் சான்றாகச் சிலவற்றைக் காண்போம்.

ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு எழுதப்பட்ட இந்நூல் பலருக்குமான அரிய தியான நூலாகும். அவர்கள் தங்கள் ஆன்மீக வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளக் காலந்தோறும் பயன்படக்கூடியதாய் அமைந்துள்ளன.

"ஆத்துமாவே உன் நேசரை நீ பூரணமாய்ப் பார்க்கும்படி கல்வாரி மலைக்குத் தியானப்பிரயாணம் செய். அந்த ஒரே இடத்தில் மாத்திரம் நீ உன் இரட்சகரின் மானிட தேகத்தையும், அதிலே அவர் உனக்காக அனுபவித்த குரூரமான பாடுகளையும் தெளிவாகக் கண்டு கொள்வாய். அதையே உன் தியான ஸ்தனமாக்கிக் கொள். அங்கே ஆத்துமநேசர் நீ பார்த்து ஆராய்ந்து தியானித்து, முத்தமிட்டு, வாழ்த்தி வரம் பெற்றுக் கொள்ளும்படி விரும்புகிற நீசக்கோலமாய் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினார். அந்தக் கல்வாரி மலையிலிருந்து நீ தியானித்தால் ஆத்துமநேசரின் அற்புத உற்பவ முதல் அதிசயப் பரமேறுதல் மட்டுமல்ல பூரண அன்பும், அவ்வன்பு வெளிப்படுத்தப்பட்ட மானிட தேக உறுப்புகளும் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்."[78] என்பதோடு,

போதனைப் பகுதியில் இயேசுவின் அங்கம் ஒவ்வொன்றின் சிறப்புகளை அவர் எடுத்துச் சொல்லும் முறை திருமறைக் கருத்துக்களுக்கு அணி செய்யும் வகையில் அமைகிறது. இயேசுவின் தோளைப் பற்றிய தியானித்தில் கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருந்தது என்று ஆரம்பித்து மனம் திரும்பும் எல்லாப் பாவிகளும் அவர் தோளின்மேல் இருக்கிறார்கள் என்று தொடர்கிறார்.

ஆத்தும நேசரின் முழங்கால்

இரட்சகருடைய முழங்காலைப்பற்றி ஒரே ஒரு குறிப்பு மாத்திரம் சுவிசேடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம். கெத்செமனேயில் இயேசு முழங்கால் படியிட்டதாக[79] சொல்லியிருக்கிறார்.

"ஆ, என் பாவமே! என் குடும்பத்தின் பாவமே! என் ஊரின் பாவமே! என் தேசத்தின் பாவமே! சர்வலோகத்தின் பாவமே நீ அல்லோ என் ஆத்துமநேசரின் முழங்காலை முடக்கப்பண்ணி விட்டாய்.

பாவம் அனைத்தையும் முப்பத்து மூன்று வருஷமாய் நடந்து சுமந்தவர் இப்பொழுது முழங்காலில் நின்று சுமக்கிறராக்கும்! கெத்செமனேயிலே கொண்டுபோய் அவ்வளவையும் ஒரே நேரத்தில் மொத்தமாய்த் தொலைத்துவிடக் குப்புற விழுந்து (மத்தேயு 26:39) இறக்கப் பார்த்தார், அது விழவில்லை; தரையிலே விழுந்து இறக்கப் பார்த்தார் (மாற்கு 14:35), அது இறங்கவில்லை. தேவன் சர்வலோகத்தின் பாவங்களுக்காக அவரைத் தண்டிக்கும்படி தமது சகல பரிசுத்த தூதரோடும் கெத்செமனேயில் சிம்மாசனபதியாய் வீற்றிருக்கிறார்;

ஆகையால் என் ஆத்துமநேசர் அவருடைய ஆசனத்துக்கு முன்பாக முழங்காலில் நிற்கிறாராக்கும்! "என் ஆத்தும நேசர், பிதாவின் கோபமும்

என்னையும் சர்வலோகத்தையும் பட்சிக்க எழும்பி வந்த அக்கினியும் தம்மை மாத்திரம் தொடரவும் நம்மைத் தொடராதிருக்கவும் முழங்கால்படியிட்டு வேண்டிக் கொள்ளுகிறாராக்கும். ஆத்துமாவே, களிகூரு. உன் ஆபத்துகளையெல்லாம் மாற்றி ஆசீர்வாதங்களை அருளும்படி உன் இரட்சகர் முழங்கால் படியிட்டார்." [80] என்ற பகுதியில் *தியான ஆலயத்தில்* பரிசுத்த ஸ்தலத்தில் வரும் கெத்செமனே ஜெபமும் இங்கு ஒப்புநோக்குதற்குரியது.

"என் நேச இயேசுவே, நீர் இவ்வளவு பணிவாக முழங்காற்படியிட்டு நிற்பானேன்? உமக்கு வந்த ஆபத்து என்ன? ஆ என்னை மீட்கும் நாள் வந்தது. என் பாவங்கள் உமது கால்களில் மோதி உம்மை முழங்காலில் நிறுத்துகின்றன. தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்க வேண்டிய நீர் உமது பிதாவுக்கு முன் முழங்காலில் நிற்கிறீர். ஏன் கைதி நிலைமையில் இன்று நீர் இருக்கிறீர். என் பாவம் உமது தோளின்மேல் ஏறவே, அதின் பாரம் பொறுக்கமாட்டாமல் உமது கழுத்தும் முதுகும் வளைந்ததோடு, உமது காலும் முழங்கால்படியிடுகிறது. உமது பிதா நீட்டும் பாடுகளின் பானத்தை மரியாதையோடு வாங்கிக் குடிக்க முழங்கால்படியிடுகிறீர்."[81] எனப் பதிவு செய்கிறார்.

ஆத்தும நேசரின் அரை

இரட்சகரின் அரையைப்பற்றி ஒரே ஒரு நேரான குறிப்பு மாத்திரம் புதிய ஏற்பாட்டில் வருகிறது. இரட்சகர் தாம் பந்தியில் அணிந்து கொண்டிருந்த

வஸ்திரத்தைக் கழற்றினார்.
அதைத் தூரத்தில் சுருட்டிவைத்தார்
ஒரு சீலையைப்போய் எடுத்தார்.
அதை அரையிலே கட்டிக்கொண்டார்.
ஒரு பாத்திரத்தைத் தேடி எடுத்தார்.
தண்ணீர் குடத்தண்டை போனார்.
தண்ணீர் வார்த்தார்.
அப்புறம் ஒரு சீடன் கால்களைக் கழுவ இழுத்தார்.
அவன் கால்களைக் கழுவினார்.
கழுவினபின் துடைத்தார்.
பின்பு இரண்டாம் சீடன் கால்களைக் கழுவினார்.
கழுவினபின் துடைத்தார்.
இப்படியே பன்னிருவரையும் கழுவினார்.
பன்னிருவரையும் துடைத்தார்.
எல்லோரையும் கழுவினபின்பு பாத்திரத்தையும்
சீலையையும் அப்பாலே வைத்துவிட்டார்.
பின்பு தமது வஸ்திரங்களைப் போட்டார்.
திரும்பப் பழையபடி உட்கார்ந்தார்.[82]

என்று விவரிக்கிறார்.

உங்களோடு ஒரு நிமிடத் தியானப் பகுதி கூறும் ஒவ்வொன்றும் மனதில் தைக்கப் பாயும் ஞான அம்புபோல் இருக்கிறது.

இதுதான் சுயநீதி என்னும் வஸ்திரம். என் கண்ணுக்கு அது அத்தி இலையால் செய்யப்பட்ட ஒரு துணிபோல் தெரிந்தது. அவன் கண்ணுக்கோ அது நன்றாயிருக்கிறது. அதையே உடுக்கிறான். அதினாலே மூடுகிறான். அதைத்தான் எல்லோருக்கும் காட்டுகிறான். அவன் சற்று உணர்வுள்ளவன். அவனைப் பார்த்து, 'உன் கண்ணுக்கு நன்றாயிருக்கிறது, எனக்கேன் அசிங்கமாயிருக்கிறது, எனக்கு அது கந்தையான வஸ்திரம் போல்தான் தெரிகிறது. அதேன்?' என்றேன். 'முன் நன்றாயிருக்கிறதென்று சொன்னாயே' என்றான். "அது உள்ளபடியல்ல, பரிகாசச்சொல். இது நல்ல உடுப்பல்ல. உன் நிர்வாணம் இந்த உடுப்பால் மூடப்படவில்லை. நீ வேறே கடைக்காரனிடத்தில் நான் எழுதிக் கொடுக்கிற பேரையுடைய உடுப்பை வாங்கு. அதற்குப் பணம் கொண்டு போகாதே. அந்த முதலாளியிடத்தில் போய் முழங்கால்படியிட்டுக் கேள் தருவார். அந்த முதலாளி பேர் என்ன? இயேசு. இயேசுவே நீர் நெய்த வெள்ளை அங்கி தாரும் என்று உடனே போய்க் கேள்" என்று கூறினேன்.[83] என ஏவுகிறார்.

தியானச்சோலை கூறும் ஆடை ஞான உடுப்பு அறை என்னும் பகுதியில் பின்வருமாறு தியானநிலை காணப்படுகின்றது. "பாவ உணர்வால், பாவ அறிக்கை செய்து, ஆத்துமாவைக் கழுவின சகோதரன், இனி தரித்து அலங்கரித்துக் கொள்ள வேண்டிய ஆடையாபரணங்களைப் பற்றிச் சில காரியங்களை உணர்த்துகிறேன். ஏனெனில் உன்னை விருந்துக்கு அழைக்கிறவர் மகா பரிசுத்தமுள்ள தேவன் என்பதை நீ அறிவாயாக. அவர் உனக்குப் பாராட்டும் தயவால் தமது பரிசுத்தத்தை மறந்து போகமாட்டார். நீயும் உனக்குப் பாராட்டப்படும் தயவை நினைத்து அசட்டையுள்ள- வனாயிருக்கலாகாது. நீ உன் பச்சாதாபத்தாலும் பாவ அறிக்கையாலும் உன்னுடைய பழைய மனுஷனாகிய கெட்ட சுபாவங்களனைத்தையும் களைந்து போட்டாயானால் பின்வரும் நற்குண நற்செய்கைகளால் தான் உன்னை அலங்கரிக்க இயலும்.

ஆகாஸ்வேர் இராஜாவின் கொலுமண்டபத்தை நோக்கி மொர்தெகாய் வந்தபோது. தன் வஸ்திரங்களைக் கிழித்து. இரட்டு உடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, அலறி அரமனை வாசல் முகப்புமட்டும் வந்தாலும், அப்படிப்பட்ட உடையோடு, அரமனை வாசலுக்குள் பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லையாதலால் எஸ்தர் ராணி அவனை உடுத்துவிக்கிறதற்கு வஸ்திரங்களை அனுப்பினாள். நீ போகவேண்டிய விருந்து மண்டபமோ அதிலும் மேன்மை பொருந்தியது. அதற்கேற்ற உடுப்புகளைத் தரித்துக் கொள்ளும்படி இந்தச் சோலைக்குள்ளிருக்கும் உடுப்பு அறைக்கும் போகலாம் வா"[84] என்று அழைக்கின்றார்.

தியான ஆலயத்தில் இயேசுகிறிஸ்துவின் வஸ்திரம் பகிரப்பட்டதை, "சிலுவையிலறையப்பட்டவர்களுடைய வஸ்திரம் அவர்களை அறைகிறவர்-களுடைய பாகம்போல் வழக்கமாய் எடுத்துக்கொள்ளப் படுகிறதுண்டு. அந்த

வழக்கத்தின்படி இயேசுவின் வஸ்திரங்களும் பங்கிடப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவைகளை நாலு பங்காக்கினார்கள் என்ற வாசகத்தால், இயேசுவைச் சிலுவையிலறைந்தவர்கள் நாலுபேர் என்று தெரிய வருகிறது. இதில் ஒருவன் வலது கையையும், மற்றவன் இடது கையையும், அடுத்தவன் கால்கள் இரண்டையும் பிடித்திழுத்துக்கொள்ள நாலாம் ஆள் ஆணி கடாவியிருக்கலாம்.

இயேசுவின் உடையில் பங்கிடக்கூடாத ஒரு வினோதமான அங்கியிருந்தது. அதை சீட்டுப்போட்டுத் தீர்மானித்துக் கொண்டார்கள். இப்படி இரட்சகரின் வஸ்திரம் பகிரப்படும் என்று தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டது."[85] எனச் சான்றளிக்கின்றார்.

ஆத்தும நேசரின் சிரசு

"இயேசுவின் சிரசில் முள்முடி சூட்டப்பட்டது என்று பார்க்கிறோம். இரட்சகர் முள்முடி சூட்டப்பட்டதைப் பரிசுத்த லூக்கா தவிர மற்ற மூன்று சுவிசேடகரும் சொல்லுகிறார்கள். பிலாத்து இயேசுவை விடுதலை செய்யும்படி முள்முடி சூட்டித் தண்டித்தான்.

இயேசுவின் சிரசில் அடித்தார்கள். அவர் முதுகிலும், கன்னத்திலும், முகத்திலும் அடிபட்டதோடு தலையிலும் அடிபட்டார். செங்கோல் என்று பரியாசமாக யூதர் கொடுத்த நாணல் கோலையே பிடுங்கி முள்முடியின்மேல் அடித்து அழுத்தினார்கள். அதோடுகூட அநேகர் தங்கள் விரல்களை மடக்கிக் குட்டினார்கள்."[86] மேலும்,

பிலாத்து இயேசுவுக்குத் தரிப்பித்த முள்முடியைக் குறித்துத் *தியான ஆலயமும்* கூறுகின்றது

"பிலாத்து இரட்சகரை வாரினால் அடித்தவுடனே யூதருக்குச் சந்தோஷமுண்டாயிற்று. இரத்தப் பிரியரான அந்த யூதர், இயேசுவின் முதுகில் காணப்பட்ட காயங்களைக் கண்டு, அகமகிழ்ந்து இவருடைய சாவைக் கண்டால் அல்லோ எங்கள் மனம் ஆறும் என்று சொல்லிக் கொண்டார்கள். பிலாத்துவோ, இந்த மிலாற்றடி போதும், இனி இவர் இந்த நோவால் தானே செத்துப் போனாலும் போவார் என்று யூதர் உத்தேசித்து தங்கள் மட்டில் போய்விடுவார்கள் என்று நினைத்தான். அவர்கள் இயேசுவின் சிலுவை மரணத்துக்கு எதிர்பார்த்தபடியால் இந்த அடிகளையும் காயங்களையும் இரத்தப் பிரளயத்தையும் கண்டாலும் மனம் மாறவில்லை.

அப்புறம் பிலாத்து இவருக்கு இராஜவேஷம் போட்டு பரியாசம் பண்ணினால், அதைப் பார்த்து சிரித்துச் சிரித்து மரணாக்கினை நினைவை மறப்பார்கள் என்று நினைத்து முள்கொடியால் ஒரு பாகைபோல் சுற்றி அவர் சிரசில் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி, அவரைப் பரியாயசம்பண்ணி அடித்தார்கள். சிவப்பங்கியால் அவருடைய இரத்தமெல்லாம் மறைக்கப்பட்டதால் பின்னும் அடிக்க விரும்பினவர்கள் மனம் கொண்டபடி அடிக்க இடமாயிற்று."[87] என விளக்கப்படுகிறது.

துக்க சாகரத்தோணி இயேசு கிறித்துவின் சிலுவைப் பாடுகளினால் கிடைத்த மாபெரும் மீட்பைக் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. பிற நூல்களினின்று இவை வேறுபட்ட நிலையில் தெளிவு படுத்துகின்றது.

நமக்கு இவ்வுலகத்தில் துன்பம், துக்கம், வருத்தம், வியாதி, பஞ்சம், பெருவாரி வியாதி முதலிய எந்தக் காரியங்கள் சம்பவித்தாலும் நாம் நினைக்க வேண்டியது எப்படியென்றால், இவையெல்லாம் எங்கள் அக்கிரமங்களினிமித்தம் கர்த்தர் வரவிடுகிறதாயிருந்தாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவத்தையும், அதின் சாபத்தையும், தண்டனைகளையும் எல்லாம் தம்மில் பட்டுத்தரித்து அவை எல்லாவற்றிலுமிருந்து, எனக்குப் பூரணமீட்பை உண்டுபண்ணியிருக்கிறார். அவர் தமது அகோர மரணத்தாலும், வெற்றி சிறப்பான உயிர்த்தெழுதலாலும், நமது பாவங்களையும், அவற்றின் ஆக்கினைகளையும் முடிவடையச் செய்திருக்கிறார். இப்போது நமக்குச் சம்பவிக்கும் துன்பங்கள் துக்கங்கள் எல்லாம் நம்மைச் சேதப்படுத்தமாட்டாது; அதின் கூரும், கருக்கும், மழுக்கப்பட்டு அதின் நஞ்சு அமுதாக மாறிவிட்டது. கிறித்து அவையனைத்தையும் தமது பாடுகளாலும் மனவியாகுலங்களாலும், மரணத்தாலும் ஆசீர்வதித்துப் பரிசுத்தப்படுத்திவிட்டார். இவையனைத்தும் கிறிஸ்துவை விசுவாசிக்கும் உத்தம பிள்ளைகளுக்கு இப்போது விரும்பும் ஆஸ்தியும் நாடும் புதையலும் போலிருக்கிறது என்று சிந்தித்துக்கொள்ள வேண்டியது.

சாமுவேல் பவுல் ஐயரின் தியான நூல்கள் கிறித்தவ இறையியலைக் கற்றுக் கொடுப்பதாக அமைந்தாலும் அவை ஒன்றுக்கொன்று தனித்தன்மை கொண்டதாகவும், ஒப்புமை உடையதாகவும் அமைந்துள்ளன. ஆன்மீக வாழ்க்கையை நெறிப்படுத்த அவர் விளக்கும் முறை, பயன்படுத்தும் சொற்கள், திருமறைப் பகுதி, தலைப்பு முதலானவை ஒப்புநோக்கும்போது தனித்துவ மிக்கதாய் அமைந்துள்ளது.

இவ்வியலில் கூறப்பட்ட செய்திகளிலிருந்து கீழ்காணும் கருத்துகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தியானம் என்னும் சொல்லுக்கு விளக்கம் தந்து தியானிக்கும்முறை என்று விளக்கப்பட்டுள்ளதை மேற்சொன்ன கூற்றுகளின் வழி அறிய முடிகிறது. மேலும் தியான நூல்களைப் பட்டியலிட்டு அச்சில் கிடைத்த நூல்களில் கூறப்பட்டுள்ள தியானப் பொருளினை விளக்குகிறது. நூல்கள் புலப்படுத்தும் தியான நிலைகள் ஆன்மீகமும் உலகியலும் இயைந்த வாழ்க்கைக்கு எவ்வாறு பக்குவப்படுத்துகின்றது என்பதைக் கூறுகிறது. ஆத்தும நேசரின் அங்கமகத்துவம் என்னும் பகுதி இயேசு கிறித்துவின் உடல் உறுப்புகளினால் வெளிப்படும் அற்புதச் செயல்களை ஆன்மீக அனுபவத்தோடு விளக்குகிறது. ஆத்தும நேசரின் பாதம் – பிணியாளிகளின் வைத்தியசாலை – பிணி நீங்கினவர்களின் பள்ளிக்கூடம் என்றவாறு எடுத்துக் கூறி இறைவனின் திருவடிகளைச் சேருவதற்கு வழிகாட்டுகிறது. அவ்வாறே, கால், காலெலும்பு,

முழங்கால், அரை, வயிறு, மார்பு, விலா, முதுகு, தோள், கை, கைவிரல், காது, கன்னம், வாய், கண், முகம், சிரசு ஆகியவற்றைத் திருமறை வசன மேற்கோள்களுடன் ஒவ்வொன்றாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

தியானச்சோலை என்னும் நூல் இயேசுவின் போதனைகளைத் தியானம் பண்ணுவதற்கு ஏற்ற இடமாகச் சோலைக்குள் அழைத்துச் சென்று கற்றுத் தருகிறது. உலகச் சூழல்களை முற்றிலும் தவிர்த்து ஆன்மவியல் அனுபவத்தை மட்டுமே சிந்திக்குமிடமாகச் சோலை அமைக்கப்பட்டு விளக்கப்படுகிறது.

தியான ஆலயம் நூல் தியானங்களை இறைவனுடைய ஆலயம் என்ற அமைப்பு முறையில் முன்மண்டபம், பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என்று வடிவமைக்கப்பட்டுள்ளது. முன்மண்டபத்தில் இயேசு கிறித்துவின் பாடுகளினால் கிட்டும் பயனையும், பிரகாரத்தில் பிறப்பு மற்றும் வாழ்க்கையினையும், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என்னும் பகுதிகளில் இயேசுவின் மரணப் பயணத்தினையும், சிலுவைப் பாடுகள், மரணம், அடக்கத்தினையும் தியான நிலையில் மனதின் உட்புகுத்த முற்படுகிறார். ஒவ்வொரு கிறித்தவனும் பக்தனானாலும் சரி, படுதோஷியானாலும் சரி, அவன் இயேசுவின் பாடுகளைத் தியானிக்கக் கடமைப் பட்டவனாயிருக்கிறான் என வலியுறுத்துகிறார்.

கர்த்தருடைய ஜெபம் திருமறையில் இயேசு தம்முடைய சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்த வேண்டுதலைத் தெளிவாகப் பல உட்தலைப்புகளோடும், கேள்விகளோடும், திருமறைப் பகுதிகளோடும், உவமைகளோடும் விளக்குவதாய் அமைந்துள்ளது.

மனிதனுக்குத் துன்பம், துக்கம் என்பன தவிர்க்கவும் விலக்கவும் முடியாதது. இன்பத்தில் துணை வேண்டுவதைக் காட்டிலும் துன்பத்தில் துணை இன்றியமையாதது. துன்பகாலங்களில் இறைபக்தியும், ஆறுதலும் தேவைப்படுகிறது. துன்பத்திற்கான காரணம் தொடங்கி அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழியைப் பலநிலைகளில் நெறிப்படுத்துகிறது. துன்ப, துக்கங்கள் பாவங்களைப் பற்றிய சரியான அறிவையும், மனமாற்றத்தையும் நமக்குள் ஏற்படுத்துகின்றன எனவும், பிறருக்கு இரக்கம் காட்டவும், பொறுமையாயிருக்கவும் நம்மைத் தூண்டுகின்றன எனவும் விளக்குகிறது.

திருமறைப் போதனைகளை ஒரு நிமிடத்தில் தியானிக்கும் வண்ணமாகத் தெளிவான பிரசங்கங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு தலைப்பும் கேள்வியாக அமைந்து இறுதியில் பதில் கூறப்பட்டுள்ளது. சான்றாக, உன் பேரென்ன? என்னும் தலைப்பு திருமறைப் பெயர்களின் வழியும் உலகியல் நடைமுறையின் மூலமாகவும் விளக்கி, உன் பேர் கிறித்தவன் அல்லவா? அந்தப் பேர் உனக்குத் தகுதியா சொல்லு? என விளக்கி முடிக்கிறார். தியான நிலைகள், தியான நிலை வெளியீட்டு முறை, தியானப் பயன்பாட்டு முறை, தியான நூல்களுக்கான ஒப்புமையும், தனித்தன்மையும் விளக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. James Hastings, *Encyclopaedia of Religion and Ethics,* Vol.8, p.693.
2. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.XVIII.
3. மேலது, ப.XXI.
4. *பரிசுத்த வேதாகமம்*, லூக்கா 22:39-42.
5. சாமுவேல் பவுல், *தியானச்சோலை*, ப.1.
6. மேலது, ப.24.
7. *பரிசுத்த வேதாகமம்*, மத்தேயு 5:6
8. மேலது, உபாகமம் 33:27,29
9. மேலது, யோவான் 6:48
10. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.1.
11. மேலது.
12. *பரிசுத்த வேதாகமம்*, யோவான் 3:16.
13. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.5.
14 சாமுவேல் பவுல், *கர்த்தருடைய ஜெபம்*, ப.1.
15. மேலது, ப.56,57.
16. சாமுவேல் பவுல், *துக்கசாகரத் தோணி*, ப.முகவுரை.
17. மேலது, ப.viii.
18. சாமுவேல் பவுல், *உங்களோடு ஒரு நிமிடம்*, ப.5,6.
19. மேலது, ப.31,32.
20. *பரிசுத்த வேதாகமம்*, யோவான் 13:25.
21. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.37.
22. மேலது, ப.38, 39.
23. மேலது, ப.43.
24. மேலது, ப.44.
25. *பரிசுத்த வேதாகமம்*, மத்தேயு 22:37,39
26. மேலது, யாத்திராகமம் 20:1-11.
27. மேலது, ஏசாயா 1:18
28. சாமுவேல் பவுல், *தியானச்சோலை*, ப.24.
29. *பரிசுத்த வேதாகமம்*, யோபு 29:14
30. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.18,19.

31. மேலது, ப.38.
32. மேலது, ப.128,129.
33. மேலது, ப.254,255..
34. சாமுவேல் பவுல், *கர்த்தருடைய ஜெபம்*, ப.46.
35. மேலது, ப.46,47.
36. சாமுவேல் பவுல், *உங்களோடு ஒரு நிமிடம்*, ப.1.
37. மேலது, ப.18,19.
38. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.xiii.
39. மேலது, ப.7.
40. மேலது, ப.8-9.
41. *பரிசுத்த வேதாகமம்*, லூக்கா 7:37,38
42. இர.ஆ.மனுவேல் தவக்கால தினசரி தியானங்கள், ப.92,93
43. சாமுவேல் பவுல், மு.நூ., ப.135
44. *பரிசுத்த வேதாகமம்*, மாற்கு 14:3.
45. சாமுவேல் பவுல், *தியானச்சோலை - போதனை*, ப.iii.
46. *பரிசுத்த வேதாகமம்*, ஏசாயா 43:24,25.
47. சாமுவேல் பவுல், மு.நூ., ப.24,25.
48. *பரிசுத்த வேதாகமம்*, ஏசாயா 44:22, 43:1.
49. சாமுவேல் பவுல், மு.நூ., ப.25.
50. Scripure Union, *தின தியானம்-2012*, ப.142.
51. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.6-9.
52. இர.ஆ.மனுவேல் தக்கால தினசரி தியானங்கள், ப.75.
53. *தின தியானம்*, மாலை வேளைக்குரியது, ப.9.
54. சாமுவேல் பவுல், மு.நூ., ப.36.
55. *பரிசுத்த வேதாகமம்*, மத்தேயு 6:9.
56. மேலது, மத்தேயு 6:18.
57. சாமுவேல் பவுல், *கர்த்தருடைய ஜெபம்*, ப.150.
58. *பரிசுத்த வேதாகமம்*, மத்தேயு 5:29,30.
59. வில்லியம் மெக்டொனால்டு, தமிழாக்கம்: இரா.மணிவாசகம், *இன்றைய இறைத்தூது*, ப.175,176.
60. சார்லஸ் இ.கவ்மேன், *பாலைவன நீரோடைகள்*, ப.34,35.
61. மேலது, ப.542,544.
62. *பரிசுத்த வேதாகமம்*, 1 பேதுரு 4:2.

63. சாமுவேல் பவுல், *உங்களோடு ஒரு நிமிடம்*, ப.2,3.
64. வில்லியம் மெக்டொனால்டு, தமிழாக்கம்: இரா.மணிவாசகம், *இன்றைய இறைத்தூது*, ப.218,219.
65. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.41-46.
66. *பரிசுத்த வேதாகமம்*, யோவான் 19:34.
67. சாமுவேல் பவுல், *தியானச்சோலை*, ப.62,63.
68. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.337,338.
69. சாமுவேல் பவுல், *கர்த்தருடைய ஜெபம்*, ப.107.
70. *பரிசுத்த வேதாகமம்*, சங்கீதம் 147:9.
71. சாமுவேல் பவுல், *துக்கசாகரத் தோணி*, ப.v-vi.
72. *பரிசுத்த வேதாகமம்*, ரோமர் 3:10-12.
73. சாமுவேல் பவுல், *உங்களோடு ஒரு நிமிடம்*, ப.17.
74. *பரிசுத்த வேதாகமம்*, பிரசங்கி 4:9-12.
75. மேலது, சங்கீதம் 16:8.
76. மேலது, சங்கீதம் 23:4.
77. சச்சிதானந்தன், *ஒப்பிலக்கியம்*, ப.5.
78. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.xxi.
79. *பரிசுத்த வேதாகமம்*, லூக்கா 22:39-42.
80. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.23,24.
81. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.128,129.
82. சாமுவேல் பவுல், மு.நூ., ப.25,26.
83. சாமுவேல் பவுல், *உங்களோடு ஒரு நிமிடம்*, ப.5,6.
84. சாமுவேல் பவுல், *தியானச்சோலை*, ப.32,33.
85. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.274,275.
86. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.139.
87. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.238,239.

மொழிபெயர்ப்பு நூல்

படைப்பிலக்கியத்துக்கு நிகராக மதிக்கப்படும் ஒரு துறையாக இன்று மொழிபெயர்ப்பு இலக்கியத் துறை விளங்குகிறது. உலகில் வழங்கிவரும் பல்வேறு மொழிகளின் பிரதிகளினூடாகக் காணும் பல்வேறுபட்ட மக்களது கலைரீதியான உணர்வு வெளிப்பாடு முதல் கலாச்சாரம், பண்பாடு, வாழ்வுமுறை, அரசியல், சிந்தனைப்போக்கு என எல்லாவற்றையும் எண்ணற்ற பெயர்ப்புப் பிரதிகள் வழி எல்லைகள் தாண்டிக்கொண்டு சேர்த்திருக்கிறது. தூலமான அரசியல், சமூகப் பிரயத்தனங்களை விடவும் உலக மானுடன் என்ற கருத்தாக்கம் மொழிபெயர்ப்புப் பிரதிகளினூடாகக் காலம் காலமாக இலக்கிய வாசகர்கள் மனதில் வலுவுடன் தொழிற்பட்டு வருகிறது. மொழிபெயர்க்கப்பட்ட படைப்புகள் வழியாக உலகின் இலக்கியங்கள் யாவும் புதிய வெளிச்சத்தையும் அதன் பாதிப்பினால் புதிய தடங்களையும் கண்டிருக்கின்றன. இதற்குத் தமிழ் இலக்கியமும் விலக்கல்ல.

தமிழின் நெடிய இலக்கியப் பாரம்பரியத்தில் தொன்று தொட்டே, மொழிபெயர்ப்புக் கலையானது ஓர் அங்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆரம்பக் காலத்தில் வடமொழி இலக்கியங்களைத் தழுவி படைப்புகள் ஆக்கப்பட்டதாக ஆய்வாளர் கூறுவர். ஐரோப்பியர் வருகை தொடங்கி இன்று வரை தமிழிலக்கியத்துக்கு மொழிபெயர்ப்பாளர்கள் தொடர்ச்சியாகத் தங்கள் பங்களிப்பினைச் செய்து வருகின்றனர். தமிழிலக்கியச் சூழலில் மொழிபெயர்ப்பும் தனக்கென குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைக் கொண்டதாகவே இருக்கிறது.

ஓர் இலக்கியத்தைப் படைப்பதைக் காட்டிலும் அதனை மொழிபெயர்ப்பது மிகவும் சிக்கலானது. ஒரு மொழியின் அகராதியை மட்டும் வைத்துக்கொண்டு அம்மொழி இலக்கியத்தை மொழிபெயர்த்து விட இயலாது. அம்மொழியின் அகப்புறக் கூறுகளையும், அறிந்தால்தான் அம்மொழிபெயர்ப்பைச் சிறப்பாகச் செய்ய முடியும். "இலக்கியப் படைப்பாளனின் அறிவுத் திறனை மட்டுமன்றி ஆன்மாவையும் அறிந்திருக்க வேண்டும். இல்லையேல் அம்மொழிபெயர்ப்பு உயிரில்லா, உடல்போன்று ஆகிவிடும். சான்றாக 'ஊடல்' என்னும் சொல்லை ஆங்கிலத்தில் அவ்வளவு எளிதாக மொழிபெயர்த்துவிட இயலாது. தமிழ் இலக்கண மரபு, சங்க இலக்கிய அனுபவம் ஆகியவை பற்றிய அனுபவமின்றி அதனை மொழி பெயர்த்தால் அஃது ஒளிதரா விளக்காகிவிடும்"[1] என்பதன் வாயிலாக மொழிபெயர்ப்பின் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது.

தொடக்க கால மொழிபெயர்ப்புகள்

தமிழில் வெளிவந்திருக்கும் மொழிபெயர்ப்பு நூல்களைக் காட்டிலும் அயல் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் தமிழ் நூல்கள் மிகக் குறைவு.

கிறித்தவம் சார்ந்த நூல்களிலும் இந்நிலையே காணப்படுகிறது. மொழிபெயர்ப்பைப் பொதுவாக இருவகையாகக் காணலாம். ஒரு பகுதியில் மக்களிடையே வழங்கிவரும் மொழியை இயல்மொழி எனலாம். அது தவிர ஏனைய மொழிகளை அயல்மொழிகள் எனலாம். இயல்மொழியிலிருந்து அயல் மொழியில் மொழிபெயர்ப்பது மற்றொரு வகை. தமிழகத்தைப் பொறுத்த அளவில் தமிழ் இயல்மொழியாகும். மற்றவையெல்லாம் அயல் மொழிகளே. இயல்மொழியாம் தமிழிலிருந்து பிறமொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கும் நூல்களை இலக்கணங்கள், இலக்கியங்கள், திருக்குறள், காப்பியங்கள், நீதி நூல்கள், பக்தி நூல்கள், சுருக்கங்கள் எனப் பாகுபாடு செய்யலாம். அயல் மொழிகளிலிருந்து தொடக்க காலத்தில் இயல்மொழியாம் தமிழுக்கு மொழிபெயர்க்கப் பெற்றவை இறைவேண்டல், வணக்க நூல்கள், ஆலயப் பாடல்கள், விவிலியம், இலக்கியங்கள் எனப் பகுத்துரைக்கலாம்[2] என சாமுவேல் பவுல் ஐயர் கூறுகிறார்.

அயல் மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் முயற்சிகளில் முதலில் ஈடுபட்டவரும் கிறித்தவரே. மேனாட்டிலிருந்து வந்த அவர்கட்கு சமயப் பணியாற்ற அப்பணி தேவையாயிற்று. தாம் கற்றுக் கொடுக்கும் இறைவேண்டல் மன்றாட்டுக்களை இங்குள்ளோர்க்குத் தமிழ்ப்படுத்திக் கொடுக்க வேண்டியதாயிற்று. அதனால் சமய நூல்களை மொழிபெயர்த்துத் தந்து, தாம் செல்ல இயலாத இடங்களில் அவற்றை அங்குள்ளோர் படித்துப் பயன் கொள்ளச் செய்தனர். இத்தகைய தொடக்க நிலைப் பயிற்சிகளைச் செய்தபின் விவிலியத்தை அவர்களே படித்துப் புரிந்து கொள்ள அவரவரறிந்த மொழியில் மொழிபெயர்த்துக் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. அவற்றின் பின்னரே இலக்கியங்களை மொழிபெயர்க்கும் ஆர்வம் தோன்றியது. அதனால் பல இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்படலாயின. அம்முயற்சியிலும் கிறித்தவரே முன் நின்றனர். இவ்வகையில் அயல்மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தப் பணிகளை இறைவேண்டல், உரைநூல்கள், விவிலியம், இலக்கியங்கள், இறையியல் எனப் பகுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஞானப்பாட்டுகள்

தமிழில் முதலில் அச்சான நூல்கள் தம்பிரான் வணக்கம், கிரீஸ்தியானி வணக்கம் ஆகும். இவை இரண்டும் அன்றிரிக் அடிகளாரால் மொழி பெயர்க்கப்பெற்ற கிறித்தவ செபங்களாகும். தமிழில் வெளிவந்த முதல் மொழிபெயர்ப்பு நூல்கள் இவை. கிறித்தவர் முதன்முதலில் கற்றுக் கொள்ள வேண்டிய கர்த்தர் கற்பித்த செபம், பத்துக் கற்பனைகள், விசுவாசப் பிரமாணம் முதலியவற்றைப் பல்தேயுஸ் மொழிபெயர்த்துள்ளார்.[3] அன்றிக் அடிகளார் கிறித்தவப் புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சுருங்கக் கூறும் 'அடியார் வரலாறு' என்னும் நூலை வெளியிட்டார்.

மொழிபெயர்ப்பின் அவசியம்

வேறு ஒரு மொழியில் காணும் சிறந்த படைப்புக்களை ஒருவரது சொந்த மொழியினரும் வாசிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருதல் மற்றும் ஒருவரது சொந்த மொழியில் காணும் சிறந்த படைப்புக்களை வேற்று மொழியினரும் வாசிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருதல், இவையே மொழிபெயர்ப்புக்கான தேவையை ஏற்படுத்துகின்றன. தமிழிலக்கியத்தில் மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் நிறுவனங்களைக் காட்டிலும் தனிநபர் தேர்வுகளைக் கொண்டே அமைந்தவை. அவ்வகையில் சாமுவேல் பவுல் ஐயர் ஜான் பனியன் என்பவருடைய Pilgrim Progress என்ற ஆங்கில நூலைத் தமிழில் 'மோட்சப் பிரயாணம்' என்ற பெயரில் தமிழ்க் கிறித்துவர்களுக்குப் பெரும் புதையலாகத் தந்துள்ளார்.

ஐரோப்பியர் வருகையை அடுத்துக் கிறித்தவ மத நூல்களும் விவிலியமும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. மேலை இலக்கியங்கள் மட்டுமல்லாது ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் மற்றும் அதிகம் அறியப்படாத உலகின் பல பகுதிகளிலிருந்தும் படைப்புகள் தமிழுக்குக் கொண்டுவரப்படுகின்றன என்பது மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் வளர்ச்சியைக் காட்டும்.

"தமிழில் உரைநடை வரலாற்றின் தொடக்கம் மொழிபெயர்ப்புகளின் வரலாறுதான்"[4] என்னும் கருத்து ஏற்புடையதாகும்.

"இருபதாம் நூற்றாண்டு மொழிபெயர்ப்பு துறையில் மாபெரும் மாற்றத்தைக் கண்டது. செய்தித் தொடர்பியல் துறை மொழிபெயர்ப்பால் வானளாவ வளர்ந்தது என்பதும் கருதுதற்குரிய உண்மையே. சொற்பொருளியலாளர்களும், உளவியலாளர்களும் தகவலைச் சரிவரத் தெரிவிக்காத செய்தித் தொடர்பு எதுவும் பயனற்றது"[5] என்று கருதுகின்றனர். இந்நிலையில் மொழிபெயர்ப்பியல் நிலையில் 5 வகை வளர்ச்சிகள் ஏற்பட்டு மொழிபெயர்ப்புக் கொள்கையிலும் நடைமுறையிலும் சில குறிப்பிட்ட விளைவுகளை ஏற்படுத்தின[6] என்று வீ.சந்திரன் குறிப்பிடுகிறார்.

1. அமைப்பு வகையிலான மொழிபெயர்ப்பு பெருமளவில் விரிவு படுத்தப்பட்டது.
2. மொழிபெயர்ப்பின் தனித்த சிக்கல்களைக் களைவதற்கு அமைப்பு மாநாடு நடத்தி விவிலிய மொழிபெயர்ப்புக்கான காலாண்டு ஏட்டினைத் தொடங்கினர். இந்நோக்கத்திற்காக அவர்கள் மொழியியலோடு நெருங்கிய தொடர்புடையோர் ஆயினர்.
3. ஒருங்கிணைந்த விவிலிய சமயிகள் பன்னாட்டு மொழிபெயர்ப்பு மாநாடு தொடங்கினர். இந்நோக்கிற்காக அவர்கள் மொழிபெயர்ப்பாளரோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் ஆனார்கள்.
4. யுனெசுகோ குழு மூலம் 'போபல்' வெளியீடான மொழிபெயர்ப்புக்குரிய ஏட்டில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புத் துறையின் தற்காலக் கொள்கைகள், கோட்பாடுகள், நடைமுறைகள் பற்றி அறிவதற்கு வழிவகுத்தன.

5. இயந்திர மொழிபெயர்ப்பில் பல்வேறு செயல்திட்டங்கள் மூலம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவ்வளர்ச்சி பல கட்டங்களில் நிறைவேறியது. "கணிப்பொறி மொழியியல், இயந்திர மொழிபெயர்ப்புக்குத் தேவைப்படும் மொழிபெயர்ப்பு நடைமுறைகளை ஆய்வு நடத்தியுள்ளது"[7] என்று வீ. சந்திரன் கூறுவதுடன் வகைப்படுத்தியும் காட்டுகிறார்.

ஓர் இலக்கியத்தைப் படைப்பதை விட மிகவும் சிக்கலானது ஒரு மொழி நூலை வேறு ஒரு மொழிக்கு மொழிபெயர்ப்பது. சாமுவேல் பவுல் ஐயர் தமிழில் 26 நூல்களை மொழிபெயர்த்துள்ளார். அவையாவன,

1. ஆங்கிலேய திருச்சபைச் சரித்திரச் சுருக்கம்
2. ஆயாளும் துரைசானியும்
3. சூரியோதயம்
4. சித்திரக்கதைகள்
5. பரதேசியின் மோட்சப் பிரயாணம்
6. பாலர் பாடங்கள்
7. இரண்டாம் புஸ்தகம்
8. ஜெசிக்காளின் முதலாம் ஜெபம்
9. கற்பனையின் மேல் கற்பனை
10. ராஜதயாளம்
11. குடும்ப ஜெபத்துணை
12. ராஜகட்டளை
13. என் ராஜா
14. காலைமணிச்சத்தம்
15. சிறுதலையணைகள்
16. மோட்ச ஏணி
17. ஜீவ தண்ணீர்
18. இந்தியக் கிறிஸ்தவர்களின் குடும்ப ஜெபங்கள்
19. சட்டதிட்டம்
20. கமலம்

21. சகுணா
22. கர்த்தருடைய ஜெபம் - பிரசங்கங்கள்
23. இஸ்லாம் மார்க்கம்
24. இயேசுவின் அன்பான வார்த்தைகள் (4 பாகங்கள்)
25. சர்ச்சுமிஷன் சங்கத்தின் நூறுவருஷச் சரித்திரப்பொழிப்பு
26. குழந்தை ஞானஸ்நானம்

ஆகியவை. அவற்றுள் அச்சில் வெளிவந்து கிறித்தவ மக்கள் பெரிதும் பயன்படுத்துகிற மோட்சப் பிரயாணம் என்னும் நூல்தான் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. இந்நூல் 1793இல் தமிழில் முதலாவதாகச் சுவிசேஷப் பிரபல்லிய மிஷன் சங்கத்தாரால் அச்சிடப்பட்டது.

மோட்சப் பிரயாணம் உரைநடையில் முன்னேற்றம்

மோட்சப் பிரயாணத்தின் முதற்பாகம் மட்டும் கி.பி. 1793-இல் தமிழாக்கம் பெற்று அதன் ஆங்கில மூலத்துடன் முதற் பதிப்பாக வேப்பேரியில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. அடுத்த நிலையில் தமிழ் மொழிபெயர்ப்பு மட்டும் 1841-லும் அதன் திருத்திய பதிப்பு 1842-லும் வெளிவந்தது. பின்னர் சாமுவேல் பவுல் ஐயர், இரு பாகங்களையும் இணைத்துப் புது மொழியாக்கம் செய்தார். இதனைக் கிறித்தவ இலக்கிய சங்கத்தார் வெளியிட்டனர். இன்றளவும் படிக்கப்படுவது இம்மொழிபெயர்ப்பே. இரு பாகங்களையும் இணைத்து 'மோட்சப் பிரயாணம்' 'பரதேசியின் மோட்சப் பிரயாணம்' என்னும் தலைப்பிலேயே பல பதிப்புகள் வந்துள்ளன. சிறுவர்களுக்கென இந்நூலின் சுருக்கம் 1937-இல் இராச சூடாமணி என்பவரால் தமிழில் இயற்றப்பட்டது. சென்னை 'கிறித்தவ இலக்கிய சங்கம்' இதனை வெளியிட்டது.

மோட்ச பிரயாணம் மொழிபெயர்ப்பு:

இங்கிலாந்து நாட்டினரான ஜான் பனியன் எழுதிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' (Pilgrims Progress) என்ற ஆங்கில உரைநடை நூலின் தழுவலாக, தமிழில் சாமுவேல் பவுல் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட 'மோட்சப் பிரயாணம்' எனும் உரைநடை ஆக்கத்தை, 'இரட்சணிய யாத்திரிகம்' எனும் தலைசிறந்த தமிழ்க் கிறித்தவக் காப்பியமாகப் படைத்த பெருமை கவியரசர் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளையைச் சாரும். இது தமிழ் மரபும், தமிழ் மணமும், தமிழ்ப் பண்பாடும் ஒருசேரப் பெற்ற தமிழகத் தமிழ்க் கிறித்தவப் படைப்புகளின் மணிமகுடமாகத் திகழ்கின்றது. இது கிறித்தவத் தியான நூல்களுள் பெரும் புகழ் வாய்ந்தது. ஆகவே ஆயிரக்கணக்கான மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. சாமுவேல் பவுல் ஐயர் 1882 ஆம் ஆண்டில் மொழிபெயர்த்துள்ள பதிப்பே இன்றளவும் நிலைத்து நிற்கிறது. இந்நூலுக்கான

முகவுரையில் சாமுவேல் பவுல் ஐயர்,

"இதற்கு முன் இந்தப் புஸ்தகத்தைத் தமிழ்ப்படுத்தினவர்கள் இதில் உள்ளவைகளில் சிலவற்றைக் குறைத்தும் இதனோடு சிலவற்றைக் கூட்டியும் மாற்றியும் அச்சிட்டிருக்கிறோம் என்று சொன்னது போல நான் இப்பொழுது சொல்ல வேண்டியதில்லை. இதில் உள்ளவைகளை நான் குறைத்ததும் இல்லை, மாற்றியதும் இல்லை இதில் ஆதிமுதல் அந்தமட்டுமுள்ள சுவிசேஷப் போதனைகளை மனதில் வற்புறுத்தவும் இனிய நடையால் இதை எழுதி முடிக்க வேண்டும் என்பதே என் பிரதான தீர்மானமாய் இருந்தது.

இப்புஸ்தகத்தின் ஊடே ஊடே வருகிற கவிப்போக்குகள் பெரும்பாலும் தமிழ் ராகங்களில் இயற்றப்பட்டிருக்கின்றன. அக்கவிகள் இலக்கண விதிப்படி இருப்பதைப்பற்றி அவ்வளவாய்க் கவனியாமல், மூலத்தில் இருக்கும் கருத்துகளுக்கு எவ்வளவேனும் பேதப்படலாகாதென்றே கருதிக் கொண்டேன். அங்கங்கு வரும் பாடல்களை அதினதின் ராகப்படியே பாடிக்கொண்டு வாசிக்கப் பிரயாசப்படுவோர், வெறும் வாசிப்பாய் ஏடுகளைத் திருப்பிக்கொண்டு போகிறவர்களை விட அதிக உற்சாகம் அடைவார்கள் என்பதற்கு நம்பிக்கை உண்டு."[8] என்றவாறு நோக்கத்தையும் பயன்பாட்டினையும் விளக்குகிறார்.

அம்முகவுரைப் பகுதியை ஜான் பனியன் தம்முடைய மூலநூலின் முதல்பாகத்தின் முடிவில் வழங்கியிருக்கும் கவிதையின் சாரத்தோடு முடிக்கிறார்.

"வாசிக்கிறவனே, இப்பொழுது என் சொப்பனத்தை உனக்குச் சொல்லிப் போட்டேன். அதின் தாற்பரியத்தை எனக்காவது, உனக்காவது, உன் பிறனுக்காவது விவரிக்கக்கூடுமா என்று பார். ஆனால், தப்பாய் மாத்திரம் தாற்பரியம் பண்ணாதே. தப்பு தாற்பரியம் உனக்கு நன்மையை உண்டாக்குகிறதற்குப் பதிலாகத் தீமையையே உண்டாக்கும். மேலும் என் சொப்பனத்தின் வெளித்தோற்றங்களிலே உன் மனதை வெகுதூரம் செலுத்திவிட வேண்டாம். என் உபமானங்களும், ஒப்பனைகளும் உன்னைச் சிரிக்கப்பண்ணவும், உன் மனதைக் குழப்பிப்போடவும் வேண்டாம். இந்தக் குணத்தைப் பையன்களுக்கும் பைத்தியக்காரருக்கும் விட்டு விட்டு, நான் எழுதும் சங்கதிகளின் சாரத்தை மாத்திரம் பிடித்துக்கொள். திரையை நீக்கிவிட்டு திரைச்சீலைக்குள்ளே பார். என் ஒப்பனைகளை உருட்டிப் புரட்டிப் பரிசோதனை செய். அப்பொழுது உத்தமஇருதயத்தை ஏவும்படியான ஆதாரங்களைக் கண்டடைவாய். அதில் ஏதாவது மாசுகளைக் கண்டுபிடித்தால் அவைகளைத் தூர எறிந்துவிட அஞ்சவேண்டாம். ஆனால் அதிலுள்ள பொன் பொடிகளைக்கூட எறிந்து போடாதே, என் பொன் கல்லோடு கலந்திருந்தால்தான் என்ன? கொட்டையைத் தொட்டுப் பழத்தை எறிந்து விடுவார் இல்லையே. ஆனால் எல்லாவற்றையும் நீ எறிந்து விடுவது உண்டானால், நான் மறுபடியும் ஒரு தரம் சொப்பனங் காணவேண்டியதே அல்லாமல் வேறுவழி இன்னதென்று எனக்கே தெரியவில்லை என்பதே."[9] என்று மொழிபெயர்க்கிறார்.

வாழ்க்கை ஒரு பயணம் என்பதும் அப்பயணத்தின் இலக்கு இறைவன் இருக்கும் இடமே என்பதும் இந்நூலின் ஆழ்ந்த கருத்தாகும். அந்தப் பயணத்தில் எதிர்ப்படும் தடைக்கற்களும், பள்ளம் மேடுகளும் பாத்திரச் சந்திப்புகளின் வாயிலாக வழங்கப்படுகின்றன. பனியன் ஆங்காங்கே மூலத்தில் எளிய கவிதை வரிகளை வழங்குகிறார். அவற்றைப் பவுல் ஐயர் மிகவும் எளிய இனிய தமிழ் நடையில் சந்தங்களும் சேர்த்து மொழிபெயர்த்துள்ளார். இக்காலப் புதுக்கவிதைகளுக்கு அவர் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார். வியாக்கியானி வீடு சேர்தல் என்னும் அதிகாரத்தில் வியாக்கியானியின் நெறிப்படுத்தலையும் ஆசியையும் பெற்றவனாகக் கிறிஸ்தியான் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கும்போது பாடும் பாடல் இவ்வாறு அமைகிறது.

களிக்கும்காட்சி இங்குக் கண்டேன்
கலங்கும் காட்சியும் இங்குக் கண்டேன்
பாடும் காட்சி இங்குக் கண்டேன்
கூடும் காட்சியும் இங்குக் கண்டேன்
சுடரொளிக்காட்சி இங்குக் கண்டேன்
காரிருள் காட்சியும் இங்குக் கண்டேன்
மோட்சக்காட்சி இங்குக் கண்டேன்
நரகக் காட்சியும் இங்குக் கண்டேன்
இந்தக் காட்சிகள் அனைத்துமே
என்னை நிலைவரப்படுத்துமே

இன்பக்காட்சி இங்குக் கண்டேன்
துன்பக்காட்சியும் இங்குக் கண்டேன்
உயரும் காட்சி இங்குக் கண்டேன்
ஒளிக்கும் காட்சியும் இங்குக் கண்டேன்
துதிக்கும் காட்சி இங்குக் கண்டேன்
புலம்பும் காட்சியும் இங்குக் கண்டேன்
எல்லாக் காட்சியும் ஏகமாக
என்னை உணர்த்தின நன்றாக!
அனைத்தும் விளக்கின ஐயாவே !
அனந்த வந்தனம் முனிவரே ! [10]

அவ்வாறே சிலுவை தரிசனத்தைக் கண்ட அளவில் கிறிஸ்தியான் மும்முறை குதித்து ஆனந்தப் பரவசம் பொங்கிப்பாடும் பாடல் வரிகளும் இனிமையாக அமைந்துள்ளன.

பாவபாரஞ் சுமந்தேன்
இதுவரையும் வந்தேன்
இங்கே வருமட்டுமே
பாரம் நீங்கவில்லையே.
இங்கே வந்த நிமிஷம்

***என் பாவ பாரம் நாசம்
இது என்ன இடமோ
பாரம் நீங்கிப்போயிற்றே
இங்கென் கட்டு விடவும்
என் வாழ்வு துவக்கிற்றே
இது என்ன இடமோ
சிலுவையே நீ வாழ்க
சமாதியே நீ வாழ்க
சிலுவையிலே மாண்ட
ஏசுவே வாழ்க ! வாழ்க***[11]

சாமுவேல் பவுல் ஐயர் – மோட்சப் பிரயாணம் – சுருக்கம்

கதைத் தலைவன் கிறிஸ்தியான் மூல நூலில் கூறுவது போல தொடங்குகிறது. பிறபகுதிகளில் நூலாசிரியர் கூறுவதுபோல அமைக்கப் பட்டுள்ளது.

ஒரு நாள் நான் அயர்ந்து தூங்கும்பொழுது ஒரு கனவு கண்டேன். அது ஒரு விசித்திரமான கனவு! அந்தக் கனவைப்பற்றி இப்பொழுது உங்களுக்குக் கூறப்போகிறேன்.

கந்தல் ஆடை அணிந்த ஒரு மனிதனைக் கண்டேன். அவன் கையில் ஒரு பெரிய புத்தகம் இருந்தது. அவன் அந்தப் புத்தகத்தைத் திறந்து வாசிக்கத் துவங்கினான். அதைப் படிக்கும்போதே அவன் கண்கள் கலங்கின. உடல் நடுங்கியது. ஐயோ! நான் என்ன செய்வேன் என்று கதறி அழுதான்.

அவன் தன் வீட்டினுள் நுழைந்தான். அவன் நிலையைக் கண்ட அவன் மனைவியும் பிள்ளைகளும் அருகே வந்தார்கள். அவனால் தனது கவலையை மறைக்க முடியவில்லை. அவர்களை அவன் அருகே அழைத்தான்.

என் அன்பான மனைவியே! என் அருமைப் பிள்ளைகளே, இதோ, என் முதுகிலுள்ள இந்தச் சுமை என்னை அதிகமாக அழுத்துகிறது. அதுமட்டும் இல்லாமல் நாம் வசிக்கும் இந்த நகரம் வானத்திலிருந்து வரும் நெருப்பினால் அழிக்கப்படும் என்று இந்தப் புத்தகத்தில் படித்தேன். நாம் எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டுமே. இல்லாவிட்டால் அழிந்து விடுவோமே என்று அவன் புலம்பினான்.

அவர்களோ அவனுடைய மனநிலை சரியில்லை என்று நினைத்துப் பயந்தார்கள். அப்பொழுது இரவு நேரமாகிவிட்டமையால் அவனைப் படுத்து, உறங்கி ஓய்வெடுக்கும்படி கூறினார்கள். மறுநாள் காலையில் அவன் மனைவியும் பிள்ளைகளும் அவன் படுக்கையருகே வந்து அவன் எப்படியிருக்கிறான் என்று விசாரித்தார்கள். அவனோ இன்னும் மோசமாகிவிட்டேனே என்று புலம்பினான். அவர்கள் வசிக்கும் நகரம்

அழியப்போகிறது என்று கூறி மீண்டும் அவர்களை எச்சரித்தான். அவர்களோ அவன் பேச்சுக்குச் செவிகொடுக்கவில்லை. அவனைக் கேலி செய்யவும், கிண்டல் பண்ணவும் துவங்கினார்கள்.

சிறிது நேரம் பொறுமையுடன் இருந்த அவன் மேலும் அந்த நிந்தனைகளைத் தாங்கமுடியாமல் தன்னுடைய அறைக்குள் சென்றான். தன் கவலையை நீக்குமாறும், தன் குடும்பத்தினர் உண்மை நிலையை அறிந்துகொள்ள உதவுமாறும் ஆண்டவரை நோக்கி ஜெபித்தான்.

அதன் பின்பு, அடிக்கடி அவன் வயல்வெளிக்குச் சென்று அந்தப் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருப்பான். சிலவேளைகளில் ஜெபம் செய்வான். என்றாலும் அவன் கவலை நீங்கிவிடவில்லை. நான் இரட்சிக்கப்படுவதற்கு அந்த அழிவிலிருந்து தப்புவதற்கு என்ன செய்ய வேண்டும்?[12] என்று அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தான்.

நற்செய்தியாளரைச் சந்தித்தல்

ஒரு நாள் அவன் அழுது கொண்டிருந்தபோது நற்செய்தியாளர் என்ற ஒருவர் அவனருகே வந்தார். ஏனப்பா நீ அழுகிறாய் என்று அன்புடன் கேட்டார்.

ஐயா, நான் ஒருநாள் மரித்துப்போவேன் என்றும் அதன்பின் என் தவறுகளுக்காகத் தண்டிக்கப்படுவேன் என்றும் இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. அந்தத் தண்டனைக்குப் பயப்படுவதால் என்னால் சாவைப் பற்றி நினைக்க முடியவில்லை என்றான் கிறிஸ்தியான்.

இந்த உலகத்தில் தான் இவ்வளவு துன்பங்களும் தொல்லைகளும் இருக்கின்றனவே? பிறகு ஏன் நீ சாவைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? என்று கேட்டார் நற்செய்தியாளர்.

ஐயோ, இதோ என் முதுகில் இருக்கிறதே என் பாவச்சுமை. நான் இறந்தபிறகு இந்தச் சுமை என்னை அழுத்தி நரகத்திற்கே கொண்டுபோய்விடும் என்று நினைக்கிறேன் என்றான் கிறிஸ்தியான் கவலையுடன்,

நற்செய்தியாளர் தன் கையை நீட்டி வெகுதூரத்தில் சுட்டிக்காட்டி, அதோ வெகு தூரத்தில் ஒரு இடுக்கமான வாசல் தெரிகிறதா? என்று கேட்டார். தெரியவில்லையே ஐயா! என்றான் கிறிஸ்தியான் கவலையுடன். அப்படியானால் ஒரு பிரகாசமான ஒளியாவது தெரிகிறதா? என்று கேட்டார் நற்செய்திளார். ஆம் ஐயா, வெகு தூரத்தில் ஓர் ஒளி தெரிகிறது![13] என்றான் கிறிஸ்தியான்.

நீ அந்த ஒளியை நோக்கி நேராக நடந்துபோ. அருகே நெருங்கும்போது அந்த இடுக்கமான வாசல் தெரியும். அந்த வாசல் கதவைத் தட்டு. அடுத்து நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே சொல்லப்படும் என்று கூறி வழியனுப்பினார் நற்செய்தியாளர்.

பயணம் துவங்குதல்

எனது கனவில் அவன் அந்த ஒளியை நோக்கி வேகமாக ஓடுவதைக் கண்டேன். அவன் மனைவியும், பிள்ளைகளும் அவன் பின்னால் ஓடி அவனை வீடு திரும்பும்படி கெஞ்சினார்கள். கதறினார்கள்! ஆனால் அவனோ தன் காதுகளைப் பொத்திக்கொண்டு 'நித்திய வாழ்வு, நித்திய வாழ்வு' என்று கத்தியபடி அந்த ஒளியை நோக்கி ஓடினான். திரும்பியே பார்க்கவில்லை.

கிறிஸ்தியானும் இளகிய நெஞ்சனும்

கிறிஸ்தியானும் இளகிய நெஞ்சனும் பேசியவாறே அந்தச் சமவெளியில் நடந்து செல்வதை என் கனவில் கண்டேன். இளகிய நெஞ்சனே நல்லதுதான் நீ என்னுடன் வந்தாய். நாம் போகும் இடத்தை அடைய முடியாவிட்டால் நமக்குக் கிடைக்கப் போகும் நரக தண்டனையைப் பற்றி அறிந்திருந்தால் கடின நெஞ்சன் இவ்வாறு திரும்பிப் போயிருக்கமாட்டான். பாவம்! என்றான் கிறிஸ்தியான்.

நற்செய்தியாளருடன் இரண்டாம் சந்திப்பு

அப்போது அந்த வழியே நற்செய்தியார் வருவதைக் கண்டான் கிறிஸ்தியான். தான் செய்த தவற்றை உணர்ந்து அவன் வெட்கித் தலை குனிந்தான்! அவனைக் கண்டவுடன், கிறிஸ்தியானே, நீ இங்கே என்ன செய்கிறாய்? என்று கோபத்துடன் கேட்டார் நற்செய்தியாளர். ஒன்றுமே பதில்கூற முடியாமல் தலைகுனிந்தவாறே நின்றான் கிறிஸ்தியான். நான்தான் உன்னை இடுக்கமான வாசலை நோக்கிச் செல்லும் பாதையில் போகச் சொன்னேனே! நீ எப்படி வழிதவறி இங்கே வந்தாய்?[14] என்று மீண்டும் கேட்டார் நற்செய்தியார்.

கிறிஸ்தியான் முகத்தை மூடிக்கொண்டு அழுதல்

ஐயா, நான் அவனுடைய முட்டாள்தனமான யோசனையைப் பின்பற்றிச் சரியான பாதையிலிருந்து விலகி வந்துவிட்டேனே! என்று கதறினான். தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சினான்! கவலைப்படாதே, கிறிஸ்தியான். நீ உண்மையாகவே உன் தவறுகளை உணர்ந்ததால் ஆண்டவர் உன்னை நிச்சயமாகவே மன்னிப்பார். வா ஜெபம் செய்வோம் என்று நற்செய்தியார் கூறவே இருவருமாகவே முழங்காற்படியிட்டனர். கிறிஸ்தியான் தனது தவறுகளை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டான்.

அதன்பிறகு நற்செய்தியாளர் அவன் செல்ல வேண்டிய சரியான பாதையைச் சுட்டிக்காட்டி, அவனை அன்போடு வழியனுப்பி வைத்தார். கிறிஸ்தியான் அங்குமிங்கும் பார்க்காமல் வேகமாக நடந்து சென்றான். எதிரே வருபவர்களிடம் அவன் பேச்சுக் கொடுக்கவேயில்லை! சரியான பாதையை அடைந்தவுடன் இன்னும் வேகமாக நடக்கத் துவங்கினான்!

ஐயா, நான் அழிவு நகரத்திலிருந்து வரும் ஒரு பாவி. பெயர் கிறிஸ்தியான். வருங்கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள நான் சீயோன் மலைக்குச் செல்ல

வேண்டும். அதற்கு இந்த வழியாகத்தானே போக வேண்டும்? என்று கேட்டான். ஆமாம், உள்ளே வா என்று கூறிய தயாளன் கதவை அகலமாகத் திறந்தார். கிறிஸ்தியானின் கையை வேகமாகப் பற்றி உள்ளே இழுத்தார். கதவை மீண்டும் படாரென்று மூடித் தாளிட்டார்.

கோட்டை வாசலில் கிறிஸ்தியான்

ஏன் ஐயா, என்னை இழுத்தீர்கள்? என்று வியப்புடன் கேட்டான் கிறிஸ்தியான். இந்த வாசலுக்குச் சற்றுத் தொலைவில்தான் சாத்தானின் கோட்டை இருக்கிறது. அவன் இங்கே நுழைபவர்களைக் கண்காணித்து, அம்பெய்து கொல்லத் தயாராக இருக்கிறான். சிலர் அவ்வாறு அவன் அம்பால் குத்தப்பட்டு இந்த வாசலினுள் நுழையுமுன்பே இறந்து போயிருக்கிறார்கள். அதனால்தான் உன்னை அவசரமாக உள்ளே இழுத்தேன் என்று விளக்கிய தயாளன், அதுசரி உனக்கு இந்த வழியைக் காட்டியது யார்? என்று கேட்டார்.

உலக நியதிகளை அறிந்துகொள்ளுதல்

கிறிஸ்தியான் பொருள்கூறுபவரின் வீட்டை அடைந்தான். கதவைத் தட்டினான். யார் அது? என்ற குரல் கேட்டது. நான்தான் கிறிஸ்தியான். தயாளன் என்னை அனுப்பினார் பொருள்கூறுபவர் என்பவரைப் பார்க்க வேண்டும் என்றான். கதவு திறந்தது. பொருள்கூறுபவர் அவனை அன்புடன் அழைத்துச் சென்றார். கிறிஸ்தியானே வா, உனக்குப் பயனளிக்கக்கூடிய அநேக காரியங்களைக் காட்டுகிறேன் என்று கூறிய பொருள்கூறுபவர் அவனை ஒரு தனி அறைக்குக் கூட்டிச் சென்றார்.

சிலுவையைத் தரிசித்தல்

இறைவனைப் பாடிக்கொண்டு, மகிழ்ச்சியோடு நடந்து சென்றான் கிறிஸ்தியான். அவன் சென்ற பாதையின் இருபுறத்திலும் இரட்சிப்பு என்ற சுவர்கள் இருப்பதை நான் என் கனவில் கண்டேன். உற்சாகமடைந்தவனாக முதுகுச் சுமையோடு ஓடத் துவங்கினான் கிறிஸ்தியான். ஓர் உயரமான இடத்தை அடைந்தான் அவன். அங்கே மரத்தாலான ஒரு சிலுவை நிறுத்தப்பட்டிருந்தது! அதனருகே காலியான ஒரு கல்லறை! கிறிஸ்தியான் சிலுவையின் அருகே வந்தவுடன் அவன் முதுகிலிருந்த சுமை படாரென அறுந்து கீழே விழுந்தது! உருண்டுபோய் திறந்திருந்த கல்லறைக்குள் சென்று மறைந்துவிட்டது அதன் பிறகு நான் அந்தச் சுமையைப் பார்க்கவேயில்லை.

கடினமான மலைப் பகுதியைக் கடத்தல்

மூவரும் கடினமலை என்ற மலையின் அடிவாரத்தை அடைந்தார்கள். அங்கே ஒரு நீரோடை காணப்பட்டது. அவர்கள் சென்ற பாதையின் இடதுபுறமும், வலதுபுறமும் இரண்டு பாதைகள் பிரிந்துசென்றன.

ஆனால் இடுக்கமான பாதையோ அவற்றின் நடுவே மலையுச்சியை நோக்கிச் சென்றது! கிறிஸ்தியான் அந்த நீரோடைக்குச் சென்று தெளிந்த நீரைப் பருகினான். களைப்பு நீங்கியவனாக இடுக்கமான பாதையின் வழியாக மலையேறத் துவங்கினான்.

இடுக்கமான பாதை மலையேறும் கடினமான பாதையாக இருப்பதைக் கண்ட சம்பிரதாயன், வெளிவேசக்காரன் இருவரும் மற்ற இரண்டு பாதைகளிலும் தனித்தனியே பிரிந்து சென்றார்கள். இடதுபுறம் அபாயப் பாதையில் சென்றவன் அடர்ந்த காட்டினுள் வழிதப்பி அலைந்தான்! வலதுபுறம் அழிவின் பாதையில் சென்றவன் செங்குத்தான பாறையிலிருந்து விழுந்து உயிர் துறந்தான்! இடுக்கமான பாதை வழியே மிகக் கடினத்துடன் பாதையேறத் துவங்கினான் கிறிஸ்தியான். போகப்போகப் பாதை செங்குத்தானபடியால் தவழ்ந்துபடி ஏற நேரிட்டது.

பாதி வழியில் பயணிகளுக்காக ஆண்டவர் அமைத்த இளைப்பாறும் ஸ்தலம் இருந்தது. கிறிஸ்தியான் களைப்போடு அங்குச் சென்று அமர்ந்தான். சுருளை எடுத்துப் படிக்கத் துவங்கினான். அவன் கண்களைத் தூக்கம் தழுவியது. சுருள் கையிலிருந்து நழுவியதுகூடத் தெரியாமல் ஆழ்ந்து உறங்கிவிட்டான்! அப்போது ஒருவர் வந்து, **"சோம்பேறியே நீ எறும்பினிடத்தில் போய், அதன் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்"**[15] என்று கூறி அவனை எழுப்பிவிட்டார்.

திடுக்கிட்டு விழித்த கிறிஸ்தியான், மலையுச்சியை அடையும்வரை விரைந்து பயணம் செய்தான்! அங்கே இருவர் அவனை நோக்கி எதிர்த் திசையில் வருவதைக் கண்டு வியப்படைந்தான். கோழை, அவநம்பிக்கை என்ற அந்த இருவரையும் பார்த்து, ஏன் ஐயா? என்ன ஆயிற்று? என்று கேட்டான். போகும் வழியில் சிங்கத்தைப் பார்த்தோம். இன்னும் போகப்போக அபாயம்தான் என்று எண்ணித் திரும்பிவிட்டோம் நடுங்கும் குரலில் கூறினார்கள் அந்த இருவரும். நீங்கள் எனக்கும் பயமூட்டிவிட்டீர்கள். நான் இப்போது என்ன செய்வது? திருப்பிப் போவதென்றால் நிச்சயமாக மரணதண்டனைதான் கிடைக்கும். நேரே சென்றாலும் மரணத்துக்கேதுவான அபாயங்கள் என்று ஒரு கணம் தயங்கிய கிறிஸ்தியான், இல்லை... இல்லை.. நான் நேராகத்தான் செல்வேன். பாதையின் முடிவில் எனக்கு நித்திய வாழ்வு கிடைக்குமே! என்று கூறியபடி உற்சாகத்தோடு முன்னே செல்லத் துவங்கினான். கோழையும் அவநம்பிக்கையும் மலையிலிருந்து கீழிறங்கி ஓடிவிட்டார்கள்.

சுருளைத் தவறவிடுதல்

மலையைக் கடந்துவிட்ட கிறிஸ்தியான் சுருளில் கூறப்பட்டிருக்கும் ஆறுதலான வார்த்தைகளைப் படிக்கலாம் என்ற எண்ணத்துடன் பையினுள் கையைவிட்டான்! திடுக்கிட்டு நின்றான்! சுருளைக் காணாது கலக்கமடைந்தான்! தான் உறங்கும்போதுதான் அதைக் கீழே விட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு

வந்தான். முழங்காற்படியிட்டு ஆண்டவரிடம் தனது கவனக் குறைவுக்காக மன்னிப்புக் கேட்டான்.

இளைப்பாறும் தலத்தை அடைந்தவுடன் சுற்றிலும் தேடினான். சுருளைக் கண்டவுடன் அதை எடுத்துப் பத்திரமாகப் பையினுள் வைத்துக்கொண்டான். அப்போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

வேகவேகமாக மீண்டும் மலைமீது ஏறினான் கிறிஸ்தியான். ஆனால் அவன் மலையுச்சியை அடைவதற்குள் இருட்டிவிட்டது. கோழையும், அவநம்பிக்கையும் சிங்கங்களைப் பற்றிக் கூறியிருந்தது அவன் நினைவில் எழுந்தது. [16] மேலும்,

அலங்கார மாளிகை

விசுவாசத்தோடு முன்னேறிச் சென்ற கிறிஸ்தியான் அலங்கார மாளிகை என்ற அழகான அரண்மனையைக் கண்டான். இரவு அங்கே தங்கிச் செல்லலாம் என்ற நம்பிக்கையோடு மாளிகையை அடைந்தான்.

அருகே செல்லச்செல்ல பாதை மிகவும் குறுகலாகியது! வாசலின் அருகே இரண்டு சிங்கங்கள் படுத்திருப்பதைக்கண்டு தயங்கினான். கோழையும் அவநம்பிக்கையும் இந்தச் சிங்கங்களைக் கண்டுதான் பயந்து ஓடினார்கள்போலும்! என்று நினைத்தான் கிறிஸ்தியான்.

நடுக்கத்துடனே கிறிஸ்தியான் மெதுவாக முன்னேறிச் செல்வதை நான் என் கனவில் கண்டேன். சிங்கங்கள் கர்ஜித்தன! ஆனால் கிறிஸ்தியானை ஒன்றுமே செய்யவில்லை. காவல்காரனிடம் சென்று கிறிஸ்தியான் ஐயா, நான் இன்றிரவு இங்கே தங்கலாமா? என்று கேட்டான்.

பயணிகள் பாதுகாப்பாகத் தங்குவதற்காகத்தான் இந்த மலையின் எஜமானர் இந்த மாளிகையைக் கட்டியுள்ளார். நீ எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேட்டான் காவல்காரன்.

அழிவு நகரத்திலிருந்து வருகிறேன். நித்திய நகரமான மோட்சத்தை நோக்கிச் செல்கிறேன் என்றான் கிறிஸ்தியான். உன் பெயர் என்ன? ஏன் இவ்வளவு இருட்டிய பிறகு வருகிறாய்? என்று கேட்டான் காவல்காரன். முன்பு என் பெயர் கிருபையற்றோன். இப்போதோ என் பெயர் கிறிஸ்தியான் என்று கூறி அவன் தான் இளைப்பாறும் தலத்தில் சுருளைத் தொலைத்து விட்டது பற்றியும், அதைத் தேடி வருவதற்காகத் திரும்பிப்போய் வர இவ்வளவு தாமதமாகிவிட்டது என்பதையும் எடுத்துரைத்தான். இதைக் கேட்டவுடன் விழித்திருப்போன் ஒரு மணியை அடித்தான். மணியோசை கேட்டவுடன் விவேகம் என்ற பெயருடைய ஒரு அழகிய பெண்மணி கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

முன்யோசனை, பக்தி, கருணை என்ற தன்னுடைய சகோதரிகளையும் மற்றவர்களையும் அவள் கிறிஸ்தியானுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அவர்கள் அனைவரும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, வாரும்! என்று

வாழ்த்துக்கூறி அவனை வரவேற்றார்கள்.

விவேகமும் அவளுடைய சகோதரிகளும் நீண்ட நேரம் கிறிஸ்தியானோடு ஆண்டவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். உணவருந்திய பின்பு அவரவர் அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார்கள். சமாதானம் என்ற மேலறை கிறிஸ்தியானுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. விடியும்வரை மன அமைதியுடன் உறங்கினான் கிறிஸ்தியான்.

சகோதரிகள் நால்வரும் மலையடிவாரம் வரை அவனோடு வருவதாகக் கூறி உடன் வந்தார்கள். மீட்பரைப் பற்றிப் பேசிக்கொண்டே சென்றார்கள். என்ன இது? மலையின்மீது ஏறுவதுதான் கடினமாக இருந்ததென்றால் இறங்குவது இன்னும் அபாயமாக இருக்கும் போலிருக்கிறதே என்றான் கிறிஸ்தியான். ஆமாம், ஏனென்றால் இந்த மலைச்சரிவு தாழ்மையின் பள்ளத்தாக்கை நோக்கிச் செல்கிறது. வழியில் ஏதேனும் அபாயங்கள் நேரிட வாய்ப்புண்டு. அதனால் தான் நாங்கள் உன்னுடன் வருகிறோம் என்றாள் விவேகம்.[17]

அனைவருமாக மலையடிவாரத்தை அடைந்தார்கள். சகோதரிகள் கிறிஸ்தியானிடம் ஒரு திராட்சை இரப்புட்டு, ஒரு ரொட்டி, உலர்ந்த திராட்சை இவற்றை உணவுக்காகக் கொடுத்துவிட்டு விடைபெற்றார்கள். நன்றியோடு இவற்றைப் பெற்றுக்கொண்ட கிறிஸ்தியான் தன்னந்தனியாகத் தாழ்மையின் பள்ளத்தாக்கில் நடக்கத் துவங்கினான்.

அப்பொல்லியோனோடு சண்டையிடுதல்

பள்ளத்தாக்கில் செல்லும்போது அப்பொல்லியோன் என்ற கொடிய பிசாசானவன் அவனுக்கு எதிரே வந்தான். திடுக்கிட்டு நின்ற கிறிஸ்தியான் முன்னே போவதா பின்வாங்குவதா என்று ஒருகணம் தயங்கினான். பின்பு விசுவாசத்தோடு கேடயத்தைப் பிடித்தவனாய், கையில் பட்டயத்தை எடுத்துக்கொண்டு முன்னே சென்றான். அப்பொல்லியோன் மிகவும் கொடூரமான தோற்றமுடையவன்! அவன் உடலெங்கும் மீனைப்போல செதில்கள் இருந்தன! கரடியைப் போன்ற பாதங்களையும், பறவையைப் போன்ற இறக்கைகளையும் கொண்டிருந்தான். சிங்கத்தின் வாயைப் போன்ற அவன் வாயிலிருந்து நெருப்பும், புகையும் புறப்பட்டு வந்தன! அழிவு நகரத்தின் அரசன் அவன்! தன்னுடைய நகரத்திலிருந்து தப்பிச் செல்லும் கிறிஸ்தியானை எப்படியாவது கொன்றுபோட வேண்டும் என்பதே அவன் எண்ணம். நில்லப்பா நில். நீ என்னுடைய நகரத்தைச் சேர்ந்தவன். எனக்கு ஊழியம் செய்ய வேண்டியவன். என்னை விட்டுவிட்டு எங்கே போகிறாய்? என்று கோபத்துடன் கேட்டான் அப்பொல்லியான்.

நாம் உமது நகரத்தில் பிறந்தவன் என்பது உண்மை தான். ஆனால் உமக்கு ஊழியம் செய்தால் எனக்கு என்ன கூலி கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்டேன். பாவத்தின் சம்பளம் மரணம் அல்லவா? அதனால்தான் நான் இப்போது இராஜாதி ராஜாவின் ஊழியக்காரனாகிவிட்டேன். அவருடைய சம்பளம்,

அவர் உறவு அனைத்தும் உன்னைவிட மேலானவை. என்னைத் தடுக்காதே. நான் அவரையே பின்பற்றுவேன் என்று திடமாகக் கூறினான் கிறிஸ்தியான்.

இதைக் கேட்ட அப்பொல்லியோன் கடும் கோபம் கொண்டான். ஓர் ஈட்டியை எடுத்து கிறிஸ்தியானின் மார்புக்கு நேராக வீசியெறிந்தான். ஆனால் அவனோ தனது கேடகத்தால் அதைச் சுலபமாகத் தடுத்து வீழ்த்திவிட்டான். ஆவியின் பட்டயத்தினால் அப்பொல்லியோனைத் தாக்கத் தொடங்கினான் கிறிஸ்தியான்.

கிறிஸ்தியானை வெட்டி வீழ்த்தும்படி அருகே ஓடி வந்தான் அப்பொல்லியோன். தனது பலத்தையெல்லாம் திரட்டி எழுந்த கிறிஸ்தியான் வாளை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டான்.

என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோசப்படாதே, நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்[18] என்று ஆவேசமாகக் கூறியபடி பாய்ந்த கிறிஸ்தியான் அப்பொல்லியோனின் மார்பில் தனது வாளைச் சொருகினான். படுகாயப்பட்ட அவன் புறமுதுகு காட்டியபடி ஓடிவிட்டான். கிறிஸ்தியான் அதன்பிறகு அவனைப் பார்க்கவேயில்லை.

மரண இருளின் பள்ளத்தாக்கில் கிறிஸ்தியான்

கிறிஸ்தியான் மரண இருளின் பள்ளத்தாக்கை அடைவதை நான் என் கனவில் கண்டேன். அப்போது இருவர் அவனுக்கு எதிராக ஓடிவந்தார்கள்.

ஐயா, நேராகப் போகாதீர்கள். இந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் ஒரே இருளாக இருக்கிறது. கொடிய மிருகங்களையும், விகாரமான ஜந்துக்களையும் அங்கே கண்டோம். எங்கும் வேதனையில் துடிப்பவர்களின் கூக்குரல்தான் கேட்கிறது என்று கூறி அவனைத் தடுத்தார்கள். ஆனால் கிறிஸ்தியானோ, நான் செல்லவேண்டிய வழி இதுதான். எனவே திடமனதோடு இதில்தான் செல்வேன் என்று கூறியபடி நேரே சென்றான்.

உண்மையானவனின் தொடர்பும் அவனுடைய அனுபவங்களும்

எனக்கும் வழியில் எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டன என்றான் உண்மையானவன். அப்படியா? எங்கே அதைப்பற்றிச் சொல்லுங்கள் என்று ஆர்வத்தோடு கேட்டான் கிறஸ்தியான். சொல்கிறேன் கேள். நீங்கள் விழுந்ததுபோல நான் அவநம்பிக்கைச் சேற்றில் விழாமல் தப்பிவிட்டேன். ஆனால் கடினமலையின் அடிவாரத்தில் வரும்போது வஞ்சமாநகரைச் சேர்ந்த ஆதாம் என்பவனைச் சந்தித்தேன். அவன் என்னைத் தன்னுடைய வீட்டுக்கு வரும்படியும், எல்லா உலக இன்பங்களையும் தருவதாகவும் ஆசை காட்டினான். முதலில் ஆசைப்பட்ட நான் பிறகு என்னுடைய தவற்றை உணர்ந்தேன். அவனுடைய கைகளிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு ஓடிவந்து விட்டேன் என்று பெருமூச்சுவிட்டான் உண்மையானவன். நல்லதாகப் போயிற்று என்றான் கிறிஸ்தியான். இவ்வாறு அவர்கள் பேசியபடி சென்றபொழுது நற்செய்தியாளரைச் சந்தித்தார்கள். கிறிஸ்தியான் மகிழ்ச்சி அடைந்தான். நற்செய்தியாளர் அன்போடு

அவர்களைப்பற்றி விசாரித்தார். இருவரும் நடந்தவை அனைத்தையும் ஒன்றுவிடாமல் விவரித்தார்கள்.[19] எனப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

மாயாபுரியில் பயணிகள்

கிறிஸ்தியான், உண்மையானவன் இருவரும் மாயாபுரியை அடைவதை நான் என் கனவில் கண்டேன். மாயாபுரியில் மாயக் கண்காட்சி என்ற கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. எங்கும் மக்கள் கூட்டம்.

இந்தக் கண்காட்சி எப்போதுமே தொடர்ந்து நடைபெற்று வரும் கண்காட்சியாகும். பெயெல்செபூல், அப்பொல்லியோன், லேகியோன் என்ற சாத்தானின் கூட்டத்தினரே இந்தக் கண்காட்சியை நடத்திவந்தார்கள். மோட்சத்துக்குச் செல்லும் பயணிகளைக் கவர்ந்திழுக்கவே அந்தப் பாதையில் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டது. இங்கு உலகப்பிரகாரமான புகழ், மாம்சத்துக்கடுத்த இன்பங்கள் இவற்றை விலைகொடுத்து வாங்க முடியும்! சூதாட்டம், நடனங்கள், போக்கிரிகளின் சபை இவை எப்போதுமே நடந்துகொண்டிருக்கும்.

கிறிஸ்தியானும், உண்மையானவனும் கண்காட்சிக்குள் நுழைந்தவுடன் எல்லோரும் அவர்களை வெறித்துப் பார்த்தார்கள். அவர்களுடைய உடை வித்தியாசமாயிருந்தது. பயணிகள் இருவரும் கானானின் மொழியைப் பேசியதைக் கேட்ட மற்றவர்கள் அவர்களைக் கேலி செய்தார்கள்.

கண்காட்சியில் இருந்தவர்கள் அனைவரும் அவர்களைக் கேலிசெய்து காறித் துப்பினார்கள். ஆனால் பயணிகள் இருவருமே ஒன்றுமே பதில் பேசாமல் அமைதியாக இருந்தார்கள். இதற்கிடையே பயணிகளை என்ன செய்யலாம் என்ற பதில் மற்றவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது, விவாதம் வலுத்தது! பின்னர் அடிதடியில் சென்று முடிந்தது. அவர்களே ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள். இந்தக் கலகத்துக்குக் காரணம் கிறிஸ்தியானும், உண்மையானவனுமே என்று குற்றம் சாட்டி அவர்களைத் தலைவனின் முன்னே அழைத்துச் சென்றார்கள்.[20]

முதலில் இவர்களைப் பிரம்பினால் அடித்து சங்கிலியால் கட்டுங்கள் என்று தலைவன் கட்டளையிட்டான். அப்படியே செய்யப்பட்டது. கிறிஸ்தியானும் உண்மையானவனும் சகித்துக் கொள்வதைப் பார்த்தவுடன் கூட்டத்தில் சிலர் அவர்கள் மீது இரக்கப்பட்டு அவர்களை விடுதலை செய்யும்படி கோரினார்கள். இதைக் கண்ட எதிர்த் தரப்பினர் அவர்களைக் கண்டிப்பாகக் கொன்றுபோட வேண்டும் என்று கூச்சலிடத் துவங்கிவிட்டார்கள். எனவே தலைவன் அவர்களை நீதிபதியிடம் அனுப்பினான்.

அவனுக்குக் கொலைத் தண்டனை அளிக்க வேண்டும் என்று கத்தினார்கள் அநேகர். நன்மையை வெறுப்பவன் என்ற நீதிபதி உண்மையானவனுக்கு மரண தண்டனை அளித்துத் தீர்ப்புக் கூறிவிட்டான்.

கிறிஸ்தியான் சிறையில் அடைக்கப்படுதல்

காவலாளிகள் உண்மையானவனைச் சாட்டையினால் அடித்தார்கள். கூடியிருந்தவர்கள் அவன்மீது கற்களை எறிந்தார்கள். சிலர் வாளினால் அவன் உடலைத் துளைத்தார்கள். இவ்வாறு சித்தரவதை செய்தபின்பு ஒரு கம்பத்தில் அவனைக் கட்டி நெருப்பு மூட்டிவிட்டார்கள். உண்மையானவன் ஆண்டவரைத் துதித்தபடியே உயிரை விட்டான். உடனே அவன் ஒரு பறக்கும் இரதத்தில் ஏற்றப்பட்டு நேரடியாக மோட்சத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதை நான் என் கனவில் கண்டேன். கிறிஸ்தியான் சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் சில நாட்களுக்குள்ளாக அவன் தப்பிச் செல்வதற்கு ஆண்டவர் கிருபை செய்தார்.[21]

கிறிஸ்தியான் மாயாபுரியைவிட்டு வெளியேறும்போது நம்பிக்கை என்ற பெயரையுடைய ஒருவன் அவனுடன் வந்து சேர்ந்துகொண்டான். கிறிஸ்தியான், உண்மையானவன் இவர்களுடைய திட விசுவாசத்தைக் கண்டு மனம் திரும்பியவன் அவன். இருவருமாக மோட்சத்தை நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

சந்தேகக் கோட்டையில் பயணிகள்

கிறிஸ்தியானும், நம்பிக்கையும் நடந்து செல்லும் வழியில் ஒரு அழகான ஆற்றின் அருகே வந்து சேர்ந்தார்கள். அளவுகடந்த மகிழ்ச்சியுடன் ஆற்றின் தெளிந்த நீரைப் பருகினார்கள். கரையிலிருந்த மரங்களிலிருந்து பழங்களைப் பறித்து உண்டார்கள். பச்சைப்பசேலென்ற புல்வெளியில் படுத்து உறங்கினார்கள்.

விழித்து எழுந்தவுடன் கற்கள் நிறைந்த பாதையில் பயணத்தைத் தொடர்ந்தார்கள். நீண்ட தூரம் நடந்து வந்ததால் கால்கள் வலியெடுத்தது. கற்பாதையில் நடப்பது கடினமாக இருந்தது. அப்போது அவர்கள் செல்லவேண்டிய பாதைக்கு அருகில் புல்வெளிப் பாதை என்ற பசும்புற்களால் நிறைந்த பாதையைக் கண்டார்கள். வெகுதூரம் வரை அந்தப் பாதை கற்பாதைக்கு இணையாகவே செல்வதுபோலத் தென்பட்டது.

ஐயா, நாங்கள் மோட்சத்துக்குச் செல்லும் பயணிகள், வழிதவறி இங்கு வந்துவிட்டோம். தயவு செய்து எங்களை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சினான் கிறிஸ்தியான். ஆனால் அரக்கனோ அவர்களைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் கோட்டையிலுள்ள பாதாளச் சிறையில் அடைத்துவிட்டான். மூன்று நாட்கள் இரவும், பகலும் அவர்களைத் திரும்பியே பார்க்கவில்லை. உண்ண உணவு கிடையாது. குடிக்கத் தண்ணீர்கூடக் கொடுக்கவில்லை. பாறாங்கல் தரையில், பாதாள அறையின் துர்நாற்றத்தைச் சகித்துக்கொண்டு சோர்வோடு கிடந்தார்கள் இருவரும்.

அரக்கன் தனது மனைவியிடம் இவர்களைப் பற்றிக் கூறினான். அவிசுவாசம் என்ற அவனது மனைவி மிகவும் கொடூரமானவள். கொஞ்சம்கூட இரக்கம் காட்டாமல் அவர்களை நன்றாக அடிக்கும்படி ஆலோசனை கூறினாள்.

பாதாளச் சிறைக்குச் சென்ற அரக்கன் தனது குறுந்தடியைக் கொண்டு அவர்களை நையப் புடைத்தான். ஆனால் அசையாமல் விழுந்துகிடந்த இருவரும் ஒன்றுமே பதில் பேசவில்லை. மறுநாள் இரவு அவர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்பதை அறிந்த அவிசுவாசம் தனது கணவனிடம் அவர்களைத் தற்கொலை செய்யத் தூண்டுமாறு யோசனை கூறினாள். பாதாளச் சிறைக்குச் சென்ற அரக்கன், நீங்கள் இனித் தப்பிச் செல்ல முடியாது. உங்களை நீங்களே மாய்த்துக்கொள்வதுதான் ஒரே வழி என்று பயங்காட்டினான். ஆனால் கிறிஸ்தியானும், நம்பிக்கையும் மனம் தளர்ந்து விடவில்லை. ஒருவரையொருவர் தேற்றிக்கொண்டு மேலும் ஒரு நாளைக் கழித்தார்கள்.

இதைக் கேள்விப்பட்ட அவிசுவாசம் தனது கணவனை அழைத்து, நீர் இதற்குமுன் இங்குக் கொல்லப்பட்டவர்களின் எலும்புகளைக் காட்டிப் பயமுறுத்தும் என்று கேட்டுக்கொண்டாள். அரக்கன் அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று ஏற்கனவே அங்கே கொல்லப்பட்டவர்களின் மண்டை ஓடுகளையும், எலும்புகளையும் காட்டினான். அந்தக் கொடூரமான காட்சியைக் கண்டு பயந்தாலும், இருவரும் தற்கொலை செய்துகொள்ள மறுத்துவிட்டார்கள். அரக்கன் அவர்களை மீண்டும் பாதாளச் சிறையில் அடைத்தான்.

கிறிஸ்தியானும் நம்பிக்கையும் தப்பி ஓடுவதைக் கண்ட அரக்கன் அவர்களை விரட்டினான். ஆனாலும் அவனுக்குத் திடீரென மூட்டுவலியோடு பழைய வலிப்புநோயும் வந்துவிட்டது. எனவே, ஓட முடியாமல் கீழே விழுந்து விட்டான். பயணிகள் இருவரும் மீண்டும் சரியான பாதைக்கு வந்து சேர்ந்தார்கள்.

மகிழ்ச்சி மலையில் பயணிகள்

அழகான தோட்டங்கள் நிறைந்த மகிழ்ச்சி மலைக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள். பழ மரங்களிலிருந்து பழங்களைப் பறித்து உண்டார்கள். மர நிழலில் அமர்ந்து இளைப்பாறினார்கள்.

மலையுச்சியில் அறிவு, ஞானம், கவனம், கபடற்றோர் என்ற நால்வர் தங்கள் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். பயணிகளைக் கண்டவுடன் அவர்களை அன்போடு வரவேற்றார்கள். உணவளித்து உபசரித்தார்கள். கிறிஸ்தியானும், நம்பிக்கையும் தங்கள் அனுபவங்களை அவர்களுக்கு விவரமாகக் கூறினார்கள்.

மறுநாள் காலையில் எச்சரிக்கை என்ற பெயரையுடைய குன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து பார்த்தபோது சற்றுத் தொலைவில் கண்பார்வையற்ற சிலர் கல்லறைகளுக்கு நடுவே தட்டுத் தடுமாறியவாறு சுற்றி வருவது தெரிந்தது.

மேய்ப்பர்கள் பயணிகள் இருவரையும் மலையின் அடியிலிருந்து ஒரு கதவண்டை அழைத்துச் சென்றார்கள். கதவைத் திறந்து உள்ளே பார்க்கும்படி கேட்டுக்கொண்டார்கள். உள்ளே மிக ஆழமான பள்ளம் காணப்பட்டது.

கருமைநிறப் புகை வெளிக்கிளம்பியது. நெருப்பு எரிகிற இரைச்சலும் கேட்டது! வேதனையில் புலம்புகிறவர்களின் கூக்குரல் எழுந்தது! இது எந்த இடம்? என்று கேட்டான் கிறிஸ்தியான். இது நரகத்திற்குப் போகும் ஒரு குறுக்கு வழி, பாசாங்கு செய்பவர்களின் வாசல் என்று இதற்குப் பெயர் என்று விளக்கினார்கள் மேய்ப்பர்கள்.

பிறகு பயணிகளைத் தெளிவு[22] என்ற மலைமுகட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். ஒரு தொலைநோக்கியை அவர்கள் கையில் கொடுத்து, இதோ இதன்மூலம் பார்த்தால் மோட்சத்தின் வாசல் தெரியும் என்று கூறினார்கள். ஆனால் பதட்டத்தின் காரணமாகப் பயணிகளின் கை ஆடியது. அதனால் அவர்களால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

பயணிகள் மேய்ப்பவர்களிடமிருந்து விடைபெறும் வேளை வந்தது. மேய்ப்பர்களில் ஒருவன் அவர்கள் இனிச் செல்ல வேண்டிய பாதையின் வரைபடம் ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தான். மற்றொருவன் முகத்துதி என்பவனைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி ஆலோசனை கூறுனான், மூன்றாமவன் மயக்க நிலத்தில் படுத்து உறங்கிவிடாதீர்கள் என்று எச்சரித்தான். நாலாமவன் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக! என்று கூறி வழியனுப்பி வைத்தனர்.

முகத்துதியைச் சந்தித்தல்

கிறிஸ்தியானும், நம்பிக்கையும் மகிழ்ச்சியோடு நடந்து சென்றார்கள். ஓரிடத்தில் பாதை இரண்டாகப் பிரிந்தது. எந்தப் பாதையில் செல்வது என்று தயங்கி நின்றபோது அங்கியால் முகத்தை மூடியிருந்த ஒருவன் அருகே வந்து ஏன் நிற்கிறீர்கள்? என்று கேட்டான்.

பயணிகள் இருவரும் பாதை தெரியவில்லை என்றார்கள். என்னைப் பின்பற்றி வாருங்கள், நானும் மோட்சத்திற்குத்தான் போகிறேன் என்றான். இருவரும் அவனுக்குப் பின்னே சென்றார்கள். அந்தப் பாதை வளைந்து வளைந்து சென்றபடியால் எந்தத் திசையில் செல்கிறோம் என்றே அவர்களுக்குத் தெரியவில்லை.

அப்போது இருவரும் ஒரு பெரிய வலையில் சிக்கிக்கொண்டார்கள். அவர்களால் நகரக்கூட முடியவில்லை. அவர்களை அழைத்து வந்தவர்களின் முகத்திரை விலகியது. அவன்தான் முகத்துதி என்பதைக் கண்டு கலக்கமடைந்தார்கள். அவன் அவர்களை அப்படியே விட்டுவிட்டுச் சென்றான்.

பேரின்பபுரத்தில் பயணிகள்

இருவரும் பேரின்பபுரத்தை அடைந்தார்கள். இங்கு நறுமணம் கொண்ட தென்றல் வீசியது. திசையெங்கும் வண்ண வண்ண மலர்கள். எங்கும் பறவைகளின் இன்னிசை கீதங்கள், இங்குச் சூரியன் இரவுபகலாகப் பிரகாசித்தது.

அங்கிருந்தபடியே மோட்சத்தைக் கண்டு மெய்மறந்து நின்றார்கள்.

முத்துக்களாலும் நவரத்தினங்களாலும் கட்டப்பட்டிருந்த அந்தப் பட்டணம் பிரகாசமாக ஒளி வீசியது. தரையெங்கும் தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டு தகதகவென்று மின்னியது. சூரிய ஒளி அதன்மீது பட்டுப் பிரதிபலிப்பதைக் காணமுடியாமல் கண்களைப் பொத்திக் கொண்டார்கள் இருவரும். மோட்சப் பட்டணம் அவ்வளவு பிரகாசமாக இருந்தது.

பயணிகள் இருவரும் அங்கிருந்து தோட்டத்தின் பழங்களைப் பறித்து உண்டார்கள். மர நிழலில் படுத்து ஓய்வெடுத்தார்கள். அவர்கள் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தபோது தங்கம்போல ஒளிவீசும் ஆடையணிந்த ஒளிமயரூபிகள்[23] இருவரைச் சந்தித்தார்கள். அவர்கள் முகம் பிரகாசமாக இருந்தது. அவர்கள் பயணிகளைக் கண்டு நலம் விசாரித்தார்கள். இன்னும் இரண்டு சோதனைகளைத்தான் நீங்கள் சகிக்கக் வேண்டியிருக்கிறது. அதன்பிறகு மோட்சத்தை அடையலாம் என்று அவர்கள் கூறியவுடன் பயணிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

மேலும் சிறிது தூரம் சென்றவுடன் மோட்சத்தின் வாசலைக் கண்டார்கள். ஆனாலும் அவர்களுக்கும் வாசலுக்குமிடையே ஒரு பெரிய ஆறு ஓடியது. அதன் ஆழமோ அதிகம். அதைக் கடக்கப் பாலமும் இல்லை. பயணிகள் இருவரும் தயங்கி நின்றார்கள்.

அதுவரை அவர்களுடன் வந்த ஒளிவீசும் ஆடையணிந்தவர்கள் நீங்கள் அந்த வாசலை அடையவேண்டுமானால் இந்த ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும் என்று கூறிவிட்டார்கள். பயந்து நடுங்கியபடியே ஆற்றினுள் இறங்கினார்கள் இருவரும். சிறிது நேரம் போவதற்குள்ளாக நீர்மட்டம் அவர்கள் தலைக்குமேல் வந்துவிட்டது. கிறிஸ்தியான் மூழ்கத் துவங்கினான்.

ஐயோ, அமிழ்ந்து போகிறேனே! என்று புலம்பினான். கவலைப்படாதே கிறிஸ்தியான். ஆழம் அதிகமில்லை. என் கால்களுக்குக் கீழாகக் கடினமான தரை தட்டுப்படுகிறது என்று தேற்றினான் நம்பிக்கை. ஆனால் கிறிஸ்தியானோ, நான் சாகும் வேளை நெருங்கிவிட்டது. என்னால் பாலும் தேனும் ஓடும் மோட்ச பூமியைப் பார்க்க முடியாது என்ற அங்கலாய்ப்போடு நம்பிக்கையின்மீது சாய்ந்து விழுந்தான்.

கிறிஸ்தியான் மூழ்கிவிடக்கூடாதே என்று மிகவும் கடினத்துடன் அவனைத் தாங்கிப் பிடித்தபடியே நீந்தினான் நம்பிக்கை. அப்போது நம்பிக்கை விசுவாசத்தோடு, இயேசுவானவரே, எங்களைக் காப்பாற்றும் என்று வேண்டினான். இந்த வார்த்தைகள் கிறிஸ்தியானுக்கு உற்சாகத்தைக் கொடுத்தன. அவனும் புத்துணர்வோடு நீந்தத் துவங்கினான். இவ்வாறு முதல் சோதனையில் வெற்றி பெற்றார்கள்.

மோட்சத்தை அடைந்தனர்

இருவரும் மறுகரையை அடைந்தார்கள். அங்கே ஒளிவீசும் ஆடை தரித்த

இருவரும் அவர்களுக்காகக் காத்திருந்தார்கள். பயணிகளை அன்போடு வரவேற்றார்கள்.

மோட்சம் ஒரு மேன்மையான குன்றின்மீது இருப்பதை நான் என் கனவில் கண்டேன். பயணிகள் ஒளிவீசும் ஆடை தரித்தவர்களுடன் சேர்ந்து, மோட்சத்தை நோக்கி நடந்தார்கள். வாசலை நெருங்கியவுடன் மோட்சத்தின் தூதர்கள் அவர்களை எதிர்கொண்டு வந்தார்கள்.

இவர்கள் இருவரும் பூமியில் வாழும்போது ஆண்டவரை நேசித்தவர்கள். எல்லாவற்றையும் அவருடைய நாமத்திற்கென்று விட்டுவிட்டவர்கள் என்று கிறிஸ்தியானும் நம்பிக்கையும் அறிமுகம் செய்யப்பட்டார்கள். எக்காளம் வாசிப்பவர்கள் எக்காளத் தொனியோடு அவர்களை வரவேற்றார்கள். பயணிகள் இருவரும் வாசலை அடைந்தார்கள். அங்கேதான் இரண்டாவது சோதனை இருந்தது.

அடையாளச் சுருள் எங்கே! என்ற கேள்வி கேட்கப்பட்டது. உடனே அவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்த சுருளை எடுத்துக் கொடுத்தார்கள். அவை இராஜாதிராஜாவிடம் கொண்டுபோகப்பட்டன. அவற்றைச் சோதித்த அவர் இந்தச் சுருள்களைக் கொண்டு வந்தவர்கள் எங்கே? என்று கேட்டார். அவர்களை உள்ளே அழைத்து வாருங்கள் அவர்கள் உள்ளே நுழையத் தகுதியுள்ளவர்களே என்று தீர்ப்பளித்தார் இராஜாதிராஜா.

கதவு திறக்கப்பட்டது. கிறிஸ்தியான், நம்பிக்கை இருவரும் மோட்சத்தினுள் நுழைவதை நான் என் கனவில் கண்டேன். இதோ அவர்கள் நுழைந்தவுடன் அவர்கள் உருவம் மாறியது. அவர்கள் முகம் பிரகாசித்தது. அவர்கள் பொன்போல ஒளிவீசும் ஆடையணிந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் தலையில் பொன்முடி சூட்டப்பட்டது. ஆண்டவரைத் துதித்துப்பாடக் கின்னரம் கொடுக்கப்பட்டது. மோட்சத்திலுள்ள மணிகள் எல்லாம் ஒலியெழுப்பின. எங்கும் பாடல் தொனி. ஆண்டவருடைய மகிழ்ச்சிக்குள் பிரவேசியுங்கள் என்ற குரல் எழும்பியது.

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக[24] என்ற பாடலைப் பாடி அனைவருமாக ஆண்டவரைத் துதித்தனர்.

கிறிஸ்தியான், நம்பிக்கை என்ற பாத்திரங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தையும், அதனோடு பின் தொடருகின்ற பரிசுத்த நம்பிக்கையையும் எடுத்துரைக்கிறான்.

மொழிபெயர்ப்புத் தனித்தன்மைகள்

ஜான் பனியனின் மூல நூலைத் தழுவி பல நூல்கள் தமிழில் உரைநடையாகவும், காவியமாகவும் வெளிவந்துள்ளன. பிற உரைநடை

மொழிபெயர்ப்புகளோடு இவருடைய நடை தனித்துவமிக்கதாக அமைந்துள்ளமை விளக்கப்படுகிறது.

"As I walked through the wilderness of this world, lighted on a certain place where was a den, and laid me down in that place to sleep; and as I slept, I dreamed a dream."[25]

என்ற முத்தாய்ப்புத் தொடக்கத்தின் மொழியாக்கம் பின்வருமாறு அமைகிறது.

"இவ்வகண்ட லோக வனத்திலே, நான் சஞ்சாரம் செய்த காலத்தில், ஒருதரம் ஒரு மலையடிவாரத்தில் தங்கினேன். அங்கே ஒரு கெபி இருந்தது. அதனுள் போய்ப் படுத்து நித்திரை செய்தேன். நான் அயர்ந்து நித்திரை செய்கையில் மா மகிமையான ஒரு சொப்பனங் கண்டேன். அந்தச் சொப்பனத்தை சொல்கிறேன் கேள்"[26] என்று அமைகிறது.

இந்த மொழிபெயர்ப்பில் 'கெபி' என்ற சொல் அக்காலப் பேச்சு வழக்கிற்கும் வேதாகமம் மொழிபெயர்ப்பு நிலைக்கும் இணைந்து செல்வதைக் காணலாம். இந்தக் கெபி ஜான் பனியன் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையைக் குறிக்கிறதென்றும் அங்கிருந்து எழுதப்பட்ட நூல் இது என்றும் முதல் நூல் சுட்டுவதை அறியலாம். "fly from the wrath to come" "வருங்கோபத்துக்கு பறந்தோடிப்போ" கோபாக்கினைக்குத் தப்பும் வழிகாட்டியாக இந்நூல் அமையக் காணலாம்.

"Now I saw upon a time, when he was walking in the fields, that he was (as he was won't) reading in his book, and greatly distressed in his mind; and as read, he burst out as he had done before, crying what shall I do to be saved? I saw also that he looked this way, and that way, as if he would run; yet he stood still he cause he could not tell which way to go."[27]

இதற்கான மொழிபெயர்ப்பு, "அவன் தன் வழக்கத்தின்படி வயல் வெளிகளில் உலாவிக் கொண்டிருந்த ஒருநாள் தன்னுடைய புத்தகத்தை வாசித்து வாசித்து, மிகுந்த துக்கமுள்ளவனாய் இருக்கிறதை நான் கண்டேன். அலறி, 'இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்' என்று அழுதான், இப்படிச் சொல்லிக் கொண்டதுமல்லாமல், எத்திசையாய் ஓடலாம் என்று பார்க்கிறவனைப்போல், அந்த மைதானத்தில் அவன் அங்குமிங்கும் சாடப்போகிறதை போலவும் நான் கண்டேன். என்றாலும் அவன் ஓடும் இடம் அறியாதிருந்ததால் நின்ற நிலையிலேதான் நின்றான்."[28] எனப் பதிவு செய்கிறார்.

இதைப் படிக்கும்போது ஒரு மொழிபெயர்ப்பு என்ற எண்ணம் எழாது ஒரு நல்ல புதினத் தொடக்கமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

"So I saw in my dream that the man began to run. Now he had

not run far from his own door when his wife and children, perceiving it, began to cry after him to return; but the man put his fingers in his ears, and ran on crying, Life! life! eternal life! Luke 14:26. So he looked not behind him, Gen. 19:17, but fled towards the middle of the plain."[29]

"அப்புறம் நான் என் சொப்பனத்திலே அவன் திட்டிவாசல் திசையாய் ஓடிப்போகக் கண்டேன். அவன் சற்றுதூரம் ஓடவே, அவன் மனைவியும் மக்களும் பின்னாலே ஓடி : அப்பா! அரசே! வாரும், திரும்பி வாரும் என்று அழுது கூப்பிட்டார்கள். அவனோ அச்சத்தத்தைக் கேட்டும், பின்னிட்டுப் பாராமல், தன் காதுக்குள் விரலை இட்டுக்கொண்டு, **ஜீவனே! ஜீவனே! நித்திய ஜீவனே** என்று கதறிக்கொண்டு அந்த மைதானத்தின் மத்திவரையும் அதி தீவிரமாய் ஓடினான்"[30] காதுக்குள் விரலை இட்டுக்கொண்டு ஜீவனே ஜீவனே நித்திய ஜீவனே என்ற கதறல் நம் நெஞ்சை இளகச் செய்கிறது. அவனது கழிவிரக்கத்தை அப்படியே படம்பிடிக்கக் காணலாம்.

"What! said Obstinate, and leave our friends and our comforts behind us"[31] "பிடிவாதன் : என்ன சொல்லுகிறாய்? பந்துக்களையும், பவுசுகளையும், மக்களையும், மகிழ்ச்சிகளையும் விட்டுப்புட்டா வரச் சொல்லுகிறாய்?"[32] இந்த இடத்தில் பாமர மக்களின் அந்நாளையப் பேச்சு வழக்கு 'விட்டுப்புட்டு' என்பது இடத்துக்குப் பொருத்தமாக இடம்பிடிக்கக் காணலாம். ஊருக்குத் திரும்புகிறாயா இல்லையா என்று பிடிவாதன் கேட்கக் கிறிஸ்தியான் கூறும் பதில், "No, not I, said the other, because I have laid my hand to the plough."[33] "திரும்புகிறதா? அந்தப் பேச்சை விடும், நான் கலப்பையைப் பிடித்தாயிற்று; புரட்டி உருட்டி அடித்தாலும் பிடித்தபிடி விடேன்."[34] நல்ல பேச்சு வழக்கில் இணைந்த எளிய நடை மொழிபெயர்ப்பு.

"Come on, let us mend our pace"[35] இதை மொழிபெயர்க்க வந்த ஆசிரியர் சாமுவேல் பவுல் ஐயர்,"இனி நாம் காலதாமதம் பண்ணாமல் எட்டி நடந்து போவோம்; அடிநடையை விட்டுத் துடிநடை நடப்போமாக"[36] என்று எழுதுவதைக் காண ஆசிரியரின் இலக்கிய ரசனை வெளிப்படுகிறது.

பெயர்களை மொழியாக்கம் செய்வதில் தனித்தன்மை

The Town of Carnal Policy[37]	- மாமிசநேசபுரி [38]
Morality [39]	- நல்லறம் (பட்டணம்) [40]
Legality [41]	- நியாப்பிரமாணிக்கன் [42]
Civility[43]	- மரியாதை (மகன்) [44]
Provisions is there also cheap[45]	- அகவிலை மெத்த நயம் இது நடைமுறை பேச்சு வழக்கு[46]

Dreadful Countenance [47] - கோபமுகத்தோடு பார்த்தார் [48]

Good Will [49] - பட்சதாபன் [50]

நல்லெண்ணன் என்று எழுதியிருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் பட்சபாதமின்றி வழிவாசல் திறக்கும் நல்லோனாகிய கிறிஸ்துவைக் குறிக்கும் பெயர் தரப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு முழுமையும் பொருந்துமிடமெல்லாம் வேத வசனங்களைச் சற்றும் மாற்றாமல் அப்படியே தருதல் ஒரு தனி உத்தியாகச் சாமுவேல் பவுல் ஐயரால் கையாளப்பட்டுள்ளது.

"thou hast begun to reject the counsel of the Most High, and to draw back thy foot from the way of peace, even almost to the hazarding of thy perdition." [51]

என்ற பகுதியை,

"உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டை பண்ணவும், சமாதானத்தின் பாதையை விட்டு உன் பாதங்களை விலக்கிப் பின்வாங்கிப் போகவும், அழிவுக்கு நெருங்கவும் நீ துவக்கி விட்டாய் என்று வாசிக்கும்போது ஒரு நல்ல ஆலோசனை அளிக்கப்படுதலை"[52] அறியலாம்.

"Woe is me, for I am undone!"[53] "ஐயோ நான் நிர்ப்பாக்கியன், ஐயோ அதமானேன் என்று அலறினான்"[54] என்று மொழிபெயர்ப்பில் வாசிக்கும்போது ஏசாயா 6:5இல் எழும் ஏசாயாவின் அலறலைக் கேட்கலாம்.

"... to reject the Counsel of God..."[55] "சர்வ ஞானமுள்ள தேவனின் ஆலோசனையை அசட்டை செய்கிற முண்டுத்தனமாய் இருக்கிறது"[56] என்ற மொழிபெயர்ப்பில் 'முண்டுத்தனம்' என்ற தொடர் அக்காலக் கொச்சைப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்பட்ட தொடராக அமையக் காணலாம்.

"... Mr. Worldly Wiseman is an alien, and Mr. Legality is a cheat; and for his son Civility, notwithstanding his simpering looks, he is but a hypocrite, and cannot help thee. Believe me, there is nothing in all this noise that thou hast heard of these sottish men, but a design to beguile thee of thy salvation, by turning thee from the way in which I had set thee. After this, Evangelist called aloud to the heavens for confirmation of what he had said; and with that there came words and fire out of the mountain under which poor Christian stood, which made the hair of his flesh stand up".[57]

"லோக ஞான எதிரி, நியாயப் பிரமாணிக்கனோ எத்தன்; கூடாது; கண்ணைச் சொருகுவான் (simpering looks) தாம் அவனுக்குச்

சொன்னவையெல்லாம் மெய் என்பதற்கு வானங்களைச் சாட்சியாகக் கோரினார். உடனே அவன் நின்ற மலையின் கீழிருந்து அக்கினியும் அதிரடியுள்ள சத்தமும் புறப்பட்டன அவன் மிகவும் பயந்தான்; அவன் தேகத்தின் ரோமங்கள் நட்டு நின்றன" [58] என்ற மொழிபெயர்ப்பைப் பார்க்கையில் ஆங்கிலத்திலும் தமிழின் வேகம் ஆற்றொழுக்குப்போல் தடையின்றிச் செல்வதைக் காணலாம்.

மொழிபெயர்க்கப்படும் பாடல்களில் இலக்கிய நயமும் இசைச் செறிவும் நிறைந்திருக்கக் காணலாம். ஆங்கிலத்தைப் படிப்பதிலும் தமிழில் மனதூன்றிப் படிக்க வைக்கும் ஆழ்நிலையை உணர முடிகிறது.

"May I now enter here? Will he within
Open to sorry me, though I have been
An undeserving rebel? Then shall I
Not fail to sing his lasting praise on high." [59]

என்ற பகுதி ,

"ஐயா, நான் பாவி! திட்டிவாசல் திறவும் ஐயா!
நாசபுரி நீசன் கிறிஸ்தியானும் இதோ,
பாரஞ்சுமந்து வந்தேன் - ஐயா!
நேசமாய் வாசல் திறந்திடுவீரானால்
பாரம் இறக்கிக் கொள்வேன் - ஐயையா!
பாவி, துரோகி, விரோதி சண்டாளன் நான்
படுதோல்வி ஆனாலும்; - ஐயா!
பாடிப் புகழுவேன் பரனாரை எந்நாளும்
வாசலுள் வந்துவிட்டால் - ஐயையா!" [60]

என்ற பாட்டை மனதுருக்கத்தோடும் கண்ணீரோடும் தன் நிலை உணர்ந்து பாடக் கேட்கும்போது கேட்போர் கண்களே குளமாவது நிச்சயம். 'Sir' [61] என்ற வார்த்தை 'தரும துரைகளே!' [62] என்று மரியாதைப் பன்மையாகச் சுட்டப்படுகிறது. அந்நாளில் சிறியோர் பெரியோரை மரியாதைக் கொடுத்துப் பேசும் வழக்கச் சொல் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"Thus far did I come laden with my sin,
Nor could aught ease the grief that I was in,
Till I came hither. What a place is this!
Must here be the beginning of my bliss?
Must here the burden fall from off my back?
Must here the strings that bound it to me crack?
Blest cross! blest sepulchre! blest rather be
The Man that there was put to shame for me!" [63]

என்ற கவிதைப் பகுதியை,

"பாவபாரஞ் சுமந்தேன்
இதுவரையும் வந்தேன்,
இங்கே வருமட்டுமே
பாரம் நீங்கவில்லையே.
இங்கே வந்த நிமிஷம்
என் பாவபாரம் நாசம்,
இது என்ன இடமோ!
பாரம் நீங்கிப் போயிற்றே
இது என்ன இடமோ!
சிலுவையே நீ வாழ்க!
சமாதியே நீ வாழ்க!
சிலுவையில் மாண்ட
ஏசுவே வாழ்க வாழ்க"[64]

என்று எழுதியுள்ளார்.

தொடர்ப்பொருள் நிலையில் தெளிவுறத் தோன்றினும்,

"The Man that there was put to shame for one" என்ற பகுதி நேரடியாக மொழிபெயர்க்கபட்ட நிலையில் இல்லை.

"O, they say, Hang him; he is a turncoat; he was not true to his profession! I think God has stirred up even His enemies to hiss at him, and make him a proverb, because he hath forsaken the way."[65] என்பது, "அதுவா அவன் கெட்டான், தலைப்பாமாற்றி, எடுத்த காரியத்தை நிறைவேற்றச் சக்தியில்லாத தெம்மாண்டி என்று சொல்லுகிறார்கள். அவன் சத்திய வழியை விட்டுப் பின்வாங்கினதினாலே, தேவன் அவன் சத்துருக்களை ஏவிவிட்டு அவனை நிந்திக்கவும், ஈசல் இடுவதற்கு இடமாகவும், பழமொழியாகவும் பண்ணிவிட்டார் என்று என் மனதில் தோன்றுகிறது"[66] என்ற மொழிபெயர்ப்பில் 'தலைப்பாமாற்றி, தெம்மாண்டி' என்பன பேச்சு வழக்காயும், ஈசல் இடுவதற்கு இடமாகவும் பழமொழியாகவும் பண்ணிவிட்டார் என்ற பகுதி வேதாகமத் தொடராகவும் (எரே.29:18,19) அமையக் காணலாம்.

I could not tell what to say at first. Yea, he put me so to it, that my blood came up in my face; even this Shame fetched it up, and had almost beat me quite off. But at last I began to consider, that which is highly esteemed among men, is had in abomination with God. [67] என்பதை, "என்னத்தைச் சொல்ல ... அலைக்கழித்து விட்டான். என் இரத்தம் சிரசில் ஏறி முகம் எல்லாம் சிவந்து போயிற்று, என் மனதை மடிந்துபோகச் செய்தான் என்றே சொல்ல வேண்டும். கடைசியாக,

மனிதருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது என்ற சத்தியத்தை யோசிக்கும்படி ஆரம்பித்தேன்"[68] எனப் பெயர்ப்பதோடு மட்டுமல்லாமல்,

"The wise shall inherit glory, said Solomon; but shame shall he the promotion of fools"[69] என்ற தொடர், "ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள் மதியீனரோ கனவீனத்தை அடைவார்கள் என்று ராஜனாகிய சாலொமோன் சொல்லுகிறார்"[70] என்று மொழிபெயர்க்கையில் நீதிமொழிகள் 3:35 என்ற வசனம் அப்படியே எழுதப்படுகிறது.

வாயாடி பற்றிக் கிறிஸ்தியான் உண்மையிடம் சொல்லும்போது, "நீர் மெச்சிக்கொள்கிற ஆள் தன்னை அறியாத இருபது பேரோடு போனாலும் அவ்விருபது பேரையும் தன் 'வாயாட்டத்தால்' மயக்கிபோடுவான்" என்ற பகுதியில் 'வாயாடித்தனம்' என்பது 'வாயாட்டம்' என்று வந்து மொழிபெயர்ப்புக்கு வலுவூட்டக் காணலாம். கிறிஸ்தியான் அந்த வாயாடியை உண்மைக்கு அறிமுகப்படுத்தும் நிலை[71] "அலப்புத் தெருவில் குடியிருக்கிற நயப்பேச்சு என்கிறவனுடைய மகன்; அலப்புத் தெரு வாயாடியென்றால் தெருவில் விளையாடும் குழந்தைகளுக்கும் தெரியுமே" என்று கூறிவிட்டு "நீர் அவனை யோக்கியன் என்று சொன்ன வார்த்தை பற்றி வாயாடி காரியமும் அப்படி என்றும் சொல்லலாம். இவன் எந்தக் கும்புக்கும் ஏற்ற கோமாளியாயும், எந்தப் பேச்சுக்கும் ஏற்ற வாயாடியாயும் இருக்கிறான்"[72] என்ற பகுதியும் "அவன் பக்தியெல்லாம் அண்ணாக்கு முதல் நுனிநாக்கு வரையும் மாத்திரம் இருக்கிறது" என்ற பகுதியும் வாயாடி பற்றிய கேலிச் சித்திரத்தை நம் முன்னே வரைந்து காட்டிய நிலையை உணர்த்தும்.

மேலும் கிறிஸ்தியான் தொடரும் பத்தியில், "அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" என்ற இயேசுவின் வசனமும், "அவனுடைய காரியபாகங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறேன்"[73] எனக் காரியபாகம் என்ற ஒரு நல்ல இணைத்தொடரையும், "முட்டையின் வெள்ளைக்கரு எப்படி ருசியற்றிருக்கிறதோ அப்படி அவன் வீடும் பக்தியற்ற பாழ்வீடாய் இருக்கிறது" என்றும்; "அவனை அறிந்த சாதாரண ஜனங்கள் எல்லாரும் வெளியில் பரிசுத்தன், வீட்டில் பிசாசு என்றும் சொல்லிவிட்டுப் பின் இவனா? கூடுமானால் அவர்களையும் ஏமாற்றி, சூது செய்து, தந்திரம் பண்ணி, குல்லாப் போட்டுவிடுவான்" என்றும் "அதுவுமல்லாமல் தன் பிள்ளைகளும் தன்னைப்போல் பித்தலாட்டக்காரர் ஆகும்படி இவன் அவர்களுக்கு நன்றாய்ப் படிப்பிக்கிறான். அவர்களில் யாராவது தன் மனதுக்குப் புத்தயீனராய் அல்லது பயங்காளிகளாய் இருக்கிறதாகத் தெரிய வந்தால் அவர்களை மூடர் என்றும் மரத்தலையுள்ளவர்கள் என்றும் தீர்மானித்து" என்று முறையாகப் பல இடங்களில் 'குல்லாப்போடுதல், பயங்காளி, மரத்தலையுள்ளவன்' என்று பேச்சு வழக்குச் சொற்களை அடுக்கிச் செல்லும் மொழிபெயர்ப்பு படிப்பு ஓட்டத்தை விறுவிறுப்படையச் செய்கிறது.

மேலும் "வாயாடி இருக்கிறானே, அவன் உள்ளபடி முயலுக்கு ஒப்பானவன். அவன் அசை போடுகிறான், எப்படியெனில் பல அறிவையும் சம்பாதிக்கிறான்,

வார்த்தைகளை அரைத்துக் குவிக்கிறான். ஆனால் அவனுக்கு விரிகுளம்பில்லை; அதாவது பாவிகளின் வழியை விட்டுப் பிரிகிற சுபாவம் அவனிடத்தில் இல்லை"[74] என்று கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படைக் கோட்பாடான வேறுபாட்டின் ஜீவியத்தைப் பற்றிய செய்தியை வலியுறுத்தக் காணலாம்.

'சம்மனசுகள்'[75] என்ற சொல் வருகிறது. அந்நாளில் தேவதூதர்களைச் சம்மனசுகள் என்பது பொதுவழக்காக இருந்தது.

'அவிசுவாசமாகிய பாவத்தையும் அவனுக்குள் தூண்டிக்காட்டி'[76] என்று வருமிடத்தில் 'சுட்டிக்காட்டி' என்ற தொடர் பேச்சுவழக்கில் 'சூண்டிக்காட்டி' என்று வரும் அதை இங்கே 'தூண்டிக்காட்டி' என்பது ஒரு புதுப் போக்காக அமைத்திருக்கக் காணலாம்.

'உமது அனுபோகம் இசைந்திருக்கிறதா? இல்லையா'[77] என்னுமிடத்தில் வரும் அனுபோகம் அனுபவம் என்ற பொருளில் வருகிறது. அகராதியில் இச்சொல்லுக்கு இன்பநுகர்ச்சி, பழக்கம், கையாட்சி என்று பொருள்தரப்பட்டு கையாட்சி என்பதற்குத் தன் அனுபவம் என்ற பொருள் சுட்டப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர் நடைமுறைப் பேச்சு வழக்குக்களோடு மட்டுமல்லாமல் அகராதியில் அறிவும் உடையவர் என்பதற்கு இது சான்றாக அமையும்.

"வாயாடி என்போனுமே
வழியோடு கூடி – மிகத்
துடியோடு ஓடி – தன்
பெருமை அலங்காரங்களைப்
பிரித்துக் காட்டினான். – நன்ன நான

மெத்தவோ சமர்த்தன் போல
ஆடி ஆடி அசைந்து – அவன்
கூடி ஓடி நடந்து – தனக்
கெருவம் நிகரில்லை போல
கெருவம் பேசினானே. – நன்னநான

உண்மையோன் என்போனுமே
வாயின் வாளைத் தீட்டி – ஒரு
ஈட்டிபோல நீட்டி – இரு
தயநிலைமையைக் கேட்டபோது
தேய்பிறைபோல் மறைந்தான். – நன்னநான"[78]

என்று பாட்டையே தெம்மாங்கு மெட்டில் பாடிக்கொண்டே கிறிஸ்தியானும் உண்மையும் வழி நடந்தனர்.

"Peace be unto you, dearly beloved, and Peace be unto your helpers"[79] என்று வரும் தொடர், "பிரியமான சகோதரரே, உங்களுக்குச் சமாதானம்; உங்களுக்குச் சகாயம் செய்கிறவர்களுக்கும் சமாதானம்"[80] என்று

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதைக் காண்கையில் 1 சாமுவேல் 25:6ல் சொல்லப்பட்ட "நீர் வாழ்க, உமக்குச் சமாதானமும் உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும், உமக்கு உண்டான எல்லாவற்றிற்கும் சமாதானம் உண்டாவதாக" என்ற வேத வசனம் நினைவுக்குவரல் இயற்கையே.

'இவன் தொத்து வியாதியைப் போலொத்த நாசகாலன்'[81] என்னும்போது தீயசெயல் தொற்றுவியாதியைப் போன்றது என்ற தோற்றம் எழுகிறது.

உண்மை கொலைசெய்யப்பட்ட பின் கிறிஸ்தியான் தெய்வாதீனமாய் எப்படியோ தப்பிப் பிழைத்து வெற்றிகீதம் பாடி நடந்தான்.

1. உண்மை என்னும் வீரனே நீ
வெற்றிகொண்டாய், ஜெயம்பாடி
துதிகீதம் முழக்குவாய் – அல்லேலூயா.

2. பிதாமுகம் தரிசித்தாய்
தூதருடன் கூடிக்கொண்டாய்
துதிகீதம் பாடுகிறாய் – அல்லேலூயா.

3. பாவிகள்தான் பாதாளத்தில்
புலம்பியே அழுகையில்
பரிசுத்தர் பாடுகிறார் – அல்லேலூயா.

4. உன்னைக் கொன்றுபோட்டாலுமே
இன்னும் உயிர் உனக்குண்டே
துதிகீதம் முழக்குவாய் – அல்லேலூயா."[82]

பாடலுக்கேற்ற எதுகைமோனைப் பொருத்தம் சீராக அமையவில்லை எனினும் கருத்துக்கேற்ற ஓட்டம் இருக்கக் காணலாம். "ஒருவன் (உண்மை) சத்தியத்திற்குச் சாட்சியாய் மரித்தான்; வேறொருவன் கிறிஸ்தியானுக்குத் தோழனாகி, மோட்சப்பிரயாணம் செய்யும்படிக்கு அவனுடைய சாம்பலில் இருந்து எழுந்தருளி ஆகிறான்"[83] என்பதைப் படிக்கையில் உண்மையின் சாம்பலிலிருந்து தோன்றியவனே திடநம்பிக்கை என்ற வெளிப்பாடு புலப்படும்.

"அது என்னுடைய பேர் அல்ல, ஆனால் என்மேல் காய்மகாரப்படுகிற சிலர் இந்த வக்கணைப் பேரால் என்னைக் கூப்பிடுகிறதுண்டு"[84] என்று வரும் பகுதியில் 'பொறாமை கொண்டோர்' என்பது 'காய்மகாரப்படுகிற சிலர்' என்றும், கேலிப்பெயர் என்பதை 'வக்கணைப்பேர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமை காணலாம்.

கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் சென்றடைந்த ஸ்தானத்திற்கு 'முசிப்பாற்றி' – களைப்பு நீக்குமிடம் என்ற பொருள் வழங்கப்பட்டது.[85] மைதான முடிவில் 'பரும்பு' இருந்தது; என்று எழுதப்பட்டிருக்கிறது. அகராதியில் 'பரும்பு' என்ற சொல் காணப்படவில்லை. 'பரம்பு' என்ற சொல் கழனி, வயல்நிலம் என்ற பொருளில் வருகிறது. 'பருப்பதம்' – மலையென்ற பொருளில் அகராதி சுட்டுகிறது. கொடுக்கப்பட்ட பெயர் 'திரவிய கிரி' என்று வருவதால் பருப்பதம் என்ற சொல்தான்

'பரும்பு' என்று சுட்டப்படுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

"அவன் கருத்து அந்த வழியாக அவனைக் கொண்டுபோகும் என்பது நிஜம். அங்கேயே அவன் சாவான் என்பது முக்காலே மூன்று, வீசம் நிஜமே நிஜம்" என்று சொல்லவேண்டியது. இது அந்த நாளில் 'முக்காலே மூன்று வீசம்'[86] என்பது அளவு தொடர்புடைய பேச்சுவழக்கு ஆனால் மக்களிடையே பலபடப் பயன்பட்டதை அறிகிறோம்.

மொழிபெயர்ப்பு முழுமையும் அக்காலப் பேச்சுவழக்கும், வேதாகமச் சொற்றொடர்களை அப்படியே கையாளும் நிலையும் மிகப் பொருத்தமாக அமைந்து மொழிபெயர்ப்புக்கு வலுச்சேர்ப்பதைக் காணலாம்.

"By-ends and silver Demas both agree;
One calls, the other runs, that he may be
A sharer in his lucre: so these two –
Take up in this world, and no farther go."[87]

"உபாயி என்பவனுமே
வெள்ளிநேசத் தேமாவோடே
பங்குபெறப் புதையலில்
ஒத்து இணங்கிப் போனார்கள்.
தேமா நின்று கூப்பிட்டான்
அவனும் விரைந்தோடினான்
அதுவே முடிவாயிற்று
அப்பாலே செல்லார் முத்திக்கு" [88]

இந்தப் பகுதியில் கவிதை ஓட்டம், எதுகை மோனை, தொடை, முரண் பொருத்தம் என்று கவித்திறன் நோக்காது பாடிச் செல்லும் பறவை ஒலியாய் ஏற்றுக் கொள்ளல் இயல்பாகும்.

"Which sudden and amazing sight gave them occasion of the discourse"[89] என்று ஆங்கில பகுதி, "சடுதியாய்க் காணப்பட்ட இந்த விந்தையான காட்சி பின்வரும் சம்பாஷணைக்கு ஏதுகரம் ஆயிற்று"[90] ஏது=காரணம்; கரம்=வழிவகை என்ற இலக்கியச் சொல் வழக்கு இன்று மிகை வழக்கிலின்மையாகிறது.

"......... the men of Sodom, that they were sinners exceedingly ....."[91] என்ற தொடரை, "சோதோம் பட்டணத்தார் பஞ்சமா பாவிகள்"[92] என்று காட்டும்போது அவர்களுடைய பாவத்தின் வலுமிக அதிகமாயிருந்ததை நம்மால் உணரமுடிகிறது.

"Behold ye, how these Crystal Streams do glide,
To comfort pilgrims by the highway-side.
The meadows green, besides their fragrant smell,
Yield dainties for them; And he that can tell
What pleasant fruit, yea, leaves these trees do yield,
Will soon sell all, that he may buy this field." [93]

என்ற ஆறுவரி ஆங்கிலப் பாடல் தமிழில்,

1. மா இன்பநதிதான் ஓடுதே பார்....
ஓடுதே பார்!
பளிங்கொளி போல தான்
தோன்றுதே பார்!
ராஜபாதையாக
நடப்பவருக்காக
மா இன்ப நதிதான்
ஓடுதே பார்!

2. மைமனம் பச்சென்று
காணுதே பார்!
பூமணம் கம்மென்று
வீசுதே பார்!
ஆற்றோரத்து மரக்
கன இலைகள் மகா!
ஆரோக்கியம் தரும்
அமிழ்தமாம்.

3. அவ்வின்பம் கண்டவன்
இப்பூமியை
வாங்கத் தனக்குள்ள
எல்லாம் விற்பான்;
ராஜபாதையாக
நடப்பவருக்காக
மா இன்ப நதிதான்,
ஓடுதே பார்!"[94]

என்று வரும் பகுதி மொழிமாறி நல்ல பயணப்பாட்டாக அமையக் காணலாம்.

"Southern morning was come"[95] என்ற ஆங்கிலத் தொடர், 'பளார் என்று விடிகிற சமயத்தில் எழுந்து'[96] என்று இசைநயத்தோடும், உணர்ச்சி வசத்தோடும் மொழிபெயர்க்கும் நிலையைக் காணலாம்.

"I have a key in my bosom, called Promise, that will, I am persuaded, open any lock in Doubting Castle."[97] "என் மடிக்குள்ளே வாக்குத்தத்தம் என்று பேர் வழங்கப்படுகிற திறவுகோல் இருக்கிறது. அதைக்கொண்டு சந்தேக துருக்கத்தின் எந்தப் பூட்டையும் திறந்து விடலாம் என்பதற்குத் தடையில்லையே என்றான்."[98] என்று மொழிபெயர்க்கப்பட்டு ஆற்றொழுக்கு நடைபயில்வதைக் காணலாம்.

"there comes down from Broadway-gate a lane, called Dead-man's lane; so called because of the murders that are commonly done there"[99] "இந்தத் தெருவின் முகப்பிலே விசால வழி வாசலிலிருந்து வருகிற ஒரு சிறு வழி இருக்கிறது, அதற்கு இறந்தோர் சந்து என்று பேர். அவ்விடத்தில் நடக்கிற படுகொலைகளைத் தொட்டு அதற்கு இந்தப்பேர் வழங்கப்படுகிறது"[100] என்றும்;

"Then he cried out, Thieves, theives! With that guilt,"[101] என்ற பகுதியை, "உடனே அவன் கூவோ கூ! கள்ளன், கூவோ கூ! கள்ளன் கள்ளன் என்று கத்தினான்."[102] என்று திருடனைப் பார்த்த பதட்டத்தில் இசை எழுப்பிக் கூவினான் என்றும்,

"But, as I was told, the good man was much afflicted for his loss; for the thieves got most of his spending-money"[103] என்ற பகுதியை, "ஆனால் நான் முன் சொன்னபடி வழிச்செலவுப் பணம் எல்லாம் கள்ளர் கைக்குப் பறிமுதலாய்ப் போனதையிட்டு அவனுக்கு ஆறாத்துயரம் இருந்தது."[104] என்றும் மொழிபெயர்த்துள்ள நிலையைப் பார்க்கும்போது அநேகப் பேச்சுவழக்குக் கொச்சைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டாலும் மொழிஓட்டத்திற்கு அவை மிகப் பயன்படக் காணலாம்.

"மதவெறி கொண்டாடும் கழுதையைத் திருப்பக் கூடாததுபோல, இப்படிக்கொத்தவனுடைய மனதையும் திருப்பக்கூடாது"[105] என்ற பகுதியும் "நான் உம்மை முட்டைத் தோலோடு நகர்ந்து போகிற சில துடுக்கான குருவிக் குஞ்சுகளுக்கு ஒப்பிட்டதுண்டு"[106] என்ற பகுதியும் "அவர்கள் வழிபறிக்காரர், அடியற்ற பாதாளத் தரசனுடைய ஏவலாட்கள்"[107] என்ற பகுதியும், "ஒரு காசுக்கு உயிரை விட்டானாம்"[108] என்ற பழமொழிக்கு ஏற்றாற்போல் இருந்தது. "எத்தனை காபந்து எனக்கு இருந்தாலும் என்ன?" என்ற பகுதியும் நடைமுறைப் பேச்சு வழக்கும் பழமொழியும் கொச்சை வழக்கும் மலிந்திருந்தாலும் இந்த மொழிபெயர்ப்பு உயர்ந்த இலக்கிய நடைவெளிப்பாட்டைப் புலப்படுத்தக் காணலாம்.

"வாருங்கள் வாருங்கள்
வந்தெங்களைக் கேளுங்கள்;
பாருங்கள், பாருங்கள்
பட்டபாட்டைப் பாருங்கள்;

வழிதப்பிப் போவோர்க்கு வரும் வாழ்வைப் பாருங்கள்-வாருங்கள்.

உத்தம பக்தியைத்
தள்ளும் பிரயாணிகள்;
இச்சக மூர்த்தியால்
ஏமாந்து போய்க் கண்ணியில்,

சிக்குண்டு அலறுவோர் தேவனே துணைசெய்வார் – வாருங்கள்.

தேவனே துணைநின்று
தெத்தறுத்து விட்டாலும்,
ஏகனே! திரும்பவும்
ஏங்க, ஏங்க அடிப்பார்;

எச்சரிப்பாய் நடக்க எச்சரிக்கையாயிரு, எச்சரிக்கையாய் இரு – வாருங்கள்"[109]

என்ற பாடல் கேட்போருக்குப் புது வழிகாட்டிஇ எச்சரிப்பூட்டுதலை அறியலாம்.

நாஸ்திக சாஸ்திரியாரின் நடையை[110] அன்னநடையும் ஆசார வீச்சுமாக என்ததாகக் காட்டும் பகுதி அமைந்துள்ளது.

"சவுக்குப் பிடித்திருக்கிற சம்மனசு வந்து நம்மைப் பிடித்து அடித்தாலும் அடிப்பார்;"[111] என்று மொழிபெயர்த்துள்ள இடம் அந்நாளைய சமய வழக்கு நிலைகளைச் சுட்டக்காணலாம்.

'கஷ்டவாளிக்கும் கனநித்திரை இன்பம்'[112] என்ற பழமொழியும்;

"ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறதுபோல் நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாய் இருக்கக் கூடுவோம்"[113] என்ற வேதாகம வசனமும் மொழிபெயர்ப்புக்கு மேலும் வலுச்சேர்க்கக் காணலாம்.

"அவன் இவன்மேல் பிரியாது"[114] செய்து அதைக் கொடுத்துத் தீர்க்குமளவும் காவலில் அடைக்கலாமே" என்ற பகுதியில் 'பிராது', குற்றம் சொல்லல் என்ற வார்த்தை 'பிரியாது' என்று தவறாகச் சுட்டப்பட்டுள்ளது.

மேலும் பேசும் பேச்சு முழுவதும் வேதாகமச் சொற்களின் வசனங்களாகவே உள்ளமையும் வசனமறியாதோருக்கும் நல்ல இலக்கிய ஓட்டத்தின் போக்கைச் சுட்டிச் செல்வனவாகவும் காணலாம்.

"சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள் என்ற வேதாகமக் கட்டளையும் உங்கள் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள்" என்ற சத்தமும் கேட்கப் பயணிகள் பரலோக நித்திய வீட்டில் நுழைந்தனர் என்ற நல்முடிவு கூறப்பட்டு நூல் நிறைவு பெறுகிறது.

ஒரு மொழிபெயர்ப்பு நூல் என்ற எண்ணமே தோன்றாதவாறு அருமையாக வேதவசனங்களாலான ஒரு நல்ல புதினத்தைப் படிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வண்ணமாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

முதன்முதலாய் தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்ட தம்பிரான் வணக்கம் நூலின் விவரம், தேவை ஆகியவை விளக்கப்படுகிறது. தமிழில் கிறித்தவ நூல்களின் மொழிபெயர்ப்பு நோக்கம், பயன்பாடு முதலானவை கூறப்பட்டுள்ளன. சாமுவேல் பவுல் ஐயர் மொழிபெயர்த்த நூல்கள் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளது. ஜான் பனியனின் 'மோட்ச பிரயாணம்' (Pilgrim Progress) என்னும் நூலின் மொழிபெயர்ப்பின் சிறப்புக்கூறுகள் விளக்கப்பட்டுள்ளன.

சாமுவேல் பவுல் ஐயர் முதன்முதலாய் அந்நூலைப் 'பரதேசியின் மோட்சப் பயணம்' என்னும் தலைப்பிட்டு விளக்கியுள்ளமை ஆராயப்படுகிறது. பிற மொழிபெயர்ப்புகளுக்கும் சாமுவேல் பவுல் ஐயரின் மொழிபெயர்ப்புக்குமான தனித்தன்மைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மோட்சப் பிரயாணத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளின் சுருக்கம் தரப்பட்டுள்ளது.

மோட்சத்துக்குப் பயணம் மேற்கொள்ளும் கிறிஸ்தியான் நற்செய்தியாளரைச் சந்தித்தபின் பயணம் துவங்குகிறான். கடின நெஞ்சன், இளகிய நெஞ்சன் இருவரையும் வழியில் கண்டு, போகவேண்டிய வழியை விட்டு விலகியதை உணர்ந்து திரும்பவும் நற்செய்தியாளரின் வழிகாட்டுதலில் நல்வழிக்குத் திரும்புகிறான். இயேசுவின் சிலுவையைத் தரிசித்தபின் கடினமான மலைப் பகுதிகளைக் கடந்து செல்கிறான். பள்ளத்தாக்கு என்னும் பகுதியில் அப்பொல்லியோன் என்னும் பிசாசோடு பயணத்தைத் தடைசெய்யும் பகைவனுடன் போரிட்டு வெற்றியுடன் பயணம் மேற்கொள்ளுகிறான். உண்மையானவன் என்னும் பெயருடையவனோடு பயணத்தைத் தொடர்ந்து பல்வேறு அனுபவங்களைப் பெறுகிறான். மாயாபுரி, சந்தேகக்கோட்டை என்னும் இடங்களில் தடைகளைக் கடந்து மகிழ்ச்சி மலை, பேரின்ப புரம் என்னும் இடங்களில் தங்கி இளைப்பாறி, மற்றவர்களோடு மோட்சத்தைச் சென்றடைகிறான்.

நூலில் கூறப்பட்டுள்ள செய்திகள், சந்திக்கிற மக்கள் உருவகமாக இருந்தாலும் யதார்த்த நிலையினை வெளிப்படுத்துகின்றனவாகவும், வாழ்வியலைச் செம்மைப்படுத்துகின்றனவாயும் அமைந்துள்ளன. உலகியல் நடப்புகளினின்று தனித்து நில்லாமல் உடனிருந்து ஆன்மிக வழிகாட்டுவதாகவும் நூல் விளங்குகிறது. மொழிபெயர்ப்பின் தனித்தன்மைகள் நூல்களின் மேற்கோள்களோடு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. சூ. இன்னாசி, கிறித்தவ தமிழ் கொடை, தொகுதி 1, ப.51.
2. மேலது, ப.52.
3. மேலது, பக்.58-59.
4. ந. முருகேச பாண்டியன், *மொழிபெயர்ப்பியல்*, ப.12

5. வீ.சந்திரன், *மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்*, ப.6.
6. மேலது, ப.9.
7. மேலது, ப.10.
8. சாமுவேல் பவுல், (மொ.பெ.ஆ.), *மோட்சப் பிரயாணம்*, ப.iii-iv.
9. மேலது, பக்.iv-v.
10. மேலது, ப.41-42.
11. மேலது, ப.44.
12. மேலது, பக்.2-3.
13. மேலது, பக்.4-5.
14. மேலது, ப.19.
15. *பரிசுத்த வேதாகமம்*, நீதிமொழிகள் 6:6.
16. சாமுவேல் பவுல், (மொ.பெ.ஆ.) மு.நூ., ப.51.
17. மேலது, பக்.53-54.
18. *பரிசுத்த வேதாகமம்*, மீகா 7:8.
19. சாமுவேல் பவுல், (மொ.பெ.ஆ.) மு.நூ., பக்.84-95.
20. மேலது, பக்.115-125.
21. மேலது, பக்.128-130.
22. மேலது, ப.166.
23. மேலது, ப.217
24. *பரிசுத்த வேதாகமம்*, வெளிப்படுத்தல் 5:13.
25. John Bunyan, *The Pilgrim's Progress*, p.19.
26. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, ப.1.
27. John Bunyan, *Op.Cit.*, p.20.
28. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, ப.3.
29. John Bunyan, *Op.Cit.*, p.21.
30. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, ப.5.
31. John Bunyan, *Op.Cit.*, p.21.
32. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, ப.6.
33. John Bunyan, *Op.Cit.*, p.22.
34. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, ப.7.

35. John Bunyan, *Op.Cit.*, p.24.
36. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.10.
37. John Bunyan, *Op.Cit.*, p.26.
38. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.14.
39. John Bunyan, *Op.Cit.*, p.28.
40. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.17.
41. John Bunyan, *Op.Cit.*, p.28.
42. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.17.
43. John Bunyan, *Op.Cit.*, p.29.
44. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.17.
45. John Bunyan, *Op.Cit.*, p.29.
46. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.17.
47. John Bunyan, *Op.Cit.*, p.30.
48. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.19.
49. John Bunyan, *Op.Cit.*, p.34.
50. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.25.
51. John Bunyan, *Op.Cit.*, p.31.
52. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.21.
53. John Bunyan, *Op.Cit.*, p.21.
54. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.22.
55. John Bunyan, *Op.Cit.*, p.32.
56. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.22.
57. John Bunyan, *Op.Cit.*, p.33.
58. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.23.
59. John Bunyan, *Op.Cit.*, p.34.
60. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.25.
61. John Bunyan, *Op.Cit.*, p.33.
62. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.24.
63. John Bunyan, *Op.Cit.*, p.47.
64. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.)* மு.நூ., ப.44.

65. John Bunyan, *Op.Cit.*, p.74.
66. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.86.
67. John Bunyan, *Op.Cit.*, p.79.
68. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.93.
69. John Bunyan, *Op.Cit.*, p.80.
70. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.93.
71. மேலது, ப.99.
72. மேலது, ப.100.
73. மேலது, ப.101.
74. மேலது, ப.106.
75. மேலது, ப.104.
76. மேலது, ப.107.
77. மேலது, ப.109.
78. மேலது, ப.112.
79. John Bunyan, *Op.Cit.*, p.92.
80. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.113.
81. மேலது, ப.125.
82. மேலது, ப.130.
83. மேலது, ப.130-131.
84. மேலது, ப.133.
85. மேலது, ப.142.
86. மேலது, ப.144.
87. John Bunyan, *Op.Cit.*, p.112.
88. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.145.
89. John Bunyan, *Op.Cit.*, p.113.
90. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.146.
91. John Bunyan, *Op.Cit.*, p.114
92. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.147.
93. John Bunyan, *Op.Cit.*, p.115
94. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.148,149.

95. John Bunyan, *Op.Cit.*, p.118.
96. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.154.
97. John Bunyan, *Op.Cit.*, p.121.
98. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.160.
99. John Bunyan, *Op.Cit.*, p.128.
100. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.170.
101. John Bunyan, *Op.Cit.*, p.129.
102. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.171.
103. John Bunyan, *Op.Cit.*, p.129.
104. சாமுவேல் பவுல், *(மொ.பெ.ஆ.) மு.நூ.*, பக்.171.
105. மேலது, ப.174.
106. மேலது, ப.175.
107. மேலது, ப.175,176.
108. மேலது, ப.176.
109. மேலது, ப.183.
110. மேலது, ப.183.
111. மேலது, ப.185.
112. மேலது, ப.186.
113. மேலது, ப.186.
114. மேலது, ப.190.

விவிலிய விளக்க நூல்கள்

விவிலியத் திருமறை கிறித்தவர்களின் புனிதமான ஆன்மீக வழிகாட்டி நூல். விவிலியம் உணர்த்தும் உட்பொருளை விளங்கிக் கொண்டு அவற்றைத் தங்களுடைய வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியது கிறித்தவர்களுடைய கடமையாகும். விவிலியத்தை விளக்கிக் கூறுவதற்கு உலக மொழிகளில் மிகுதியான நூல்கள் வெளிவந்து கொண்டுள்ளன. தமிழில் விவிலியத்தை விளங்கிக் கொள்வதற்குப் பல்வேறு பிரிவினரும் விளக்க நூல்களாகவும் மொழிபெயர்ப்பு நூல்களாகவும் பல நூல்களை வெளியிட்டு வருகின்றனர். விவிலியத்தைத் தொகுப்பதற்கும் வகைதொகை செய்வதற்கும் புரிந்துகொள்ளுவதற்கும் மூலமொழிச் சொற்களைப் பொருள் அறிந்து கொள்வதற்கும் எளிமையான வழிமுறைகள் தற்போது காணக்கிடக்கின்றன.

சாமுவேல் பவுல் ஐயர் வாழ்ந்த காலத்தில் தமிழில் விவிலியத்தை அறிந்து கொள்வதற்கு நூல்கள் இல்லாத சூழலில் விவிலியத்தை விளக்குவதற்கு அவர் மேற்கொண்ட பணி எண்ணிப்பார்ப்பதற்கு அரிய செயலாகும். விவிலியத்தின் ஆழ்ந்த பொருளை முழுமையாகவும், எளிமையாகவும், தெளிவாகவும் தம் நூல்களில் விரிவாக விளக்க முற்படுகிறார். முழு விவிலியத்தையும் அவர் வரலாற்றியல் ஆய்வுநோக்கிலும் பக்தி வாழ்வின் வளர்ச்சிநோக்கிலும் முழுமையான விளக்க நூல்களை வெளியிட்டுள்ளார். விவிலியத்தை வரலாற்றுப் பின்புலத்தோடு முழுமையாக விளக்கும் நூலாக வேதோபகரணம் அமைகிறது. பிறமொழி மொழிபெயர்ப்பு வரலாற்றையும், தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றையும் விளக்குகிறார். அவரது அட்டவணைகள் எளிமையாக அறிந்து கொள்ளும் அகராதி முறைமையில் அமைந்துள்ளது சிறப்பாகும். தமிழில் இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றைக் கால வரிசை அடிப்படையில் விளக்கும் முதல் நூல் 'இயேசு கிறிஸ்து' என்னும் நூல். இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றை எளிமையாக, விரிவாக, முழுமையாகக் கூறும் நூலாக இது அமைந்துள்ளது.

விவிலியக் கதை மாந்தர்களின் வாழ்க்கையினை விளக்க பழைய ஏற்பாட்டுப் புருஷர்கள் (பாகம் 1, 2), புதிய ஏற்பாட்டுப் புருஷர்கள், வேத ஸ்திரீகள் ஆகிய நான்கு நூல்களைப் படைத்துள்ளார். வேத ஸ்திரீகள் என்னும் நூல் கிடைக்கவில்லை.

விவிலியத்தின் பல்வேறு முனைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கதைமாந்தர்கள் அவர்களுடைய பண்புநலனையும் தனித்தன்மையையும் வெளிப்படுத்துகிறவர்களாகவும் அவர்கள் அகமன ஆழத்தில் புதைந்து கிடக்கும் ஆளுமையைப் புலப்படுத்துபவர்களாகவும் இருப்பவர்களைச் சாமுவேல் பவுல்

ஐயர் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார். கதை இலக்கியங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள பாத்திரப்படைப்பு இலக்கணங்கள் உரைநடைக்கும் பொருந்தும். காரணம் கதை இலக்கியங்கள் அனைத்தும் உரைநடையில் எழுதப்படுவனவாகும்.

கதை மாந்தர் புரியும் நிகழ்ச்சிகளே கதையின் கரு; மாந்தர் ஓவியமே பாத்திரப்படைப்பு[1] என்னும் கூற்று கதைமாந்தர்கள் பண்பும் செயலும் ஒருங்கே அமையப்பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது. 'புனைகதை' என்பது மனிதர்களைப் பற்றியும், நடைமுறை வாழ்வில் காணும் சிக்கல்களைப் பற்றியும் பேசுவதாக அமைகிறது. மனித வாழ்வில் எத்தனையோ நிகழ்ச்சிகள் அன்றாடம் நிகழ்கின்றன. "ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதனோடு சம்பந்தப்பட்ட மனிதர்களின் இயல்பு, நோக்கம், எதிர்வினை முதலியவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே ஒரு செயலை அல்லது நிகழ்ச்சியைப் படைத்துக்காட்ட மனிதர்களைப் படைக்க வேண்டியுள்ளது. புனைகதைகளில் இச்செயற்பாங்கே பாத்திரப்படைப்பு"[2] என்று *டாக்டர் மா. இராமலிங்கம்* குறிப்பிடுகிறார்.

உரைநடையில் நிகழ்ச்சிகளை விடவும் மாந்தர் படைப்பு முதன்மை பெறுகிறது. ஏனெனில் உரைநடை ஆசிரியன் மாந்தர்கள் மூலமாகத்தான் நிகழ்ச்சிகளையும் சூழல்களையும் உயிர்ப்புடன் புலப்படுத்த வேண்டியுள்ளது.

கதையிலக்கியங்களின் உயிர்த்தன்மையை அக்கதைகளில் இடம்பெறும் பாத்திரங்களினால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். அவ்வாறே, உரைநடையில் கதை மாந்தர்களே கதைக் கருவையும், வாசகர் மனத்தையும் ஈர்ப்பதாகக் காட்டப்படுகின்றனர். இந்நிலையில் அப்பாத்திரங்களின் பண்புகளும் பலங்களும் பலவீனங்களும் வெளிப்படுவதைக் காணலாம். இதனை *மீனாட்சி முருகரத்தினம்,* "பாத்திரப்படைப்புப் பெயரிடும்போதே அவற்றின் பண்புகளும் செயல்களும் தொடங்கி விடுகின்றன"[3] என்று கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

வாசகர்களைப் பெரிதும் ஈர்க்கும் கதாபாத்திரங்கள் அவர்களின் மனத்தைவிட்டு நீங்குவதில்லை. கதையானது வாசகர்களிடையே விரும்பி ஏற்பதற்கு அவர்களின் மனத்தை விட்டு நீங்காமல் இருப்பதற்கு, அக்கதையில் உயிராகவும் உணர்ச்சியாகவும் அமைவது பாத்திரங்களே என்பதை *இரா.மோகன்,* "கரு, நடை, நோக்கு நிலை ஆகியவை நம் நெஞ்சில் நிற்பதில்லை. உயிரும் உணர்ச்சியும் பெற்றுத் திகழ்வது பாத்திரமே"[4] என்று வலியுறுத்துகிறார்.

கதை நிகழ்ச்சிகளின் வளர்ச்சிக்கும், உயிரோட்டத்திற்கும் கதா பாத்திரங்களே முதன்மை பெறுவதை மேற்காணும் செய்திகள் உறுதிப் படுத்துவதிலிருந்து, கதை இலக்கியங்களில் இடம்பெறும் பாத்திரங்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிகின்றது. கதைக் கரு, நடை, பின்னிச் செல்லும் பாங்கு என்ற அனைத்தையும் விட வாசகர்களின் மனதில் எளிதில் தாக்கம் பெறச் செய்வது பாத்திரங்களே என்பது இங்குச் சுட்டத்தக்கது.

சாமுவேல் பவுல் ஐயர் அவர்களின் படைப்புகளில் இடம்பெற்றுள்ள மாந்தர் படைப்புகள் சமுதாயத்தில் காணும் பல்வேறு வகையான மனிதர்களின் குணநலன்கள் மட்டும் கொண்டவர்களல்ல. அவர்கள் இறைத் தன்மை கொண்டவர்கள். அற்புதச் செயல்களை மேற்கொண்டவர்கள்.

சாமுவேல் பவுல் ஐயர் மாந்தர்களில் ஒரு சிலரைத் தவிர, மற்ற பாத்திரங்களைப் பல்வேறு கோணங்களில் படைத்துக் காட்டுகிறார். மனிதர்களின் பல்வேறு விதமான பண்புகளையும் இயல்புகளையும் வெளிக் கொணரவே படைக்கப்பட்டுள்ளனர் எனலாம். இதனைக் *க.கைலாசபதி*, "பாத்திரப்படைப்புகள் இயக்கத்தில் அவர்களின் பண்புகளைத் தாங்களே வெளிப்படுத்த வேண்டுமே தவிர, அப்பாத்திரங்களின் தன்மைகளை ஆசிரியனே விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை."[5] என்பதற்கு ஏற்ப விவிலியத்தின் பாத்திரங்கள் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அவ்வகையிலேயே ஆய்வுக் கண்ணோட்டத்துடன் மாந்தர்களை அறிமுகப் படுத்தி விளக்குகிறார்.

சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் விவிலியத்தின் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு பகுதியில் கூறப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மாந்தர்களின் குண நலன்களையும் அவர்களிடமிருந்து மக்கள் பின்பற்ற வேண்டிய ஒழுகலாறுகளையும் விலக்க வேண்டிய தீய குணங்களையும் அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் விரித்துரைக்கிறார். மொத்தம் 54 விவிலிய மாந்தர்களை மூன்று புத்தகங்களில் விளக்கிக் காட்டியுள்ளார்.

பூலோக சிருஷ்டிப்பு தொடங்கி, ஆதாம் முனிவர், காயீன் ஆபேல், பரமேறி முனிவர், பிரளய முனிவர், விசுவாச முனிவர், லோத்து, ஈசாக்கு முனிவர், யாக்கோபு முனிவர், சொப்பன முனிவர் யோசேப்பு, மோசே முனிவர், முதல் ஆசாரியன், ஜோஷியமுனி, தளகர்த்த முனிவர், ஆகான், கிதியோன், ஜடாமுனி, ஏலி, சாமுவேல் தீர்க்கதரிசி, சவுல் அரசன், இராஜ புலவர் ஆகிய விவிலிய மாந்தர்களைப் பழைய ஏற்பாட்டுப் புருஷர்கள் முதலாம் பாகத்தில் சாமுவேல் பவுல் ஐயர் விரித்துரைத்துள்ளார்.

சாலொமோன், ரெகொபெயாம், யோசபாத்து அரசன், ஆகாப், எலியா, எலிசா, நாகமான், எசேக்கியா இராஜா, யோசியா, எஸ்றா, யோபு - பொறுமை பக்தன், ஏசாயா தீர்க்கதரிசி, எரேமியா - புலம்பும் பக்தன், தானியேல் மந்திரி, யோனா ஆகிய கதை மாந்தர் படைப்புகளைப் பழைய ஏற்பாட்டுப் புருஷர்கள் இரண்டாம் பாகத்தில் சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் படைத்துள்ளார்.

சகரியா, சிமியோன், சாஸ்திரிகள், யோவான் ஸ்நானகன், அந்திரேயா, நாத்தான்வேல், மத்தேயு, சகேயு, சீமோன் பேதுரு, யோவான் அப்போஸ்தலன், யூதாஸ்காரியோத், பொந்தியு பிலாத்து, குணப்பட்ட கள்ளன், ஸ்தேவான், பவுல் அப்போஸ்தலன், கொர்நேலியு, தீமோத்தேயு, ஒநேசிமு என்னும் விவிலிய மாந்தர்களைப் புதிய ஏற்பாட்டுப் புருஷர்கள் என்னும் தலைப்பில் படைத்துள்ளார்.

சாமுவேல் பவுல் ஐயர் விவிலிய மாந்தர்களைத் தமிழ் மரபு வழியாகவும் அவர்கள் மேற்கொண்ட செயலின் அடிப்படையிலும் அடைச் சொற்களோடு பெயரிட்டுள்ளார். முனிவர் என்ற சொல்லை இறை அடியவர்கள் என்ற அடிப்படையில் சிலருக்கு இணைத்துள்ளார்; சான்றாக, ஆதாம் முனிவர், மோசே முனிவர் என்பதைக் கொள்ளலாம். சில பெயர்களைப் பண்பின் அடிப்படையிலும், செயலின் அடிப்படையிலும் பிரளய முனிவர், பரமேறி முனிவர், விசுவாச முனிவர், சொப்பன முனிவர் யோசேப்பு, ஜோஷிய முனி (பிலேயாம்), ஜடாமுனி (சிம்சோன்), யோபு பொறுமை பக்தன், எரேமியா புலம்பும் பக்தன், ஊமைப் பூசாரியார் (சகரியார்), வனத்து ரிஷி (யோவான் ஸ்நானகன்) குள்ள பக்தன் (சகேயு) என்றவாறு குறிப்பிடுகிறார். விவிலியத்தில் இடம் பெற்றுள்ள பெண்கள் குறித்து இவர் எழுதிய வேத ஸ்திரீகள் என்னும் நூல் கிடைக்கவில்லை.

உலகப் படைப்பு வரலாறு

உலகத் தோற்றத்தைக் குறித்துச் சமயங்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. கிறித்தவ மறைநூலில் கூறப்பட்டுள்ள செய்தியைச் சாமுவேல் பவுல் ஐயர் *'பூலோக சிருஷ்டிப்பு'* என்னும் தலைப்பில் விளக்குகிறார்.

நாம் வாழும் உலகம் எவ்வாறு உண்டானது? சிலர் அது தானாய் உருவானது என்றும் அல்லது சிலரின் கூற்றுப்படி அறிவியல் நோக்கில் ஆராய்ந்தால் பூமியானது சிறுசிறு துகள்கள் சேர்ந்து பல ஆயிரக்கணக்கான வருடங்கள் வளர்ச்சிபெற்று உருவானது என்றும் தெரிவிக்கின்றனர். ஆனால் பூலோக சிருஷ்டிப்பை விளக்கும் நம்பத்தக்க விளக்கங்களை எந்த நூலும் கூறினதாக இல்லை. ஆனால் வேதத்தில் பூலோக சிருஷ்டிப்புக்கான விளக்கம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாகச் சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக்காட்டுகின்றார்.

தேவன் தான் இந்தப் பூலோகத்தைப் படைத்தார் என்றும் தேவன் இந்தப் பூலோகத்தைச் சிருஷ்டிக்கச் சித்தங்கொண்டதே, அவரை நாம் துதிக்கவேண்டும் என்பதற்காகத்தான்[6] என்றும் கூறுகிறார். ஆதலால் நாம் இறைவனின் திருவுள்ளத்தை மதிப்போடு தியானித்து, "கர்த்தாவே, தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாய் இருக்கின்றன"[7] என்று வேதத்திலுள்ள ஒரு ஆதாரமான பகுதியைச் சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக்காட்டுகின்றார்.

மேலும் தேவன் தனது சிருஷ்டிப்புப் படலத்தை முறைப்படி வரிசையாக செய்திருப்பதாகக் கூறும் திருமறைப் பகுதிகளையும் பவுல் ஐயர் எடுத்துக் காட்டுகின்றார்.

கடவுளால் ஒவ்வொரு நாள் படைக்கப்பட்டதையும் முதலாங்கால வரிசைமுதல் ஐந்தாங்கால வரிசை என முறைப்படி தன் விளக்கத்தையும் விவிலிய ஆதாரங்களையும் கூறுகிறார்.

"கருணை நிறைந்த கடவுள் இவ்வகண்ட லோகத்தைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தபோது, முதலாவது வெளிச்சத்தை உண்டாக்கினார். அந்த வெளிச்சம் உண்டானவுடனே ஆதியில் அண்டமெங்கும் சூழ்ந்திருந்த அந்தகாரமானது அகன்று ஒளியிலிருந்து பிரிந்து விட்டது. இது சிருஷ்டிப்பின் *முதலாங்கால வரிசையாயிருக்கிறது. ஆதியாகமம் 1:3-5*

அப்புறம் தேவன் ஜலத்திரளின் மத்தியில் ஆகாயத்தைப் பரப்பி, அதை மேல்ஜலம் கீழ்ஜலமாக வகுத்து ஆகாய விரிவுக்கு வானமென்று பேரிட்டார். இது *இரண்டாங்கால வரிசையாயிருக்கிறது. ஆதியாகமம் 1:6-8*

அதன்பின்பு ஆகாயவிரிவின்கீழ் ஏகமாய்த் திரண்டிருந்த ஜலத்தை ஓரிடத்தில் சேர்த்து, வெட்டாந்தரை காணப்படச் செய்தார். ஜலத்திரள் சமுத்திரமென்றும் வெட்டாந்தரை பூமி என்றும் அழைக்கப்பட்டது. வெட்டாந்தரை என்றழைக்கப்பட்ட பூமியில் உடனே புல்லும், பூண்டும், கனி விருட்சங்களும் உண்டாயின. *இது மூன்றாங்கால வரிசையாயிருக்கிறது. ஆதியாகமம் 1:11-13*

அப்பால் ஒளி இருள் என்ற வித்தியாசம் மாத்திரமல்ல, பகல் இரவு என்ற வித்தியாசம் விளங்கும்படி விசேஷச் சுடர்களைத் தேவன் ஸ்தாபிக்கச் சித்தங்கொண்டு பகலை ஆளும்படி சூரியனையும், இருளை ஆளும்படி சந்திரனையும் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். இவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும், நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் தேவனால் ஸ்தாபிக்கப்பட்டன. *இது நான்காம்கால வரிசையாயிருக்கிறது. (ஆதியாகமம் 1:14-19)*

அப்புறம் ஆகாயத்தில் வாழும் பட்சிகளும், சமுத்திரத்தில் வாழும் மச்ச ஜாதிகளும் உண்டாக்கப்பட்டன. தேவன் ஆகாயத்துக்கேற்ற ஜீவன்களால் ஆகாயத்தை நிரப்பி, ஜலத்துக்கேற்ற ஜீவன்களால் ஜலத்தை நிரப்பினார். *இது சிருஷ்டிப்பின் ஐந்தாம் கால வரிசையாயிருக்கிறது. (ஆதியாகமம் 1:20-23)*

இம்மட்டும் பூமியில் நடமாடவும் அதன் புல்பூண்டுகளால் மகிழ்ச்சிகொள்ளவும், யாதொரு ஜீவன்களும் இருந்ததில்லை. ஆதலால் தேவன் பூமியை மிருக ஜீவன்களாலும் ஊரும்பிராணிகளாலும் நிரப்பினார். மற்றும் ஆதாம், ஏவாள் என்னும் மனிதர்களையும் உண்டாக்கினார். *இது சிருஷ்டிப்பின் ஆறாங்காலப் பிரிவு. (ஆதியாகமம் 1:23-31)*

பின்பு தேவன் தமது கிரியைகளில் மகிழ்ந்து அது நல்லது மற்றும் எல்லாம் நன்றாயிருக்கிறது *(ஆதி.1:31)* என்று கூறி மகிழ்ந்ததாகத் தெரிவிக்கின்றார்.

இவ்வாறாகச் சாமுவேல் பவுல் ஐயர் பூமியின் சிருஷ்டிப்பின் வரலாறாகத் தாம் கற்றறிந்த பரிசுத்த வேதாகமத்தின் துணைக்கொண்டு விளக்குகிறார்.

ஆதாம் முனிவர்

இவர் உலகின் முதல் மனிதராகத் தேவனால் மண்ணைப் பயன்படுத்திப்

படைக்கப்பட்டவர். குழந்தைப் பருவத்தை அறியாதவர். தேவன் ஏவாளைப் படைத்து இவரிடம் கொண்டு வந்து இவருக்கேற்ற துணையாக அளித்தார்.

ஆதாம் என்னும் எபிரெயப் பெயருக்குச் *சிவந்தபூமி* அல்லது *தோல் நிறம் சிவப்பு*[8] என்று பொருள்.

மனிதன் எப்படி உலகில் வந்தான்? என்ற கேள்வியை யாரிடம் கேட்டாலும் கண்மூடிக்கொண்டு பலர் குரங்கிலிருந்து வந்தான் என்று கூறுவர். சிலர் அப்படியென்றால் இப்பொழுது ஏன் வரவில்லை என்று சொல்லி விவாதம் செய்கிறவர்களும் உண்டு. டார்வின் பரிமாண வளர்ச்சிப்படி குரங்கிலிருந்து படிப்படியாக வளர்ச்சிபெற்று மனிதன் தோன்றினான் என்று அறிவியல் கூறுகிறது. மேலும் பலர் பல புராணங்களையும், கட்டுக்கதைகளையும்கூட மனிதனைப் பற்றிக் கூறுவதுண்டு.

உலகின் முதல் மனிதன் யார்? என்ற கேள்விக்குப் பலரும் கொடுக்கும் பதில் ஆதாம். *ஆதாம் யார்? எப்படி வந்தான்?* என்ற கேள்விக்குப் பலரிடம் பதில் இல்லை. ஆனால் இக்கருத்துக்களுக்கு ஏற்ற வகையில் முதல் மனிதனாகிய ஆதாமைத் தேவன் மண்ணினால் படைத்தார் மற்றும் தம் சாயாலாகவே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதி அவனை உயிர்பெறச் செய்தார் அவன் ஜீவாத்துமாவானான் என்றும் பின்பு ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி அவன் உடலிலிருந்து ஒரு எலும்பை எடுத்து அதன்மூலம் உலகின் முதல் மனுஷியும் ஆதாமின் மனைவியுமாகிய ஏவாளையும் உண்டாக்கியதாகச் சாமுவேல் பவுல் ஐயர் திருமறையின்வழி விளக்குகிறார்.

"*ஆதாம் என்பதற்கு மண் அல்லது செம்மண்* என்று பொருள். இந்தப் பேர் மண்ணால் உண்டாக்கப்பட்ட முதல் ஆணின் சடலத்துக்கு மாத்திரமல்ல, மனுஷ சுபாவத்துக்குப் பொதுப் பேராகவும் இருந்தது"[9] என்று விவிலிய மேற்கோளோடு (ஆதியாகமம் 5:2) விளக்கமளிக்கிறார்.

மற்றுமொரு கேள்வி, *உலகில் பாவம் மற்றும் தீமை எப்படி வந்தது? மனிதன் எப்படிப் பாவம் செய்தான்?* என்ற கேள்விக்கு யாரிடமும் போதுமான விளக்கம் இதுவரை இருந்ததில்லை. ஆனால் இதனை விவிலிய அடிப்படையில் பவுல் ஐயர் தம் நூலில் விளக்குகிறார்.

தேவன் ஆதாமை ஏதேன் என்னும் செழிப்பானதொரு சோலைக்குள் வைத்து மேலும் அத்தோட்டத்தைப் பராமரிக்கும் வேலையைக் கொடுத்தார். அத்தோட்டத்தின் மத்தியில் இரண்டு விருட்சங்கள் தழைத்து ஓங்கி வளர்ந்து வானத்தை அளாவி நின்றன. அவைகளில் ஒன்றுக்கு நன்மை தீமை அறியத்தக்க விருட்சமென்றும், மற்றதற்கு ஜீவ விருட்சமென்றும், பேர் வழங்கப்பட்டது.[10] இதில் நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்று தேவன் கட்டளையிட்டார். ஆனால் ஆதாம் தன் மனைவி ஏவாளின் பேச்சைக்கேட்டு அந்த மரத்தின் கனியைச் சாப்பிட்டதால் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்ததாகத் திருவார்த்தையின்படி கூறுகிறார்.

இவை முதன்முதலில் உலகில் பாவமும் துன்பமும் பிறந்த வரலாறாகச் சாமுவேல் பவுல் ஐயரால் விவிலிய ஆதாரங்களைக் கொண்டு விளக்கப் படுகின்றது.

காயீன் ஆபேல்

ஏதேன் சோலையிலிருந்து ஆதாம் ஏவாள் துரத்தப்பட்ட பிறகாலத்தில் அவர்களுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தனர். அவர்களில் முதற்பிறந்தவன் காயீன் மற்றும் இரண்டாமவன் ஆபேல். காயீன் விவசாயி, ஆபேல் ஆடு மேய்ப்பவன். ஆனால் காயீனும் ஆபேலும் இரட்டைப் பிள்ளைகளா-யிருந்தார்கள்[11] என்று சிலர் அனுமானிப்பதாகச் சாமுவேல் பவுல் ஐயர் கூறுகிறார்.

'காயீன்' என்னும் எபிரெயப் பெயருக்குச் 'சம்பத்து'[12] என்று பொருள். 'ஆபேல்' என்னும் எபிரெயப் பெயருக்குச் 'சுவாசம்'[13] என்று பொருள். ஒருநாள் காயீன் கடவுளுக்குக் காணிக்கையாக விளைச்சலில் மிச்சமிருப்பதைக் கொஞ்சம் எடுத்து வைத்தான். ஆபேல் தன் சிறந்த ஆடுகளில் ஒரு முதல் குட்டியை எடுத்து அதன் சிறந்த பாகங்களைப் பலியாகத் தந்தான். ஆகவே ஆபேலின் பலி கடவுளுக்கு விருப்பமாக இருந்தது. இதை ஏற்றுக்கொண்டார். காயீனின் பலியை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனால் காயீன், ஆபேல் மேல் வன்மம் கொண்டான், மேலும் ஆபேலைக் கொல்லத் துடித்தான். கடவுள் காயினிடம், "பாவம் உன்னைச் சிக்கவைக்கக் காத்திருக்கிறது, அதிலிருந்து உன்னைக் காத்துக்கொள் என எச்சரித்தார்." ஆனாலும் காயினின் வன்மம் வளர்ந்தது. தன் தம்பி ஆபேலை ஒரு வயல்வெளிக்கு அழைத்துச் சென்று கொலை செய்தான்.

கடவுள் காயீனிடம், 'உன் தம்பி எங்கே?' என்று வினவியதற்கு 'என் தம்பிக்கு நான் காவலாளியா என்ன?' எனப் பதில் தந்தான் காயீன். கடவுள் அவனைத் தூர நாட்டிற்கு ஓடிப்போகும்படி சபித்தார். 'நான் தூர நாட்டிற்கு ஓடிப்போனால் என்னைக் கொன்று போடுவார்களே? இந்தத் தண்டனை கொடுமையானது' எனக் காயீன் முறையிட, கடவுள் அவனிடம், 'உன்னைக் கொல்பவனுக்குப் பலமடங்கு தண்டனை காத்திருக்கிறது' என்று கூறி, யாரும் அவனைக் கொல்லாதபடி அவன்மீது ஒரு அடையாளமிட்டார்.[14] காயீன் மனமொடிந்து ஏதேனைவிட்டுத் தொலைதூரம் போய் வாழ்ந்தான்.

இதுவே *உலகில் முதன்முதலில் நடந்த கொடூரப் பாவமான கொலைச் சம்பவம்.* இப்படிப்பட்ட பாவத்தினால் பின்வரும் சந்ததியினரில் கோபமும், மூர்க்கமும், அக்கிரமமும், துணிகரமும் குடிகொண்டு இன்றும் இத்தீமைகள் உலகில் நிலவுவதாகச் சிலர் நம்புகின்றனர்.

பரமேறி முனிவர் (ஏனோக்கு)

ஆதாமின் மகன் காயீன், காயீனின் மூத்த மகன் ஏனோக்கு. காயீன்

தேவனுக்கு முன்பாகக் குற்றமுள்ளவனாய் இருந்தான். அவனுடைய மகன் ஏனோக்கு தேவபக்தி நிறைந்தவனாயிருந்தான்.

ஏனோக்கு என்னும் எபிரெயப் பெயருக்கு 'அர்ப்பணிக்கப்படுதல்'[15] என்று பொருள்.

காயீனுடைய சந்ததியார் அவனைப் போலவே பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் அளவில் சுகமாயிருக்கவும் விரும்புகிறவர்களாய்க் காணப்பட்டார்கள். அவனுடைய சந்ததியார் கைத்தொழிலிலும் இசைக் கருவிகளை இசைப்பதிலும் வல்லவர்களானார்கள்.

இக்காலத்தில் தேவன் காயீன் கொலை செய்த ஆபேலுக்குப் பதிலாக, வேறொரு புத்திரனைக் கொடுத்தார். அவனுக்குச் சேத் என்று பேர். *'விளையும் பயிர் முளையிலே தெரியும்'*[16] என்ற பழமொழிபோல இவன் குணம் சிறுவயதிலேயே விளங்கிற்று. இவன் தேவபக்தி நிறைந்தவனாயிருந்தான்.

சேத்து என்னும் திருத்தொண்டனுக்கு ஏனேஸ் என்றொரு மகன் பிறந்தான். அவன் தன் தகப்பனோடுகூடத் தேவ பக்தியை மற்றவர்களுக்கு விருத்திபண்ணுகிற வேலையில் அதிக முயற்சிபண்ணுகிறவனாய் இருந்தான். இவருடைய காலத்தில் தான் *'மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்.'*[17]

உலகத்தில் வழிபாடுகள், பிரார்த்தனைகள், ஆராதனைகள், தியானங்கள் துவங்கியது எப்போது? என்ற கேள்விக்குப் பரமேறி முனிவர் சரித்திரத்தில் பதில் கிட்டியுள்ளது போல் தோன்றுகிறது. அவர் சாகாமல் பரலோகம் போனதால் இனி அவரைப் *'பரமேறி முனிவர்'* என்னும் பேரால் அழைப்போமாக"[18] என்று பெயரிட்டு அவருடைய பண்புகளையும் செயல்களையும் விளக்குகிறார்.

பரமேறி முனிவர் தேவனோடு எவ்விதமாய்ச் சஞ்சரித்து வந்தார் என்பது வெளிப்படையாய்ச் சொல்லப்படாவிட்டாலும் ஜெபகுணத்தினாலும், தியான முயற்சியினாலும் இதை நடத்தி வந்தார். இவர் தம்மில் பக்தியை வளர்த்து தேவனோடு சஞ்சரித்து வந்தது மாத்திரமல்ல, பிறருக்கும் அதிகப் பிரயோஜனமுடையவராய் வாழ்ந்து வந்தார். *"அவரே இவ்வுலகத்தில் எழும்பிய முதலாம் பிரசங்கியும் முதலாம் தீர்க்கதரிசியுமாயிருந்தார்."*[19]

ஏனோக்கின் ஆகமம் [20] என்ற பேரால் வழங்கப்படுகிற அப்போகிரிப்பா ஆகமம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஆகமம் இருக்கலாம் என்ற அபிப்பிராயம் இருப்பதாக ஏனோக்கின் சிறப்பைக் குறித்து விளக்குகிறார்.

பிரளய முனிவர் (நோவா)

நோவா என்னும் எபிரெயப் பெயருக்கு ஓய்வு, ஆறுதல்[21] என்று பொருள். இவர் தந்தை பெயர் லாமேக்கு. நோவாவுக்கு சேம், காம், யாப்பேத் என்னும் மூன்று மகன்கள் இருந்தனர்.

உலகம் ஒருதரம் மழையால் அழிக்கப்பட்டது என்கிற செய்தி காலங்காலமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் நம்பப்பட்டும் வருகிறது. உலகம் எப்படி அழிந்தது? அதில் தப்பித்துக்கொண்டவர்கள் யார் என்பதை அறிய நோவா என்ற பக்தனின் வரலாறு உறுதுணையாய் இருக்கின்றது.

பரமேறி முனிவருக்கு மூன்று தலைமுறைக்குப் பின்பு ஆதிமனிதன் உருவாக்கப்பட்ட பத்தாந்தலைமுறையில் ஒரு நேர்மையான பக்தன் உலகில் வாழ்ந்தார். அவர் காலத்தில் பூலோகம் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டு மறுபடியும் குடியேற்றப்பட்டது. அவர் அந்தப் பிரளயகாலத்திற்குப் பின்னும் இருந்ததால் அவரைப் *பிரளய முனிவர்* என்று அழைப்போமாக[22] என்று சாமுவேல் பவுல் ஐயர் பெயர்க்காரணம் குறிப்பிடுகிறார்.

மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்று தேவன் கண்டு மனுஷனைப் பூமியிலே உண்டாக்கினதற்காக மனஸ்தாபப் பட்டார்.[23] ஆகவே தேவன் இந்த உலகத்தை அழிக்கும் எண்ணம் கொண்டார்.

நோவாவும் அவரது குடும்பமும் கடவுளுக்கு உண்மையாய் இருப்பதைக் கண்டு கடவுள் நோவாவிடம், "பெரும் வெள்ளம் ஒன்றை ஏற்படுத்தி இந்த உலகை அழிக்கப் போகிறேன். படகு (பெரிய பல அறைகளுள்ள) ஒன்றைச் செய். உலகிலுள்ள உயிரினங்களில் அனைத்திலும் ஒரு ஜோடியை எடுத்துக்கொண்டு உன் குடும்பத்தோடு அந்தப் படகில் ஏறி வெள்ளத்திலிருந்து உன்னைக் காப்பாற்றிக்கொள்" என்றார். நோவாவும் அவரது மகன்கள் சேம் காம் யாப்பேத் ஆகியோரும் ஒரு பெரிய படகைக் கட்டுவதைக் கண்டவர்கள் அவரை ஏளனம் செய்தனர். இவனுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?' என எள்ளினர். நோவா கடவுளின் திட்டத்தை அவர்களுக்குக் கூறி மனம் திரும்பச் சொன்னார். அவர்கள் நோவாவைக் கண்டுகொள்ளவில்லை.

சில நாட்களுக்குப்பின் பெரும் மழை பெய்ய ஆரம்பித்தது. தொடர்ந்து நாற்பது நாட்கள் இடைவிடாது மழை பொழிந்தது, இதனால் உலகம் நீரினால் நிரம்பி, அழிந்தது. நோவாவின் குடும்பத்தினரும் சேர்த்து எட்டு பேர் மற்றும் அந்தப் பெட்டகத்தலிருந்த பறவைகளும், விலங்குகளும், உயிரினங்களும் வெள்ளத்திலிருந்து உயிர்தப்பினர்.

வானத்தில் இன்று காணும் வானவில் எப்படி வந்தது? இதைப் பற்றிப் பல கட்டுக்கதைகள் கூறப்படுவதுண்டு. ஆனால் அதின் வரலாற்றை நோவாவின் சரித்திரத்தில் சாமுவேல் பவுல் ஐயர் விளக்குகின்றார்.

மழைபெய்து நூற்றிஐம்பது நாளுக்குப்பின் வெள்ளம் வடிந்தது. நோவாவின் பெட்டகம் ஒரு குன்றின்மேல் தரைதட்டி நின்றது. கடவுள் நோவாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்தார். "இனிமேல் இதுபோன்று வெள்ளத்தால் உலகின் எல்லா உயிரினங்களும் சாகும்படி செய்யமாட்டேன். இந்த ஒப்பந்தத்தை நினைவு கொள்ள வானவில்லை உருவாக்குகிறேன். ஒவ்வொருமுறை மழை

பெய்யும்போதும், வானவில் தோன்றி இந்த ஒப்பந்தத்தை அறிவிக்கும்"[24] என்றார்.

பல்வேறு மொழிகள் உலகில் எப்படி தோன்றின? என்ற கேள்விக்கான சிறுகுறிப்பும் நோவாவின் சரித்திரத்திலே நாம் விடைகாண முடிகிறது.

நோவாவின் காலத்திற்குப் பிறகு பல தலைமுறைகள் கடந்தபின், உலகம் மீண்டும் பாவத்தால் நிறைந்தது. மனிதர்கள் கடவுளை மறந்து தங்கள் பெருமைகளில் திளைத்திருந்தனர். அப்படியாக மக்கள் கிழக்கேயிருந்து பயணம் செய்கையில், சிநேயார் பகுதியில் சமபூமியைக்கண்டு, அங்கே குடியிருந்தார்கள். பூமியெங்கும் ஒரே பாஷையும் அவர்கள் ஒரே மொழி பேசுபவர்களானதால் வானபரியந்தம் உயரமான *பாபேல்* என்னுமிடத்தில் கோபுரத்தைக் கட்டி அங்கேயே எல்லாரும் தங்கியிருக்கலாம் என்ற பெருமை கொண்டதால் தேவன் ஒருவர் பேசுவதை ஒருவர் அறியாதபடி பாஷைகளைத் தாறுமாறாக்கினதால் பல்வேறு பாஷைகள் உலகில் தோன்றியதாக[25] விவிலியத்தின் அடிப்படையில் சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக்காட்டுகின்றார்.

விசுவாச முனிவர் (ஆபிரகாம்)

ஆபிரகாம் என்னும் எபிரெயப் பெயருக்கு *'ஏராளமானோருக்குப் பிதா'* [26] என்று பொருள். இவருடைய தந்தை தேராகு, மனைவி சாராள், மகன்கள் ஈசாக்கு, இஸ்மவேல்.

ஆபிரகாம் என்பவர் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் பேர்போனவராய் விளங்கினார். மேலும் ஆதாம் முனிவர் பழைய உலகத்துக்கும், நோவா முனிவர் புது உலகத்துக்கும், முதல் மனிதரும் தலைவருமாயிருந்தார்கள். ஆபிரகாம் முனிவரோ விசுவாசிகளுக்கும் தேவனுடைய பிள்ளைகளடங்கிய திருச்சபைக்கும் ஆதிமனிதனாக இருக்கிறார். இவருடைய தேவ பக்தியையும் விசுவாசத்தையுந்தொட்டு இவர் 'தேவனுடைய சிநேகிதன்'[27] என்னப்பட்டார் என்று சாமுவேல் பவுல் ஐயர் வேதபகுதியை மேற்கோள் காட்டுகிறார்.

மெசொப்பொத்தாமியா என்கிற நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஒரு நாட்டிலே தேராகு என்பவர் இருந்தார். அவருக்கு நாகோர், ஆரான், ஆபிராம் என மூன்று ஆண் பிள்ளைகள் இருந்தார்கள்.

விசுவாச முனிவர் ஆபிராம் தாம் பிறந்தது முதல் வெகுகாலமாகத் தன் முன்னோர்களைப்போல் சிலை வழிபாடு செய்கிறவராகவே இருந்தார். ஆனால் மெய்த்தேவனைப் பற்றிய அறிவை எப்படியோ அடைந்து அந்தரங்கத்தில் தேவ பக்தனாய் இருந்தார். கடவுள்மேல் அவர் கொண்டிருந்த பக்தியைக் கடவுள் ஒருவர் தவிர வேறொருவரும் அறியவில்லை. இக்காலக்கட்டத்தில் தேவன் அவருக்குத் தரிசனமாகி, "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ"[28] என்று கட்டளையிட்டார்.

இந்த அழைப்பு அவருக்குச் சொல்லமுடியாத வருத்தத்தையும் சங்கடத்தையும் கொடுத்திருக்க வேண்டியது. ஆகிலும் அவர் தம் தகப்பன்

குடும்பத்துடன் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஊர் என்ற கல்தேயர் தேசத்தைவிட்டுக் கீழ்த்திசையாகப் பயணம்பண்ணிச் சுமார் முந்நூறு மைலுக்கு அப்பால் இருந்த கேரார் என்னும் ஊருக்கு வந்தார்கள். பின்பு அங்கிருந்து கானானுக்கு நேராய்ப் பயணித்தார்கள். ஆபிரகாம் முனிவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால் தேவன் 'ஆபிராம்' என்ற பெயரை 'ஆபிரகாம்'[29] என்று மாற்றினார். மேலும் அவர் மனைவியின் 'சாராய்' என்ற பெயரைச் 'சாராள்'[30] என்று மாற்றி அவர்களை எல்லா நிலைகளிலும் தேவன் உயர்த்தினார்.

ஆபிரகாமுக்கு 100 வயது வரை பிள்ளையில்லாதிருந்தது. வயது முதிர்ந்த காலத்தில் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தின் மகனைத் தேவன் கொடுத்தார். அவர் பெயர் ஈசாக்கு.

ஈசாக்கு பிறந்தது முதல் ஆபிரகாமின் வீடு அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டது. அதன்பின்பு சுமார் இருபத்தைந்து வருடங்களுக்குப் பிறகு ஒரு தேவ தரிசனை ஆபிரகாம் முனிவருக்குக் கிடைத்தது. ஆண்டவர் முனிவரை நோக்கி: "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு மோரியா தேசத்துக்குப் போய் அங்கே நான் குறிக்கும் மலையின்மேல் அவனைத் தகன பலியாகப் பலியிடு" என்று சொன்னார்.

ஆபிரகாம் இக்கட்டளையின்படியே நிறைவேற்ற ஆரம்பித்தார். இக்கட்டளை ஒருநாள் இரவில் உண்டாயிருந்தது. "மறுநாள் அதிகாலையில் முனிவர் எழுந்து, தன் குமாரன் ஈசாக்கைக் கூட்டிக் கொண்டு தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்துகொண்டு தேவன் தனக்குக் குறித்த இடத்துக்குப் புறப்பட்டார். அவர்கள் இருவரும் கூடிப்போய் மோரியா மலையின் உச்சியில் போய்ச் சேர்ந்தார்கள். ஈசாக்கைக் கட்டைகள்மேல் படுக்க வைத்துத் தன் குமாரனை வெட்டும்படி கத்தியை ஓங்கினார்.

முனிவர் தமது மகனைப் பலியிட வெட்டும்படி கத்தியை ஓங்கும்போது "கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து தடுக்கும்படி ஆபிரகாமே! ஆபிரகாமே! என்று கூப்பிட்டு அவரைத் தடுத்தார். உடனே முனிவர் தன் நேசகுமாரனை வெட்டுவதை நிறுத்தி அவனை அவிழ்த்துவிட்டார். பின்பு முனிவர் தங்களுக்குச் சமீபமாய்ப் புதரிலே கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டு அதைப் பிடித்துத் தமது நேசக் குமாரனுக்குப் பதிலாகத் தகனப் பலியிட்டார்.

முனிவர் தன் மகனென்றும் பாராமல் அவனைத் தேவனுக்குப் பலி செலுத்தத் துணிந்ததால் தேவன் அவரைப் பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்[31] என்று சொல்லி ஆசீர்வதித்தார். அதுமுதல் அவர் விசுவாசிகளின் தகப்பன் என அழைக்கப்பட்டார். ஆபிரகாம் தம் நூற்று எழுபத்தைந்து வயதிலே மரித்தார்.

லோத்து

ஆபிரகாமின் மனைவியாகிய சாராளின் உடன்பிறந்த சகோதரன் மகன் லோத்து. லோத்து என்னும் எபிரெயப் பெயருக்கு *'மூடுதல்'* [32] என்று பொருள்.

இவர் தகப்பனாகிய ஆரான் மரணத்துக்குப் பின்பு இவரும் இவருடன் பிறந்த சாராளும் தேராகின் அடைக்கலத்தில் இருந்து வளர்ந்தார்கள்.

விசுவாச முனிவர் ஊர் என்ற கல்தேயாவிலிருந்து புறப்பட்ட காலத்தில் லோத்தும் அவர்கள் கூட்டத்தோடு பயணப்பட்டு வந்தார். பிற்பாடு கானானின் எல்லைக்குள் வந்தவுடன் இவனுடைய குடியிருப்பும் சற்று மாறும்படி நேரிட்டது.

லோத்தினிடமும் ஆபிரகாம் முனிவரைப்போல ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக் கூடாதிருந்தது. இதனால் முனிவர் தமது மைத்துனன் லோத்தைக் கூப்பிட்டு, "எனக்கும் உனக்கும் என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம், நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது. நீ என்னை விட்டுப் பிரிந்துபோக மனமானால் பிரிந்து போகலாம். நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன். நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்"[33] என்று சொன்னார்.

அதின்படி இருவரும் பிரிந்து சென்றனர். லோத்து சோதாம் கொமோரா பட்டணத்தைத் தெரிந்தெடுத்தார். சோதாமின் பாவங்கள் பெருகினபடியால் தேவன் சோதோமை அக்கினியினால் அழிக்கச் சித்தங்கொண்டார். ஆனால் ஆபிரகாமினிமித்தம் லோத்தின் குடும்பத்தைத் தப்புவிக்க எண்ணி, தூதர்களை அவர் வீட்டிற்கு அனுப்பி விடுவித்தார்.

அப்போது தூதர் லோத்துவையும் அவர் மனைவி மக்களையும் கட்டாயமாய்ப் பட்டணத்துக்கு வெளியே கொண்டு போய் "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப் பாராதே, இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே, நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ"[34] என்று கட்டளையிட்டார்கள். அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின்மேலும் வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வரப்பண்ணி அந்தப் பட்டணங்களையும் அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார்.

லோத்துவின் மனைவிக்கு அவள் விட்டுப்போன ஆஸ்திகள் மேலும், ஆடுமாடுகள் மேலும் கவனமிருந்தது. எனவே அதனை இழந்துபோக மனமற்றுத் தேவ தூதனுடைய கட்டளைக்கு விரோதமாகப் பின்னிட்டுப் பார்த்து *'உப்புத்தூண் ஆனாள்.'* [35] உலகத்திலே இதற்கொத்த சம்பவம் இதற்கு முன்னும் பின்னும் நடந்ததில்லை. லோத்தும் அவருடைய இரண்டு குமாரத்திகளுமாகச் சோவாரில் குடியிருக்கப் பயந்து ஒரு மலைக்குகையிலே குடியிருந்தார்கள். அங்கு லோத்து குடித்ததால் அவன் இரண்டு குமாரத்திகளும் முறைகேடான முறையில் தங்கள்

தகப்பனாலே கர்ப்பவதியானார்கள். இந்நிகழ்வினையும் பதிவு செய்து நடந்துகொள்ளக்கூடாத முறைகளையும் சுட்டிக் காட்டுகிறார்.

ஈசாக்கு முனிவர்

ஆபிரகாம் – சாராள் ஆகியோரின் குமாரன். ஈசாக்கு என்னும் எபிரெயப் பெயருக்கு 'அவர் நகைக்கிறார்'[36] என்று பொருள்.

ஈசாக்கின் வாழ்க்கையில் நிகழ்ந்த இரண்டு சம்பவங்கள் உண்டு. முதலாவது ஈசாக்கு கேரார் என்னும் ஊரில் வசித்தபோது தேவன் அவரை அதிகமாய் ஆசீர்வதித்தார். அவர் அநேக வருடம் அங்கே தங்கி, நிலங்களைச் சம்பாதித்துச் சீமானாகிவிட்டார். ஒரு வருஷம் அவன் நிலத்தில் ஒன்றுக்கு நூறுமேனி விளைவு கண்டது. இதனால் பெலிஸ்தர் பொறாமை கொண்டு தங்கள் தேசத்தை விட்டுப் போகும்படி கூறினார்கள். ஈசாக்கு பொறுமையோடு மனந்தளராமல் வேறு இடம் சென்றார். அவர் போன இடமெல்லாம் தேவன் அவரை ஆசீர்வதித்தார். இதுதான் ஈசாக்கு முனிவரின் வாழ்க்கைச் சிறப்பு.

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்கின் நிறைவேறுதலில் ஈசாக்கு முதலாவது சந்ததி. நாற்பது வயதாகும்போது அவர் திருமணம் செய்து கொண்டார். மனைவியின் பெயர் ரெபெக்காள். இவனுக்கு ஏசா, யாக்கோபு என்ற இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர்.

ஈசாக்கு தன் மகனாகிய ஏசாவை ஆசீர்வதிக்கும்படி ஆசைப்பட்டு, அவனைச் சமைத்து எடுத்து வரச்சொன்னார். இவ்வழக்கம் அன்றைய காலத்தில் வழக்கில் இருந்தது. இதை அறிந்த ஈசாக்கின் மனைவி ரெபெக்காள் சூழ்ச்சி செய்து யாக்கோபை அனுப்பி அந்த ஆசீர்வாதத்தைப் பெறும்படி செய்தாள். ஈசாக்கு ஏமாற்றப்பட்டு, தனது ஆசீர்வாதத்தை யாக்கோபின் மேல்கூறிப் பின்னர் தீர்க்கதரிசனமாகக் கூறி ஏசாவை ஆசீர்வதித்தார். தேவன் ஆபிரகாமுக்கு அருளின ஆசீர்வாதம் யாக்கோபின் மூலமாக வரும் என்று ஈசாக்கு தான் மரிக்குமுன் கூறினார். பின்பு ஈசாக்கு தம் எண்பதாவது வயதில் மரித்து மக்பேலா என்னுமிடத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

யாக்கோபு முனிவர்

இவர் ஈசாக்கு ரெபெக்காள் ஆகியோரின் இரண்டாம் குமாரன். ஏசாவின் சகோதரன். இவர் பெயரை *'இசுரவேல்'* [37] என்று இறைவனே மாற்றினார்.

யாக்கோபு முனிவர் ஈசாக்கின் இரண்டாவது மகனாயிருந்தபோதிலும் அவர் தேவ ஆசீர்வாதம் பெற்றதினால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் வரிசையினால் சிறப்புப் பெற்றார். யாக்கோபுக்குப் பன்னிரெண்டு பிள்ளைகள் பிறந்தனர். இவர்கள்தான் இசுரவேலரின் பன்னிரெண்டு கோத்திரப் பிதாக்கள்.

ஏசா என்ற பேருக்கு 'முடிக்கிறவன்' என்றும், 'யாக்கோபு' என்ற பேருக்கு குதிங்காலன் என்றும் அர்த்தம்.[38] இருவரும் இரட்டையர். யாக்கோபு குணசாலியும்

கூடாரவாசியும்; ஏசா வனசஞ்சாரியுமானான்.

யாக்கோபு ஒருமுறை ஏசா பசியாயிருந்தபோது அவனுக்குக் கூழ் கொடுத்து அவனுடைய உரிமைப் பங்கினைத் தந்திரமாய்ப் பெற்றான். அதாவது முதல் மகனுக்குரிய ஆசீர்வாதம். அதன்பின்பு ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்கக் கூப்பிடுகையில் யாக்கோபு ஏசாவைப் போல வேடம்பூண்டு ஈசாக்கை ஏமாற்றி ஆசீர்வாதத்தைப் பெற்றான்.

யாக்கோபின் இந்த ஏமாற்றுச் செயலினால் அவர் தன் வாழ்நாள் முழுவதும் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிட்டது. ஏசா கோபமூண்டு யாக்கோபைக் கொல்வேன் எனச் சபதம் கொண்டதால் யாக்கோபு தன் உறவினர் லாபான் வீட்டிற்குப் ஓடிப் போனார். போகும் வழியில் அவர் ஓரிடத்தில் நித்திரை பண்ணினார். அங்கே ஒரு தரிசனத்தைக் கண்டார்.

ஒரு ஏணி பூமியில் வைக்கப்பட்டிருந்தது. அதன் நுனிவானத்தை எட்டியிருந்தது. முனிவர் கண்ட ஏணியின் தலை வானத்திலும், அதன் அடி பூமியிலும் தொட்டது.அப்படி வானத்தையும் பூமியையும் தொட்டுக் கொண்டிருந்த ஏணியிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள் என்றும் முனிவர் கண்டார். யாக்கோபு அந்த இடத்துக்குப் *பெத்தேல்* [39] என்று பேரிட்டார். பெத்தேல் என்பதற்குக் கர்த்தருடைய வீடு என்று பொருள்.

யாக்கோபு தன் மாமனாகிய லாபானிடத்திலிருந்து தன் மனைவிகளோடும் பிள்ளைகளோடும் தன் பரிவாரங்களோடும் தன் சொந்தத் தேசத்திற்குப் புறப்பட்டான். ஆயினும் ஏசாவைக் குறித்த பயம் அவரை வாட்டினது. ஆகவே தனித்துத் தமது மந்தைகளையும் மனைவி மக்களையும் நடந்துபோகச் சொல்லி, தாம் ஆற்றோரத்தில் தேவனை நோக்கி, விண்ணப்பம் செய்யும்படி தாமதித்தார். அவர் தம் முன் ஓர் ஆள் நிற்கிறது போல ஜெபத்தில் போராடுகிறார். அந்தரரூபி *"நான் போகட்டும், பொழுது விடிகிறது"* என்றார். ஆனால் முனிவரோ: *"நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்"* [40] என்று வாதாடினார். அவர் முனிவருடைய பேரை மாற்றி, நீ தேவனோடும் மனுஷரோடும் போராடி மேற்கொண்டபடியால் "இனி *யாக்கோபு என்னப்படாமல் இசுரவேல்* என்ற அழைக்கப்படுவாயாக"[41] என்று சொல்லி அதற்கு அடையாளமாக முனிவரைத் தொட்டார். உடனே முனிவருடைய தொடை நரம்பு சுளுக்கிற்று. அதுமுதல் அவர் ஜீவகாலபரியந்தம் நொண்டி நடந்தார். தேவ ஆசீர்வாதமும் பெற்றார். பின்பு தன் சகோதரன் ஏசாவைக் கண்டு சமாதானத்தோடே காலங்கழித்துத் தம் நூற்றிநாற்பத்தேழாம் வயதில் மரித்தார்.

சொப்பன முனிவர் (யோசேப்பு)

பெற்றோர் யாக்கோபு – ராகேல், மனைவி ஆஸ்நாத், மகன்கள் மனாசே, எப்பிராயீம். யோசேப்பு என்னும் எபிரெயப் பெயருக்கு *'அவர் கூட்டுவார்'* [42] என்று பொருள்.

சொப்பனம் அல்லது கனவு காணாதவர் உலகில் எவரும் இல்லை. அவ்வாறே நாம் காணும் கனவுகளின் அர்த்தமெல்லாம் நமக்குத் தெரிவதுமில்லை. ஆனால் இந்தச் சொப்பன முனிவருக்குக் காணும் எல்லாக் கனவுகளுக்கும் அர்த்தம் சொல்லமுடியுமென்றால் ஆச்சரியம்தான்.

சொப்பன முனிவர் யாக்கோபு முனிவருடைய பன்னிரண்டு ஆண்பிள்ளைகளில் ஒருவர். இவருடைய தாயாராகிய ராகேலும் திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆகியும் குழந்தையில்லாமல் இருந்து அவளின் ஒவ்வொரு நிமிடமும் குழந்தைக்கான விண்ணப்பமாகயிருந்து தேவனின் கிருபையினால் வெகுகாலத்துக்குப் பின்பு இந்தச் சொப்பன முனிவர் பிறந்தார். வீட்டுக்கெல்லாம் இவர் செல்லப் பிள்ளையாய் இருந்தார். தகப்பனும் தாயும் இவரை மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமாய் நேசித்தார்கள்.

தகப்பன் இவரை மட்டும் நேசித்தபடியால் மற்றவர்களெல்லாரும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு இவருடன் பேசக்கூடாதென்று தீர்மானம் பண்ணிக் கொண்டார்கள். சொப்பன முனிவர் சுமார் பதினேழு வயதாயிருக்கும்போது தமையன்மாரோடு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். மந்தைகளின் பெருக்கத்தையும் தம் மக்களின் நலத்தையும் அறியும்படி யாக்கோபு இவரை அடிக்கடி கூப்பிடுவார். அவரும் தன் தந்தையிடம் உண்மையுள்ள சகல சங்கதிகளையும் அறிவிப்பார்.

இதன் காரணமாக முன்னிருந்த பகையோடு முழுப் பகையாய்ப் பகைத்தார்கள். "யதார்த்தவாதி வெகுஜன விரோதி"[43] என்ற பழமொழிக்கு ஏற்றாற்போல முனிவர் தமது சகோதரருடைய நடக்கையைப் பற்றிய செய்திகளைச் சொல்லி அவர்களுக்குச் சத்துருவானார். அவர்களெல்லாரும் முனிவரைப் பற்றி உள்ளுக்குள் வைத்துக் கொண்டிருந்த கோபம் முனிவருக்குத் தெரியாது.

ஒருதரம் யோசேப்பின் சகோதரர்கள் தோத்தான் என்னும் ஊரிலே மந்தை மேய்த்துக்கொண்டிருக்கும்போது அவர்கள் நலம் விசாரித்தறிய யாக்கோபு சொப்பன முனிவரை அங்கு அனுப்பினார். தனியாக வந்த சொப்பன முனிவரை பழிதீர்க்கும் சமயம் இதுதான் என்று முடிவுகட்டிக் கொண்டனர். முனிவர் வந்தவுடனே சகோதரர் அவரை முரட்டுத்தனமாய்ப் பிடித்திழுத்துக் தொப்பென்று ஒரு குழியில் போட்டார்கள். அப்போது எகிப்து வியாபாரிகள் அப்பக்கம் வரும்போது "முனிவரைக் குழியிலிருந்து எடுத்து, இருபது வெள்ளிக்காசுக்கு விற்றார்கள்." ஆனால் வல்கெட் என்னும் இலத்தீன் திருப்புதலிலும், காத்தின் பிரபந்தம் என்னும் ஆகமத்திலும் யோசேப்பை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றதாகச் சொல்லப்பட்டிருப்பதாக[44] சாமுவேல் பவுல் ஐயர் ஆய்வுநோக்கில் மேற்கோள் காட்டி விளக்குகின்றார்.

எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்ட முனிவர் போத்திபார் என்பவருடைய வீட்டிலே வேலை செய்தபோது அவருடைய மனைவியால் அபாண்டமாய்க்

குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். பின்பு அரசன் கண்ட ஒரு சொப்பனத்தின் மூலம் சிறைச்சாலையிலிருந்து வரவழைக்கப்பட்டு அந்தச் சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்ல அரசன் அவரை எகிப்து நாட்டிற்கு அதிகாரியாக அறிவித்தார். அதன் பின்பு அவர், யாக்கோபு முனிவர் மற்றும் அவர் குடும்பத்தை அழைத்துக் கோசேன் நாட்டிலே குடியிருந்தார்.

சொப்பன முனிவர் நூற்றுப்பத்து வயதுடையவனாய் மூன்று தலைமுறை உயிரோடிருந்து மரித்தார். அவர் முந்திப் பட்ட பாடுகளும் பிந்தியடைந்த மகிமையும், கிறிஸ்து பட்ட பாடுகளுக்கும் அவரடைந்த மரணத்துக்கும் ஒப்பாயிருக்கிறது. அவர்தம் சரித்திரத்தில் நாம் அறிந்துகொள்ளும் போதனை என்னவென்றால் கடவுளை நேசிக்கிறவர்களுக்குக் கடைசியில் எல்லாம் நன்மையாய் முடியுமென்று தெரியவருகிறது எனப் பதிவு செய்கிறார்.

மோசே முனிவர்

பெற்றோர் அம்ராம் – யோகெபேத், சகோதரர் ஆரோன், சகோதரி மிரியாம், மனைவி சிப்போராள், மகன்கள் கெர்சோம், எலியேசர் ஆவர்.

மோசே என்னும் எபிரெயப் பெயருக்கு *'வெளியே இழுக்கப்படுதல்'*[45] என்று பொருள். நீரிலிருந்து எடுக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றார்.

சொப்பன முனிவர் காலத்திற்குப் பின் எகிப்திலே சுமார் 430 வருட காலமாய் இசுரவேல் இன மக்கள் மிகுதியாகப் பெருகினார்கள். இதனால் பொறாமை கொண்ட எகிப்தியர் அவர்களை வேலையினால் ஒடுக்க ஆரம்பித்தார்கள். யோசேப்பை அறியாத பார்வோன் என்னும் அரசன் இசுரவேலரைத் துன்புறுத்த ஆரம்பித்தான். அவன் அவர்களின் வளர்ச்சியை தடுக்கும்படியாக இசுரவேலரின் இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்குழந்தைகளையும் நைல் நதியிலிட்டோ அல்லது கொல்லும்படியோ கட்டளைப் பிறப்பித்திருந்தான்.

இக்காலக்கட்டத்தில் தான் மோசேயின் தாய் அவரை நாணற்பெட்டியில் வைத்துப் பத்திரமாய் நைல் நதியில் விட்டுவிட்டாள். அப்போது மோசே அதிசயிக்கத்தக்க விதமாய்ப் பார்வோனின் குமாரத்தியினால் காப்பாற்றப்பட்டாள். அரண்மனையில் சகல கல்வியிலும் கலைகளிலும் தேர்ந்தவராக வளர்க்கப்பட்டார். தேவன் மோசேயை இசுரவேலரை எகிப்திலிருந்து மீட்பதற்காகப் பயன்படுத்தினார். மோசேயின் வரலாற்றில் சிலவற்றின்வழி அவனுடைய நற்செயல்களை எடுத்துக்காட்டியுள்ளார். பல காரியங்களிருந்தாலும் இரண்டொரு சிறப்பான நிகழ்வுகள் குறித்து விளக்குகிறார்.

மோசே இசுரவேலரை ஒடுக்கின ஒரு எகிப்தியனைக் கொலை செய்து விட்டு மீதியான் தேசத்துக்கு ஓடிப்போனார். அங்கே பகலில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் ஓர் அதிசயக் காட்சியைக் கண்டார். அங்கே ஓர் பச்சையான முட்செடி எரிந்து கொண்டிருந்தது. அந்தத் தீ அணையவில்லை, செடியும்

கருகவில்லை. அந்தச் செடியின் அருகில் மோசே சென்றபோது கர்த்தர் அவரோடு பேசி இசுரவேலரை விடுக்கும்படியான தம் திட்டத்தை வெளிப்படுத்தினார். முதலில் மறுத்த மோசே பின்பு அவரது சகோதரன் ஆரோனின் துணையுடன் பார்வோனைச் சந்தித்து இசுரவேலரைக் கடவுளுக்கு வழிபாடு செய்ய அனுப்பிவிடும்படி கேட்டார். பார்வோன் மறுக்கவே, கர்த்தர் அவன் இருதயத்தைக் கடினப்படுத்தினார். இதனால் தேவன் பத்து வாதைகளை எகிப்தியர்மேல் வரச் செய்தார். பின்பு இசுரவேலர் எகிப்திலிருந்து அனுப்பப்பட்டனர். ஆனால் மீண்டும் பார்வோன் தன் சேனைகளோடு இசுரவேலர் செங்கடல் நடுவே செல்லும்போது பின்தொடர்ந்தான். இசுரவேலர் கரையைக் கடந்தவுடன் மோசே சமுத்திரத்தின் மேல் தான் கையில் வைத்திருந்த கோலை நீட்ட பிளந்த சமுத்திரம் ஒன்றாகிக் கடலின் நடுவிலே எகிப்திய சேனைகள் அழிந்தொழிந்தன.

பின்பு மோசே நாற்பது வருட காலமாய் இசுரவேலரைக் கானான் தேசத்துக்கு நேராய் வனாந்திரத்திலே பல அற்புதங்கள் அடையாளங்களேடுகூட வழிநடத்தினார். இசுரவேலர் முறுமுறுத்தபோதும் அநேக தொந்தரவுகள் செய்தபோதும் மோசே பொறுமையோடிருந்தார். "என் வீட்டில் எங்கும் மோசே உண்மையுள்ளவன்"[46] என்று தேவன் சாட்சி கொடுக்கிறார்.

இரண்டாவது சம்பவம், வனாந்திரப் பயணத்தின்போது தேவன் மோசேயைச் சீனாய் மலையின் மேல் ஏறிவரச் சொன்னார். அங்கே மோசே நாற்பது நாள் உபவாசம்பண்ணி, சீனாய் மலையிலே தேவனிடமிருந்து நேரடியாக இசுரவேல் மக்கள் பின்பற்ற வேண்டிய பத்துக் கட்டளைகளைப் பெற்றதாகும்.

முனிவர் மரித்தபின்பு அவர் பிரேதத்துக்காக மிகாவேல் சம்மனசுக்கும், சாத்தானுக்கும் ஒரு பெரிய வாக்குவாதம் உண்டாயிற்று, இதனாலே முனிவரின் நூற்றிருபதாம் வயதிலே தேவனால் அடக்கம்பண்ணப்பட்டார்[47] என்று சாமுவேல் பவுல் ஐயர் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

முதல் ஆசாரியன் (ஆரோன்)

ஆரோன், அம்ராம் யோகபேத்து என்பவர்களின் மூத்த குமாரன், இவரது சகோதரன் மோசே, சகோதரி மிரியாம், மனைவி எலிசாபாள், மகன்கள் நாதாப், அபியூ, எலெயாசர், இத்தாமர் எனப்படும் நால்வர்.

ஆரோன் என்னும் எபிரெயப் பெயருக்கு *'ஒளி தருகிறவன்'* [48] என்று பொருள்.

இறை வழிபாடுகளை நடத்துவதற்குப் பலவிதமான இறையியல் படிப்புகளை இன்று நாம் காணமுடிகிறது. இறையியல் கல்லூரிகளிலே படித்த பூசாரிகள், குருக்கள், ஆசாரியர்கள் பூஜைகளை நடத்துகிறார்கள். அதிகாரப்பூர்வமாக *உலகின் முதல் பூசாரி அல்லது ஆசாரியன் யார்? ஆராதனை முறைமைகள் உலகில் எப்படி வந்தது?* என்ற கேள்விக்கான பதில் நம்மில் யாரிடமும் கிட்டாது.

ஆரோன் இவர் சாதாரண மக்களிலிருந்து தேவாரதனைக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு, அபிஷேகத்தின் மூலமாய் உறுதிப்படுத்தப்பட்டு, தேவாராதனைக்கு நியமங்களை நிறைவேற்றி வருகிறவர்களுக்கும் இவரே முற்பிதா[49] என்று சாமுவேல் பவுல் ஐயர் விளக்குகிறார்.

ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதாயிருக்கும்போது ஒருநாள் கடவுள் இவருக்கு முன்னே தரிசனமானார். கர்த்தர் ஆரோனை நோக்கி: 'நீ வனாந்தரத்தில் மோசேக்கு எதிர்கொண்டுபோ' என்று தரிசனை மூலமாய்க் கட்டளையிட்டார்.[50] அதன்பின்பு ஆரோன் மோசேயுடன் இணைந்து இசுரவேலரை எகிப்திலிருந்து மீட்கும் பணியிலும் வனாந்தரப் பிராயணத்தின்போது மக்களைத் தேவ ஆராதனைக்கு ஆயத்தப்படுத்துவதிலும் நடத்துவதிலும் செயல்பட்டார்.

ஆரோனிடம் அநேக நற்குணங்கள் காணப்பட்டாலும் அவனால் இசுரவேல் ஜனங்கள் ஒருதரம் பாவஞ்செய்யும்படிக்கு நேரிட்டது. அது யாதெனில், மோசே தேவனிடத்திலிருந்து பத்துக் கட்டளைகளைப் பெறும்படிக்கு சீனாய் மலையில் தங்கினபோது ஜனங்கள் தங்களை வழிநடத்த ஆளில்லையென்று முறுமுறுத்ததால் ஆரோன் எரிச்சலடைந்து அவர்களிடமிருந்த பொன் முதலான சரப்பணிகளைக் கொண்டு பொன் கன்றுக்குட்டியை உருவாக்கி இசுரவேல் மக்களை வழிபடும்படி செய்தான். இதனால் ஆரோனின் மேல் தேவகோபம் மூண்டதாக விளக்குகிறார்.

ஆசாரியர் ஆரோன், இந்தக் கனமான ஆசாரிய ஊழியத்தில் அநேக வருஷம் இருக்கவில்லை. அவர் மேரிபா என்ற இடத்தில் மோசேயோடே கூடித் தேவனை பரீட்சை பார்த்தபடியால், தேவன் அவரைக் கானானுக்குள் பிரவேசிக்கவிடாமல் வழியிலே சாகும்படி பண்ணினார். நூற்றிருபத்து மூன்று வயதில் மரித்து தேவலோகம் சேர்ந்தார்.

ஜோஷிய முனி (பிலேயாம்)

பிலேயாம் என்னும் எபிரெயப் பெயருக்கு *'ஜனங்களுடையவனல்ல'* [51] என்று பொருள்.

இவர் தகப்பன் பேயோர், அவர் நதியருகேயுள்ள பெத்தூரில் வாசம்பண்ணி வந்தார் என்பது மாத்திரம் அறிய முடிகிறது.

பிலேயாம் இயல்பிலே புத்திக்கூர்மையும், அறிவுடையவனுமாய் இருந்தான். இவரது தகப்பன் பிலேயாமைப் பெல் அல்லது பாகால் என்ற விக்கிரகத்துக்குப் பிரதிஷ்டைபண்ணி பேயாராதனைக்குரிய சகலவித மாதிரியிலும் பழக்கியிருக்கிறான்[52] என்கிறார் சாமுவேல் பவுல் ஐயர்.

இவர் வேதத்தில் சிறு பகுதியில் வந்தாலும் இவரைத் தெரியாதவர் எவரும் இருக்கமுடியாது என்கிற அளவுக்கு இவரின் தீயசெயல்கள் இவரை வெளிகாட்டுகின்றன. அதென்னவென்றால், இசுரவேலர் கானானை நெருங்கும் வழியில் அவர்களைக் கடந்துபோக விடாமல் மோவாபிய ராஜாவாகிய சிப்போரின்

குமாரனாகிய பாலாக் அவர்களைத் தடைசெய்தான். மேலும் இசுரவேல் மக்களைச் சபிப்பதற்காக, பிலேயாமின் ஆலோசனையைக் கேட்க விரும்பி அவனிடம் ஸ்தானாபதிகளை அனுப்பினான்.

ஆனால் தேவன் பிலேயாமைப் போகவேண்டாமெனக் கூறியும், அவன் திரும்பத் திரும்பக் கேட்டதினிமித்தம் உக்கிரத்தில் போக உத்தரவு கொடுத்தார். வழியில் தேவதூதன் உருவின பட்டயத்துடன் நின்றான். அது பிலேயாமுக்குத் தெரியவில்லை. ஆனால் அவனைச் சுமந்து வந்த கழுதைக்குத் தெரிந்தபடியினால் அது அவ்விடத்தை விட்டு நகரவில்லை. கழுதையைப் பிலேயாம் அடிக்கத் தேவன் கழுதையின் வாயைத் திறந்தார்.[53] பூமியெங்கும் இதற்கொத்ததான சம்பவத்தை நாம் எங்கும் காணமுடிவதில்லை.

தேவதூதன் பிலேயாமை இசுரவேல் மக்களைச் சபிக்காதபடி எச்சரித்தார். மோவாப் அரசன் இசுரவேல் மக்களைச் சபிக்கும்படி கேட்டபோது பிலேயாம் கர்த்தரின் வார்த்தைப்படி அவர்களை ஆசீர்வதித்தான். இதனால் மோவாப் ராஜா கோபமூண்டான். ஆகிலும் பிலேயாம் மனம் பொருளாசைக் கொண்டதால் இசுரவேலை விட்டுத் தேவமகிமை நீங்கும்படிக்குத் தீய சிந்தனைகளை விதைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

“உன் தேச ஸ்திரீகளைக் கொண்டு அவர்களை விபசாரத்துக்கு இழுத்துவிடு; இப்படி நீ விக்கிரகாராதனைக்கும் விபசாரத்துக்கும் அவர்களைப் பழக்கிவிட்டால் அவர்களுடைய தேவன்தாமே அவர்கள்மேல் கோபதாபமாகி அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பார்”[54] என்று போதித்தாக விவிலியப் பகுதியைச் சாமுவேல் பவுல் ஐயர் சுட்டிக்காட்டுகின்றார். இசுரவேலரைப் பாவஞ்செய்யப் பண்ணின பிலேயாம் யுத்தத்தில் மாண்டுபோனாலும் அவன் கள்ளப் போதனையைப் பிடித்திருந்த மக்கள் தொடர்ந்து காணப்படுகிறார்கள்.

தளகர்த்த முனிவர் (யோசுவா)

எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்த நூனின் குமாரன். யோசுவா என்னும் பெயருக்கு ‘யெகோவா இரட்சிப்பாயிருக்கிறார்’[55] என்று பொருள்.

சூரியன் ஒரு திசையில் மறைந்து மறு திசையில் உதிக்கும் என்று பலரும் சொல்வர். உண்மையில் பூமி சுற்றுவதால் தான் சூரியன் ஒரு திசையில் தோன்றுவது போலவும் மறைவது போலவும் புலப்படுகிறது. *சூரியனையும் சந்திரனையும் வானத்திலே ஒரே நேரத்தில் நிற்க வைக்க முடியுமா?* நிச்சயம் முடியாது. ஆனால் தளகர்த்த முனிவருக்குத் தேவனுடைய வல்லமையினால் இது சாத்தியமானது. இவர் தேவன்மீது ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் உடையவராக இருந்தார்.

மோசே முனிவர் தேவ ஏவுதலினாலே இவரைத் தமக்கு அருகில் நிற்கும் தொண்டனாய்த் தெரிந்து கொண்டார். அவருக்குப் பின்பு இவர் தலைவராயிருந்து, பல யுத்தங்களை நடத்தி, இசுரவேல் மக்களைக் கானான் தேசத்திற்கு

வழிநடத்தினார். தளகர்த்த முனி போர்க்களத்தில் எவ்வளவு சிறப்பாய் விளங்கினாரோ அதுபோலவே இறை பக்தியிலும் விளங்கினார். அவை எல்லோராலும் செய்யக்கூடாத அரிதான செயலாகும்.

இவர் ஏழு பெரிய இன மக்களை அடக்கி, அவர்களுக்குள் அரசு புரிந்த முப்பத்தொரு மன்னரையும் கீழ்ப்படுத்தி, அவர்கள் சுதந்தரங்களை இசுரவேலருக்குப் பங்கிட்டுக் கொடுத்தபடியால் இவரைத் தளகர்த்தமுனி என்று அழைக்கிறதாகச் சாமுவேல் பவுல் ஐயர் குறிப்பிடுகின்றார். இவர் தேவனுடைய ஆலயக் காரியங்களில் அதிக நாட்டமுடையவராய் இருந்ததால்தான் இவ்வளவு வல்லமை பெற்றார் என்பதைப் பவுல் ஐயர் விளக்குகிறார்.

தளகர்த்த முனிவரைக் குறித்த சில நிகழ்வுகள் தனித்தன்மை பொருந்தியன.

எரிகோ என்னும் பட்டணம் செல்வச் செழிப்பு மிகுந்த அரணும் கோட்டையும் உள்ளதுமாயிருந்தது. எரிகோவின் அரசன் அப்பட்டணத்தைப் பூட்டி யாரும் உள்ளே வரவும் வெளியே போகவும் முடியாதபடி அடைத்து வைத்திருந்தான். எரிகோவைப் பிடிக்கும்படிக்குத் தேவன் அவருக்கு ஓர் ஆலோசனையைச் சொல்லியிருந்தார். அது யாதெனில், எரிகோவை இசுரவேல் ஜனங்கள் ஏழு நாள் சுற்ற வேண்டும். ஆறு நாள் ஒருதரமும் ஏழாம் நாள் ஏழு முறையும் சுற்றும்போது எரிகோவின் மதில் இடிந்து விழும் பின்பு நீங்கள் அப்பட்டணத்தைப் பிடித்துக்கொள்ளலாம் என்று தேவன் சொன்னபடியே அவர்கள் செய்தபோது பட்டணம் பிடிபட்டது.[56] எனப் பதிவு செய்கிறார்.

மேலும் அவருடைய காலத்தில் எருசலேமின் அரசனாகிய அதோனிசேதேக் தன்னோடு நான்கு அரசர்களைச் சேர்த்துக்கொண்டு ஐவராய் கிபியோனுக்கு விரோதமாகப் போர்தொடுத்தபோது, யோசுவா அவர்களை ஓட ஓடக் கலங்கடித்தார். சாயங்கால வேளையானால் போர் நிறுத்தம் ஏற்படும். ஆகவே யோசுவா தேவனை நோக்கி வேண்டுதல் செய்து,

> சூரியனே, நீ கிபியோன்மேல் நில்,
> சந்திரனே, நீ ஆயலோன்மேல் நில்[57]

என்று சொன்னார். அப்பொழுது மக்கள் வெற்றியடையுமட்டும் சூரியனும் சந்திரனும் வானத்திலே தரித்து நின்றது. இந்தச் சண்டையில் ஐந்து அரசர் கூடி தளகர்த்த முனியை எதிர்த்தும் அவர்கள் எல்லாரும் தோற்றுப் போனார்கள்.

இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை.[58] தளகர்த்த முனிவர் நூற்றுப்பத்து வயதுடையவராய் இம்மையைவிட்டு மறுமைக்குள் சேர்ந்தார்.

ஆகான்

இவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த கர்மீ என்பவருடைய குமாரன். ஆகான் என்னும் எபிரெயப் பெயருக்குத் 'தொல்லை தருகிறவர்'[59] என்று பொருள்.

நாம் செய்யும் பாவங்களை யாரும் பார்க்கவில்லையென்று எண்ணினால் அது முட்டாள்தனம். அனைத்தையும் ஆண்டவர் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார் என்பதற்கு இந்த ஆகானின் வரலாறு ஓர் சான்றாக எடுத்துக்காட்டப் படுகிறது.

ஆகான் தளகர்த்த முனிவர் காலத்திலிருந்த இசுரவேல் வீரரில் முக்கியமானவர்களில் ஒருவனாய் இருந்தான். எரிகோ என்னும் கோட்டையைப் பிடிக்கும் முன்பு தளகர்த்த முனிவர் ஓர் ஆணையிட்டிருந்தார். எரிகோவில் உள்ளவை அனைத்தும் தீட்டு என்றும் அது கர்த்தருக்குச் சொந்தமானது என்றும் கட்டளையிட்டிருந்தார். ஆனால் எரிகோவின் மதில் அற்புதமாய் விழுகிற சமயத்தில் மற்ற இசுரவேலரெல்லாம் வீடுவீடாய்ப் புகுந்து சேர்த்த திரவியங்களைக் கர்த்தருக்கென்று குவிக்கையில், இவனோ தனக்கென்று சில பொருட்களை எடுத்துத் தன் கூடாரத்துக்குள் ஒளித்து வைத்துக்கொண்டான். அவனுடைய இந்தத் திருட்டு தேவனுடைய பார்வையில் பொல்லாததாய்க் காணப்பட்டது.

'பகலில் பரிசுத்தன் இரவில் பிசாசு'[60] என்று ஆகானின் இந்தத் திருட்டுச் செய்கையைச் சாமுவேல் பவுல் ஐயர் எள்ளி நகையாடியுள்ளார். யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்று நினைத்த ஆகானுடைய பாவத்தை வெளிப்படுத்தி அவனைத் தண்டிக்கும்படி தேவன் எழுந்தருளினார்.

எப்படியெனில் இசுரவேலர் யுத்தம்பண்ணாமல் கொள்ளையிட்ட எரிகோவுக்குச் சுமார் ஆறு மைலுக்கப்பால் ஆயி என்ற ஒரு சிறு பட்டணமிருந்தது. அதனைக் கைப்பற்ற இசுரவேலர் யுத்தம்பண்ணுகிறபோது அவர்கள் எதிரிகளுக்கு முன்பாக முறிந்தோடி, சுமார் முப்பத்தாறு பேர் மாண்டார்கள்.

இந்தத் தோல்வியின் காரணத்தைத் தளகர்த்த முனி அறியாததால் மதிமயங்கி ஆண்டவருடைய சமுகத்தில் போய்ப் பணிந்து விழுந்து கிடந்தார். அப்போது ஆண்டவர் திருடனைப் பிடிக்கும்படியான ஆலோசனையை அளித்தார். அதின்படி இசுரவேலர் ஒவ்வொரு கோத்திரத்தை எழுதிச் சீட்டுப் போட்டதில் யூதா கோத்திரத்துச் சேராகின் குமாரனாகிய சப்திக்குப் பிறந்த கர்மீயின் மகன் ஆகான் குறிக்கப்பட்டான். இசுரவேலர் ஆகானைக் கல்லெறிந்து கொன்றார்கள்.[61] என வரலாற்றைக் கூறுகிறார்.

கிதியோன்

கிதியோன் என்னும் எபிரெயப் பெயருக்கு 'வெட்டுகிறவர்'[62] என்று பொருள். இவர் தகப்பன் யோவாஸ். இவரின் ஊர் ஒப்ரா. இசுரவேலரின் நியாயாதிபதிகளுள் ஒருவர்.

இசுரவேலர் சிலை வழிபாட்டை விரும்பினதால் தேவன் அவர்களை மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார். இவர்கள் தங்கள் துன்பங்களுக்குத் தங்களுடைய விக்கிரகாராதனையே காரணம் என்று உணரவில்லை அறிக்கையிடவில்லை. இசுரவேலருக்கு அழுகிற சாத்திரமாத்திரம் நன்றாகத்

தெரியும் போலிருக்கிறது. தங்கள் ஆபத்தினிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிட மாத்திரம் மறக்கவில்லை.

தேவன் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு அவர்களைக் கடாட்சிக்கச் சித்தங்கொண்டார். கர்த்தருடைய தூதனானவர் ஒருநாள் கிதியோனுக்குத் தரிசனமானார். ஒரு நாள் கிதியோன் தன் வயல்வெளியிலே போரடித்துக் கொண்டிருந்தான்.

கர்த்தருடைய தூதன் அவனுக்குத் தரிசனமாகி, "பராக்கிரமசாலியே! கர்த்தர் உன்னோடிருக்கிறார்"[63] என்று வாழ்த்தி இசுரவேலரை மீதியானியரின் கையினின்று விடுவிக்க அவனைப் பலப்படுத்தினார். பின்பு விக்கிரகங்கள் அனைத்தையும் அழித்துப்போடும்படி தூதனானவர் கட்டளையிட்டபோது பகலில் அதைச் செய்தால் கேள்விக்கிடமுண்டாகுமென்பதால் இரவில் அதை இவர் செய்து முடித்தார்.

மீதியானியர் இசுரவேலுக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்த நாளில், அன்றிரவு கர்த்தர் கிதியோனுக்குத் தரிசனமளித்து, உன் சேனை அதிகமாயிருக்கிறது உன் பகைவரை வெற்றிகொள்ள இவ்வளவு திரளான கூட்டம் தேவையில்லை, ஆதலால் சண்டைக்குப் பயப்படுகிறவர்களை எல்லாம் ஓடிப்போய் விடச் சொல்லு என்று சொன்னார். அதின்படி முந்நூறு பேர் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டார்கள். கிதியோன் மற்றும் அவன் யுத்தவீரர்களின் ஆயுதங்களாகப் பெரும் பானையும், பிரகாசிக்கும் தீவட்டியும், கோணலான எக்காளமுமே அந்தச் சேனையின் ஆயுதமாயிருந்தது. அவர்கள் யுத்தத்தின் போது பானைகளை உடைத்துக் 'கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம்' என்று ஆர்ப்பரித்தபோது மீதியானியர் ஒருவரையொருவர் வெட்டிக்கொண்டு செத்தார்கள். ஆண்டவர் மாபெரும் ஜெயத்தை இசுரவேலருக்குக் கொடுத்தார்.[64] என பவுல் ஐயர் விளக்குகிறார்.

ஜடாமுனி (சிம்சோன்)

சிம்சோன் என்னும் எபிரெயப் பெயருக்குச் 'சதிகாரன்'[65] என்று பொருள். இவர் தந்தை மனோவா. இசுரவேல் தேசத்தின் நியாயாதிபதிகளுள் ஒருவர். இசுரவேல் மக்களை இருபது வருஷம் நியாயம் விசாரித்தவர்.

யூத மார்க்கத்தில் சடை வளர்த்து, குறிக்கப்பட்ட சில கட்டுப்பாட்டுக்குள் இருக்கப்பட்டவர்கள் நசரேயர் என்று அழைக்கப்பட்டார்கள். நசரேயர் என்ற வார்த்தைக்குப் பிரித்து வைக்கப்பட்டவர்கள் அல்லது துறவறத்தார்[66] என்று பொருள். இப்படி வளர்க்கப்பட்டவர் சிம்சோன்.

இசுரவேலர் பெலிஸ்தரிடம் நாற்பது வருட காலமளவு அடிமைப் பட்டிருந்தார்கள். பெலிஸ்தியர் கையிலிருந்து விடுவிக்கும்படிக்குத் தேவன் சிம்சோனை எழுப்பினார்.

மனோவா என்பவரின் வயதான காலத்தில் இறை அருளால் கிடைக்கப் பெற்றவர் சிம்சோன். இவர் தாய் இவரைக் கர்த்தருடைய தூதன் கட்டளையிட்டபடி தலையில் சவரன் கத்தி படாமல் நசரேயனாக வளர்த்து வந்தார். அதினால் அவன் முடி அவன் முதுகு மட்டும் தொங்கிக் கொண்டு தூரத்தில் இருந்து நோக்கினால் சிங்கம் புறப்படுவது போலத் தோன்றிற்று. இதனால் தோற்றத்தின் காரணமாக சாமுவேல் பவுல் ஐயர் இவரை ஜடாமுனி எனக் குறிப்பிடுகிறார்.

கர்த்தரின் வல்லமையினால் இவர் செய்த வீர தீரச் செயல்கள் எண்ணிக்கையிலடங்கா. ஜடா முனி ஒருமுறை சிங்கத்தின் வாயைக் கிழித்தார்; மற்றொருதரம் முந்நூறு நரிகளைப் பிடித்து, அதின் வாலில் தீக்கொளுத்தி பெலிஸ்தியர் வயலுக்குள் ஓடவிட்டார்; மற்றொருமுறை அவரைப் பிடிக்க பெலிஸ்தர் வந்தபோது கோட்டை வாசலைப் பேர்த்தெடுத்து அதைத் தூக்கிக்கொண்டு மலைக்கு ஓடிப்போனார்; மற்றும் கழுதையின் தாடையெலும்பினால் பெலிஸ்தரில் ஆயிரம் பேரைக் கொன்றார்.

இப்படிக்கொத்த செய்கைகளைச் செய்த ஜடாமுனியாரின் கடைசிக்காலம் சோகம் நிறைந்ததாயிருந்தது. அவர் ஒரு வேசியை நாடி, அவள் மிகவும் வருந்திக் கேட்கவே தன்னிடமுள்ள தேவ வல்லமை தன் தலைமுடியில் இருக்கிறதை உளறிவிட்டார். அவள் ஜடாமுனியாரைத் தம் மடியில் படுக்கவைத்து அவருடைய முடியைச் சிரைத்துச் சிறுமைப்படுத்தினாள். பெலிஸ்தியர் வருகிறார்கள் என்று சொன்னபோது முன்பு போல வீரமுடன் எழுந்த சிம்சோனைப் பெலிஸ்தர்கள் பிடித்து அவன் கண்களைப் பிடுங்கிக் காசா என்னும் நகரச் சிறைச்சாலையில் அடைத்து மாவரைக்க வைத்தார்கள் என்ற நிகழ்வினைக் குறிப்பிடுகிறார்.

ஜடாமுனியை மட்டுப்படுத்தியதை நினைத்துக் கொண்டாடத் திருவிழா ஒன்றை ஏற்பாடு செய்து மூவாயிரம் பேர் நிரம்பத்தக்க ஒரு மாளிகையிலே அதை ஏற்பாடு செய்திருந்தனர். அப்போது குருடனான ஜடாமுனியை வேடிக்கைக் காட்டும்படிக்கு அவரைக் கொண்டு அந்த மாளிகையைத் தாங்கி நிற்கிற இரண்டு தூண்களின் நடுவிலே கட்டினார்கள்.

அப்போது ஜடாமுனியாருக்குக் கொஞ்சம் முடியும் துளிர்விட்டிருந்தது. அப்போது அவர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, “கர்த்தராகிய ஆண்டவரே! நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தியர் கையிலே பழிவாங்கும்படிக்கு இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே பலப்படுத்தும்”[67] என்று வேண்டுதல் செய்து அந்த இரண்டு தூண்களையும் பிடித்துக்கொண்டு, என் ஜீவன் பெலிஸ்தியரோடுகூட மடியக்கடவது என்று சொல்லிப் பலமாய் அசைக்க, அந்த மாளிகை இடிந்து விழுந்து அனைவரும் மாண்டார்கள்.

ஒருவன் எவ்வளவு வல்லமை பொருந்தியவனாய் இருந்தாலும் ஒழுக்கம் தவறி நடந்தால் ஏற்படும் அவல நிலையை வெளிக்காட்டும் படிப்பினையாக ஜடாமுனியின் சரித்திரம் அமைந்துள்ளது.

ஏலி

ஏலி என்னும் எபிரெயப் பெயருக்கு 'உயர்வு'[68] என்று பொருள். ஏலி இசுரவேலை நாற்பது வருடங்கள் நியாயம் விசாரித்த நியாயாதிபதி ஆவார். மகன்கள் ஓப்னி, பினேகாஸ், பேரன் இக்கபோத். இசுரவேலில் பிரதான ஆசாரியனாகவும் நியாயாதிபதியாகவும் இருந்தார். ஆரோனின் இரண்டாம் குமாரன் இத்தாமார் சந்ததியில் வந்தவர், சாமுவேலுக்கு முன் ஆசாரியனாக இருந்தார்.

பூமியில் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் நல்லவர்கள்தான். அவர்கள் நல்லவராகவும் கெட்டவராகவும் மாறுவது பெற்றோரின் வளர்ப்பு முறையில் தான் உள்ளது என்பது உலகப் பொது வழக்கு. அப்படி தன் பிள்ளைகளைச் சரிவர வளர்க்கமால் போன ஒருவருடைய வாழ்க்கையின் பதிவாகும்.

ஓப்னி, பினெகாஸ் என்ற இவரது இரண்டு குமாரர்களும் சொல்லமுடியாத அளவுக்குத் துன்மார்க்கராய் இருந்தார்கள். அவர்களுடைய ஆகாமியத்தின் அகோரத்தைக் காட்டும்படி அவர்கள் 'பேலியாளின் மக்களாய் இருந்தார்கள்'[69] என்று விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் 'பேலியாள்' என்பது பாதாள பூதங்களின் தலைவனுக்குப் பேராக வழங்கப்பட்டு வந்தது[70] எனச் சாமுவேல் பவுல் ஐயர் விளக்கம் கொடுக்கிறார்.

இவர்கள் தேவனுடைய காணிக்கைகளைத் திருட்டளவாய் எடுத்துக்கொள்வதும் வழிபாட்டிற்கு வருகிற பெண்களை மானபங்கம் செய்வதுமான தீச்செயல்களில் ஈடுபட்டு வந்தார்கள். இந்த இரு குமாரரின் அக்கிரமத்தை அறிந்திருந்தும் ஏலி அவர்களை அடக்காமல் போனதினால் அவர்கள் மூலமாகத் தேவன் ஏலியைத் தண்டிப்பார் என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. இந்தச் செய்தி சிறுவனாகிய சாமுவேலின் மூலமாக ஏலிக்கு அறிவிக்கப்பட்டது.

இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பின் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது. பின்பொருமுறை பெலிஸ்தருடன் உண்டான போரின்போது ஓப்னி, பினெகாஸ் இருவரும் கொல்லப்பட்டனர். அதே நாளில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் பெலிஸ்தர் வசமாகப் பிடிபட்டது, தொண்ணூற்றெட்டு வயதான ஏலி யுத்தக் களத்திலிருந்து கொண்டு வரப்பட்ட துக்கச் செய்திகளைக் கேட்டவுடனே மயங்கி விழுந்து, தன் பிடரி முறிந்து செத்துப் போனார். ஆலயத்தில் இருப்பவர்கள் தான் மட்டும் ஒழுங்காய் நடந்தால் போதாது தன் குடும்பத்தினரும் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் ஒழுக்கத்துடன் நடக்கும்படி கற்பிக்க வேண்டும் என்று போதனை வலியுறுத்தப்படுகிறது.

சாமுவேல் தீர்க்கதரிசி

சாமுவேல் என்னும் எபிரெயப் பெயருக்கு 'அவருடைய பெயர் தேவன்

(எல்)'[71] என்று பொருள். எல்க்கானாவுக்கும் அவன் மனைவியாகிய அன்னாளுக்கும் வாக்குத்தத்தத்தின் குழந்தையாகப் பிறந்தவர்.

மனிதனின் குணங்கள் மாறாமல் எப்போதும் ஒன்றுபோல் இருக்கும் வாய்ப்புண்டோ? இல்லவே இல்லை. குணங்கள் நேரத்திற்கு நேரம் மாறும் இயல்பை உடையது. ஆனால் எப்போதும் மனிதனின் குணம் மாறாமல் இருக்க ஒரே வழி இறைவனின் திருவடிதான். அப்படி இறைவனின் இயல்புகளைத் தன்னில் வளர்த்துத் தன் வாழ்நாள் முழுவதும் சீரான வாழ்க்கையை மேற்கொண்ட ஒருவரின் வாழ்க்கை இதுவாகும்.

அவர் *சிறுவயதாயிருக்கும்போதே* கர்த்தர் இவர் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, ஏலியின் இரண்டு குமாரர்கள் பற்றிய துணிகரத்தை ஏலிக்குச் சொல்லும்படி இவரோடுகூடப் பேசினார்.

மேலும் சாமுவேலின் வாலிபப்பருவத்தைக் குறித்து மக்களிடம் காணப்பட்ட சாட்சியைச் "சாமுவேல் வளர்ந்தான். கர்த்தர் அவனுடனே கூட இருந்தார். அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்துபோக விடவில்லை. சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல இசுரவேலருக்கும் விளங்கினது"[72] என்னும் கூற்றின் மூலம் காணமுடிகிறது.

சாமுவேல் தேவனின் உத்தரவுப்படி இசுரவேலின் முதல் அரசனாகிய சவுலை அபிஷேகம் செய்தார். சவுல் பாவம் செய்தபோது, சாமுவேல் தெய்வீகமான கண்டனத்தை அனுப்பி அவன் நட்பைப் புறக்கணித்தார். சவுலைப் புறக்கணித்த பின் இரண்டாம் அரசனாகிய தாவீதை அவர் அபிஷேகம் செய்தார்.[73] சாமுவேல் தீர்க்கதரிசி தன் நல்ல நரைவயதிலே மரணடைந்தார். அவரை ராமாவிலே அடக்கம் செய்தார்கள்.

சிறுவயதிலிருந்தே ஆலயத்தில் வளரும் பிள்ளைகள் தங்கள் வாழ்நாள் இறுதிவரைக்கும் ஒழுக்கநெறிகளை விட்டுப் பின்வாங்கமாட்டார்கள் என்பதற்குச் சாமுவேல் தீர்க்கதரிசியின் வாழ்க்கை ஒரு நல்ல முன்னுதாரணமாகும்.

சவுல் அரசன்

சவுல் என்பவர் பென்யமீன் கோத்திரத்திலுள்ள கீஸ் என்னும் பேருள்ள ஒருவனுடைய குமாரன். மனைவி அகினோவாம், மகன்கள் யோனத்தான், அபினதாப், மல்கிசூவா, இஸ்போசேத், மகள்கள் மேராப், மீகாள், கிபியாவில் வசித்தார்.

சவுல் என்னும் எபிரெயப் பெயருக்குக் 'கேட்கப்பட்டது' [74] என்று பொருள். சாமுவேல் தீர்க்கதரிசி இவரைக் கில்காலில் கர்த்தருக்கு முன்பாக அரசனாக ஏற்படுத்தினார்.

அரசன் எப்படியோ குடிகளும் அப்படியே என்ற முதுமொழி அனைவரும் அறிந்ததே. அரசன் எவ்வாறு நடக்கக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது இந்தச் சவுல் அரசனின் வாழ்க்கையாகும்.

தேவன் சவுலுக்கு இசுரவேலரை எதிர்த்து நின்ற அமலேக்கியரையும் அதின் இராஜாவையும் அழிக்கும்படிக்கு உத்தரவு கொடுத்திருந்தார். ஆனால் இவர் அமலேக்கிய இராஜாவையும் மற்றும் போரில் கொள்ளையடித்த பொருளில் நல்லவைகளையும் காப்பாற்றினார்.

இதினால் தேவன் இவரின் கீழ்ப்படியாமையின் நிமித்தம் கர்த்தர் அவனைத் தள்ளிவிட்டார் என்று சாமுவேலால் எச்சரிக்கப்பட்டார். அந்த நேரத்தில் அவன் குணம் துக்கமாகவும் கவலையாகவும் இருந்தது. ஆனால் பிற்பாடு அவர் மீண்டும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் தன் விருப்பப்படியே நடந்துவந்ததினால் தேவனுடைய ஆவி அவரைவிட்டு விலகி, கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவரைக் கலங்கச் செய்தது.[75] என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் தனக்குப் பதிலாகக் கர்த்தர் தாவீதை அரசனாகத் தெரிந்தெடுத்ததினால் அவர் மேல் பொறாமை கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் அவரைத் துரத்திக்கொண்டேயிருந்தார். இந்நிலையில் பெலிஸ்தரின் படையெடுப்பின்போது சவுல் தோற்கடிக்கப்பட்டு, அவரும் அவருடைய குமாரர்களும் கொலை செய்யப்பட்டார்கள். இதினால் சவுல் தன் சொந்தப் பட்டயத்தை நட்டு அதின் மேல் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

சவுல் வில்வித்தையை யூதா புத்திரருக்குக் கற்றுக்கொடுத்து இசுரவேலின் அலங்காரமாய் இருந்தார் என்றும் மேலும் அவர் காலத்தில் இசுரவேலரின் குமாரத்திகள் பொன்னாபரணங்களை அணிந்துகொண்டு திரிந்தார்கள் என்றும் சாமுவேல் பவுல் ஐயர் இவரைக் குறித்துப் புகழாரம் சூட்டுகிறார்.

இராஜ புலவர் (தாவீது)

தாவீது என்னும் எபிரெயப் பெயருக்குப் 'பிரியமானவன்'[76] என்று பொருள். தாவீதின் தகப்பனாருக்கு ஈசாய் என்று பேர். இவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஈசாய்க்கு எட்டு ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்களும் இருந்தார்கள். இவர்களில் எட்டாம் மகனாகத் தாவீது பிறந்தார்.[77] தாவீது கவிபுனைவதிலும் தம்புரு என்னும் இசைக்கருவியை வாசிப்பதிலும் தேறினவராயிருந்து அநேகச் சங்கீதங்களைப் பாடியுள்ளார்.

சவுல் அரச பதவியிலிருந்து புறக்கணிக்கப்பட்டது முதல் சாமுவேல் தீர்க்கதரிசியின் கவலையெல்லாம் புதிய அரசனைப் பற்றிய கவனமாகவே இருந்தது. இக்காலத்தில் தான் தாவீது இராஜாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

தாவீது இராஜாவின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இரண்டு நிகழ்வுகள் உண்டு. முதலாவது, சவுல் அரசனின் காலத்தில் ஏற்பட்ட பெலிஸ்தியர்

படையெடுப்பின்போது கோலியாத் என்னும் அரக்கனை மடங்கடித்தார். இவர் பஞ்சலட்சண புருஷனாயிருந்தார் (இயல்பிலே பராக்கிரமன், யுத்தத்திலே வீரன், காரியத்தில் சமர்த்தன், கின்னரத்தில் நிபுணன், ஆளில் சவுந்தரியன்)[78] என்று சாமுவேல் பவுல் ஐயர் இவரை வாழ்த்திப் பாடியுள்ளார்.

மற்றுமொரு நிகழ்ச்சி, ஒரு போர்க்காலத்தில் இராஜபுலவர் அரண்மனை உப்பரிகையில் உலாத்திக் கொண்டிருக்கும்போது குளித்துக் கொண்டிருந்த பத்சேபாள் என்னும் பெண்ணை இச்சித்து அவள் கணவனைக் கொன்று தனக்கு மனைவியாக்கிக் கொண்டார். இதனால் கர்த்தர் நாத்தான் என்னும் தீர்க்கதரிசியைக் கொண்டு அவரை எச்சரித்தபோது, அவர் தன்னைத் தாழ்த்தித் தான் செய்த பாவத்தை அறிக்கைபண்ணி மனம்திரும்பினார்.

தாவீது இராஜா இசுரவேலை நாற்பது ஆண்டுகாலம் ஆட்சி செய்தார். மேலும் இவருடைய சந்ததியில் தான் இயேசு கிறிஸ்து பிறந்தார். இவர் எழுபது வயதுடையவராய் மரித்தாரென்று யோசிப்பாஸ் என்னும் வரலாற்றாசிரியர் சொல்வதைச் சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

மனிதன் பாவம் செய்வது இயல்பே. அதைக் கடவுள் உணர்த்தும்போது மனந்திரும்பி வாழ்பவனே அவரின் இணையற்ற சிநேகிதனாகிறான் என்ற உண்மையை உணர்த்தும் வண்ணம் இப்பகுதி அமைந்துள்ளது.

இராஜ ஞானியார் (சாலொமோன்)

சாலொமோனின் தகப்பன் தாவீது அரசன், தாய் பத்தேசபாள். மகன் ரெகொபெயாம். இசுரவேலின் மூன்றாவது இராஜா. சாலொமோன் என்னும் எபிரெயப் பெயருக்குச் 'சமாதானம், சுகவாழ்வு' [79] என்று பொருள்.

அதிக ஞானத்திலே சலிப்புண்டு; அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்[80] என்கிற தத்துவம் இராஜ ஞானியார் சாலொமோன் அவர்களால் கூறப்பட்டது.

சாலொமோன் என்பவர் மனுமக்களில் உயர்ந்த ஞானத்தை உடையவராய் மாத்திரம் அல்ல. ஞானத்திலும், அறிவிலும், விவேகத்திலும் அவருக்கு மிஞ்சினவர்கள் இல்லையென்று சொல்லத்தக்கதாக அவ்வளவு மேன்மையாகத் தேவனால் நடத்தப்பட்டவராய் இருந்தாலும் அவரிடத்தில் விளங்கிய பொல்லாப்பும், மதியீனமும், ஆகாமியமும் கொஞ்சமன்று. மெய்த் தேவனுக்கென்று ஒரு பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டினார்.

பதினெட்டு வயதாயிருக்கும்போது இவர் கைகளில் இசுரவேலின் அரசாட்சி கொடுக்கப்பட்டது. அவர் அதற்கு நன்றிசெலுத்தும் விதமாக அன்றையத் தினம் ஆயிரம் சர்வாங்க தகனபலிகள் செலுத்தினார். அன்று இரவு தூங்குகையில் ஆண்டவர் சொப்பனத்தில் தரிசனமாகி, 'நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்' என்று கேட்க, இவர் 'ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்' என்று பதில் சொல்லத் தேவன் அகமகிழ்ந்து அவருக்கு ஞானம் மாத்திரமல்லாமல் செல்வமும்

செழிப்பும் அவர் நாட்களெல்லாம் சமாதானமும் உண்டாகும்படி செய்தார்.[81] என்று கூறப்பட்டுள்ளது.

இவருடைய ஞானத்தைப் பிரசித்தப்படுத்தும் ஓர் அரிய நிகழ்ச்சி அந்நாட்களில் நடந்தது. இரண்டு ஸ்திரீகள் வழக்குக்கு அரசனிடம் வந்தார்கள். அவர்கள் இருவரும் வேசிகள். வழக்கு யாதெனில், இருவரும் ஒரே வீட்டில் குடியிருக்கையில், இருவரில் ஒரு ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டு படுத்து அதைச் சாகடித்து விட்டு அருகிலிருந்த ஸ்திரீயின் சாகாத பிள்ளையை தன்னிடம் எடுத்து வைத்துக்கொண்டு அதைத் தனதென்று உரிமை கொண்டாடுகிறாள் அந்தப் பிள்ளை தன்னுடையது அதை என்னிடம் வாங்கிக் கொடுங்கள் என்பதே அடுத்தவளின் வழக்கு. இந்த வழக்கைக் கேட்ட ராஜா வழக்கைத் தீர்த்து, குழந்தையை உண்மையான தாயிடம் ஒப்படைத்த தீர்ப்பானது இவரை மிகவும் பிரபல்யப்படுத்திற்று[82] என வரலாறு எழுதப்படுகிறது.

இவர் எழுநூறு மனைவிகளும், முந்நாறு வைப்பாட்டிகளும் உடையவராய் இருந்தார். அவர்கள் இவர் இருதயத்தைத் தேவனை விட்டு வழிவிலகச் செய்துவிட்டனர். ஆனால் இவர் எழுதிய நீதிமொழிகள், பிரசங்கியின் ஆகமம் இவற்றைக்கொண்டு பிந்தியகாலத்தில் இவர் மனந்திரும்பினார்[83] என்று சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக்காட்டியுள்ளார்.

ரெகொபெயாம்

ரெகொபெயாம் என்னும் எபிரெயப் பெயருக்கு 'ஜனங்கள் விரிவடைந்தார்கள்'[84] என்று பொருள். தகப்பன் சாலொமான் ஞானியார், தாய் நாமாள். இவர் தன்னுடைய நாற்பத்தொராம் வயதில் அரசனானார்.

மூடனை உரலில்போட்டு உலக்கையினால் நொய்யோடே நொய்யாகக் குத்தினாலும், அவனுடைய மூடத்தனம் அவனைவிட்டு நீங்காது[85] என்ற நீதிமொழி போல இந்த அரசனின் மதியீனம் அவர் செயல்களில் நன்கு வெளிப்பட்டது.

ரெகொபெயாம் அரசனானபோது குடிமக்கள் அவரிடம் மனுப்பண்ணித் தங்களுடைய தற்கால வரிவிகிதம் அதிகம் என்றும், அதைக் குறைக்க வேண்டும் என்றும் கேட்டார்கள். அந்த மனுவை அரசன் வாங்கி மூன்று நாள் தவணை கொடுத்து, தன் பிதாவின் காலத்து மந்திராலோசனைக் காரரோடே அதைப்பற்றி ஆலோசித்தபோது மக்களின் மனுவுக்கு இணங்கிப்போவது நலமென்று சொன்னார்கள். அது போதாதென்று அரசன் வாலிபரான பலரைக் கூப்பிட்டுக் குடிகளுடைய மனுவுக்கு உங்கள் ஆலோசனை என்னவென்று கேட்டான்.

அந்த வாலிபர் உலக ஞானங்களையெல்லாம் கரைத்துக் குடித்தவர்களைப் போல, "என் சுண்டுவிரல் என் தகப்பனார் இடுப்பிலும் பளுவானது; என் பிதாவின் நுகம் பாரம், என் நுகம் அதிக பாரமாயிருக்கும்; பிதா சவுக்கால் அடித்தார், நான் தேள்களால் கொட்டுவேன்"[86] என்பதுதான் என்று

சொன்னார்கள். அதைக் கேட்டவுடனே அரசனுக்கு ஆனந்தமாகி அதை மக்களிடம் அப்படியே சொன்னான். ரெகொபெயாம் ஞானிக்குப் பிறந்த மூடன். இதனால் ஜனங்களுக்குள் விசனம் உண்டாகி அரசாட்சியும் இரண்டாகப் பிரிவுண்டாக ஏதுவாயிற்று.

ரெகோபெயாமின் அரசாட்சியில் பாதி அவன் வேலைக்காரனாகிய யெரொபெயாமுக்குக் கொடுக்கப்பட்டது. ரெகொபெயாம் பதினெட்டு மனைவிகளையும் அறுபது மறுமனையாட்டிகளையும் விவாகம்பண்ணி இருபத்தெட்டு குமாரரையும் அறுபது குமாரத்திகளையும் பெற்றான். அவன் தன் நாற்பத்தோராம் வயதில் பட்டத்துக்கு வந்து, பதினேழு வருடம் அரசாண்டு சஞ்சலத்தோடு தன் ஆயுளை முடித்தான்.

யோசபாத்து அரசன்

யோசபாத் என்னும் எபிரெயப் பெயருக்கு 'யெகோவா நீதி செய்கிறார்' [87] என்று பொருள். பெற்றோர் ஆசா – அசுபாள் ஆவர். யூதேயா நாட்டு அரசனாவார்.

வீணான சகவாசம், செய்யும் பெருமோசம் என்கிற உலக வழக்கு இந்த அரசனின் சரித்திரத்தின் வழி உண்மையேயாகும்.

யோசபாத் ஆசா என்னும் பக்தியுள்ள யூத அரசனுடைய குமாரனாயிருந்தார். இசுரவேல் அரசனாகிய ஆகாப் கானானின் வடதிசை தேசங்களின் செங்கோல் செலுத்தி வந்த காலத்தில் இந்த யோசபாத்து அரசன் தென்னாடுகளில் அரசுபுரிந்து வந்தார். இவர் ஆளும் திறமையிலும் தேவபக்தியிலும் சிறந்து விளங்கிக் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட போதிலும், மூர்க்கனாகிய ஆகாபோடே ஐக்கியமாயிருந்தார்; மேலும் மகனையும் ஆகாபின் மகளுக்கு விவாகம் செய்து கொடுத்திருந்தார்.

யோசபாத் ஆகாபோடு போக்குவரவாயிருக்கையில் அவன் யோசபாத்தைத் தன்னோடு சீரிய இராஜாவுக்கு விரோதமாய்ப் போர்புரியும்படி துணைக்குச் சென்றான். போரில் சத்துருக்கள் அவர் பிராணனை வாங்கும்படி நெருங்கின சமயத்தில் அவர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்; அப்போது தேவன் அவர் அங்கலாய்ப்பைக் கேட்டருளி அவரை இரட்சித்தார். அரசன் தேவாதீனமாய் உயிர்தப்பித் தன் அரண்மனை வந்து சேர்ந்தார்.

'ஒருதரம் பட்டால் ஒதுங்கி வாழ்' [88] என்றொரு பழமொழியுண்டல்லவா? யோசபாத் அப்படி ஒதுங்கி வாழவில்லை. யோசபாத்து மறுபடியும் ஆகாபின் குமாரனாகிய அகசியாவோடு கூட்டு வியாபாரஞ்செய்தார். இந்த அகசியா தன் தகப்பனைப்போலவே துன்மார்க்கனாயிருந்தார். இருவருங்கூடிக் கப்பல் வியாபாரஞ்செய்து திரண்ட பொன் சம்பாதிக்க ஆரம்பித்தார்கள். கர்த்தர் அவர்கள் கப்பல்களையெல்லாம் உடைந்து போகப்பண்ணினார். துன்மார்க்கருடைய ஆசை அழியும்[89] என்னும் திருவாக்கு நிறைவேற்றம் பெறுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

யோசபாத் கர்த்தரின் பக்தர் . ஆகிலும் அவரிடம் விழுதல் காணப்பட்டது. பக்தரின் விழுதல் மற்றவர்களும் இப்படியே விழுந்துபோங்கள் என்று ஏவுகிறதாயிராமல் இப்படி விழுந்துபோகவேண்டாம் என்று எக்காளம் ஊதி எச்சரிக்கிறதுபோல் இருக்கின்றது.

ஆகாப்

ஆகாப் என்னும் எபிரெயப் பெயருக்குப் 'பிதாவின் சகோதரர்' [90] என்று பொருள். இவர் உம்ரியின் குமாரன், மனைவி யேசபேல், இசுரவேல் தேசத்தின் ஏழாவது ராஜா. சமாரியாவில் இசுரவேலின்மீது இருபத்திரண்டு வருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணினார்.

கேடு வரும்போது மதிகெட்டுவரும்[91] என்னும் பழமொழிபோலத் தீயசெயல்களில் முற்றினவர்தான் இந்த ஆகாப் அரசன்.

ஆகாப் இசுரவேலின் அரசன் ஆவார். 'ஆகாபின் தகப்பனாகிய உம்ரி தனக்கு முன்னிருந்த எல்லாரைவிடக் கேடாய் நடந்தான்'[92] என்று சாமுவேல் பவுல் ஐயர் வேதத்திலுள்ள ஒரு திருவசனத்தை மேற்கோள்காட்டியுள்ளார்.

அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்தான் என்ற பழமொழி போல ஆகாபைக் குறித்துச் சாமுவேல் பவுல் ஐயர் ஒரே வரியில் சொல்லும்போது, 'கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யத் தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப் போல் ஒருவனுமில்லை'[93] என்ற விவிலியப் பகுதியை அவர் குணத்தை விளக்கும் வகையில் கூறியிருக்கிறார்.

ஆகாப் பிரிவினை ராஜ்யத்தின் ஏழாவது அரசனாயிருந்தார்; ஆகாப் இராஜா தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார். சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலைத் திருமணம் செய்தது மட்டுமல்லாமல், பாகால் என்னும் விக்கிரகத்தைச் சேவித்து, ஒரு விக்கிரகத்தோப்பையும் வைத்து, இசுரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படி தனக்கு முன்னிருந்த இசுரவேலின் அரசர்களெல்லாம் செய்ததை விடவும் அதிகமாய்ச் செய்துவந்தார்.

ஆகாப் அரசன் ஆட்சி காலத்தில் எலியா தீர்க்கதரிசியின் ஊழியம் சிறப்பாக இருந்தது. தன் நாட்டிலுள்ள ஒரு ஏழையான நாபோத் என்பவரின் திராட்சத் தோட்டத்தை எடுத்துக்கொள்ள ஆகாப் விரும்பியபோது, அந்தத் திராட்சத்தோட்டம் தன் பிதாக்களின் சுதந்தரம் என்ற காரணத்தினால் அதை விற்க முடியாது என்று நாபோத் சொல்லி விட்டதினால் யேசபேல் சதிசெய்து அவரைக் கொன்றுவிட்டாள். இந்தக் கொடிய செயலுக்குத் தண்டனையாக ஆகாபின் குடும்பம் முழுவதும் அழிந்துபோகும் என்று எலியா அறிவித்தார்.

ஆகாபின் ஆட்சியின் பெரும் பகுதி தமஸ்குவின் அரசன் பெனாதாத்துக்கு விரோதமாக மூன்று முறை போர் செய்வதில் கடந்து விட்டது. இரண்டில் ஆகாப்

அரசன் வெற்றி பெற்றான். மூன்றாவது யுத்தத்தில் அவன் மாறு வேடத்தில் யுத்தத்திற்குச் சென்றபோது ஒருவன் தற்செயலாக வில்லை நாணேற்றி எய்தான் அது இசுரவேலின் அரசனாகிய ஆகாபைக் காயப்படுத்திற்று. மாலைப்பொழுதில் அரசன் மரித்துப் போனான். சமாரியாவில் அடக்கம் செய்வதற்காக அவன் உடல் கொண்டு வரப்பட்டபோது, கர்த்தர் எலியா தீர்க்கதரிசியின் மூலமாய்ச் சொல்லியிருந்தபடியே "அவன் இரத்தத்தை நாய்கள் நக்கின."[94] மேலும் கொஞ்சக் காலத்துக்குள் அவன் குடும்பம் முழுவதும் அழிந்து போயிற்று.

எலியா ரிஷி

எலியா என்னும் எபிரெயப் பெயருக்கு 'யெகோவா என் தேவன்'[95] என்று பொருள். இவர் பெற்றோர் யார்? இவர் எங்குக் கல்வி கற்றார்? என்ற வரலாறு தெரியவில்லை. இவர் திஸ்பி ஊரான் என்பது மட்டும் தெரியவருகிறது. இது எருசலேமையாவது சீலோவையாவது அடுத்த ஊராயிராமல், யோர்தான் ஆற்றுக்கு வடகிழக்கு கீலேயாத்து மலைநாட்டிலிருந்த ஒரு கிராமம்[96] என்று சாமுவேல் பவுல் ஐயர் விளக்கம் அளிக்கிறார்.

ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்பது உலகப் பழமொழி. உலகில் சாவைக் காணாதவர் எவரும் இருந்திருக்க முடியாது. ஆனால் இதற்கு விதிவிலக்கானவர் தான் இந்த எலியா ரிஷி. இவர் சாவைக் காணாத காரணத்தால் ரிஷி என்று அழைக்கப்படுகிறார்.

எலியா ரிஷியைக் குறித்து அநேகக் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் உண்டு. அவர் ஏழு மாபெரும் அற்புதங்களைச் செய்தார் என்று பலரும் கூறுவர். அதில் அவர் இறைவனின் துணையோடு செய்த குறிப்பிடத்தக்க இரண்டு அற்புதங்கள் மகத்தானவை.

அதில் முதலாமாவது, ஆகாப் அரசன் மற்றும் இசுரவேல் மக்கள் பாகால் விக்கிரகத்தை வணங்கின பாவத்தினிமித்தம் நாட்டிலே மழை பெய்யாதிருக்கும் என்று சாபங்கூறினார். அதன்படியே மூன்று வருடமும் ஆறு மாதமும் மழை பெய்யாதிருந்தது. இதனால் பூமி வறண்டு தன் விளைச்சலைக் கொடாதிருந்தது; எங்கும் பஞ்சமுண்டாயிற்று.

இந்நிலையில் மழை பெய்யாததினால் ஏற்பட்ட பஞ்சத்தால் ஆகாப் அரசன் எலியா ரிஷியின்மேல் மிகவும் கோபங்கொண்டு அவரைக் கொலை செய்ய வகைதேடினார். அப்போது எலியா தேவகட்டளைப்படி ஆகாப் அரசனுக்குத் தன்னைக் காண்பிக்கும்படிக்கு அவரையும் அவருடைய நானூற்றைம்பது பாகால் தீர்க்கதரிசிகளையும் கர்மேல் பர்வதத்திற்குத் கூடிவரும்படி கூறினார்.

அந்தப்படியே எல்லோரும் வந்தபோது எலியா ரிஷி பாகால் தீர்க்கதரிசிகளுக்கு ஒரு சவால் விடுத்தார். அதென்னவென்றால், இரண்டு காளைகள் கொண்டுவரப்பட வேண்டும்; ஒரு காளையைப் பாகால் தீர்க்கதரிசிகள் தெரிந்துகொண்டு அதைத் துண்டித்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல்

வைக்க வேண்டும். எலியாவும் மற்றொரு காளையை அப்படியே செய்து நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைப்பார்; பாகால் தீர்க்கதரிசிகள் அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிடவேண்டும்; எலியா தீர்க்கதரிசி கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவார். அப்பொழுது *'அக்கினியினால் உத்தரவருளும் தெய்வமே தெய்வம்'* [97] என்று சொன்னார்.

பாகால் தீர்க்கதரிசிகள் காலை முதல் சாயங்காலம் வரை கத்தியும், உடலைக் கீறி இரத்தம்சிந்தி வேண்டியும் ஒன்றும் நடக்கவில்லை. அப்போது எலியா ரிஷி, தாம் உண்டாக்கின தனி பலிபீடத்தில் காளையை வைத்து, அதைச் சுற்றிலும் பன்னிரெண்டு குடங்கள் தண்ணீர் ஊற்றி நிரப்பி, பின்பு *"கர்த்தாவே நீர் தேவனாகிய கர்த்தரென்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும்"* [98] என்று கருத்தோடு வேண்டுதல் செய்தார். அப்போது வானத்திலிருந்து அக்கினி இறங்கிப் பலிபீடத்திலிருந்த காளையையும் அதனைச் சுற்றியிருந்த தண்ணீரையும் பட்சித்து நக்கிப்போட்டது.

அப்போது அரசனும் அங்கிருந்த மக்களனைவரும் *'கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம்'* [99] என்று முகங்குப்புற விழுந்து பணிந்தார்கள். உடனே எலியா நானூற்றைம்பது பாகால் தீர்க்கதரிசிகளையும் பிடித்து வெட்டிக் கொன்றுபோட்டார். பின்பு பூமியின்மேல் மழையும் பெய்தது.

இதன் பின்பு எலியா ரிஷி, தம்முடைய சீடனாகிய எலிசா ரிஷியைத் தம் இடத்திலே நிறுத்தின சிலகாலத்துக்குப் பின்பு தேவனுடைய அக்கினி ரதம், அக்கினிக் குதிரைகள், சுழற்காற்றின் மூலம் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். பின்பு இயேசுவானவர் இப்பூவுலகில் வாழ்ந்த காலத்தில் அவரோடு பேசினவராகக் காணப்பட்டார்.

எலிசா

எலிசாவின் தகப்பன் சாபாத். எலியாவின் சீஷனும் எலியாவின் தலைமைத்துவத்தை ஏற்று வழி நடத்திச் சென்ற தீர்க்கதரியாவார். எலிசா என்பதற்குத் "தேவன் (எல்) என் இரட்சிப்பு" [100] என்று பொருள்.

எலியா தீர்க்கதரிசியின் இரட்டிப்பான வல்லமையை எலிசா பெற்றிருந்தார். எலியா ஏழு என்றால் எலிசா பதினான்கு அற்புதங்களைச் செய்ததாக விவிலியம் கூறுகிறது.

எலிசா என்றால் எல்லோருடைய ஞாபகத்துக்கும் வரும் ஒரு சம்பவம் உண்டு. எலிசா நாகமான் என்கிற சீரிய படைத்தளபதியின் தொழுநோயைச் சுகப்படுத்தி அவனை அனுப்பி விட்டார். ஆனால் கேயாசி என்னும் எலிசாவின் வேலைக்காரன் அந்தப் படைத்தளபதியின் பிறகே ஓடி அவர் கொண்டுவந்த பொருட்களை தன் வீட்டில் புதைத்து வைத்துவிட்டு எலிசாவிடம் பொய்பேசியதால் நாகமானின் தொழுநோய் அவனைப் பிடிக்கட்டும் என்று எலிசா சபித்தவுடனே

அவன் தொழுநோயாளியானான் என்கிற சம்பவம்தான் முன்னிலை பெறுகிறது. அதனோடுகூட நினைவுகூரத்தக்க மற்றொரு சம்பவமும் உண்டு.

எலிசா சூனேம் என்னும் ஊருக்குச் செல்லும்போதெல்லாம் அங்குள்ள ஒரு குடும்பத்தினரின் வீட்டில் தங்குவது வழக்கமாயிருந்தது. அவ்வீட்டார் எலிசாவுக்குத் தங்கள் வீட்டில் மேலறையை ஒதுக்கி அவர் வரும்போதெல்லாம் அவருக்கு உணவளித்து அன்புடன் உபசரித்து வந்தார்கள். அவர்கள் முதிர் வயதுள்ளவர்களாகியும் அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது என்று அறிந்த எலிசா அவர்களுக்குப் பிள்ளை பெறும்படி ஆசீர்வதித்து வேண்டுதல் செய்தார். ஒருதரம் அந்தப் பிள்ளை இறந்துபோகவே சூனேம் ஊராளாகிய ஸ்திரீ எலிசாவிடம் வந்து அழுது நின்றாள். உடனே எலிசா அந்தப் பிள்ளைக்காக இறைவனிடம் வேண்டி உயிரோடே அவர்கள் கையில் கொடுத்தார்.

யோராம், யேகூ, யோவாகாஸ் மற்றும் யோவாஸ் ஆகிய ராஜாக்கள் ஆண்ட காலங்களில் கிட்டத்தட்ட அறுபது வருடங்கள் இறைப்பணி செய்து[101] தம் தொண்ணூறு வயதில் தன் வீட்டில் மரித்தார் என்று சாமுவேல் பவுல் ஐயர் கணக்கிட்டுக் குறிப்பிடுகின்றார்.

நாகமான்

சீரியா தேசத்தில் நாகமான் என்ற பேருடைய ஒரு தொழுநோயாளி இருந்தார். இவர் சீரியா நாட்டின் இராணுவப் படைத்தலைவன் ஆவார். நாகமான் என்னும் எபிரெயப் பெயருக்குச் 'சந்தோஷமானது' [102] என்று பொருள். இவர் தன் இராணுவப் பராக்கிரமத்தினால் பேர் வாங்கி உயர்ந்த பதவியும் பெரிய சேனாபதி பட்டமும் பெற்றிருந்தார்.

சீரியருக்கும் இசுரவேலருக்கும் யுத்தமுண்டானதில் சீரியர் இசுரவேலருடைய ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டு வந்திருந்தனர். அந்தச் சிறுபெண் தொழுநோயாளியாகிய நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டு வந்தாள். ஒரு நாள் நாகமானின் மனைவி தன் கணவரின் தொழுநோய்க் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது இச்சிறுபெண்: 'என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடம் போவாரானால் நலமாயிருக்கும் அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்' என்று சொன்னாள்.

உடனே நாகமான் சீரிய அரசனிடம் இதைச் சொல்ல அரசனும் அகமகிழ்ந்து தான் இசுரவேல் ராஜாவுக்கு கடிதமும் கொடுத்து அனுப்பினார். இதையறிந்த எலிசா ஆளனுப்பி நாகமானை தன்னிடம் வரும்படி அழைத்தார். அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் இரதங்களோடும் வந்து எலிசாவின் வாசற்படியில் நின்றான். தீர்க்கதரிசி நாகமானை தன் வீட்டிற்கு உள்ளே வரும்படி அழைக்கவில்லை. நாகமான் சிலநேரம் தன் வீட்டு வாசற்படியில் காத்து நின்றபிறகு, தன் வேலைக்காரன் மூலமாய் *'நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானஞ்செய். அப்பொழுது உன் மாமிசம் மாறி நீ சுத்தமாவாய்'* [103] என்று சொல்லியனுப்பினார்.

நாகமான் எலிசாவின் வார்த்தைகளைக் கேட்டு உக்கிரத்தோடு திரும்பிப் போனபோது, அவன் ஊழியக்காரர் அவரை வருந்திக் கேட்டுக்கொண்டபடியால் அவர் யோர்தானில் ஏழுதரம் முழுகி எழுந்தபோது அவர் மாம்சம் சிறுபிள்ளையின் மாம்சம் போல் மாறி அவர் குஷ்டரோகம் அவரைவிட்டு நீங்கியது எனப் பதிவு செய்கிறார்.

நாகமானைப் பற்றி அதன் பின்புள்ள வரலாறுகள் ஒன்றும் தெரியவில்லை. அவர் இசுரவேலின் தேவனுக்குத் துரோகம் பண்ணாமல், தன் மனதில் தீர்மானித்தபடி அவரைத் தொழுது வந்தார் என்று தெரியவருகிறது.

எசேக்கியா ராஜா

எசேக்கியா என்பதற்கு 'யெகோவா (என்) பெலன்'[104] என்று பொருள். இவரின் பெற்றோர் ஆகாஸ் – ஆபி. இவர் யூதா தேசத்தின் பதின்மூன்றாவது அரசன். எசேக்கியா இருபத்தைந்து வயது வாலிபனாயிருக்கையில் கிரீடாபிஷேகம்[105] பெற்றதாகச் சாமுவேல் பவுல் ஐயர் கணக்கிட்டுச் சொல்கிறார்.

இவர் ஆட்சிக்கு வந்ததும், தன் ராஜ்யத்திலுள்ள விக்கிரகாராதனைகளை வேரோடு எடுத்துப்போடவும் அவர்கள் அனைவரையும் ஆண்டவர் பாதத்தில் ஆடுகள்போல் கூட்டவும் பிரயத்தனப்பட்டார். எனவே, மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டினார். மேலும் அவர் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்திலே ஆராதனையும் பலியுமில்லாமல் அடைபட்டிருந்த ஆலயத்தைத் திறந்து, கட்டடத்தைப் பழுது பார்த்து, அன்றாடக பலி அனுதினமும் செலுத்தப்படக் கட்டளையிட்டார்.

எசேக்கியா அரசனை நினைப்பூட்டுவிதமாக யாவருமறிந்தவொரு சம்பவமும் உண்டு. எசேக்கியா மரணத்துக்கேதுவாக வியாதிபட்டபோது, ஏசாயா தீர்க்கதரிசி *'நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்'* என்று சொன்னார்.

ஏசாயாவின் இந்த வார்த்தைகளை எசேக்கியா கேட்டவுடனே தன் முகத்தைச் சுவர்முகமாய்த் திரும்பிக்கொண்டு *'ஆ, கர்த்தாவே நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேனென்பதை நினைத்தருளும்'* என்று வேண்டுதல் செய்து மிகவும் அழுதார். அப்போது கர்த்தருடைய வார்த்தை ஏசாயா தீர்க்கதரிசிக்கு உண்டாகி, 'உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன். இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன், மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய், *உன் ஆயுளோடு இன்னும் பதினைந்து வருஷம் கூட்டுவேன் என்கிறார்'*[106] என்று சொல்லி அத்திப்பழ அடையைப் பிளவையின்மேல் பற்றுப்போட்டு வைத்தியம் செய்தபோது எசேக்கியா இராஜா பிழைத்துப் பதினைந்து ஆண்டுகள் உயிரோடிருந்து அதன் பின் மரித்து தாவீதின் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டார்.

யோசியா இராஜன்

யோசியா என்னும் எபிரெயப் பெயருக்கு 'யெகோவா குணப்படுத்தியவர்'[107] என்று பொருள். பெற்றோர் ஆமோன்–எதிதாள். யூதாவின் பதினாறாவது அரசன் ஆவார்.

மனிதர்கள் ஒவ்வொருவரின் பிறப்பும் இறைவனுக்கு மட்டுமே தெரியும். அப்படியே மனிதருக்கு இடப்படும் பெயர்களும் காலத்தால் நியமிக்கப்படுபவை. அப்படியிருக்க, இந்த யோசியா இராஜன் பிறப்பதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இவரைப் பற்றியும், இவர் பெயரையும்கூட முன்குறித்துத் தீர்க்கதரிசனமாகச்[108] சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இவர் எவ்வளவு சிறப்பானவர் என்பது விளங்குகிறது.

இவர் தம் எட்டாம் வயதில் அரசனானார். ஆகிலும் ராஜ்யபாரத்துக்கடுத்த வேலைகளைத் தானாய் நிறைவேற்றச் சில வருடங்கள் சென்றன. அவர் தன் ராஜ்யபாரத்தின் பன்னிரண்டாம் வருடத்தில் தேவ பக்தியில் நிறைந்து, தீர்க்கதரிசிகள் உரைத்தபடியே அவமார்க்கத்தையும் விக்கிரகாராதனையையும் அழித்து விட்டதோடு மெய்த்தேவ வழிபாட்டுக்கான முயற்சிகளையும் செய்தார்.

அம்முயற்சிகளில் முதலாவதாகத் தேவாலயத்தைப் பழுது பார்க்கும் வேலையில் ஈடுபட்டார். கர்த்தருடைய பரிசுத்த ஆலயமானது இவருக்கு முன் ஆறு தடவை கொள்ளையிடப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டது. தேவாலயத்துச் சுவரும் அதையடுத்த கட்டடங்களும் கவனிப்பார் இல்லாமலும் பழுது பார்ப்பார் அல்லாமலும், பல இடங்களில் இடிந்து கட்டை மண்ணாய்க் கிடந்தது.

அரசன் அதை மறுபடியும் சீராக எடுப்பித்து, அதில் தினந்தோறும் தேவ கட்டளையின்படி ஏற்படுத்தப்பட்ட பலிகளும் நியமங்களும் நடந்தேறி வரவும், ஆராதனைகளும் ஊழியங்களும் நடப்பிக்கப்பட்டு வரவும், பஸ்காப் பண்டிகையைக் கொண்டாடவும் வழிவகை செய்தார். இப்பண்டிகை ஐந்நூறு வருடத்துக்கு முன் சாமுவேல் தீர்க்கதரிசியின் காலத்தில் நடந்த பண்டிகை[109] போலிருந்தது என்று சாமுவேல் பவுல் ஐயர் விளக்குகிறார்.

பின்பு எகிப்திய அரசன் அசீரிய அரசனுடன் யுத்தஞ்செய்யும்படி அழைத்தபோது யோசியா அவருடன் சென்றார். அந்த யுத்தத்தில் யோசியா அரசன் காயப்பட்டு, நகரத்துக்குக் கொண்டுபோகப்படும் வழியில் மாண்டு தன் முன்னோர்களின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார்.

எஸ்றா

எஸ்றா என்னும் எபிரெயப் பெயருக்குத் 'தேவன் உதவியாக இருக்கிறார்'[110] என்று பொருள். தந்தை செராயா, 'நியாயப்பிரமாணத்தில் தேறினவன்' என்று வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒரே மனிதர் எஸ்றா. எலெயாசார் மூலமாக ஆரோனின் சந்ததியைச் சேர்ந்தவன்.

மெய்த்தேவனை மறந்ததினால் யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோன் தேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். சிறைப்பிடிக்கப் பட்டவர்களுடைய சந்ததியில் வந்தவர் தான் எஸ்றா. சுமார் எழுபது வருடங்களுக்குப் பிறகு தேவன் யூதரை விடுதலை செய்யும்படி அருள்கூர்ந்தார்.

எஸ்றா மோசேயின் ஆகமத்தில் சதுசேயனும் ஆசாரியனுமாக விளங்கினார். கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இசுரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்[111] என்பதிலிருந்து இவரின் தனிச்சிறப்பு தெரிகிறது.

அர்தசாஷ்டா அரசன் அரசாண்ட ஏழாம் ஆண்டு, எஸ்றாவுக்கும் மற்ற யூத மக்களுக்கும் தம் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல உத்தரவு கிடைத்தது. இதனால் எஸ்றா தேவனுக்கென்று ஓர் ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்த முற்பட்ட பொழுது பல முட்டுக்கட்டைகளும் எதிர்ப்புகளும் எழுந்தன. யூதர்கள் தங்கள் சாதியல்லாத வேறு குமாரத்திகளை விவாகம் செய்திருந்தார்கள். இதை எஸ்றா கேள்விப்பட்டபோது, அழுது, பாவ அறிக்கையிட்டு, யோகோவாவின் சமூகத்தில் விழுந்து கிடந்து மன்றாடினான். இந்த மன்றாட்டினிமித்தம் அந்த அந்நிய பெண்களை விவாகம் செய்த அரச குலக் குமாரர்கள், தங்கள் தங்கள் அந்நிய பெண்களை விவாகரத்து செய்யத் தாங்களாகவே இணங்கினார்கள்.

இதன்பிறகு எஸ்றா நெகேமியாவோடுகூட ஆலயக் கட்டுமான பணியிலும் மக்களுக்கு வேதத்தைப் போதிக்கும் பணியிலும் எஸ்றா ஈடுபட்டிருந்தார். எஸ்றாவின் முடிவு பற்றித் தெரியவில்லை. ஆனால் எஸ்றா பாரசீக தேசத்தில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டார் என்றும் ஐபிராத்து நதியோரத்தில் எஸ்றாவின் கல்லறை[112] என்று அழைக்கப்படுகிற கட்டடம் இருப்பதாகச் சொல்லப்படும் பாரம்பரைச் செய்தியைச் சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக்காட்டுகின்றார்.

மொர்தெகாய்

தந்தை யாவீர். சிறிய தகப்பன் அபிகாயில். எஸ்தர் எனப்படும் அத்சாள் ராணியை வளர்த்தவர். மொர்தெகாய் என்னும் எபிரெயப் பெயருக்குச் 'சிறிய மனிதன், மார்சைத் தொழுகிறவன்'[113] என்று பொருள்.

இந்திய தேசத்துக்கு வடமேற்கிலே பார்சியா என்றொரு தேசமுண்டு. அதில் சுமார் இரண்டாயிரத்து முந்நூறு வருஷங்களுக்குமுன் அகாஸ்வேரு என்று பேர்கொண்ட ஒரு அரசன் செங்கோல் செலுத்தி வந்தார். அவர் ஓர் சிற்றரசனாயிராமல் நூற்றிருபத்தேழு நாடுகளை ஆண்ட சக்கரவர்த்தியாயிருந்தான். இந்திய தேசமும்[114] அக்காலத்தில் அவருடைய ஆட்சியின்கீழ் இருந்தது. அவருடைய அரசாட்சியில் காலாகாலங்களில் சிறைபிடிக்கப்பட்டுக் குடியேறியிருந்த யூதசாதியார் திரளாயிருந்தார்கள். அவர்களில் மொர்தெகாயும் ஒருவர்.

மொர்தெகாய் அகாஸ்வேரு அரசன் புதிதாய்த் திருமணம் முடித்த எஸ்தர் இராணியின் நெருங்கிய உறவினராயிருந்தார். ஆயினும் அதைக் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அரண்மனை வாசலைக் காக்கும் வேலையில் உண்மையும் விழிப்புமுள்ளவராய் நடந்து வந்தார்.

இந்நிலையில் அந்நாட்டில் புதியதாக ஆமான் என்னப்படும் அமலேக்கியன் மந்திரியாக நியமிக்கப்பட்டார். இவர் தன்னை எல்லாரும் விழுந்து பணிந்து வணங்கும்படி விரும்பினார். எல்லாரும் வணங்கினாலும் மொர்தெகாய் மட்டும் வணங்காதது இவருக்கு எரிச்சலையூட்டியது. ஆகவே நூற்றிருபத்தேழு நாடுகளிலுமுள்ள யூதர்களையும் கொல்லும்படி சதித்திட்டம் செய்து அரசனிடம் அதிகாரம் பெற்றான். மேலும் மொர்தெகாய்க்கு ஐம்பதுமுழ உயர தூக்குமரத்தையும் செய்தான்.

இப்படியிருக்கையில், ஒருநாள் இரவு அகாஸ்வேரு அரசனுக்குத் தூக்கம் வரவில்லை. அவர் நாளாகம புஸ்தகத்தை வாசிக்கக் கேட்டுக் கொண்டிருக்கும்போது, இரண்டு பேர் இராஜாவைக் கொலை செய்ய வந்தபோது மொர்தெகாய் அரசனைக் காப்பாற்றியதாகவும் அதற்கு அவருக்கு ஏதும் நன்மை செய்யவில்லை என்றும் எழுதப்பட்டிருந்தது. உடனே இராஜா மொர்தெகாயை மந்திரியாக உயர்த்தி, ஊர்ஊராக வலம் வரச் செய்து அவரைப் பெருமைப்படுத்தினார்.

அதேசமயத்தில், மொர்தெகாய் இசுரவேலருக்கு வந்த துன்பத்தை எஸ்தர் இராணிக்குச் சொல்லியனுப்பவே இராணியின் முயற்சியால் சதித்திட்டம் நிறுத்தப்பட்டது. மட்டுமல்லாமல் 'தன்வினை தன்னைச்சுடும்,' 'தான் வெட்டின குழியில் தானே விழுவான்'[115] என்கிற பழமொழிகளுக்கேற்ப ஆமான் மொர்தெகாய்க்கு ஏற்படுத்தின தூக்குமரத்தில் அரசன் அவனையே தூக்கிப் போடுவித்தார்.

இறுதியாய், மொர்தெகாய் எத்தனை வருடம் உயிரோடிருந்து மரித்தாரென்று தெரியவில்லை. அவருக்கு எழுபது மொழிகள் தெரிந்திருந்ததென்றும் அவர் எப்போதும் நீதிமானாகிய மொர்தெகாயென்று அழைக்கப்பட்டு வந்தாரென்றும், நானூறு வருஷம் உயிரோடிருந்தாரென்றும், யூதர் சொல்லும் பாரம்பரைச் செய்தியைச்[116] சாமுவேல் பவுல் ஐயர் ஆராய்ந்து தம் நூலில் கூறியுள்ளார்.

பொறுமை பக்தன் (யோபு)

யோபு என்பவர் ஊத்ஸ் என்னும் தேசத்தைச் சேர்ந்தவர். இவர் ஆபிரகாம் குலத்தில் நாகோர் வழியாய்த் தோன்றினவர் என்றும் யோசேப்புக்கும் மோசேக்கும் மத்தியிலுள்ள காலத்தில் இவர் வசித்திருக்கலாம்[117] என்றும் சாமுவேல் பவுல் ஐயர் கூறுகின்றார். யோபு என்னும் எபிரெயப் பெயருக்கு 'உபத்திரவப்படுத்துதல்'[118] என்று பொருள்.

இவருக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளும், திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். மேலும் அவர் அந்தத் திசையிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் பெரியவராயிருந்தார். மேலும் இவர் மெய்த் தேவ பக்தி நிறைந்தவரும், தன் பிள்ளைகளை அவ்வப்போது பரிசுத்தம்பண்ணிப் பக்தியில் வளர்க்கிறவராகவும் காணப்பட்டார். இப்படியிருக்க இவருடைய வாழ்வில் ஓர் முக்கிய சம்பவம் நிகழ்ந்தது.

ஒரே நாளுக்குள்ளாக உலக வாழ்வின் உச்சியிலிருந்து தாழ்ச்சி, தரித்திரம் என்னும் பள்ளத்தில் ஒருவன் விழுந்துவிடக்கூடுமென்பதற்குப் பொறுமை பக்தரின் சரித்திரத்தைப் போல் தெளிவாகக் காட்டும் சரித்திரம் வேறு இல்லை எனலாம்.

ஒருநாள் தூதர்களின் கூட்டமானது கர்த்தருடைய சந்நிதியில் வந்து கர்த்தருக்கு முன்பாக வந்து நின்றார்கள். சாத்தானும் அவர்களோடு வந்து நின்று யோபுவைக் குறித்துச் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தான்.

தேவன் சாத்தானை நோக்கி, 'என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனுமில்லை' என்றார். அதற்குப் பதிலாகக் சாத்தான் யோபுவை நீர் பாதுகாப்பதால் அவன் நம்புகிறான். *"அவனுக்குண்டானவையெல்லாம் தொடுவீரானால் அப்பொழுது அவன் உமது முகத்துக்கெதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும்"*[119] என்று தேவனிடம் சவால் விட்டான்.

தேவன் யோபின் பொறுமையைச் சோதித்து அவரின் உத்தமத்தை விளங்கப்பண்ணச் சாத்தானின் சவாலை ஏற்றுக்கொண்டார். முதலாவது சாத்தான் பொறுமை பக்தரின் சம்பத்து, சொத்துக்களையெல்லாம் அழித்தான். அப்புறம் அவருடைய குமாரர் குமாரத்திகளையெல்லாம் அழித்தான். போதாதென்று யோபுவின் உடல் முழுவதும் பருக்களும் கொப்புளங்களும் ஏற்படுத்தி வேதனையைப் பெருக்கினான்.

இவ்வளவு நடந்தபிறகும் பொறுமை பக்தர் தேவனை மறுதலிக்காமல் "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"[120] என்றும் "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ"[121] என்றும் சொன்னார். இதனால் சாத்தான் தோற்றுப் போனான். தேவன் வெற்றியுடன் யோபுவின் நோயைத் தீர்த்து, அவன் இழந்த எல்லாவற்றையும் இரண்டத்தனையாய்த் திருப்பிக் கொடுத்தார். மேலும் அவன் இழந்த ஏழு குமாரரையும் மூன்று குமாரத்திகளையும் கொடுத்தார்.

பொறுமை பக்தர் தமக்குண்டான துன்பம் ஓய்ந்து இன்பம் பிறந்த பின்பும் நூற்று நாற்பது ஆண்டுகள் உயிரோடிருந்து நாலு தலைமுறையாகப் பேரன் பூட்டன் கண்டு பூரண வயதுள்ளவராய்ப் பூலோக வாழ்வைத் துறந்தார்.

ஏசாயா தீர்க்கதரிசி

ஏசாயா என்னும் எபிரெயப் பெயருக்குக் 'கர்த்தர் இரட்சித்திருக்கிறார்'[122] என்று பொருள். இவரின் தந்தை ஆமோஸ், மகன்கள் சேயார்-யாசூப், மகேர்-சாலால்-அஷ்-பாஸ். யூத அரச வம்சத்தைச் சேர்ந்தவர். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் குறிப்பிடத்தக்கவர்.

தீர்க்கதரிசி என்ற சொல் பின் நடக்கப்போகிற காரியங்களை முந்தி அறிவிக்கிறவன் என்ற கருத்தை அடக்கியதாயிருக்கிறது. அந்தப்படி ஏசாயா தீர்க்கதரிசன வரம் பெற்றிருந்தவராவர்.

இவர் பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவர் என அழைக்கப்பட்டார். இவரின் மனைவியும் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தார்[123] என்று விவிலியப் பகுதியை சாமுவேல் பவுல் ஐயர் மேற்கோள் காட்டியுள்ளார். இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர். மேலும் அவர்களில் ஒருவனுக்கு யேசார் யாசூப் என்றும், இன்னொருவனுக்கு மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்றும் பேர். சேயார் யாசூர் என்றால் மீதியானவர்கள் திரும்புவார்கள் என்றும், மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்றால் கொள்ளைக்குக் கடுகிச் சூறைக்குத் தீவிரிப்பான் என்னும் அர்த்தம். இவ்விரு பேரும் யூத ஜாதியின் பின்னிலைமையை உணர்த்தும் தீர்க்கதரிசனப் பேர்களாயிருந்தன. ஏசாயா எருசலேம் தேவாலயத்திற்குச் சமீபமான ஒரு வீட்டில் வாசம்பண்ணினார்.

இவர், உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் நாலு அரசர் காலத்திலிருந்து சுமார் அறுபது வருடங்கள் பல காரியங்களைக் குறித்தும் விபரமான தீர்க்கதரிசனங்களை உரைத்தும் வந்தார். எந்தக் காலத்தில் எப்படி மரணமடைந்தாரென்று திட்டமாய்த் தெரியவில்லை. தமது மருமகனாகிய மனாசே அரசனால் வாளால் அறுக்கப்பட்டு மாண்டார்[124] என்னும் வேத ஆராய்ச்சியாளர்களின் கருத்தை சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

புலம்பும் பக்தன் (எரேமியா)

எரேமியா என்னும் எபிரெயப் பெயருக்குக் 'கர்த்தர் நியமித்திருக்கிறார்'[125] என்று பொருள். இவர் தந்தை இல்க்கியா, ஊர் ஆனதோத். பெரிய தீர்க்கதரிசிகளுள் ஒருவர். இவருடைய தகப்பனார் ஒரு ஆசாரியனாயிருந்தார்; இவருடைய தாயும் சாதாரணப் பெண்ணாயிராமல் தேவ பக்தி மிக்கவராக இருந்தார்.

இவர் சிறுவயதிலேயே கர்த்தருடைய தீர்க்கதரிசன வரம் உடையவராயிருந்தார். அப்போது கர்த்தர், 'நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்'[126] என்று சொன்னார்.

எரேமியா தேவனின் வரத்தைப் பெற்றவுடனே தமது ஊழியத்தை ஆரம்பித்தார். அவர் அக்காலத்திலிருந்த விக்கிரகாராதனை, நன்றிகேடு, வேசித்தனம் முதலிய சகல அருவருப்புகளையும் திறந்து சொல்லி, அவர்களுக்கு வரவிருக்கும் மோசநாசங்களைக் கூசாமல் கூறினார். அவர்கள் தாறுமாறுமான நடத்தையைப் பெண் ஒட்டகத்துக்கும், தன் இச்சையின்படி நடக்கிறவர்களைக் காட்டுக் கழுதைக்கும் ஒப்பிட்டுப் பேசி[127] உணர்த்தினார்.

மேலும் அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டி மனந்திரும்புதலுக்கேற்ற போதனைகளைச் செய்தார். அவர்கள் தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பாத பட்சத்தில் சிறையாக்கப்பட்டுப் போவார்கள் என்றும் சொன்னார். இதனால் அவரைக் கைதியாக்கிப் பிரபுக்கள் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தி விசாரணை செய்து இவர் மரண ஆக்கினைக்குப் பாத்திரன் என்று தீர்ப்புச் செய்து சிறையில் அடைத்தார்கள். ஆனால் இவர் சொன்னபடியே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இசுரவேல் மக்களைச் சிறைப்பிடித்து, ஆலயத்தையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான்.

கடைசியாக அவர் எகிப்து தேசத்திலிருக்கும்போது மரித்தார் என்று தப்பேனியஸ் என்கிற சரித்திரக்காரன்[128] கூறுவதையும், அவர் வசித்த ஊரில் குடியிருந்த யூதரால் கல்லெறிந்து கொல்லப்பட்டார் என்றும் மகா அலெக்சாந்தர் அரசன் அவருடைய எலும்புகளை அலெக்சாந்திரியா நகரத்துக்கு எடுத்துக்கொண்டு போனதாகவும் வரலாற்று அறிஞர்கள் கூறியிருப்பதையும் சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக் கூறியுள்ளார்.

தானியேல் மந்திரி

தானியேல் என்னும் எபிரெயப் பெயருக்குத் தேவன் (என்) நியாயாதிபதி[129] என்று பொருள். இவர் இசுரவேலர் பாபிலோன் தேசத்திலும், பெர்சிய தேசத்திலும் சிறையிருப்பில் இருந்த காலத்தில் வாழ்ந்த மந்திரி மற்றும் தீர்க்கதரிசியாவார்.

எரேமியா தீர்க்கதரிசியின் காலத்தில் யூத மக்களெல்லாம் சிறைபிடிக்கப்பட்டுக் கல்தேயர் வசம் கைதிகளானார்கள். இப்படிச் சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் தானியேல் ஒருவராயிருந்தார். சிறைப்பிடிக்கப்பட்ட காலத்தில் அவர் வாலிபனாய் இருந்தார். மேலும் அரச வம்சத்தைச் சேர்ந்தவராயிருந்தார். இரு பாபிலோனிய மற்றும் இரு மேதியா பெர்சியா அரசர்களுக்கும் ஆலோசகராய்த் திகழ்ந்தவர்.

'ராஜாவினால் பெல்தெஷாத்சாரென்னும் பெயரிடப்பட்ட இந்த தானியேலுக்குள் சொப்பனங்களை வியர்த்தி செய்வதும், புதைபொருள்களை வெளிப்படுத்துவதும், கருகலானவைகளைத் தெளிவிப்பதுமான அறிவும் புத்தியும் விசேஷித்த ஆவியும் காணப்பட்டது'[130] என்று கூறப்பட்டுள்ளது.

தானியேல் பிரசித்தி பெறுவதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி, நேபுகாத்நேச்சார் ஒரு கனவு கண்டு அதை மறந்து போனார். அந்தக் கனவு

அவரைக் கலங்கப் பண்ணியது. எனவே பாபிலோனின் ஞானிகள், சோதிடர்கள், சாத்திரிகளை அழைத்துக் கனவையும் அதின் அர்த்தத்தையும் சொல்லும்படி கேட்டான். அவர்களெல்லாரும் அரசரே கனவைச் சொல்லும் அர்த்தம் சொல்லுவோம் என்றார்கள். அரசனோ முடியாது இரண்டையும் சொல்ல வேண்டுமென்று சொல்லி எல்லோரையும் கொலைசெய்யும்படி உத்தரவிட்டான். இச்சூழ்நிலையில்தான் தானியேல் வேண்டுதல் செய்து தேவனிடமிருந்து அந்த கனவையும் அதின் அர்த்தத்தையும் பெற்று அரசனுக்கு அறிவித்தான். அதினால் அரசன் அவரை உயர்ந்த பதவியில் வைத்தார்.

மற்றொரு சம்பவம் தரியு ராஜாவின் காலத்திலே தானியேல் மீது சில பிரபுக்கள் பொறாமை கொண்டு அவர்பேரில் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டனர். அதன்படி தரியு ராஜாவிடம் மனு ஒன்றை அளித்து அதில் இராஜாவின் கையெழுத்தையும் முத்திரையையும் பெற்றனர். மனு என்னவென்றால் ஒரு மாத காலமளவும் யாரும் ராஜாவைத் தவிர எந்தத் தெய்வத்தையும் வணங்கக்கூடாது என்பதே. ஆனால் தானியேல் எதற்கும் பயப்படாமல் தான் முன்பு செய்துவந்தபடியே எருசலேமுக்கு நேராகச் சன்னலைத் திறந்து வைத்து வேண்டுதல் செய்தார். உடனே சூழ்ச்சிக்காரர்கள் அவரைப் பிடித்துச் சிங்கக் கெபியில் போட்டனர். ஆனால் தேவன் சிங்கங்களைக் கட்டிப் போட்டதினால் அவைகள் அவரை ஒன்றும் சேதப்படுத்தவில்லை. பின்பு தரியு அரசன் சூழ்ச்சிக்காரர்களைப் பிடித்து அவர்களை அதே சிங்ககெபியில் போட்டு விட்டார்.

தானியேல் எவ்வளவு வயதில் மரித்தாரென்று தெரியவில்லை. எப்படியும் எண்பது பிராயத்துக்குக் குறையாமல் இருந்தாரென்றும் அவர் எஸ்றாவோடே கானானுக்குத் திரும்பி வந்து, மறுபடியும் பார்சியாவுக்குப்போய் சூசா நகரத்தில் நல்ல நரைவயதில் மரணமடைந்தார்[131] என்று சொல்லப்படுகிறதாகச் சாமுவேல் பவுல் ஐயர் குறிப்பிடுகின்றார்.

கடல் ஆழங்கண்டவர் (யோனா)

யோனா என்னும் எபிரெயப் பெயருக்குப் 'புறா'[132] என்று பொருள். சுமார் இரண்டாயிரத்து எழுநூறு வருஷத்துக்குமுன் பூமியில் வாழ்ந்தார். இவர் தந்தை அமித்தாய். வடக்கு இசுரவேல் தேசத்தில் செபுலோன் கோத்திரத்திலுள்ள காத்ஏபேரின் ஊர் மற்றும் செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பழைய ஏற்பாட்டுக் கால சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவர்.

'வண்ணத்துக்குக் கிண்ணம்பாடி,' 'ஏட்டிக்குப் பூட்டி பண்ணி'[133] என்கிற பழமொழிகளுக்கேற்ப ஆண்டவர் ஒன்று சொன்னால் வேறொன்று செய்வதும் நினைப்பதுமாக இருந்தவர் யோனா.

இவர் பக்திநிலை தவறாது இறைவனைத் தொழுது வருங்காலத்தில் ஒருநாள் ஆண்டவர் அவருக்குப் பிரசன்னமாகி 'நீ எழுந்து மகா நகரமாகிய

நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது'[134] என்றார்.

இவரோ தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், யோப்பாவில் கப்பலேறித் தர்ஷீசுக்குப் போய்விடத் தீர்மானித்துக் கப்பல் ஏறினார். ஆனால் பயணத்தின்போது கப்பல் கவிழத்தக்க பெருங்காற்றும் புயலும் உண்டாயிற்று. மக்களெல்லாம் தத்தளிக்க இவரோ கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிப் போய் படுத்துக்கொண்டு அயர்ந்த நித்திரை பண்ணினார். அப்போது மாலுமி அவரை எழுப்பி விசாரித்துக் கப்பலின் மேல்தட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கே தேவச்செயலாய் யார் நிமித்தம் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டதென்று அறியும்படி சீட்டுப்போட்டபோது சீட்டு யோனாவின் பேரில் விழுந்தது. அப்போது அவரை விசாரித்தபோது *"நான் எபிரெயன்; சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன்"*[135] என்று சொல்லித் தன்னைத் தூக்கிக் கடலில் போட்டால் கடல் கொந்தளிப்பு அடங்கும் என்றார். அவர்கள் வேறு வழியின்றி அவரைக் கடலில் போடப் பெருங்காற்றும் கொந்தளிப்பும் அடங்கியது.

கடலில் எறியப்பட்ட யோனாவைப் பாதுகாத்துக் காப்பாற்றும்படிக்குக் கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீனுக்குள் யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தார். அந்த மீன் மூன்றாம் நாள் அவரைக் கரையில் இறக்கிவிட்டது. பின்பு அவர் எழுந்து நினிவேக்குச் சென்று பிரசங்கித்தார். அப்போது அப்பட்டணத்தின் மக்கள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் தேவனை ஏற்றுக்கொண்டனர்.

இவர் எங்கு எப்படி மரித்தார் என்று தெரியவில்லை. அவர் காத்தேப்பர் ஊரில் அடக்கம் பண்ணப்பட்டாரென்றும் மற்றும் சிலர் அவர் மோஸல் நகரத்துக்கெதிரான நெபியூன்ஸ் என்னும் ஸ்தானத்தில் அடக்கம்பண்ணப்பட்டதாகவும்[136] கூறப்படும் செய்தியைச் சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக்காட்டுகின்றார்.

சகரியா (ஊமைப் பூசாரியார்)

சகரியா என்னும் கிரேக்கப் பெயருக்குக் 'கர்த்தர் நினைவுகூருகிறார்'[137] என்று பொருள். சகரியா அபியாவின் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர். மனைவி எலிசபெத். மகன் யோவான் (ஸ்நானகன்).

சகரியாவின் காலத்திற்கும் பழைய ஏற்பாட்டின் கடைசிச் சரித்திரம் புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கும் முந்திருக்கிற காலத்துக்கும் மத்தியில், சுமார் நானூறு வருஷங்கள்[138] சென்றதாக வேத வியாக்கியானிகள் கணக்கிட்டிருப்பதாகச் சாமுவேல் பவுல் ஐயர் விளக்குகின்றார்.

சகரியா அற்புதமாய் ஊமையாகி அற்புதமாய்க் குணமானபடியினால் இவரை ஊமைப் பூசாரியார்[139] என்று அழைப்பதாகச் சாமுவேல் பவுல் ஐயர் கூறுகின்றார்.

சகரியாவின் மனைவி எலிசபெத்து மலடியாயிருந்தாள். இச்சூழ்நிலையில் இவர் தனது ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்த நாட்களிலே தேவதூதரின் மூலம் இவருக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் அவருக்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. இவர் வயதுசென்றவரானபடியால் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது அவிசுவாசம் கொண்டார். அதினால் தேவதூதன் அவருடைய அவிசுவாசத்தினிமித்தம் குழந்தை பிறக்கும் வரை ஊமையாயிருப்பாய் என்று சொல்லி மறைந்தார். அதன்பின்பு தேவ வார்த்தையின்படி யோவான்ஸ்நானகன் பிறந்தார். அப்போது அவருடைய வாய் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனைத் துதித்து, குழந்தைக்கு யோவான் என்று பேரிடுமாறு கூறினார்.

அதுமட்டுமின்றி உலகில் பிறக்கப்போகும் இயேசு ஆண்டவருக்கு *'அருணோதயம்'*[140] என்னும் புதுப்பெயரை அளித்த சிறப்புடையவர் இவரே என்று சாமுவேல் பவுல் ஐயர் வியந்து பாராட்டுகின்றார்.

சிமியோன்

சிமியோன் என்னும் எபிரெயப் பெயருக்குக் 'கேட்பது'[141] என்று பொருள். சிமியோன் எருசலேமில் குடியிருந்தார். அவர் நீதியும் தேவபக்தியுமுள்ளவராயிருந்தார். மேலும் *இசுரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவராயுமிருந்தார். அவர்மேல் பரிசுத்தஆவி இருந்தார்.*[142] என்று விவிலியம் கூறுகிறது.

இரத்தினங்கள் பதித்திருக்கும் ஒரு பதக்கத்தில் மேகவர்ணமான இந்திரநீலக்கல்லாவது, பசும்புல் நிறமான பச்சைக்கல்லாவது, வெள்ளைநிறமான புஷ்பராகமாவது எப்படி விசேஷித்து விளங்குமோ அவ்வண்ணம், வேதபுருஷருக்குள் இவரும் இருக்கிறாரென்று சாமுவேல் பவுல் ஐயர் இவரைக் குறித்துப் புகழ்பாடியுள்ளார்.

ஏனெனில் *'கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய்'*[143] என்று பரிசுத்த ஆவியினாலே அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. உலக இரட்சகரைப்பற்றி அறிவிக்கப்பட்ட சங்கதியை சிமியோன் பூரணமாக விசுவாசித்தார்.

அவதாரமூர்த்தியாகிய இயேசு ஆண்டவர் பிறந்த நாற்பதாம் நாளில் இயேசுவின் தாயாகிய மரியாள் தேவனுக்கு நன்றிசெலுத்துவதற்காக எருசலேம் தேவாலயத்துக்குச் சென்றிருந்தார். அச்சமயத்தில் தான் சிமியோன் அங்கே இருந்தார். சிமியோன் உடனே அப்பாலனைத் தமது கைகளில் வாங்கினார். அந்நேரமே உன்னத வரம் அவர்மேல் வந்து இறங்கியதால் அவர் ஆனந்தமடைந்து தேவனுக்கு ஸ்தோத்திரப் பாட்டைப்[144] பாடினார். அதன்பின்பு அவர் இரட்சகரைக் கண்ட மகிழ்ச்சியில் சமாதானத்தோடு இறந்திருக்கக்கூடும் என்று பலரும் நம்புகின்றனர்.

சாஸ்திரிகள்

இந்தச் சாஸ்திரிகள் யார்? என்ற கேள்விக்குப் பலரும் அளிக்கும் பதில் பரிசுத்த வேதாகமத்தில் உள்ளபடி *'கிழக்கிலிருந்து வந்தவர்கள்'* என்பது மட்டுமே. ஆனால் சாமுவேல் பவுல் ஐயர் கனம் பொருந்திய பீட் என்பவருடைய நூலிலிருந்து சாஸ்திரிகளின் பேர், ஊர், சாயலையும்கூட தம் நூலின் அடிக்குறிப்பில் நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

'அவர்கள் நாமங்களாவன : மெல்கியோர் (Melchior) என்பவர் நரைத்த நீண்ட தாடியுடைய கிழவர்; பால்தாசர் (Balthusar) இவர் நடுப்பிராயமுள்ளவராம். காஸ்பார் (Caspar) இவர் மீசைத் தாடி முளையாத வாலிபராம். இம்மூவரும் முறையே சேம், காம், யாப்பேத் என்பவர்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்களென்றும் பாரம்பரையாகச் சொல்லப்பட்டு வருகிறது. (Farrar's Life of Christ)[145] என்று குறிப்பிடுகிறார்.

ஏரோது என்னும் கொடுங்கோல் அரசனின் காலத்தில் கிழக்கிலே நட்சத்திரத்தைக் கண்டு இயேசு குழந்தையைத் தேடி வந்து அவரை பெத்லகேமிலே கண்டு அவருக்குப் பொன், வெள்ளி, தூபவர்க்கம் செலுத்தித் தேவனைத் துதித்துப் பின்பு தேவதூதன் எச்சரிப்பின்படி ஏரோதுவைக் காணாமல் வேறு வழியில் சென்றார்கள்.

உலக இரட்சகர் என்று அழைக்கப்படுகின்ற இயேசு, *சாதி, மதம், இனம், மொழி, பணக்காரன்-ஏழை, படித்தவன்-படிக்காதவன் என்பதைக் கடந்து எல்லோருக்கும் பொதுவானவர்* என்னும் கருத்தை நிலைநிறுத்துவதாக இந்தச் சாஸ்திரிகளின் வரலாறு அமைந்திருக்கிறது.

யோவான்ஸ்நானகன் (வனத்து ரிஷி)

யோவான் என்னும் கிரேக்கப் பெயருக்குக் 'கர்த்தர் கிருபையுள்ளவர்'[146] என்று பொருள். இவரது தகப்பன் சகரியா, தாய் எலிசபெத்து. ஏரோது அரசனின் நாட்களில் பிறந்தவர். இயேசுவின் காலத்தவர்.

இந்த யோவான்ஸ்நானகன் சாதாரண மனிதரல்ல. இவர் இயேசுவுக்கு முன்னோடியாய் இருந்தார். *இவர் எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் இருந்தார்* என்றும் *'ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை'*[147] என்றும் இயேசுவானவர் இவரைக் குறித்து கூறியவைகளைச் சாமுவேல் பவுல் ஐயர் இவர் வரலாற்றில் எடுத்துக்காட்டுகின்றார்.

இவர் வனாந்தரங்களில் சுற்றி, ஒட்டகமயிர் உடையைத் தரித்து, வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் உணவாகக் கொண்டு மனந்திரும்புங்கள்

இறையரசு சமீபித்திருக்கிறது என்று போதித்து வந்தார். ஆகையால் இவர் 'வன ரிஷி' என்று அழைக்கப்பட்டார்.

அவர் மனந்திரும்புதலுக்கு அடையாளமாக மக்களுக்கு யோர்தான் நதியில் திருமுழுக்கு அளித்து வந்தார். ஒருநாள் அவரிடம் இயேசு வந்தபோது *'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'* [148] என்று சத்தமிட்டார். இயேசு தனக்குத் திருமுழுக்குக் கொடுக்கும்படி அவரிடம் கேட்டபோது முன்பு தயங்கிப் பின்பு கீழ்ப்படிந்தார்.

இவரின் மரணம் ஏற்றுக்கொள்ள முடியாத முடிவாயிருந்தது. கலிலேயா நாட்டில் மகா ஏரோதுவின் குமாரரில் ஒருவனாகிய அந்திப்பா ஏரோது என்னும் அரசன் தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவியைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டார். இதனால் வனத்து ரிஷி அவரைக் கண்டித்ததால் சிறையிலடைக்கப் பட்டிருந்தார். இச்சூழ்நிலையில் ஒருநாள் ஏரோதியாள் ஏரோதின் மகளின் பிறந்தநாள் நிகழ்ச்சியின்போது அவள் மகள் நடனமாடி அரசனை மகிழ்ச்சியடையச் செய்தாள். அப்போது ஏரோது 'உனக்கு வேண்டியதைக் கேள்' என்று கேட்க அவளோ தன் தாய் ஏரோதியாளின் ஆசைப்படி வனத்து ரிஷியின் தலையைக் கேட்டாள். அரசனும் வேறு வழியின்றி யோவான்ஸ்நானகனின் தலையைத் தாலத்தில் வைத்துக் கொடுத்தார்.

இறை அடியார்களுக்கு இப்படி மரணம் சம்பவிக்குமென்றால் பாவிகளுக்கு எப்படியோ என்று எண்ணும்போது சற்றே பயம் மேலிடுகிறது என்று குறிப்பிடுகிறார்.

அந்திரேயா

அந்திரேயா என்னும் கிரேக்கப் பெயருக்குப் 'புருஷ லட்சணமுடையவர்' [149] என்று பொருள். கிறித்துவால் அழைக்கப்பட்ட சீடர்களில் அந்திரேயா என்பவருடைய பேர் முதலாவது வருகிறது.

இவர் தந்தை யோனா, சகோதரன் சீமோன் பேதுரு. கலிலேயா கடலுக்கு வடமேற்கேயுள்ள பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர். இயேசுவின் அழைப்பிற்கு முன் மீன்பிடி தொழில் செய்தவர். பின்பு இயேசுவின் சீடரானார்.

அந்திரேயா, இயேசுவை உலக இரட்சகராகிய மேசியா என்று விசுவாசித்தவர்களிலும், அவரைப் பின் சென்றவர்களிலும் அவரோடு தங்கியிருந்தவர்களிலும் அவரிடத்தில் மற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வருவதிலும் முதல்வராயிருந்தார்.

இயேசுவானவர் மரித்து உயிர்த்துப் பரமேறினபின் இவர் சிலகாலம் சீஷர்களோடிருந்து எருசலேமில் நற்செய்திப்பணி செய்ததாகவும் பின்பு சின்னாசியா, இங்கித்தியா முதலிய இடங்களில் போதித்தார் என்றும், அப்பால் கிரேக்க தேசத்திற்குப் போய் அங்குள்ள பாற்றிறாஸ் நகரத்தில் பலரை இரட்சண்ய வழிக்குத் திருப்பினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அவர் அந்த நகரத்திலுள்ள

பல பிரபுக்களை விசுவாசத்திற்குத் திருப்பினதோடு, அதிபதியாயிருந்த ஈஜியஸ் என்பவனுடைய மனைவியாகிய மக்சிமில்லாவையும் குணப்படுத்தி அவள் தன் விசுவாத்தை வெளியரங்கமாய் அறிக்கையிட வேண்டுமென்று சொன்னதால் அதிபதி உக்கிரமாகி அப்போஸ்தலனைப் பிடித்து வாரினாலடித்துச் சிலுவையில் அறைந்து கொன்றான்[150] என்னப்படும் பாரம்பரைச் செய்தியை ஆராய்ந்து சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் விளக்கிக் கூறியுள்ளார்.

நாத்தான்வேல் (பர்த்தலோமேயு)

நாத்தான்வேல் என்னும் கிரேக்கப் பெயருக்குத் 'தேவனுடைய ஈவு'[151] என்று பொருள். இவர் தகப்பன் தலோமி, கலிலேயாவிலுள்ள கானா ஊரில் பிறந்தவர். இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர்.

நல்லவன் என்று பேரெடுக்க பல வருடம் செல்லும்; தீயவன் என்று பேரெடுக்க ஒரு நிமிடம் போதும் என்கிற உலகத் தத்துவம் யாவரும் அறிந்ததே. *'கபடற்ற உத்தம இசுரவேலன்'*[152] என்று இயேசுவாலே நற்சாட்சி பெற்றவர் நாத்தான்வேல்.

நாத்தான்வேலை இயேசுவினிடத்தில் அழைத்து வந்தவர் சீடனும் பெத்சாயிதா ஊரானுமாகிய பிலிப்பு என்பவர்தான். மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதினவரைக் கண்டோம் என்று பிலிப்பு கூறுகையில் வாஞ்சை மிகுந்து மேசியாவைக் காண வேண்டும் எனத் துடித்தார். ஆனால் "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ" என்று கேள்வி எழுப்பினார். ஆகிலும் இயேசுவைக் காண வந்தபோது இயேசுவால் நற்சாட்சி பெற்றார். மேலும் அவர் இயேசுவிடம் 'நீர் என்னை எப்படி அறிவீர்' என்று கேட்டார். அப்போது இயேசு, 'நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்' என்று சொன்னார். இதைக் கேட்டவுடனே பிலிப்பு மகிழ்ந்து, *'ரபீ நீர் தேவனுடைய குமாரன் நீர் இசுரவேலின் ராஜா'*[153] என்று அறிக்கையிட்டார். அது முதற்கொண்டு அவர் இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்.

இவருடைய வரலாறு அவ்வளவாய் யாருக்கும் தெரியவில்லை. இந்தியாவின் திசைகளில் இயேசுவின் நற்செய்தியைப் போதித்து இரத்தசாட்சியாக மரித்தாரென்றும் அக்காலத்தில் எத்தியோப்பியாவின் தென்பாகமும், அராபியாவின் திசைகளும், இந்தியாவின் சுற்றுப்புறங்களும் பொதுவாக இந்தியாவென்று அழைக்கப்பட்டதால் நாத்தான்வேல் அப்போஸ்தல ஊழியம் நடத்தின இடம்[154] இன்னதென்று திட்டமாய்ச் சொல்ல இடமில்லையென்றும் சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

மத்தேயு

புதிய ஏற்பாட்டாகமத்தில் முதல் புத்தகம் மத்தேயு நற்செய்தி நூல். இதை எழுதியவர் அல்பேயுவின் குமாரனாகிய லேவி என்னும் மறுபெயர் கொண்ட

மத்தேயு ஆவார். மத்தேயு என்னும் கிரேக்கப் பெயருக்குக் 'கர்த்தரின் ஈவு'[155] என்று பொருள். அக்காலத்தில் வரிவசூலிக்கிற அரசுப் பணியாளனாயிருந்தார். அதனால் இவரை ஆயக்காரனாகிய மத்தேயு என்ற பட்டப்பேரால் அழைத்தனர். ஆனால் இயேசு தம்மை அழைத்தவுடன் எல்லாவற்றையும் விட்டு இயேசுவின் சீடனானார்.

முதலாவது இயேசு மத்தேயுவை 'என் பின்னே வா'[156] என்று அழைத்தார். பிறகு மத்தேயு அவரை 'என் வீட்டிற்கு வாரும்' என்று அழைத்துப் பெரிய விருந்து பண்ணினான். அதிலே இயேசுவும் வரிவசூலிக்கிறவர்களும் மற்றும் அநேகரும் பந்தியிருந்தார்கள்.

இவர் ஊழியம் செய்த தகவல்கள் ஏதும் தெரியவில்லை. இவர் மத்தேயு நூலை முதலாவது எபிரெய மொழியிலும் பின்பு கிரேக்க மொழியிலும் எழுதினாரென்று எண்ணப்படுகிறது. இவர் எகிப்து எத்தியோப்பியா தேசங்களில் பிரசங்கித்து, பிலிப்புவினால் தீட்சை பெற்ற கந்தாகேயின் மந்திரியிடம் வாசம்பண்ணி இயல்பான மரணமடைந்தார் என்றும், இரத்தசாட்சியாக மரித்ததாக வேறுசிலரும் கருதுகின்றனர்.[157] என்னும் கருத்தினைச் சாமுவேல் ஐயர் பதிவு செய்கிறார்.

சகேயு (குள்ளபக்தன்)

சகேயு என்னும் கிரேக்கப் பெயருக்கு 'நீதிமான், கர்த்தன்'[158] என்று பொருள். வரிவசூலிக்கிறவர்களின் தலைவன், எரிகோவில் பணிபுரிந்தவர், பணக்காரர், குள்ளமானவர்.

"யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்"[159] என்கிற வசனத்தின்படி சகேயு குள்ள மனிதனாயிருந்தாலும் அவரை வெறுக்காமல் இயேசு சந்தித்ததே முக்கியமான நிகழ்வாகும்.

இயேசு எரிகோவுக்குச் சமீபமாய் வந்தபோது திரளான மக்கள் அவரைச் சுற்றிலும் வளைந்துகொண்டு பின்சென்றார்கள். அப்போது இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த குள்ளபக்தர் அவரைப் பார்க்கும்படி ஆசை கொண்டார். ஆனால் அவர் குள்ளனாயிருந்தபடியினால் மக்கள் கூட்டத்தில் அவரைக் காண்பது அசாத்தியமென்று முடிவுசெய்து ஊருக்குள் முன்னாக ஓடி இயேசுவைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறிக்கொண்டார். இயேசு அவ்வழியே வந்து காட்டத்தி மரத்தின் கீழே நின்று அண்ணாந்து பார்த்து *"சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்க வேண்டும்"*[159] என்றார். உடனே மகிழ்ச்சியோடு கீழே இறங்கி இயேசுவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று தன் பாவங்களை அறிக்கை செய்து புதுவாழ்வு பெற்றார்.

இதற்கப்பால் குள்ள பக்தரைப் பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை. சகேயு *'ஆள்குட்டையானாலும் புத்தி நெட்டையாய்த்தானிருக்கிறது'*[160] என்று சாமுவேல் பவுல் ஐயர் இவரைப் பற்றிப் புகழாரம் சூட்டுகிறார்.

சீமோன் பேதுரு

எபிரெய மொழியிலே தெளிவாகச் சொல்லப்படுகிற சீமோன் என்ற பெயர் தான் பேதுருவின் உண்மையான பெயர். இருபெயரையும் இணைத்தே அழைக்கின்றனர். இயேசுவின் அன்பிற்குரிய நெருக்கமான சீடர்களுள் ஒருவர்.

சீமோன் என்னும் கிரேக்கப் பெயருக்கு 'அவர் கேட்டிருக்கிறார்', 'கீழ்ப்படிதலுள்ளவர்'[161] என்று பொருள். இயேசு இவருக்கு இட்ட புதிய பெயர் கேபா. அராமிக் மொழியில் கேபா என்பதற்குக் கல் அல்லது பாறை[162] என்று பொருள்.

தவறு செய்வது மனித குணம்; மன்னிப்பது தேவ குணம் என்ற பழமொழி இவரின் வரலாற்றுக்கு நன்றாய்ப் பொருந்தும். சீமோன் பேதுரு தவறு செய்வதும் இயேசு அவரை மன்னிப்பதுமாகவே இவரின் வரலாறு முழுவதும் செல்கிறது.

இவருடைய சகோதரன் அந்திரேயாவால் இயேசுவிடம் அறிமுகப்படுத்தப்பட்டார். இதனிமித்தம் பின்னர் இயேசு இவரைக் கடலோரத்தில் கண்டு அழைத்தபோது அவருக்குப் பின்சென்றார்.

இவர் இயேசு வாழ்ந்த காலத்தில் அவர் பாடுமரணத்தைப் பற்றிச் சொல்லும்போது அவரையே கடிந்துகொள்ளும் அசட்டுத் துணிச்சலும், மலையில் மறுரூபமானபோது எலியாவுக்கு ஒரு கூடாரமும் மோசேக்கு ஒரு கூடாரமும் போடலாம் என்று சொல்லும் அறியாமையும், இயேசு கடலில் நடந்து வந்தபோது நானும் வருகிறேன் என்கிற விசுவாசமும், கடலைக் கண்டு பயந்து விழுந்தபோது ஆண்டவரே காப்பாற்றும் என்கிற பக்தியும், இயேசுவைப் பிடிக்க வந்தபோது மல்குஸ் காதை வெட்டிய வீரமும், அதன் பின்பு சேவல் கூவுகிறதற்கு முன்னே மூன்று முறை இயேசுவை மறுதலிப்பதுமாக வெவ்வேறு வித்தியாசக் குணநலன்கள் பேதுருவிடம் காணப்படுகிறது.

பேதுரு தன்னை மறுதலிப்பார் என இயேசு கூறியபோது அதை ஏற்க மறுத்தார். ஆனால் பின்னர் அவரே இயேசுவை மறுதலித்தார். அதை நினைத்து மனங்கசந்து அழுதபோது, இயேசு தாம் உயிர்த்தெழுந்த பின்பு பேதுரு மீண்டும் காணும்படி அருள் செய்தார்.

இயேசு பரமேறின பின்பு இவர் வல்லமையாய் தேவனால் பயன்படுத்தப்பட்டார். பெந்தேகொஸ்தே நாளில் இவர் செய்த பிரசங்கத்தால் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

இவர் சுமார் எழுபது பிராயமாயிருக்கையில், நேரோ இராயனுடைய துன்ப காலத்தில் இரத்தசாட்சியானார். பேதுரு தன் இரட்சகரைப் போல் சிலுவையில் நேராய் அறையப்படப் பாத்திரனல்லவென்று எண்ணித் தன்னைத் தலைகீழாக அறையும்படி கேட்டுக்கொண்டார்[163] என்று வரலாறு சொல்வதாகச் சாமுவேல் பவுல் ஐயர் இவரின் வரலாற்றில் எடுத்துக்காட்டுகின்றார்.

யோவான் அப்போஸ்தலன்

யோவான் என்னும் கிரேக்கப் பெயருக்குக் கர்த்தர் 'கிருபையுள்ளவர்'[164] என்று பொருள். இவர் தகப்பன் செபெதேயு; தாய் சலோமே; சகோதரன் யாக்கோபு; தொழில் மீன்பிடித்தல்; ஊர் பெத்சாயிதா மற்றும் எருசலேம். இயேசுவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவர்.

யோவானுடைய குணமும் அவருடைய சகோதரனுடைய குணமும் ஒன்றுபோலிருந்ததென்று தோன்றுகிறது. ஆதலால் கிறித்து அவர்களிருவருக்கும் 'பொவர்னெகேஸ்' என்னும் அர்த்தங்கொள்ளும் 'இடிமுழக்க மக்கள்'[165] என்று பேரிட்டார்.

இயேசுவின் பன்னிரு சீடரில் மூன்றுபேர் இயேசுவின் நேசத்திலும் கூட்டுறவிலும் பங்குபெறுகிறவர்களாய் இருந்தார்கள். அம்மூவரில் அதிகப் பங்கைப் பெற்றது யோவான் அப்போஸ்தலன்தான். இதினாலே *'இயேசுவுக்கு அன்பான சீஷன்'*[166] என்னும் பேரும் இவருக்கிருந்தது.

யோவான் நற்செய்திப் பணிக்கு அழைக்கப்பட்டபோது சுமார் இருபத்தைந்து வயதிருக்குமென அநுமானிக்கப்படுகிறது. எப்படியும் பன்னிரு சீடர்களிலும் இவரே குறைந்த வயதுடையவர். இயேசுவானவரின் சிலுவை மரணத்தின் இறுதி வரைக்கும் இவர் அவருக்கருகில் இருந்தார். இயேசு தம்முடைய தாயாகிய மரியாளைப் பார்த்துக்கொள்ளும்படி இவரிடம் ஒப்படைத்தார்.

கிறித்துவின் தெய்வீகத் தன்மையைச் சரியானபடி எடுத்து உணர்த்த அப்போஸ்தலனே திறமுடையவரென்று கண்டு ஆசியா நாட்டு அத்தியட்சர் கூடி இந்த ஆகமத்தை எழுதும்படி கேட்டதின்பேரில் யோவான் நற்செய்தி நூலை இவர் எழுதினாரென்று ஜெரோம்[167] என்பவர் சொல்லியிருப்பதைச் சாமுவேல் பவுல் ஐயர் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் இவர் மூன்று கடிதங்களையும் திருவெளிப்பாடு என்னும் நூலினையும் எழுதியுள்ளார்.

கடைசியாகத் தோமிஷான் காலத்தில் கிறித்துவினிமித்தமாகக் கொதிக்கிற எண்ணெய்க் கொப்பரையில் போடப்பட்டாலும், யாதொரு சேதமுமின்றி வெளியானார் என்று தெர்த்துல்லியன் என்பவர் எழுதியிருப்பதாகவும் மேலும் அவர் பத்மு என்கிற தீவுக்கு நாடுகடத்தப்பட்டு பின்பு நெர்வா என்கிற இராயன் காலத்தில் விடுதலையாக்கப்பட்டு முதிர்வயதில் மரித்தார்[168] என்கிற மரபுவழிச் செய்தியைச் சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் பதித்துள்ளார்.

யூதாஸ்காரியோத்

யூதாஸ் என்பது இயற்பெயர். காரியோத் என்பது ஊரின் பெயர். இயேசுவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவர். இயேசுவைக் காட்டிக் கொடுத்தவர். சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத் என்று அழைக்கப்பட்டார். யூதாஸ் என்னும் கிரேக்கப் பெயருக்குத் 'துதிக்கப்பட்டவர்'[169] என்று பொருள்.

'அட்டையைப் பிடித்துத் தொட்டியில் கிடத்தினால் கிடக்குமா' என்கிற பழமொழிக்கேற்ப யூதாஸ்காரியோத்து இயேசுவின் சீடனாயிருந்தும் அவன் புத்தி அவனை விட்டுப் போகவில்லை. யூதாசின் உண்மையான குணம் பெத்தானியாவில் இயேசு ஒரு பெண்ணால் தைல அபிஷேகம் பண்ணப்பட்ட வேளையில் வெளியரங்கமானது. "இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன"[170] என்ற பதில் யூதாஸிடமிருந்து வந்ததாகக் குறிப்பிடுகிறார்.

கடைசியில் பணப் பைத்தியம் கொண்ட யூதாஸ் பிரதான ஆசாரியர்களிடம் சென்று முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவை முத்தத்தினால் காட்டிக் கொடுத்தான். அவ்வேளையிலும் இயேசு அவனிடம் *"சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்"*[171] என்று கேட்டார். இதனால் யூதாஸ் மனச்சாட்சியில் குத்தப்பட்டுத் தூக்கிட்டு நான்றுகொண்டு செத்தான் என்று கூறப்பட்டுள்ளது.

பொந்தியு பிலாத்து

பொந்தியுபிலாத்து என்னும் கிரேக்கப் பெயருக்குக் 'கோத்திரத்தின் பெயர்' [172] என்று பொருள்.

நிசேயா விசுவாசப் பிரமாணம் என்பது கிறித்தவர்களின் சுய அறிக்கை மன்றாட்டு மாதிரி ஆகும். இந்தப் பிரமாணம் அநுதினமும் திருச்சபைகளில் வாசிக்கப்படுகிற ஒன்றாகும். இதில் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு என்ற வாசகத்தால் நாடோறும் காலையிலும் மாலையிலும் இவர் திருச்சபையால் நினைவுகூரப்படுகிறார்.

இயற்பெயர் பிலாத்து; பொந்தியூஸ் என்பது இவருடைய குடும்பப் பேராகும். பொந்தியூஸ் தெலசீனஸ் என்ற பேருடைய ஒரு உரோமைச் சேனாவீரனுடைய குடும்பத்தில் இவர் தோன்றினதால் பொந்தியு பிலாத்து[173] என்று அழைக்கப்பட்டார்.

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன் கெத்செமனேயில் பிடிக்கப்பட்டுக் கட்டுண்டவராய் முதலில் பிரதான ஆசாரியனின் அரண்மனை சென்று பின்பு பிலாத்துவினிடத்தில் கொண்டு போகப்பட்டார். பிலாத்து இயேசுவை விசாரித்து விட்டு, *'இந்த மனுஷனிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லை', 'மரணத்துக்கேதுவாக இவர் ஒன்றும் செய்யவில்லையே'* [174] என்று சொல்லி மக்களைப் பிரியப்படுத்த மனதாய் வாரினால் அடிப்பிக்க உத்தரவிட்டார்.

வாரினால் அடித்த பிறகும் அடங்காத கொலைக்காரக் கூட்டம் *சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும்* என்று சத்தமிட்டது. பண்டிகைதோறும் ஒரு கைதியை விடுதலையாக்கும் வழக்கம் அந்நாளில் இருந்தபடியால் பரபாஸ் என்னும் கொலைகாரனையும் இயேசுவையும் நிறுத்தி யாரை விடுதலையாக்க வேண்டும் என்று கேட்டான். மக்கள் பராபாசை விடுதலையாக்கும்படி கேட்டார்கள். பிலாத்து இயேசுவை விடுதலையாக்க வகைதேடுகிறானென்று அறிந்து இராயனுக்கு முறையிடுவோம் என்று கூறினதால் தன் பதவியை இழக்க

மனமின்றி *'இந்த நீதிமானின் இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்'*[175] என்று சொல்லித் தன் கைகளைக் கழுவி நழுவிவிட்டார் என்று கூறப்படுகிறது.

இவரைப் பாராட்ட வேண்டிய ஒரு செயல் என்னவென்றால், சிலுவையில் அறையப்படுகிறவர்கள் பேரை சிலுவைக்கு மேலே எழுதி வைக்கிற வழக்கப்படி இயேசுவின் சிலுவையின்மேல் *'யூதருடைய இராஜா'* என்று எழுதிவைத்தார். ஆனால் பிரதான ஆசாரியர் இவன் தன்னை யூதருடைய இராஜா என்று சொன்னான் என்று எழுதும் என்றார்கள். அதற்குப் பிலாத்து நான் எழுதினது எழுதினதே என்று சொல்லி அவர்களைத் துரத்தியடித்தார்.

இவர் இறப்புப் பற்றித் தெரியவில்லை. சிலர் இவர் தற்கொலை செய்துகொண்டார் என்றும், வேறுசிலர் அவர் தன் இறுதிகாலத்தில் சந்நியாசி போல் சஞ்சரித்து ஆற்றில் மூழ்கி தன் உயிரை மாய்த்துக்கொண்டார் என்றும் ரோன் நதியில் கட்டப்பட்டிருக்கிற வீயன்னா என்னும் நகரத்தில் 52 அடி உயரமுள்ள கோபுரம்தான் இவரின் கல்லறை[176] என்கிற பரம்பரைச் செய்தியைச் சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் விளக்குகின்றார்.

குணப்பட்ட கள்ளன்

சிலுவையில் இயேசுவுக்கு இடது பக்கமிருந்த கள்ளனுக்குக் கெஸ்ற்றஸ் என்றும், வலப்பக்கத்தில் இருந்த இந்தக் குணப்பட்ட கள்ளனுக்குத் திஸ்மாஸ் என்றும் பெயர்[177] கொடுக்கப்பட்டிருப்பதாகச் சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

வழிப்பறி செய்ததால் அரசாங்கத்தால் பிடிக்கப்பட்டு, சிலுவை மரணாக்கினைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டனர். அவரோடு மற்றொரு கள்ளனும் சேர்த்து இயேசுவோடுகூடச் சிலுவையிலறையப்பட்டார்கள்.

சிலுவையில் அறையப்பட்டவர்கள் தங்களின் வேதனைகளினிமித்தம் சுற்றிலும் இருப்பவர்களை நிந்திப்பது வழக்கமாயிருந்தது. அதின்படி, இடது பக்கமிருந்த கள்ளன் இயேசுவை நிந்தித்தான். இவரோ அக்கள்வனைக் கண்டித்து, தன் பாவங்களை உணர்ந்தவராய், இயேசுவை நோக்கி, *'ஆண்டவரே நீர் உம்முடைய இராச்சியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்'* என்று விண்ணப்பம் பண்ணினார். அப்போது இயேசு அவனை நோக்கி, *'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்'* என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.[178] இயேசுவானவர் இறந்தபின்பு கள்வர் இருவரும் இறந்தனர். ஆனால் இயேசுவின் சிலுவை மொழிகளில் முக்கியமானதாய் இந்நிகழ்வு இடம்பெறுகிறது.

ஸ்தேவான்

ஆதித் திருச்சபை ஊழியர்களில் ஒருவர். எருசலேமில் பணிபுரிந்தவர்.

சமுதாயப் பணிக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் சிறந்த ஊழியக்காரராக மாறி இரத்த சாட்சியாக மரித்தது இதுவே முதல் முறை. *உலகின் முதல் கிறித்துவின் இரத்தசாட்சி யார்?* என்ற கேள்விக்குப் பதில் ஸ்தேவான். கிறித்துவுக்காய்த் தன் உயிரைத் துச்சமாய் எண்ணினவர்.

அக்காலத்தில் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்டவர்களைக் குடும்பங்களிலிருந்து வெளியேற்றினர். அவர்கள் தங்கள் வீடு, உணவு மற்றும் அவர்களது வளங்களைப் பகிர்ந்து எல்லாவற்றையும் பொதுவாய் அநுபவித்து வந்தனர். இதனை ஆதி திருச்சபையில் நிர்வகிக்கும் பொறுப்புகளில் ஸ்தேவான் என்பவர் ஒருவராயிருந்தார்.

இவர் அக்காலத்தில் விசுவாசத்திலும் வல்லமையிலும் நிரம்பி மக்களுக்குள்ளே அநேக அற்புதங்களைச் செய்து இயேசுவே மேசியா என்று போதனை செய்து வந்தார். இதினால் சிரேனே, அலெக்சாந்திரியா, சிலிசியா, ஆசியாவிலுள்ளவர்களில் சிலர் கூடிக்கொண்டு இவருக்கு எதிராக வாதிட்டனர். இவருக்கு முன்பாக அவர்களால் எதிர்த்துப் பேசக்கூடாமல் போயிற்று. யூதர்கள் பாவம் செய்து இயேசுவைத் தள்ளிவிட்டார்களென்றும் அவர்கள் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் போதித்ததினால் மூர்க்கவெறிகொண்டு நகரத்துக்குப் புறம்பே அவரைத் தள்ளிக் கல்லெறிந்து கொன்றனர். ஸ்தேவான் தான் சாகுமுன் *ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்*[179] என்று வேண்டுவதிலிருந்து இவர் இயேசுவின் மீது வைத்திருந்த அன்பின் அளவு புரிகிறது என்று குறிப்பிடுகிறார்.

பவுல் அப்போஸ்தலன்

பவுல் என்னும் கிரேக்கப் பெயருக்குச் 'சிறியது'[180] என்று பொருள். இவர் சிலிக்கிய நாட்டின் தலைநகராகிய தருசுப் பட்டணத்தில் பிறந்தார். இவர் ஒரு யூதப் பரிசேயன், பிறப்பால் ரோமன். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தேறினவர். யூதர்களின் பெருமைக்குரிய ரபி கமாலியேலிடம் கல்வி கற்றவர். சனகெரிப் சங்கத்தில் ஒரு அங்கத்தினன். *'புறஜாதிகளின் அப்போஸ்தலன்'* என்று அழைக்கப்படுகிறார். இயேசுவினால் தடுத்தாட்கொள்ளப்படுவதற்கு முன் சவுல் என அழைக்கப்பட்டவர்.

ஆயிரம் காகத்தின் நடுவில் ஒரு அன்னம் என்ற பழமொழிக்கு ஏற்றாற்போல் இறைவனுக்கு ஊழியம் செய்பவர்கள் அநேகரிருந்தாலும் அவர்களுள் தனித்தன்மையுடன் திகழ்பவர்தான் பவுல் என்னும் திருத்தூதுவர்.

இவர் யூத மார்க்கத்தில் வைராக்கியமுள்ளவராயிருந்தபடியால் ஆரம்பத்தில் இயேசுவின் எதிர்ப்பாளராக இருந்து கிறித்தவர்களைத் துன்புறுத்துபவராகக் காணப்பட்டார். அப்படி ஒருமுறை தமஸ்குப் பட்டணத்திலுள்ள கிறித்தவர்களைத் துன்புறுத்தும்படிக்கு அதிகாரம் பெற்று அப்பட்டணத்துக்கு நேராகப் பிரயாணிக்கையில், சடுதியாய் வானத்திலிருந்து ஒளி இவரைச் சுற்றிலும்

பிரகாசித்தது, அவர் குருடனாகித் தரையிலே விழுந்தார், அப்போது *சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்!* என்கிற ஒரு திவ்விய சத்தம் அவர் காதில் விழுந்தது. அப்போது இவர் *ஆண்டவரே, நீர் யார்?* என்று கேட்க, *நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே* என்ற பதிலும் வந்தது. இதுமுதல் அவர் வாழ்க்கை மாறியது. அவர் நகரத்துக்குள் பிரவேசித்து அனனியா என்பவரிடம் ஜெபித்து இழந்த கண்பார்வையை மீண்டும் பெற்று ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு தன் புதிய வாழ்வைத் தொடங்கினார்.

இவர் மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டு சபைகளைக் கட்டுவதிலும், நிலைநிறுத்துவதிலும், நற்செய்தியைப் போதிப்பதிலுமே இவர் ஜீவகாலம் முடிகிறது. ஆனால் இவர் இப்பயணத்தில் பட்ட பாடுகள், துன்பங்கள் கொஞ்சமல்ல. இதை அவர் கிறித்தவ விசுவாசிகளின் முன்மாதிரிக்காக ஒருதரம் குறிப்பிட்டும் இருக்கிறார்.

"நான் அதிகமாய் பிரயாசப்பட்டவன்; அதிகமாய் அடிபட்டவன்; யூதரால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; ஒருதரம் கல்லெறியுண்டேன்; மூன்றுதரம் கப்பல் சேதத்திலிருந்தேன்; கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்; அநேகம்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும்; கள்ளரால் வந்த மோசங்களிலும்; என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும்; சமுத்திரத்திலுண்டான மோசங்களிலும்; கள்ளச் சகோதரராலுண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும் வருத்தத்திலும்; அநேக முறை கண் விழிப்பிலும்; பசியிலும் தாகத்திலும்; அநேக முறை உபவாசங்களிலும் குளிரிலும் நிருவாணத்திலுமிருந்தேன்." [181] என்று விவிலியம் கூறுகிறது.

இவர் தாம் பட்ட பாடுகளைக் குறித்துக் கவலையடையாமல் கிறித்துவைக் குறித்துப் போதிப்பதிலே கவனத்தோடிருந்தார். இவர் சபைக்கு எழுதின பதின்மூன்று கடிதங்கள் பரிசுத்த வேதாகமத்தில் இன்றும் காணமுடிகிறது.

இவரின் மரணம் குறித்துத் தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் அவர் தம் இறுதிக்காலத்தில் ரோமாபுரியில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு, விடுதலையாகிப் பல இடங்களில் நற்செய்தியைப் போதித்து, பின்பு ரோமாபுரியில் அரசுபுரிந்த நேரோ இராயனாலுண்டான துன்பத்தில் பிடிபட்டு, அவ்விடத்தில் சிறையில் வைக்கப்பட்டு, கடும் குளிரையும் கஷ்டத்தையும் அநுபவித்து இரத்தசாட்சியாக மாண்டார்[182] என்று கூறப்படும் பரம்பரைச் செய்தியைச் சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

கொர்நேலியு

கொர்நேலியு என்னும் கிரேக்கப் பெயருக்குக் 'கொம்புடையவன்' [183] என்று பொருள். ரோமருடைய நூற்றுக்கு அதிபதி. செசரியா பட்டணத்தில் பணி புரிந்தார். புறஜாதி மார்க்கத்திலிருந்து கிறித்தவ மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட முதலாவது கிறித்தவர்.

யூதேயாவை ஆளும்படி நியமிக்கப்பட்ட ரோம அரசு அதிகாரிகள் புரோக்கியுரேற்றர் (Procurator) என்று அழைக்கப்பட்டனர். செசரியா அவர்களுடைய அரசாட்சியின் தலைநகரமாயிருந்தது. இந்த அதிகாரிகளுக்கு ஆறு பட்டாளங்கள் இருந்தன. அதில் ஐந்து பட்டாளங்கள் செசரியாவிலே இருந்தது. கொர்நெலியு என்பவர் அதிலொன்றின் தலைவராய் இருந்தார்.[184]

இவரைக் குறித்து *"அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்"*[185] என்ற வாசகத்திலிருந்து இவரின் உயர்ந்த பண்புநலன்கள் தெரிகிறது.

இவர் தமக்குள் உண்டாயிருந்த பக்திமுறை தவறாது நடந்துவரும் காலத்தில் ஒருநாள் தேவனுடைய தூதன் அவருக்கு முன் தோன்றி சீமோனை அழைப்பிக்கும்படி கூறி மறைந்தார். இவர் பேதுருவை அழைத்தனுப்பி அவரிடம் கிறித்துவின் அற்புத வல்லமையையும், அரிய போதனைகளையும், சிலுவை மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் கேட்டு அன்றையத்தினமே கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் வேறு அநேகரும் திருமுழுக்குப் பெற்றுக் கிறித்தவர்களானார்கள்.

இதன்பிறகு கொர்நேலியுவின் வரலாறு தெரியவில்லை. அவர் தம்முடைய பழைய உத்தியோகத்திலே உண்மையாயும் பக்தியாயும் நடந்து தேவனை மகிமைப்படுத்தி வந்தார் என்றே சொல்லவேண்டியிருக்கிறது என்று சாமுவேல் பவுல் ஐயர் கூறுகிறார்.

தீமோத்தேயு

தீமோத்தேயு என்னும் கிரேக்கப் பெயருக்குத் *'தேவனுக்கு முக்கியமானவர்'*[186] என்று பொருள். தந்தை கிரேக்கர் மற்றும் தாய் ஐனிக்கேயாள் யூதர், ஆகிய இருவரும் கலப்புத் திருமணம் செய்துகொண்டனர். பவுலின் சீடனாகவும் பவுலுக்கு நெருங்கிய கூட்டாளியாகவும் காணப்பட்டார். பவுலால் ஆதரிக்கப் பட்டவராயும், எபேசுவில் ஒரு சபைப் போதகராயும் காணப்பட்டார்.

இவரது தாயார் ஐனிக்கேயாள் மற்றும் இவனது பாட்டி லோவிசாள்[187] ஆகிய இருவரும் இவரது வாழ்க்கையை வடிவமைக்கவும் இவனது ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறவும் உறுதுணையாக இருந்து வந்தனர்.

குருபக்தி, உண்மை, கடமையுணர்வு, நன்றியுணர்வு இவற்றிற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்பவர்தான் இந்தத் தீமோத்தேயு. இவர் பவுல் அப்போஸ்தலனின் நம்பிக்கைக்குரியவராகவும் அவர் சொல் தட்டாப் பிள்ளை போலும் இருந்தார். பவுல் கொரிந்து சபையில் ஏற்பட்ட குழப்பங்களைத் தீர்ப்பதற்காக இவரை அனுப்பக் கடிதம் எழுதும்போது, *'எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயு'*[188] என்று குறிப்பிடுகிறார்.

பின்பு இவர் எபேசு சபையிலே காணப்பட்ட தவறான போதனைகளை எதிர்க்கும் வண்ணம் பவுல் அப்போஸ்தலன் அனுப்பினார். இவர் அங்கே பல இன்னல்களையும், பிரச்சனைகளையும் சந்திக்க நேர்ந்தது. எனவே தீமோத்தேயுவுக்கு ஊழியத்தைக் குறித்த நடைமுறை ஆலோசனைகளை வழங்கி இவரை உற்சாகப்படுத்தும் வண்ணம் பவுல் ஒன்று மற்றும் இரண்டு தீமோத்தேயு ஆகிய இவ்விரண்டு நிருபங்களையும் எழுதினார்.

இவர் தமது பலத்தையும் முயற்சியையும் எல்லாம் நற்செய்திப் பணிக்காக செலவிட்டதால் சீக்கிரத்தில் பலவீனப்பட்டு இறந்ததாகக் கூறுகிறார்.

ஒநேசிமு

ஒநேசிமு என்னும் கிரேக்கப் பெயருக்குப் 'பயனுள்ளவன்'[189] என்று பொருள். பாவத்தினாலே பரலோகவாழ்வை இழந்துபோன மனுமக்களுக்கு இறைவன் பாராட்டிவரும் அன்பானது அவருடைய நீதியின் வல்லமைக்கு மிஞ்சின அன்பாகவே இருக்கிறதென்று அறியமுடிகிறது. அவ்வகையில் தேவனுடைய அளவில்லாத மன்னிப்பையும் அன்பையும் பெற்றவர்தான் இந்த ஒநேசிமு.

ஒநேசிமு, பிலேமோன் என்னும் கிறித்துமார்க்க முதலாளியின் அடிமையாயிருந்தார். இவருடைய தலைவன் பூரண பக்தனாயிருந்தார். அதினாலே அவர் தன் வீட்டு வேலைக்காரரையும் நேசித்து அன்பு பாராட்டி வந்தார். பிலோமோன் கொலோசை ஊரிலுள்ள சபையை நடத்தின குருவாய் அல்லது கண்காணியராய் இருந்தாரென்றும் அபிப்பிராயப்படுவதாகக் கூறப்படும் செய்தியை[190] சாமுவேல் பவுல் ஐயர் குறிப்பிடுகின்றார்.

ஒநேசிமு இவ்வளவு நல்ல இடத்திலும், ஆட்களின் மத்தியிலும் இருந்தபோதிலும், அவருடைய கேடு அவரை விட்டுப் போகவில்லை. இவர் தன் நேச முதலாளியை மோசம்பண்ணி, வஞ்சித்து, திருட்டுத்தனமாய் அவனைவிட்டு ஓடிப்போய் விட்டார். இவர் இப்படி ஓடக் காரணம் என்னவென்று தெரியவில்லை, பண மோசடி செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்நிலையில் இவர் எப்படியோ பவுல் அப்போஸ்தலனைச் சந்திக்க நேரிட்டது இவர் வாழ்வின் திருப்புமுனையாய் அமைந்தது. பவுலின் போதனைகள் இவர் மனதில் தைத்தது. கர்த்தர் இவர் இருதயத்தைத் திறந்தார். இவர் தன் குற்றத்தை அறிக்கையிட்டு, தன் இரட்சகராகிய தேவனால் பாவமன்னிப்பைப் பெற்றுப் புது மனிதனாய் விளங்கினார். பவுலின் அன்புக்குரியவராக மாறினார். இவரின் நடத்தையில் மாற்றத்தைக் கண்ட பவுல், *'கட்டப்பட்டிருக்கும்போது நான் பெற்ற ஒநேசிமு' 'அவன் உமக்கு யாதொரு அநியாயம் செய்ததும், கடன்பட்டதுமுண்டானால் அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும், நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன்'*[191] என்று பிலோமோனுக்குக் கடிதம் எழுதி அவரைச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறதை அறிய முடியகிறது.

இவர் தன் பழைய தலைவனிடத்தில் மன்னிப்பைப் பெற்று மனச் சமாதானமாய்க் காலம் கழித்தாரென்றும், பிந்திய காலத்தில் இவர் சபையில் கண்காணியாயிருந்ததாகவும் தொடக்கக்கால வரலாற்று நூல்களால் அறிய முடிகிறது என்பதைச் சாமுவேல் பவுல் ஐயர் சுட்டிக்காட்டுகிறார்.

இயேசு கிறிஸ்து

இயேசு கிறித்துவின் முழுமையான வரலாற்றை விரிவாக உரைநடையில் கூறும் முதல் நூல். இயேசுவின் பிறப்புத் தொடங்கி அவர் பரலோகத்திற்கு பரமேறினது வரை நடந்தேறிய எல்லா நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் கூறுகிறது. இந்நூல் இயேசுவின் வாழ்வில் நடந்தேறிய நிகழ்வுகளைக் கால வரிசை அடிப்படையில் விளக்குவது நூலின் சிறப்பாகும். பரவலாக மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி நூல்களில் இயேசுவின் வாழ்க்கை வரலாறு கூறப்பட்டிருந்தாலும் அவை ஒரு வரிசை அடிப்படையில் கொடுக்கப்படவில்லை. அதனை இந்நூல் நிறைவு செய்திருக்கிறது. இந்நூல் சாமுவேல் ஐயரின் கடின உழைப்பின் வெளிப்பாடு என்பது தெள்ளத்தெளிவாய் புலனாகிறது.

'மெட்ராஸ் ரிலிஜியஸ் டிராக்ட் அன்ட் புக் சொசைட்டி' (Madras Religious Tract and Book Society) நிறுவனத்தினரின் 1895இல் வெளியிடப்பட்ட 1894-ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் (76th Annual Report) சாமுவேல் பவுல் ஐயர் எழுதிய இயேசு கிறிஸ்து புத்தகத்தைப் பற்றி,

"THE LIFE OF JESUS CHRIST is by the Rev. Samuel Paul. It is mainly a devotional work. Dr. Hanna's *Our Lord's Life on Earth* supplied much of the materials, but other authors were also consulted. It is well adapted, with God's blessing, to deepen the spiritual life of the Tamil Church."[192] என்னும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நூல் பாலிய காண்டம், தீட்சை காண்டம், மத்திய காண்டம், புறத்தேச காண்டம், அந்திய காண்டம், கடைசி வார காண்டம், யாக காண்டம், வெற்றிக் காண்டம் ஆக மொத்தம் ஒன்பது காண்டங்களாக பிரிக்கப்பட்டு மற்றும் அதனுடன் ஒழிபியல் சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காண்டமும் அதின் கருத்தின் அடிப்படையில் பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பவுல் ஐயர் காண்டங்கள் – பருவங்கள் என அமைக்கக் காரணம் : தமிழ்க் காப்பிய அமைப்பு முறையில் உரைநடை வடிவத்தில் இந்நூலினை இயற்றியுள்ளதாகும். *"காப்பியத்தின் தலைவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தன்னிகரில்லாத் தலைவனாக இருத்தல் வேண்டும்"* எனத் தண்டியாரும், *'ஒப்பிலான்'* என மாறனலங்காமும் *'இணைவியி'* எனச் சுவாமிநாதமும் *'இறைவன்'* எனச் சிதம்பரப் பாட்டியலும் தலைவன் சிறப்புடையவனாக இருத்தல் வேண்டும்[193] எனக் குறிப்பிடுகின்றன. அவ்வண்ணமே 'இயேசு கிறித்து' தலைவராகக் கொண்டு அவரது வாழ்க்கை வரலாற்றை முழுவதுமாக வெளிக்கொணரக் காண்டங்களாகப் பருவங்களாகப் பகுத்துப் படைக்கின்றார்

சாமுவேல் பவுல் ஐயர். மிக நீண்ட வரலாற்றைத் திருமறை அடிப்படையில் படைக்கும் எண்ணம் கருதியே இத்தனை காண்டங்களாகப் பருவங்களாகப் பகுத்துள்ளார் என்பது புலனாகின்றது.

இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றில் அவர் பிறப்பு, கல்வி, திருமுழுக்கு என இம்மூன்றினைக் குறித்து பாலிய மற்றும் தீட்சைக் காண்டத்தில் கூறுகின்றார். மத்திய, புறதேச, அந்திய காண்டத்தில் அவர் செய்த அற்புதங்கள், நற்செய்திப்பணி குறித்துக் கூறுகிறார். கடைசிவார மற்றும் யாக காண்டத்தில் அவரின் இறுதிநாட்கள், விசாரணை, சிலுவை, அடக்கம் போன்ற நிகழ்வுகளை மீண்டும் நினைப்பூட்டுகின்றார். உயிர்த்தெழுதல் காண்டத்தில் உயிர்த்தெழுதல் அதற்குப் பின்னான காட்சிகள், பரமேறியது என முடிக்கின்றார். ஒழிபியலில் இயேசுவைக் குறித்தப் பிற சாட்சிகள், பிறந்தகாலம் ஆகியவைகளைக் கூடுதலாகத் தருகின்றார்.

நூற்பயன்

விவிலியத் திருவசனத்தில் எங்கும் நோக்கமில்லா இசைவுக் குறிப்புக்களைக் கொண்டு அது நன்மையென்று நிரூபிப்பதே இதன் நோக்கம். வேத சத்தியத்தைத் தெளிவுபடுத்தும்படியாக இதில் கண்டிருக்கும் வகையாய் வேறு புத்தகங்களில் எடுத்துச்சொல்லியிருக்கவே இல்லை. பழைய புதிய ஏற்பாடுகளிலுள்ள பிற வரலாற்று நிகழ்வுகளையும் அவ்வாறே வெளிப்படுத்தும் படியாக இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது எனலாம்.

சத்தியத்திற்கு இசைவான குறிப்புகள் வேதமெங்கும் மணிபோலச் சிதறிக் கிடக்கின்றன. அதன் சத்தியத்தைக் குறித்து அசட்டையாயாவது மேலேழுச்சியாயாவது இருப்பது தருமமன்று. இதனால் வேதம், சத்தியம் என்று தெரிய வருகிறபடியால், அதை நம்முடைய விசுவாசத்திற்கு ஆதாரமாகவும், நடக்கைக்குச் சட்டமாகவும் அங்கீகரித்துக்கொள்ளாமல் விட்டுவிடக்கூடாது[194] என வேதத்தின் முக்கியத்துவத்தையும், உண்மைப் பொருளையும் விளக்குகிறார்.

சாமுவேல் பவுல் ஐயரின் இயேசு கிறிஸ்து என்னும் இந்நூலை "ஒருவன் ஒரு கதையாக மாத்திரம் எண்ணி வாசித்தாலும், இதிலடங்கிய சங்கதிகளால் பரவசப்பட்டு, இதற்கிணையான சரித்திரம் யாதொன்றுமில்லை என்பான். பிறப்பிலும், ஜீவியத்திலும், சாவிலும் இவருக்கு இணையில்லை. இவர் தேவன். இவர் அவதாரமெடுக்கச் சித்தம் கொண்டபோது அற்புதமாகப் பிறந்து, ஆச்சரியப்படத்தக்க வகையாய் ஜீவித்து, அனுதாபப்படக்கூடிய முறையாய்ப் பாடுபட்டு மரித்தார்.[195] இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க பதிவுகள் நிறைந்ததாக இந்நூல் காணப்படுகிறது.

நூல் அமைப்பு முறை

பாலிய; காண்டத்தில் இயேசுவின் ஜீவிய மகத்துவ பருவம், கெர்ப்பப் பருவம், ஜனனப பருவம், பிரதிஷ்டைப் பருவம், சாஸ்திரிகள் பருவம்,

குற்றமில்லாப் பாலகர் பருவம், கல்விப் பருவம், வித்வ மகத்துவ பருவம், கட்டியக்காரன் பருவம் என ஒன்பது பருவங்களாகப் பகுத்து இயேசுவின் சிறுபருவ வாழ்க்கையை விளக்குகிறார்.

தீட்சைக் காண்டம் என்னும் பகுதி தீட்சைப் பருவம், சோதனைப் பருவம், சீஷப்பிள்ளைகள் பருவம், கலியாணவீட்டுப் பருவம், ஆலயம் சுத்தமாக்கும் பருவம், மறுஜனனப் பருவம், ஜீவதண்ணீர் பருவம், யூதப் பிரபு பருவம், தெப்பக்குளப் பருவம் என ஒன்பது பருவங்களாக அமைக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

மத்திய காண்டம் நாசரேத் பருவம், கப்பர்நகூம் பருவம், குஷ்டம், திமிர் தீரும் பருவம், ஓய்வுநாள் பருவம், அப்போஸ்தல அழைப்புப் பருவம், மலைப் பிரசங்கப் பருவம், பிணம் உயிர்த்த பருவம், கட்டியக்காரன் தூது பருவம், பாதாபிஷேகப் பருவம், ஊமையன் பருவம் எனப் பத்துப் பருவங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

புறத்தேசக் காண்டம் என்கிற பகுப்பு பயணப் பருவம், ஐந்தப்பப் பருவம், ஜீவ அப்பப் பருவம், பரம்பரைக் கண்டனப் பருவம், தெக்கப்போலிப் பருவம், நல்ல அறிக்கைப் பருவம், நற்கண்டனப் பருவம், மறுரூபப் பருவம், மறுரூப மலையடிப் பருவம், வரிப்பணப் பருவம், பந்துக்கள் பருவம் எனப் பதினொரு பருவங்களை உள்ளடக்கியுள்ளது.

அந்திய காண்டம் கூடாரப் பண்டிகைப் பருவம், விபசார ஸ்திரீ பருவம், லோக ஜோதிப் பருவம், பிறவிக் கபோதிப் பருவம், நல்ல மேய்ப்பன் பருவம், எழுபது சீஷர் பருவம், பெரேயா நாட்டு ஊழியப் பருவம், பெரேயா நாட்டு உவமைப் பருவம், லாசருவின் வியாதிப் பருவம், லாசருவின் உயிர்த்தெழுதல் பருவம், பெரேயா நாட்டுப் பயணப் பருவம், எரிகோ ஊழியப் பருவம், தைலாபிஷேகப் பருவம் என்னும் பதின்மூன்று பருவங்களை உள்ளடக்கியுள்ளது.

கடைசி வாரக் காண்டம் என்னும் தலைப்பின்கீழ் பவனிப் பருவம், ஆலய பிரவேசப் பருவம், கிரேக்கர் சந்திப்புப் பருவம், அத்தி பட்ட பருவம், சங்கத்தார் அமளிப் பருவம், யூத வகுப்பார் பருவம், வேதபாரகர் வேதனைப் பருவம், காணிக்கைப் பெட்டிப் பருவம், தீர்க்கதரிசனப் பருவம், நடுத்தீர்வை நாள் பருவம், மரண ஆயத்தப் பருவம், பஸ்கா ஆயத்தப் பருவம், பஸ்கா பந்திப் பருவம், பரிசுத்த இராப் போஜன ஸ்தாபகப் பருவம், கெத்செமனே பயணப் பருவம் எனப் பதினைந்து பருவங்கள் உள்ளன.

யாக காண்டத்தில் கெத்செமனேப் பருவம், யூதாஸ் முத்தமிட்ட பருவம், சங்கத்தார் விசாரணைப் பருவம், பேதுரு மறுதலிப்புப் பருவம், பிலாத்துவின் விசாரணைப் பருவம், ஏரோதுவின் விசாரணைப் பருவம், மரணாக்கினைப் பருவம், சிலுவை சுமந்த பருவம், யாகப் பருவம், சமாதிப் பருவம் எனப் பத்து பருவங்கள் காணப்படுகின்றன.

வெற்றி காண்டம் என்கிற பிரிவில் உயிர்த்தெழுதல் பருவம், மகதல மரியாள் தரிசித்த பருவம், ஸ்திரீகள் தரிசித்த பருவம், எம்மாவூர் பயண தரிசனப் பருவம், சீஷர் தரிசித்த பருவம், தோமாவின் சந்தேகம் தீர்ந்த பருவம், கடலோரத் தரிசனப் பருவம், கடைசிக் கட்டளைப் பருவம், பரலோகம் எழுந்தருளின பருவம், முடிசூடும் பருவம் என பத்து பருவங்கள் உள்ளடங்கியுள்ளது.

ஒழிபியல் காண்டத்தில் இயேசுவின் ஜீவியத்தைப் பற்றிய பூர்வ சாட்சிகள் மற்றும் இயேசு பிறந்த காலம் தொடர்பான வரலாற்றுச் சான்றுகளுடன் நூல் முடிவுறுகிறது.

வேதோபகரணம்

ஒருவன் ஒரு புத்தகத்தை ஆராய்ச்சி செய்வதில் முயற்சியாய் இருந்தால், அவன் மனதில் எழ வேண்டிய கேள்விகள்: "அந்தப் புத்தகத்தின் பூர்வம் என்ன? அது வண்ணமாய் இப்போதிருக்கிற பிரகாரம் வந்திருக்கிறது? இப்போதிருக்கிற படிதானா அது எப்போது இருந்தது? என்ன ஆதாரத்தின்மேல் அதன் சாதனைகள் நிலைநிற்கிறது? அது தெய்வீகமுள்ளதா? என்ன கருத்தின்படி தெய்வீகமுள்ளது?"[196] என்பதாகும். இக்கேள்விகளுக்கு விடைகாணும் நோக்கில் எழுதப்பட்ட நூல்.

வேதோபகரணம் என்னும் நூல் இறைவன் மனிதருக்கு எழுதிய அன்புக் கடிதமாகிய பரிசுத்த வேதாகமத்தை முழுமையாகக் கற்றுக்கொள்ளும் வகையிலும் கற்றுக்கொடுக்கும் முறையிலும் அமைக்கப்பட்டது. இவர் வேதாகமத்தின் தொடக்கமுதல் அதின் இறுதி வரைக்கும் அதாவது உலகத்தின் ஆரம்பம் தொடங்கி அதின் முடிவு வரைக்கும் ஆராய்ந்து எழுதியுள்ளார் என்று கூறலாம்.

பரிசுத்த வேதாகமத்தின் இரு பிரிவுகளான பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டையும் தனித்தனியாகப் பிரித்து எழுதி வாசிப்போர் எளிதாக வாசிக்கும் வகையில் அமைத்துள்ளார். மேலும் இவர் வேதத்தை வார்த்தை வார்த்தையாக, வரி வரியாக ஆராய்ந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. ஏனெனில் ஆங்காங்கே வசனக் அடிக்குறிப்புகளும் மற்றும் ஒவ்வொரு வசனத்திற்கான இணை வசனமிருக்கும் இடத்தையும் குறித்துக் காட்டியுள்ளார். *இந்நூல் அக்காலத்தே தமிழில் வெளிவந்த சிறந்த வேத ஆராய்ச்சி நூல்* என்பதற்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

நூல் *ஐந்து பங்குகளாக* (அதிகாரம்) பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திற்குள்ளும் ரோம எண் குறியீடு, மற்றும் எண்கள், அடையாளக் குறிகளைப் பயன்படுத்தி உட்தலைப்புகள் தனித்தனியாக பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. இதற்குப் பின்பு அநுபந்தம் (பின்னிணைப்புகள்) மற்றும் அகராதி அகர வரிசையில் அமைந்துள்ளது. இதனால் வாசகர்கள் எளிய முறையில் படித்துப் புரிந்துகொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது.

நூலின் இறுதியில் அகர வரிசை முறையில் *அகராதி* கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் வேண்டிய பெயர் அல்லது இடங்களை எளிதில் எடுப்பதற்கு வசதியாகப் பக்க எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளது.

முதலாம் பங்கு

முதல் பங்கு, ஒன்பது தலைப்புகளில் குறிக்கப்பட்டு வேதாகமத்தைப் பற்றிய ஆதாரங்கள் வரிசைப்படி வேதாகமத்தின் பேர்; வேதாகமப் பிரிவு; வேதாகமத்தின் புராதனம்; வேதாகம கர்த்தாநிச்சயம்; வேதாகமத்தின் காரியநிச்சயம்: வேதாகமம் நம்பப்படத்தக்கது; வேதாகமம் திவ்விய அதிகாரமுள்ளது; வேதாகமம் கொடுக்கப்பட்ட நோக்கம்; வேதாகமம் இங்கிலீஷ் பாஷையில் திருப்பப்பட்டது மற்றும் தமிழ் வேதாகமத் திருப்புதல் என அமைக்கப் பட்டுள்ளது.

பரிசுத்த வேதாகமத்துக்கு வெளியே அதாவது அதன் மூல வரலாறு குறித்த தகவல்களைத் தருகிறது. பரிசுத்த வேதாகமம் தெய்வீக நூல், புனிதத் தன்மையுள்ளது; அதின் வார்த்தைகள் சத்தியமானவை, நம்பத்தகுந்தவை என்பதை நிரூபிக்கும் ஆதாரங்களைத் சேகரித்துத் திரட்டி சாமுவேல் பவுல் ஐயர் எழுதியுள்ளார்.

பைபில் என்கிற வார்த்தை, 'புத்தகம்' என்று அர்த்தங்கொள்ளும் 'பிப்லொஸ்' என்கிற கிரேக்கச் சொல்லிருந்து வந்தது.[197] வேதாகமம், பழைய ஏற்பாடு என்றும் புதிய ஏற்பாடு என்றும் இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்கிற பதம், முதலாவது தேவனுக்கும் மனுஷருக்கும் இருக்கிற சம்பந்தத்தைக் காட்டும் கருத்தாய் இடப்பட்டது.[198] பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மிகவும் பழமையான வரலாற்றை உடையன. புதிய ஏற்பாடு புத்தகங்களைவிடப் பழைய ஏற்பாடு புத்தகங்கள் மிகப் பழமையானவை. பழைய ஏற்பாட்டிலுள்ள மல்கியா புத்தகத்திற்கும் புதிய ஏற்பாட்டிலுள்ள மத்தேயு புத்தகத்திற்கும் சுமார் நானூறு வருடங்கள் இடைவெளி இருக்கிறது. அவை முறையே மத்தேயு புத்தகத்திற்கும் பஞ்சாகமங்களுக்கும் இடையே ஆயிரத்து ஐந்நூறு வருடங்கள் இடைவெளி உள்ளது. பழைய ஏற்பாட்டின் முந்திய புத்தகங்கள், தற்காலத்தில் இருக்கிற எந்த நூலையும் விட, மிகப் பழமையானது என்பதை வரலாற்று ஆதாரங்களோடு கூறுகிறார்.

பரிசுத்த வேதாகமம் கர்த்தாநிச்சயம் உள்ளது. ஒரு புத்தகம் அதை எழுதினவனாலே சொல்லப்பட்டு, அதின் மூலப் பிரதிகள் இருக்கிறதாகக் காணப்பட்டால் அது கர்த்தாநிச்சயம் உள்ள புத்தகமாகும். பின் அச்சிடப்படும் புத்தகங்கள் அதின் மூலப் பிரதிக்கு வித்தியாசமாயிருந்தால் அது புரட்டு அல்லது பொய்யான புத்தகம் என்றே சொல்லப்படும். அதின்படி வேதாகமத்தின் மூலப் பிரதிகளில் உள்ளபடியே இன்றும் வேதாகமம் அப்படியே உள்ளது.

வேதாகமம் காரியநிச்சயம் உள்ளது. நம்பப்படத்தக்கது. காரியநிச்சயம் என்பது சங்கதிகள் கட்டுக்கதைகள் அல்ல, மெய்யாய் நடந்தவைகள் என்பதைக்

குறிக்கும்.[199] மேலும் புத்தகத்தை எழுதிய ஆசிரியர்கள் புத்தகத்தில் எழுதப்பட்ட சம்பவங்களின் காலத்தில் வாழ்ந்தவராக அல்லது அக்காலத்துக்கு ஏதேனும் தொடர்புடையவராய் இருத்தல் வேண்டும்.

உதாரணமாக, புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், என்கிற நான்கு நற்செய்தி நூல்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். இந்நற்செய்தி நூல்கள் அதின் ஆசிரியர்களின் பெயராலேயே அமைந்துள்ளன.

மத்தேயு மற்றும் யோவான் இயேசுவின் சீடர்களாய் இருந்தார்க ளென்பதால் அவர்கள் இயேசுவைக் குறித்துச் சொன்ன சம்பவங்கள் உண்மை என்பதில் சந்தேகமில்லை.

மாற்கு என்பவர் இயேசுவின் காலத்திற்குப் பிறகு வந்தவர் என்பதால் சந்தேகம் எழுகிறது. ஆனால் இவர் இயேசுவின் சீடரான திருத்தூதுவர் பேதுருவின் தோழனாவார்.[200] இதனால் பேதுரு சொல்லியவைகளை இவர் எழுதியிருக்கலாம் என்றும் நம்புகிறதற்கு ஏதுவாகிறது.

லூக்கா என்பவர் இயேசுவின் எழுபது சீடர்களில் ஒருவர் என்று சந்தேகத்திற்கிடமின்றி நம்பப்படுகிறது.[201] ஆக இவரும் இயேசுவின் காலத்தவர்தான் என்பதால் பரிசுத்த வேதாகமத்தை சந்தேகிக்க வேண்டியதில்லை அது கர்த்தாநிச்சயமுள்ளது.

வேதாகமம் கொடுக்கப்பட்ட நோக்கம் என்னவென்றால், தேவனுடைய படைப்புகளாகிய நாம் அவருக்கு இருக்கிற சம்பந்தத்தை நமக்குத் திட்டமானபடி காட்டவும் நாம் அவரைப் பூமியில் மகிமைப்படுத்திப் பின்பு என்றென்றைக்கும் அவரோடிருப்பதற்கு வேண்டிய அவசியமான அறிவைக் கொடுக்கும் நோக்கமாய் எழுதப்பட்டது. மேலும் வேதாகமம் எழுதப்பட்ட பெரிய நோக்கம் என்னவென்றால், **'கிறித்துவுக்குள் தேவனை வெளிப்படுத்துவதே'** என்னும் பொருளை முழுமையாக, தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் மொழியில் வேதாகமம் வந்ததெப்படி? முதன்முதலாகச் சீகன்பால்க் ஐயர், கி.பி.1708ல் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்கத் துவக்கி, 1711இல் முடித்தார். பின்பு பழைய ஏற்பாட்டில் ரூத்தின் ஆகமம் வரையும் மொழிபெயர்த்தார். சூல்ச்சு ஐயர் மீதியான புத்தகங்களைத் மொழிபெயர்க்கத் துவக்கி 1728இல் முடித்து, பழைய ஏற்பாட்டை நான்கு பங்குகளாக அச்சிட்டார். இப்போது நாம் வைத்திருக்கும் வேதாகமம் 1855ம் வருடம் வேதாகம சங்கத்தார் ஒரு குழுவை ஏற்படுத்தி 1868இல் செய்து முடித்தார்கள். இக்குழுவில் உள்ளவர்கள் தமிழ் மொழியை நன்கு நன்றாய்க் கற்றுத் தேர்ந்தவர்கள்; கிரேக்க மொழியைத் தெளிவாய் அறிந்தவர்கள்; எபிரேயு மொழியில் நிபுணர். இவர்களின் பெயர்களை சாமுவேல் பவுல் ஐயர் தம் நூலில் ஆராய்ந்து தேடிக் கொடுத்துள்ளார். *'வேதாகமத்தைத் திருப்பினவர்களின் நாமங்கள். சார்ச்செந்து அத்தியட்சர், கால்ட்வேல் அத்தியட்சர், பேலிஸ் ஐயர், பிரொதாற்றன் ஐயர், டிப் ஐயர், கில்னர் ஐயர், கோலப் ஐயர், ஸ்கடர் ஐயர், ஸ்பால்டிங் ஐயர், திரேசி ஐயர், பவர் ஐயர் முதலாளி'*[202] என்பவர்களின் பங்களிப்பினைச் சான்றாதாரங்களோடு பதிவு செய்துள்ளார்.

இரண்டாம் பங்கு

பழைய ஏற்பாட்டின் *முப்பத்தொன்பது புத்தகங்களை* மட்டும் ஐந்து பெரும் பிரிவுகளாக்கி விளக்குகிறார். பழைய ஏற்பாடு எழுதப்பட்ட பாஷை, பழைய ஏற்பாட்டு பூமி சாஸ்திரம், பழைய ஏற்பாட்டின் காலக்கணிதம், பழைய ஏற்பாட்டின் கனோன், தனித்தனியான புஸ்தகங்கள் (பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்கள், ஆதியாகமம் முதல் மல்கியா வரை) என ஆய்வு நோக்கில் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பகுதி வேதாகமப் புத்தகங்களின் பெயர்க்காரணம், பொருள், நூலின் காலம், எழுதப்பட்ட வருடம், ஆசிரியர், இடம் இவை அனைத்தையும் ஒன்று சேர தொகுத்துத் தருகிறது.

பழைய ஏற்பாடு புத்தகங்கள் அவற்றின் கருத்தின் அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பழைய ஏற்பாடு மொத்தம் முப்பத்தொன்பது புத்தகங்கள்: பஞ்சாகமங்கள் (5), சரித்திர ஆகமங்கள் (12), பாட்டாகமங்கள் (5), தீர்க்கதரிசன நூல்கள் (17) என நான்குப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாகமங்கள்: ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்.

சரித்திர ஆகமங்கள் : யோசுவா ஆகமம், நியாயாதிபதிகள் ஆகமம், ரூத்தின் ஆகமம், இராஜாக்களின் இரண்டு ஆகமங்கள், நாளாகமத்தின் இரண்டு புஸ்தகங்கள், எஸ்றாவின் ஆகமம், நெகேமியாவின் ஆகமம், எஸ்தரின் ஆகமம்.

பாட்டாகமங்கள்: யோபின் ஆகமம், சங்கீத ஆகமம், பிரசங்கியின் ஆகமம், சாலொமோனின் உன்னதப்பாட்டு.

தீர்க்கதரிசன ஆகமங்கள்: ஏசாயா தீர்க்கதரிசன ஆகமம், எரேமியாவின் ஆகமம், எரேமியாவின் புலம்பல், எசேக்கியேல் தீர்க்கதரிசியின் ஆகமம், தானியேல் ஆகமம், ஓசியா தீர்க்கதரிசியின் ஆகமம், யோவேல் தீர்க்கதரிசியின் ஆகமம், ஆமோஸ் தீர்க்கதரிசயின் ஆகமம், ஒபதியா தீர்க்கதரிசியின் ஆகமம், யோனா தீர்க்கதரிசியின் ஆகமம், மீகா தீர்க்கதரிசியின் ஆகமம், நாகூம் தீர்க்கதரியின் ஆகமம், ஆபகூக் தீர்க்கதரிசியின் ஆகமம், செப்பனியா தீர்க்கதரிசியின் ஆகமம், ஆகாய் தீர்க்கதரிசியின் ஆகமம், சகரியா தீர்க்கதரிசியின் ஆகமம், மல்கியா தீர்க்கதரிசியின் ஆகமம்.

பழைய ஏற்பாடு புத்தகங்கள் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. தானியேல் புத்தகத்தில் சில பாகங்களும், (தானி2:4-7:28) எரேமியா தீர்க்கதரிசன ஆகமத்தில் (எரேமியா 10:11 ஒரு வாக்கியமும் மட்டும் எபிரேயுவுக்குச் சம்பந்தமான கல்தேயு மொழியில்[203] எழுதப்பட்டிருக்கிறதாக சாமுவேல் பவுல் ஐயர் கண்டறிந்து எழுதியுள்ளார்.

பூமிசாஸ்திரம் என்பது புத்தகங்களில் உள்ள இடங்களின் பெயர்களை ஆராய்வதாகும். பழைய ஏற்பாட்டில் உள்ள இடங்கள் அது வேதத்தில் வசனமிருக்கும் இடம் மற்றும் இடத்தை பற்றிய வரலாறு போன்றவற்றை சாமுவேல் பவுல் ஐயர் ஆராய்ந்து எழுதியுள்ளார். மேலும் காலத்திற்கேற்ப இடங்களின் பெயர்களையும் பிராயணங்களையும் கூறுவது மிகவும் அரிதான விஷயம். அதைச் சாமுவேல் பவுல் ஐயர் செய்துள்ளார். இது வியத்தகு விஷயமாய்த் தோன்றுகிறது. காட்டாக, இசுரவேலர் நாற்பது வருஷங்களாய்ச் செய்த பிரயாண இடங்கள்:

"ராமசேஸ், சுக்கோத்து, ஏத்தாம், இரோத் பள்ளத்தாக்கு, ஏத்தாமில் மூன்று நாள் பிரயாணம், மாரா, ஏலிம், சிவந்த சமுத்திரத்தின் அருகே, சீன்வனாந்தரம், தொப்கா, ஆலூசி, ரெவிதீம், சீனாய் வனாந்தரம், தபேரா, கிப்ரோத் அத்தாவா, ஆசரோத், ரித்மா, ரிம்மோன் பேரேசு, லிப்னா, ரீசா, கேலத்தா, சாப்பேர் மலை, ஆரதா, மக்கெலோத்து, தாகாத்து, தாராகு, மித்கா, அஸ்மோனா, மோசெரோத்து, பெனெயாக்கான், கித்கேபேர், காதேஸ், பேரோத்து பெனெயாக்கான், ஒர்மலை, குத்கோதா, யோத்பாத், சிவந்த சமுத்திரவழி, சல்மோனா, புனோன், ஒபோத், அபாரீம், சுரேத் பள்ளத்தாக்கு, அர்னோன் ஆறு, தீபோன்காத், அல்மோன் திப்பலத்தாயிம், பேயோர், மாத்தானா, நகாலியேல், பாமோத், அபாரீம் மலை (அல்லது பிஸ்கா) எரிகோவுக்குச் சமீபமாய் யோர்தானுக்கு அருகான மோவாபின் சமபூமி.[204] இவைகளை வரிசைப்படத் தொகுத்து விளக்கிப் பட்டியலிட்டுள்ளமை அவருடைய ஆழ்ந்த புலமையைப் புலப்படுத்துகிறது.

புத்தகத்தின் கால வரலாற்றினை பல நூல்களை ஆராய்ந்து கூறியுள்ளமை புலனாகிறது. பழைய ஏற்பாட்டு கால வரலாறு ஆறு பிரிவாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

1-வது, சிருஷ்டிப்பு முதல் நோவா கால ஜலப்பிரளயம் வரை. இதற்கிடைப்பட்ட கால அளவு எவ்வளவு என்று தெரியவில்லை.

2-வது, ஜலப்பிரளயம் முதல் ஆபிரகாம் பிறந்தது வரை. எபிரெய ஆகமத்தின்படி 292 வருஷங்களுக்கு மேல் என்றும், சமாரிய ஆகமத்தின்படி 942 வருஷங்களுக்குமேல் என்றும், செப்ற்றியுஜென்ற் ஆகமத்தின்படி 1072 அல்லது 993 வருஷங்களுக்குமேல் என்றும் கணக்கிடப்படுகிறது.

3-வது, ஆபிரகாம் அழைக்கப்பட்டது முதல் இசுரவேலர் எகிப்தைவிட்டு புறப்பட்டது வரை. இதைப் பற்றிய கணிதம் துல்லியமாய் இருக்கிறது. 430 வருஷம் அதின் தொகை.

4-வது, இசுரவேலர் புறப்பட்டது முதல் சாலொமோன் தேவாலயத்தைக் கட்டினது வரை; சிலர் 479 வருஷங்கள் என்றும், சிலர் 621 வருஷங்கள் என்றும் சொல்லுவார்கள்.

5-வது, சாலொமோன் ஆலயத்தைக் கட்டினது முதல் யூதருடைய சிறையிருப்பு வரையும்; இது ஏறக்குறைய 476 வருஷக்காலம் உள்ளது.

6-வது, யூதர் சிறையிருப்பிலிருந்து திரும்பினது முதல் இரட்சகர் பிறந்தது வரையும்; இது ஏறக்குறைய 536 வருஷக்காலம் உள்ளது என்று குறிப்பிடுகிறார்.

மூன்றாம் பங்கு

புதிய ஏற்பாடு *இருபத்தேழு புத்தங்களைத்* தனியாகப் பிரித்து ஐந்து பெரும் பிரிவுகளாக கூறுகிறது. அவையாவன: புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மூல மொழி, புதிய ஏற்பாட்டுப் பூமிசாஸ்திரம், புதிய ஏற்பாட்டின் காலக்கணிதம், புதிய ஏற்பாட்டின் கனோன், தனித்தனியான ஆகமங்கள் என (மத்தேயு முதல் வெளிப்படுத்தல் வரை) விளக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரம் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலம், பெயர்க்காரணம், பொருள், நோக்கம், போதனை, ஆசிரியர் இவற்றினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இதின் பெரும் தலைப்புகள் வழக்கமான எண் வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய ஏற்பாடு மொத்தம் இருபத்தேழு புத்தகங்கள்: சரித்திர ஆகமங்கள் (5), நிருபங்கள் (21), தீர்க்கதரிசன ஆகமம் என மூன்று பிரிவுகளாகப் பவுல் ஐயர் பிரித்துள்ளார்.

சரித்திர ஆகமங்கள்: மத்தேயு எழுதின சுவிசேஷம், மாற்கு எழுதின சுவிசேஷம், லூக்கா எழுதின சுவிசேஷம், யோவான் எழுதின சுவிசேஷம், அப்போஸ்தலர் நடபடிகள் இவை இயேசு கிறித்துவின் அற்புதங்கள், கற்பனைகள், பாடு, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் முதலான வாழ்க்கை வரலாற்றையும் மற்றும் ஆதித் திருச்சபையின் அப்போஸ்தலர்கள், பெந்தெகொஸ்தே திருநாள், பிரச்சனைகள், தீர்மானங்கள், சுவிசேஷப் பிரயாணங்கள் வரலாற்றையும் தெரிவிக்கிறது.

நிருபங்கள்: தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம், தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம், கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம், கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபம், கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம், ரோமாபுரிக்கு எழுதப்பட்ட நிருபம், யாக்கோபு எழுதின நிருபம், எபேசியருக்கு எழுதப்பட்ட நிருபம், கொலோசெயருக்கு எழுதப்பட்ட நிருபம், பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபம், பேதுரு எழுதின முதலாம் நிருபம், பேதுரு எழுதின இரண்டாம் நிருபம், தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம், தீத்துவுக்கு எழுதின நிருபம், தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம், எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபம், யூதா எழுதின பொதுவான நிருபம், யோவான் எழுதின முதலாம் நிருபம், யோவான் எழுதின இரண்டாம் நிருபம், யோவான் எழுதின மூன்றாம் நிருபம்.

தொடக்கக்காலத் திருச்சபைப் பிதாக்கள் தங்கள் சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் சபையில் காணப்பட்ட கள்ளப் போதகங்கள், கள்ள தீர்க்கதரிசனம், ஒற்றுமையின்மை இவற்றை விலக்கவும் மற்றும் உண்மை சத்தியம், ஒழுங்கு. நடவடிக்கைள், அன்பு, ஐக்கியம் இவற்றை நிலைநிறுத்தவும் எழுதப்பட்டது.

தீர்க்கதரிசன ஆகமம்: வெளிப்படுத்தின விசேஷம். இந்நூல் அக்கால ஏழு சபைகளின் நிலைமையையும் உலகத்தின் முடிவில் சம்பவிக்கப்போகிற காரியங்களை முன்குறித்தும் எழுதப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாடு கிரேக்கு மொழியில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு மொழிநடை இலக்கண நடையாயிராமல் பேச்சுநடை முறையில் அமைந்துள்ளது. மேலும் கிரேக்க மொழி பேசும் யூதர்களால் எழுதப்பட்டது.

புதிய ஏற்பாட்டுப் சபை நில வரலாறு மெதித்திரணியாக் கடலோரத்தைச் சுற்றியுள்ள தேசங்களுக்கு அப்பால் செல்கிறது. முக்கிய இடங்களாகப் பெத்லகேம், எருசலேம், சமாரியா, யோர்தான், கலிலேயாக் கடல், அந்தியோகியா மற்றும் பவுல் பிரயாணம் செய்த அநேக இடங்களைச் சேர்த்து ரோமாபுரி வரைக்கும் செல்கிறது.

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் காலம் தெளிவாய் இருந்தாலும் ஒரே ஒரு சிக்கல் மட்டும் உள்ளது. சிலர் மத்தேயு புத்தகம் எபிரெயு மொழியில் எழுதப்பட்டிருந்தால் கி.பி.38ம் வருடத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் சிலர் கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருந்தால் கிப.பி.60ம் வருடத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் வாதிடுகின்றனர். எனவே சாமுவேல் பவுல் ஐயர் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை காலவரிசை அடிப்படையில் குறிப்பிட்டு விளக்குகிறார். மத்தேயு புத்தகத்தை இரண்டு முறை பயன்படுத்தியிருக்கிறார்.

"மத்தேயு
1 தெசலோனிக்கேயர்
2 தெசலோனிக்கேயர்
கலாத்தியர்
1 கொரிந்தியர்
2 கொரிந்தியர்
ரோமர்
மத்தேயு (கிரேக்கில்)
யாக்கோபு
மாற்கு
எபேசியர்
கொலோசெயர்
பிலேமோன்
பிலிப்பியர்
எபிரெயர்
லூக்கா
அப்போஸ்தலர் நடபடிகள்
1 பேதுரு
2 பேதுரு
1 தீமோத்தேயு

தீத்து
2 தீமோத்தேயு
யூதா
1 யோவான்
2 யோவான்
3 யோவான்
வெளிப்படுத்தின விசேஷம்
யோவான் சுவிசேஷம்"[205]

என முறைப்படுத்தி விளக்குகிறார்.

நான்காம் பங்கு

பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைத்து தலைப்புகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவையாவன: சரித்திர இணைப்பு, உபதேச இணைப்பு என இணைத்து விளக்குகிறார்.

சரித்திர இணைப்பில் பத்து குறிப்புகளையும் உபதேச இணைப்பில் ஏழு குறிப்புகளையும் அதனுடன் தீர்க்கதரிசன உத்தியோகம், ராஜ உத்தியோகம், ஆசாரிய உத்தியோகம் போன்ற உட்தலைப்புகளோடு பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கும் சரித்திர வரலாறுகளையும் போதனை வசனங்களையும் இணைத்து விளக்குகிறார்.

பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கும் சரித்திரமானது, அகஸ்து ரோம ராயனாய் இருக்கையில் ஏரோதினுடைய ஆளுகையின் முப்பத்தாறாம் வருடத்திலே உலக இரட்சகர் இயேசு பிறந்தார். ஏரோதுக்குப் பின்பு அர்கெலாயு யூதேயாவை அரசாண்டார். ஆனால் அவர் தகப்பனைப்போலவே மிகவும் குரூரனாய் இருந்தார். அவர் ஆளுகையின் பத்தாம் வருடத்தில் யூதர்கள் அவர்பேரில் குற்றம் சுமத்தினதினால் அகுஸ்துராயன் அவரை கால் தேசத்தில் உள்ள வியன்னாப் பட்டணத்துக்கு சிறையாக அனுப்ப அங்கே அவர் மரித்தார். அதன்பின்பு யூதேயா ரோம அரசுக்கு உட்பட்டதாயிற்று. ஒரு தேசாதிபதி அதை ஆண்டுவந்தார். இயேசு இரட்சகருடைய காலத்தில் அப்படிப்பட்ட தேசாதிபதிக்கு மரணத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிடுகிறார்.

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தைக் குறித்துப் புதிய ஏற்பாட்டு எபிரெய நிருபத்தில் "*நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாய் இராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது*"[206] என்றும், மேலும் மற்றொரு நிருபமான கலாத்தியர் நிருபத்தில் "*நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாயராய் இருந்தது*"[207] என்றும் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறே இயேசுவின் மூன்று ஊழியத்தைக் குறித்தும் பழைய ஏற்பாட்டில் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இயேசு தீர்க்கதரிசி என்பதைக்

குறிப்பதாக, *“உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரில் இருந்து எழும்பப்பண்ணுவேன்”*[208] என்று மோசேக்கு வாக்கு அருளினார்.

இயேசு அரசர் என்பதைக் குறிக்கும் விதமாகத் தேவன் தாவீதிடம், *“உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலை பெற்றிருக்கும்”*[209] என்று வாக்கு அருளினார். இது புதிய ஏற்பாட்டில் *“கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது”*[210] என்று தேவதூதன் மரியாளிடத்தில் விளம்பினது மூலம் அறிய முடிகிறது.

இயேசு ஆசாரியர் என்பதற்குப் பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட பலிகளுக்குப் பதிலாகத் தம்மை பலியாகச் செலுத்தினார். உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற *“தேவ ஆட்டுக்குட்டியாகிய”* கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாய் இருந்தது. *“இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது”*[211] என்ற பெரிய ஆதார சத்தியத்தைப் பலியின் ரத்தம் காட்டுகிறதாய் இருக்கிறது என்றவாறு பல தொடர்புடைய இணைப்பு திருவசனங்களைக் கொண்டு விளக்குகிறார்.

ஐந்தாம் பங்கு

வேதாகமத்தை ஆராய்ந்து விவரப்படுத்துவதற்குரிய சுருக்கக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதி பரிசுத்த வேதாமகத்தை ஆழமான முறையில் ஆராய்ந்து கற்பதற்கு ஏற்ற வகையில் இருபத்தைந்து வழிமுறை ஆலோசனைகள் அல்லது கருத்துக்கள் அமைந்துள்ளன.

அநுபந்தம் (பின்னிணைப்பு) பிரிவில் ஆங்கில எழுத்து A முதல் Q வரை அதாவது பதினேழு பிரிவுகள் அழகுற வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன: பூர்வ கையெழுத்துப் பிரதிகள், புதிய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதிகள், பழைய ஏற்பாட்டுக் காலக்கணிதச் சுருக்கம், பழைய ஏற்பாட்டு அப்போகிரிபா ஆகமங்கள், எபிரெயருடைய பண்டிகைகள் பருவகாலங்கள், எபிரெய செய்யுள், சங்கீத ஆகமம், பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் எழுதப்பட்ட காலக்கிரமம், நான்கு சுவிசேஷங்களிலும் அடங்கிய சங்திகள் நடந்த காலக்கிரம அட்டவணை, புதிய ஏற்பாட்டுத் தள்ளுபடி ஆகமங்கள், புதிய ஏற்பாட்டு ஆகமங்கள் எழுதப்பட்ட காலக்கிரம அட்டவணை, இயேசுகிறித்துவானவர் செய்த அற்புதங்கள், புதிய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிற பதிதங்கள், சமயவகுப்பார், வேதத்தில் வழங்கிவருகிற அளவை வாய்ப்பாடுகள் ஆகியவையாகும்.

வேதாகமம் திவ்விய வெளிப்படுத்தலாயும் சிறப்பாகக் காரியங்களை அறிவிப்பதாயும் இருப்பதால் அதின் சரியான கருத்து இன்னதென்றும், பரிசுத்த

ஆவியானவர் அதினால் நமக்குச் சொல்லுகின்ற பொருள் இன்னதென்றும் பார்ப்பது முக்கியமான காரியமாகும். இது குறித்த காரியங்களை ஆழமாகப் படித்து வேதத்தை ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்றவாறு பல்வேறு கோணங்களில் இருபத்தைந்து தலைப்புகளில் கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

"வேதாகமத்தை எதார்த்தமான கருத்தோடே வியாக்கியானம் செய்யாததினாலே அநேக மொழிபெயர்ப்புகள் எழும்பினது என்பதற்குச் சந்தேகம் இல்லை. வேதாகமம் பல காலங்களில் பல இடங்களில் இருந்து எழுதப்பட்டதால் அவைகளில் அடங்கிய ஒப்பனைகள், உவமானங்கள், மொழிகள், பல ஜாதியாருடைய வழக்கங்கள், உடை நடை பாவனைகளிலிருந்து எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் புரிந்து வேதாகமத்தைக் கற்க வேண்டும்"[212] எனப் படித்துத் தெளிவு பெறுவதற்குரிய நிலையினை எடுத்துக் கூறுகிறார்.

வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் அதிகாரமும் என்ன நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்பதை அறிய வேண்டும். திவ்விய வசனத்தின் கருத்தை அறியும்படி தொடர் வாக்கியங்களை ஆராய்வது நலமாகும். மேலும் சொல்லொத்த வாக்கியங்கள் மற்றும் கருத்தொத்த வாக்கியங்கள் அதாவது ஒரேவித வார்த்தைகள் மற்றும் வசனங்களைத் தேடிப் படித்துப் பொருளினை முழுமையாக விளங்கிக்கொள்ள வேண்டும் எனச் சுட்டிக் காட்டுகிறார்.

மேலும் வேதத்தில் அநேக உருவகங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதைச் சரியாய் புரிந்துகொள்ள வேண்டும். *"கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்"*[213] என்ற திருவசனம் உருவகம் என்று உடனே அறிந்து கொள்ளலாம். மேலும் சவுலிடம் *"முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்"*[214] என்பதற்குச் சவுல் முள்ளில் உதைத்தான் என்று அர்த்தமல்ல. ஏன் கர்த்தருடைய மக்களைத் துன்புறுத்துகிறான் என்பதே அதன் பொருளாகும் என்று பல திருவசனங்களின் வெளிப்படைப் பொருளை உணர்த்துகிறார்.

இவ்வாறாகச் சாமுவேல் பவுல் ஐயர் வேதத்திற்கு வெளியிலும் வேதத்திற்குள்ளும் உள்ள காரியங்களை எளிதாகப் படிக்கும் வகையில் இந்நூலை எழுதி வடிவமைத்துள்ளார். இந்நூல் வேதத்தைக் கற்போருக்கு தமிழில் வெளிவந்த முதல் விளக்க நூல் என்னும் சிறப்புக்குரியதாகும். இதனையே பிற்காலத்தில் வந்தவர்கள் தொகுத்தும் சுருக்கியும் வெளியிட்டுள்ளனர். விவிலியத்தை அறிந்து கொள்ளுவதற்கான எளிய நடையில் ஆழ்ந்த கருத்துக்களைக் கூறும் விரிவான நூலாக விளங்குவதை அறிய முடிகிறது.

கிறித்தவர்களின் திருமறையான விவிலியம் ஓர் தொகுப்பு நூல். திருமறையில் இடம்பெற்றுள்ள மாந்தர்களின் வாழ்வையும் வரலாற்றையும் முழுமையாகவும் வெளிப்படையாகவும் ஒப்பு நோக்கி, ஆய்வு நோக்கில் விளக்கும் வண்ணமாகச் சாமுவேல் பவுல் ஐயரின் நூல்கள் அமைந்துள்ளன. இறைமாந்தர்களின் நற்செயல்களைச் சாட்சிப்படுத்தியும் தீயவற்றைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்தியும், மன்னித்தும் தண்டித்தும் உள்ள பதிவுகளை எடுத்துக்

காட்டுகிறது. அவருடைய நூல்கள் மக்களைப் பக்தி வாழ்வுக்கு வழிகாட்டி, நெறிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

விவிலிய மாந்தர்கள் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற முறையில் முனிவர், ரிஷி, பூசாரி எனப் பெயர்சூட்டப்பட்டு அவர்கள் செயல்கள் காரண, காரியங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இறைவனால் உலகம் தோற்றுவிக்கப்பட்ட முறை அறிவியலும் பக்தியும் கலந்த நிலையில் கால வரிசைப்படிக் கூறப்பட்டுள்ளன. திருமறைப் பெயர்களுக்கான மூலமொழிப் பொருள் விளக்கமும் விவிலிய விளக்கமும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

முதல் மனிதனின் தோற்றத்தைப் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை எடுத்துக் கூறி, கடவுள் ஆதாமை உருவாக்கிய வகையினையும் அவனுடைய செயல்களையும் விளக்குகிறார். முதன்முதல் சகோதரன் காயீனால் கொல்லப்பட்ட ஆபேலின் கொடூரக் கொலையினை எடுத்துக் கூறி, இதன் தொடர்ச்சியாக உலகில் தீமைகள் வேர்கொண்டதாகக் கூறி விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. பரமேறி முனிவர் ஏனோக்குவின் காலத்தில் இறைவனை மக்கள் வழிபடத் தொடங்கிய ஆரம்ப நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. முதல் போதனையாளராக ஏனோக்கை எடுத்துக் காட்டுகிறார்.

பிரளய முனிவர் நோவா காலத்தில் உலகம் அழிக்கப்பட்டதையும், இனி, உலகம் நீரினால் அழிவதில்லை என்பதற்குச் சான்றாக 'வானவில்' உருவான விதமும் விளக்கப்பட்டுள்ளது. விசுவாச முனிவர் ஆபிரகாமின் கடவுள் நம்பிக்கையும், ஆசீர்வாதமும் யதார்த்த நிலையில் கூறப்பட்டுள்ளது. ஈசாக்கு முனிவர், யாக்கோபு முனிவர் முதலியவர்களுடைய வாழ்க்கை வரலாறு இறைவனுக்கும் மனிதர்களுக்குமிடையே இருந்த தொடர்பின் அடிப்படையில் எடுத்துக்கூறி விளக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய ஆலயத்தில் முதன்முதல் பூசாரியாக (ஆசாரியனாக) ஏற்படுத்தப்பட்ட ஆரோனின் நற்பண்புகளை விளக்கி, தீய வழியில் மக்களை வழிநடத்தும்போது அழிக்கப்பட்ட நிகழ்வினையும் எடுத்துக்கூறி, கடவுளுடைய செயல்கள் கூறப்பட்டுள்ளன. ஜோஷிய முனி பிலேயாம், ஆகான், ஜடாமுனி சிம்சோன், ஏலி, யோசபாத்து அரசன், ஆகாப் முதலிய பழைய ஏற்பாட்டு மாந்தர்களின் கடவுள் நம்பிக்கையும், கடவுளைவிட்டு வழிவிலகும்போது ஏற்படும் தடையும் அழிவும் வாழ்க்கை நிகழ்வுகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன.

தளகர்த்த முனி யோசுவா, கிதியோன், சாமுவேல் தீர்க்கதரசி, இராஜ புலவர் தாவீது, இராஜ ஞானியார் சாலொமோன், ரெகொபெயாம், எலியா ரிஷி, எலிசா, எசேக்கியா ராஜா, எஸ்றா, மொர்தெகாய் ஆகியோர் கடவுள்மீது வைத்திருந்த பற்றும், கடவுள் அவர்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதமும் வழி நடத்தலும் விவரிக்கப்பட்டுள்ளன.

பொறுமை பக்தன் யோபுவின் வாழ்க்கையின் மூலமாகப் பிள்ளைகளை வளர்க்க வேண்டிய முறையும் கடவுள் நம்பிக்கையின் உச்சகட்டத்தையும் அறிய

முடிகிறது. தனக்குண்டான எல்லாம் அழிந்த பின்னும், 'கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்னும் கடவுள் பக்தியும், பிற்கால நன்மைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. கடல் ஆழங்கண்ட யோனாவைப் பற்றிக் கூறும்போது கடவுளுக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு நிகழும் சம்பவங்களைக் கூறி, மனந்திரும்பும்போது ஏற்படும் மாற்றங்களும் விளக்கப்பட்டுள்ளன.

விவிலியத்தின் புதிய ஏற்பாட்டு நூல்கள் இயேசு கிறித்துவின் வாழ்க்கையும் போதனையும் தற்காலச் சூழலுக்கேற்ற வகையில் விளக்கப்பட்டுள்ளன. இயேசு நிகழ்த்திய அற்புதச் செயல்கள் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் எளிய இனிய நடையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இயேசு தோன்றுவதற்கு முன்னிருந்த சகரியா, சிமியோன், சாஸ்திரிகள், வனத்து ரிஷி, யோவான்ஸ்நானகன் ஆகியோருடைய செயல்கள் சூழலுக்கு ஏற்றவாறு விளக்கப்பட்டுள்ளன. விவிலியத்தில் ஆங்காங்கே உள்ள இறைமாந்தர் பற்றிய தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு முழுமையாகக் கூறப்பட்டுள்ளன. இயேசுவின் சீடர்கள் மத்தேயு, சீமோன் பேதுரு, யோவான், யூதாஸ்காரியோத் முதலியோர் அழைக்கப்பட்ட முறையும், இயேசுவுடனிருந்த காலத்தில் நடந்தேறிய சம்பவங்களின் அடிப்படையில் அவர்களுடைய பண்புகளும் விளக்கப்பட்டுள்ளன.

இயேசுவால் அரவணைக்கப்பட்ட குள்ளபக்தன் சகேயு, விசாரணைச் செய்த பொந்தியு பிலாத்து, மனமாற்றம் பெற்ற சிலுவைக் கள்ளன், சாட்சியாக வாழ்ந்த ஸ்தேவான் பிற மார்க்கத்திலிருந்து முதலாவது கிறித்துவைப் பின்பற்றிய கொர்நெலியு, தீமோத்தேயு, ஒநேசிமு ஆகியோருடைய வாழ்க்கை தற்கால நிலையில் புரிந்துகொள்ளும் வண்ணம் பழமொழிகளோடும், சான்றுகளோடும் விளக்கப்பட்டுள்ளன.

இயேசு கிறித்துவுக்குப் பின் நற்செய்தி அறிவிக்கும் பணியை மேற்கொண்ட பவுல் அப்போஸ்தலனுடைய வாழ்க்கையும் இயேசுவை அறிவிக்கும் பணியில் அவருக்கு நேர்ந்த இன்னல்களும், சபை வளர்ச்சி பெறுவதற்கு ஆற்றிய அருந்தொண்டும் விவரிக்கப்பட்டுள்ளன. இயேசு கிறித்துவின் வரலாற்றை உரைநடையில் காலவரிசை முறையில் விளக்கி விரிவாகக் கூறும் நூல் 'இயேசு கிறிஸ்து' என்பது புலனாகிறது. தொடக்கக் காலத்தில் தமிழ் இலக்கியங்கள் செய்யுள் வடிவத்தில் இயற்றப்பட்டன. காப்பியங்கள் காண்டங்கள், பருவங்கள் எனப் பகுக்கப்பட்டன. அம்முறையைப் பின்பற்றி உரைநடையில் இயற்றப்பட்ட இந்நூலை ஒன்பது காண்டங்களாக, எண்பத்தேழு பருவங்களாகப் பகுத்து வரலாற்றினை விளக்குகிறது. ஒழிபியல் பகுதி இயேசு கிறித்துவின் பிறந்த காலத்தையும் வாழ்க்கையையும் பற்றிய சான்றுகளை வரலாற்று நோக்கில் விளக்குகிறது.

'வேதோபகரணம்' விவிலியத்தை இறையியலிலும் வரலாறும் இயைந்த நோக்கில் ஆழமாக, அகலமாக விளக்குவதாக அமைந்துள்ளதை அறிய முடிகிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் விவிலியத்தை அறிந்துகொள்வதற்கு

முதன்மையான கிடைத்தற்கரிய நூலாக விளங்கியுள்ளது. நூல் பங்கு என்று பகுப்புமுறையில் பிரிக்கப்பட்டு உட்தலைப்புகளிடப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

முதலாம்பங்கு விவிலியத்தைப் பற்றிய மூல ஆதாரங்கள் தொடங்கித் தமிழ் மொழிபெயர்ப்பு வரை விளங்குகிறது. 'பைபிள்' என்னும் சொல்லுக்குரிய பொருளினை விளக்கி, விவிலியம் கர்த்தாநிச்சயம் (மூலப் பிரதிகளைக் கொண்டு எழுதப்பட்டது), காரியநிச்சயம் (எழுதப்பட்டவைகள் மெய்யாய் நடந்தவைகள்), உள்ளது என்பதை விளக்கிக் காட்டுகிறது.

இரண்டாம் பங்கில் விவிலியத்திலுள்ள பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தகங்கள் ஐந்து பெரும் பிரிவுகளாக்கி விளக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாடு எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டு இடங்களின் நில அமைப்பு முறை, காலம் முதலானவற்றை விரிவாக எடுத்துக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு நூலையும் விளக்குவதாகத் 'தனித்தனியான புஸ்தகங்கள்' என்னும் பகுதி அமைந்துள்ளது. இப்பகுதி நூலினை விளக்கும்போது தொடர்புடைய பிற தகவல்களைத் தொகுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

விவிலியத்திலுள்ள இருபத்தேழு புதிய ஏற்பாட்டு நூல்களை ஐந்து தலைப்புகளில் மூன்றாம் பங்கு விளக்குகிறது. புதிய ஏற்பாட்டின் மூலமொழி, இடங்களின் நில அமைப்பு முறை, வரலாறு, கானோன் எனப்படும் நம்பிக்கையின் வெளிப்பாடு, தனித்தனி நூல்கள் என விவரிக்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டு நூல்கள் கால வரிசைப்படிப் பட்டியலிடப்பட்டு விளக்கப் பட்டுள்ளன. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் சரித்திர இணைப்பு, உபதேச இணைப்பு என இணைத்து நான்காம் பங்கில் விளக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் பங்கில் விவிலியத்தைக் கற்றுக் கொள்வதற்குரிய இருபத்தைந்து வழிமுறைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்புகள் அகர வரிசைப்படுத்தப்பட்ட முழுமையான நூலின் செய்திகளைத் தொகுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு மூல கையெழுத்துப் பிரதிகளைப் பற்றியச் செய்திகள், வரலாற்று அட்டவணை, சங்கீதங்கள் இயற்றப்பட்ட சூழல், காலம் முதலியவற்றின் அட்டவணை, அளவை வாய்ப்பாடுகள், நூலகராதி முதலானவை விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. தி. முருகரெத்தினம், *புதுமைப்பித்தன் சிறுகதைக் கலை*, ப.96.
2. மேலது.
3. மீனாட்சி முருகரத்தினம், *கல்கியின் சிறுகதைக் கலை*, ப.111.
4. இரா. மோகன், *டாக்டர் மு.வ.வின் நாவல்கள்*, ப.46.
5. க. கைலாசபதி, *தமிழ் நாவல் இலக்கியம்*, ப.146.

6. சாமுவேல் பவுல், *பழைய ஏற்பாட்டு வேத புருஷர்*, முதல் பாகம், ப.2.
7. *பரிசுத்த வேதாகமம்*, வெளிப்படுத்துதல் 4:11.
8. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.115.
9. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்*, ப.10.
10. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 2:17.
11. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்*, ப.37.
12. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.298
13. மேலது, ப.123.
14. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 4:15
15. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.256.
16. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்*, ப.53.
17. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 4:26.
18. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்*, ப.54.
19. மேலது, ப.56.
20. *பரிசுத்த வேதாகமம்*, யூதா 14,15.
21. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.558.
22. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்*, ப.62.
23. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 6:5-7.
24. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 9:10-17.
25. மேலது, ஆதியாகமம் 11:1-9.
26. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.123.
27. *பரிசுத்த வேதாகமம்*, யாக்கோபு 2:23
28. மேலது, ஆதியாகமம் 12:1.
29. மேலது, ஆதியாகமம் 17:5
30. மேலது, ஆதியாகமம் 17:15
31. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 22:1-18.
32. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.829.
33. மேலது, ஆதியாகமம் 13:8
34. மேலது, ஆதியாகமம் 19:17
35. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்*, ப.152.

36. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.166.
37. மேலது, ஆதியாகமம் 32:28.
38. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *முதல் பாகம்*, ப.183.
39. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 28:17-19.
40. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *முதல் பாகம்*, ப.215.
41. *பரிசுத்த வேதாகமம்*, ஆதியாகமம் 32:28.
42. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.770.
43. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *முதல் பாகம்*, ப.225.
44. மேலது, ப.230.
45. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.721.
46. *பரிசுத்த வேதாகமம்*, எண்ணாகமம் 12:7.
47. மேலது, உபாகமம் 34:7, யூதா 9 வசனம்.
48. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.140.
49. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *முதல் பாகம்*, பக்.306,307.
50. மேலது, ப.309.
51. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.596.
52. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *முதல் பாகம்*, ப.326.
53. *பரிசுத்த வேதாகமம்*, எண்ணாகமம் 22:21-28.
54. மேலது, வெளிப்படுத்துதல் 2:14.
55. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.769
56. *பரிசுத்த வேதாகமம்*, யோசுவா 6 அதி.
57. மேலது, யோசுவா 10:13
58. மேலது, யோசுவா 10:14.
59. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.104.
60. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *முதல் பாகம்*, ப.370.
61. *பரிசுத்த வேதாகமம்*, யோசுவா 7 அதி.
62. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.303.
63. மேலது, நியாதிபதிகள் 6:12
64. மேலது, நியாதிபதிகள் 7:16-25
65. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.403.

66. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்,* ப.392.
67. *பரிசுத்த வேதாகமம்,* நியாதிபதிகள் 16:28
68. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.249.
69. *பரிசுத்த வேதாகமம்,* 1 சாமுவேல் 2:12
70. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்,* ப.508.
71. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.386.
72. *பரிசுத்த வேதாகமம்,* 1 சாமுவேல் 3:19-20.
73. மேலது, 1 சாமுவேல் 13:14;16:1-13
74. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.377.
75. *பரிசுத்த வேதாகமம்,* 1 சாமுவேல் 16:14.
76. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.489.
77. சாமுவேல் பவுல், *மு.நூ., முதல் பாகம்,* ப.472.
78. மேலது, ப.479.
79. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.390.
80. *பரிசுத்த வேதாகமம்,* பிரசங்கி 1:18
81. *பரிசுத்த வேதாகமம்,* 1 இராஜாக்கள் 3:4-9
82. மேலது, 1 இராஜாக்கள் 3:16-28.
83. சாமுவேல் பவுல், *பழைய ஏற்பாட்டு வேத புருஷர்,* இரண்டாம் பாகம், ப.24.
84. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.803.
85. *பரிசுத்த வேதாகமம்,* நீதிமொழிகள் 27:22.
86. மேலது, 1 இராஜாக்கள் 12:14.
87. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.766.
88. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.51.
89. *பரிசுத்த வேதாகமம்,* சங்கீதம் 112:10.
90. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.102.
91. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.74.
92. *பரிசுத்த வேதாகமம்,* 1 இராஜாக்கள் 16:25
93. மேலது, 1 இராஜாக்கள் 21:15
94. மேலது, 1 இராஜாக்கள் 22:37-38
95. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.212.

96. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், பக்.77-78.
97. *பரிசுத்த வேதாகமம்,* 1 இராஜாக்கள் 18:24
98. மேலது, 1 இராஜாக்கள் 18:37.
99. மேலது, 1 இராஜாக்கள் 18:39
100. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.209.
101. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.137.
102. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.530.
103. *பரிசுத்த வேதாகமம்,* 2 இராஜாக்கள் 5:10
104. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.190.
105. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.158.
106. *பரிசுத்த வேதாகமம்,* 2 இராஜாக்கள் 20:1-7.
107. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.768.
108. *பரிசுத்த வேதாகமம்,* 1 இராஜாக்கள் 13:2.
109. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.184.
110. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.232.
111. *பரிசுத்த வேதாகமம்,* எஸ்றா 7:10
112. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.202.
113. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.719.
114. *பரிசுத்த வேதாகமம்,* எஸ்தர் 1:1
115. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.226.
116. மேலது, ப.234.
117. மேலது, 236.
118. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.773.
119. *பரிசுத்த வேதாகமம்,* யோபு 2:5
120. மேலது, யோபு 1:21.
121. மேலது, யோபு 2:10.
122. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.235.
123. *பரிசுத்த வேதாகமம்,* ஏசா.8:3
124. சாமுவேல் பவுல், *மு.நூ.,* இரண்டாம் பாகம், ப.285.
125. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.205.

126. *பரிசுத்த வேதாகமம்,* எரேமியா 1:5.
127. மேலது, எரேமியா 2:23-24.
128. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *இரண்டாம் பாகம்,* பக்.306-307.
129. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.490.
130. *பரிசுத்த வேதாகமம்,* தானியேல் 5:12
131. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *இரண்டாம் பாகம்,* ப.349.
132. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.788.
133. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *இரண்டாம் பாகம்,* 354.
134. *பரிசுத்த வேதாகமம்,* யோனா 1:2.
135. மேலது, யோனா 1:9.
136. சாமுவேல் பவுல், *மு.நூ.*, *இரண்டாம் பாகம்,* பக்.371-372.
137. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.361.
138. சாமுவேல் பவுல், *புதிய ஏற்பாட்டு வேத புருஷர்,* ப.2.
139. மேலது. ப.3.
140. *பரிசுத்த வேதாகமம்,* லூக்கா 1:792
141. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.401.
142. *பரிசுத்த வேதாகமம்,* லூக்கா 2:25.
143. மேலது, லூக்கா 2:26.
144. மேலது, லூக்கா 2:28-32.
145. சாமுவேல் பவுல், *மு.நூ.*, ப.40.
146. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.783.
147. மேலது, ப.49.
148. *பரிசுத்த வேதாகமம்,* யோவான் 1:29.
149. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.39.
150. சாமுவேல் பவுல், *மு.நூ.*, ப.89.
151. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.535.
152. *பரிசுத்த வேதாகமம்,* யோவான் 1:47.
153. மேலது, யோவான் 1:49.
154. சாமுவேல் பவுல், *மு.நூ.*, ப.103.
155. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.662.

156. *பரிசுத்த வேதாகமம்,* லூக்கா 5:27-29
157. சாமுவேல் பவுல், *மு.நூ.,* ப.110.
158. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.363.
159. *பரிசுத்த வேதாகமம்,* கலாத்தியர் 3:28.
160. மேலது, லூக்கா 19:5.
161. சாமுவேல் பவுல், *மு.நூ.,* ப.117.
162. *பரிசுத்த வேதாகமம்,* யோவான் 1:42
163. சாமுவேல் பவுல், *மு.நூ.,* ப.174.
164. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.783.
165. *பரிசுத்த வேதாகமம்,* மாற்கு 3:17.
166. மேலது, யோவான் 21:7,20.
167. சாமுவேல் பவுல், *மு.நூ.,* ப.192.
168. மேலது, பக்.192-193.
169. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.747.
170. *பரிசுத்த வேதாகமம்,* யோவான் 12:5.
171. மேலது, மத்தேயு 26:50.
172. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.650.
173. சாமுவேல் பவுல், *மு.நூ.,* ப.222.
174. *பரிசுத்த வேதாகமம்,* லூக்கா 23:15.
175. மேலது, மத்தேயு 27:24.
176. சாமுவேல் பவுல், *மு.நூ.,* பக்.242-243.
177. மேலது, ப.246.
178. *பரிசுத்த வேதாகமம்,* லூக்கா 23:32-43.
179. மேலது, அப்போஸ்தலர் 6:8-7:20.
180. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.570.
181. *பரிசுத்த வேதாகமம்,* 2 கொரிந்தியர் 11:23-27.
182. சாமுவேல் பவுல், *மு.நூ.,* ப.343.
183. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,* ப.351.
184. மேலது, ப.349.
185. *பரிசுத்த வேதாகமம்,* அப்போஸ்தலர் 10:2

186. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.503.

187. *பரிசுத்த வேதாகமம்*, 2 தீமோத்தேயு 1:5; 3:15.

188. மேலது, 1 கொரி.4:17.

189. *பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்*, ப.260.

190. சாமுவேல் பவுல், *மு.நூ.*, ப.371.

191. *பரிசுத்த வேதாகமம்*, பிலேமோன் 10,18,19 வசனங்கள்.

192. Madras Religious Tract and Book Society, *Seventy Sixth Annual Report*, p.2.

193. து. சீனிச்சாமி, தமிழில் காப்பியக் கொள்கை, ப.56.

194. சாமுவேல் பவுல், *நூற்பயன்.*

195. சாமுவேல் பவுல், *இயேசு கிறிஸ்து*, ப.2.

196. சாமுவேல் பவுல், *வேதோபகரணம்*, ப.2.

197. மேலது, ப.2.

198. மேலது, ப.4.

199. மேலது, ப.15.

200. *பரிசுத்த வேதாகமம்*, 1 பேதுரு 5:13

201. சாமுவேல் பவுல், *வேதோபகரணம்*, ப.16.

202. மேலது, பக்.29-30.

203. மேலது, ப.33.

204. மேலது, ப.49.

205. மேலது, பக்.185-186.

206. *பரிசுத்த வேதாகமம்*, எபிரெயர் 10:1.

207. மேலது, கலாத்தியர் 3:24.

208. மேலது, உபாகமம் 18:18.

209. மேலது, 2 சாமுவேல் 7:16

210. மேலது, லூக்கா 1:32,33.

211. மேலது, எபிரெயர் 9:2.

212. சாமுவேல் பவுல், *வேதோபகரணம்*, ப.305.

213. *பரிசுத்த வேதாகமம்*, சங்கீதம் 84:11.

214. மேலது, அப்போஸ்தலர் 26:14

உரைநடைத் திறன்

தமிழில் உரைநடை, சிறுகதை, புதினம், கட்டுரை என்று வளர்ந்து பதினெட்டு, பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுக் கால இலக்கிய வளர்ச்சிக்கு உரைநடை வடிவம் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளது.

எண்ணத்தையும் உணர்ச்சியையும் உரியமுறையில் பிறர் உளங்கொள எடுத்துரைக்கும்போதுதான் படைப்பாளியின் மொழி ஆளுமைத்திறன் நன்கு புலனாகும். உயிர்த்துடிப்புடன் தம் கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் சிலருக்கே அமைகின்றது.

தூய சொற்களின் கூட்டுறவால் மலர்வது அழகிய மொழிநடை, கருதும் பொருளுக்கேற்பச் சொற்களைத் தேர்வதில் விழிப்பும், புலமையும், பயிற்சியும் தேவை. இலக்கண, இலக்கிய, பிறமொழிப் புலமைப் பின்னணியோடு உருவாகும் நூலின் நடை நம்மை இன்புறுத்தும். நூற்பொருள் அறிவுப் புலமையைச் செழுமையாக்கும்.

"பாட்டுக்கலை மிகவும் உயர்ந்தது. தரத்திலும், தன்மையிலும் அதனளவுக்கு உயர்ந்து நிற்காவிட்டாலும் உரைநடையும் உயர்ந்த கலையே"[1] என்று கூறுவார் மா. இராமலிங்கம். முதலில் பாட்டு வடிவம் பெற்று வளர்ந்த தமிழ் இலக்கியம் படிப்படியாக வளர்ந்து, எல்லாவித மக்களும் பயன்படுத்தும் உரைநடை வடிவமாக இன்றைக்கு விளங்குகிறது.

'இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் என்று, இன்று உலகிலுள்ள எந்த மொழி இலக்கியத்தை ஆராய்ந்தாலும் அது பெரும்பகுதி உரைநடைப் படைப்புகளையே உள்ளடக்கி நிற்கின்றது"[2] என்று இரா. தண்டாயுதம் எடுத்துரைப்பதற்கு ஏற்பத் தமிழிலும் அத்தகைய நிலை வளர்ந்து வருகின்றது.

"கட்டுரையாளன் தனது கட்டுரையிலிருந்து துண்டுபடுத்திக் கொள்ள முடியாது. ஆகவேதான் கட்டுரையை – வசனத்தை மற்றெல்லாக் கலைகளையும்விட, கலைஞரின் சொந்த விருப்பு வெறுப்புகளைப் பிரதிபலிக்கும் இலக்கியமாக விமர்சகர்கள் கருதுகிறார்கள்"[3] என்கிறார் சிதம்பர ரகுநாதன். எனவேதான் கிறித்துவர்களைப் பார்த்துக் கவலைப்படும் சாமுவேல் பவுல் இயல்பான நடையில் உரைநடை வடிவினைக் கையாண்டு படைப்புகளைப் படைத்துள்ளார்.

"ஓர் உரைநடைப் பகுதியை நாம் ஆராயும்போது அது எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்பதையும் மனத்திற்கொண்டே ஆராய வேண்டும். ஏனெனில் அந்தப் பயன்நோக்கமே அதன் நடையை நிர்ணயம் செய்கிறது"[4] என்பதற்கு ஏற்பச் சாமுவேல் பவுலின் பயன் அளப்பரியது. தமிழ்

உரைநடை வளர்ச்சியில் கிறித்துவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கிறித்துவர்கள் மேற்கொண்ட மொழிபெயர்ப்புப் பணி, அகராதிப் பணி, இலக்கணப்பணி, அச்சுப்பணி, இதழியல் பணி ஆகியன தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. உரைநடை பரவுவதற்கும், உரைநடையில் படைப்பிலக்கியங்கள் தோன்றுவதற்கும் கிறித்துவர்கள் காரணமாக அமைந்தனர். புதினம், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு முதலிய உரைநடை இலக்கிய வடிவங்களைக் கிறித்துவர்கள் கையாண்டுள்ளனர். இப்படைப்புகள் கிறித்துவக் கோட்பாடு, சமுதாயச் சீர்திருத்தம், தனிமனித அறங்கள் போன்றவற்றை உள்ளடக்கமாகக் கொண்டவை.

தமிழ் உரைநடையின் தொன்மை

தமிழின் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். அதன் ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திலேயே உரைநடை இருந்தது என்பதற்கு,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
உரை வகை நடையே நான்கென மொழிப" [5]

என்னும் தொல்காப்பிய நூற்பாவே சான்று பகரும். இந்நூற்பாவிற்கு விளக்கங்கூறும் பேராசிரியர் உரைநடையினைப் பாட்டுகளுக்கு இடையே வருகின்ற குறிப்புகள் எனவும், நூற்பாக்களுக்கு எழுதப்படும் விளக்கவுரைகள் எனவும், பொய்யானதாக அன்றி மெய்ம்மையை எடுத்துக் கூறும் உரை எனவும், நகைச்சுவை பொருந்திய உரைநடை எனவும் நான்காக எடுத்துக் கூறுவார். தொல்காப்பியத்திற்கு முன்னர் இருந்த நூல்கள் கிடைக்காத காரணத்தினால் பழங்கால உரைநடையைப் பற்றி அறிவதற்கு எதுவும் கிடைக்கவில்லை.

'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனச் சிலப்பதிகாரத்தைக் கூறுவர். இதில் காணப்படும் உரைநடைச் செறிவும், ஓசை நயமும் கொண்டு செய்யுள் போலவே அமைந்துள்ளது. பெருந்தேவனார் பாடிய பாரதமும், தகடூர் யாத்திரை என்ற ஒரு பெருநூலும் உரைநடை கலந்த செய்யுள்களால் ஆகியவை என்பதை உரையாசிரியர் கூற்றால் அறிய முடிகிறது. இறையனார் களவியல் என்ற அகப்பொருள் இலக்கண நூலுக்கு எழுதப்பட்ட உரையே முதன்முதலில் எழுந்த உரை எனலாம். இதை எழுதியவர் மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்பர்.

உரைநடை விளக்கம்

உரைநடை என்பது பொருளின் தன்மையை உள்ளது உள்ளவாறு உரைப்பதாகும். உலக வழக்காகப் பேசப்படுவதும் எழுதப்படுவதும் உரைநடை ஆகும். வசனம் என்ற வடமொழிச் சொல்லே, அண்மைக்காலத்தில் தமிழில் உரைநடையைக் குறிப்பதாய் அமைந்தது. அதுவே பெருவழக்காகவும் நிலவியது. உரைக்கு இலக்கணம் கூறவந்த தொல்காப்பியர்,

"தொன்மை தானே,
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" [6]

எனக் கூறியுள்ளார். எனவே, உரைநடை என்பது பாட்டைவிடப் பழமையானது என்பது நன்கு விளங்கும். உரைநடை என்பது இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில், ஆழ்ந்த கருத்தோடு, பாட்டுக்குள்ள சந்தச் சேர்க்கை இன்றியே நல்ல ஓசை நயம் உடையதாகி அமையும். மேலும் ஒளிவு மறைவு இன்றி உள்ளதை உள்ளபடி உரையிட்டுக் காட்டும். கருத்துக்கும், காரணத்துக்கும் பொருத்தமானதாக ஒன்றைப் பற்றியோ, ஒருவரைப் பற்றியோ, விளக்கி உரைப்பது உரைநடை எனப்படுகிறது.

தமிழின் முற்கால உரைநடை

தமிழிலே உரைநடை தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. ஒரு மொழியில் செய்யுள் தோன்றும்போது பேச்சு வழக்கிலுள்ள மொழிநடையினையும் ஓசைப் பண்பினையும் ஒட்டியே தோன்றுகிறது. அந்த வகையில் சங்க இலக்கியத்தின் அகவற்பாக்கள் இம்முறையில் தோன்றின எனலாம். சங்க இலக்கியச் செய்யுளோசை, பேச்சோசை போன்று எதுகை, மோனை முதலான தொடை அமைப்பின்றி இருப்பது இதற்குச் சான்று ஆகும். உரைநடைக்குச் சீர் அடி என்ற வரையறை கொடுத்தது போலச் செய்யுள்கள் அமைந்துள்ளன. இது படிப்படியாகச் செறிவும் ஒழுங்கும் பெற்றுவந்த தன்மையை, சங்கம் மருவிய கால இலக்கியங்களான சிலப்பதிகாரம் முதலான காப்பியங்களில் காணலாம். சிலப்பதிகாரத்தில் உரை கலந்து வருவதையும் காணலாம். அடுத்து உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்கது இறையனார் அகப்பொருளுக்கு எழுந்த உரையான களவியலுரையாகும்.[7] தமிழ் உரைநடை வளர்ச்சியை உணர்த்துவதாகக் களவியலுரை அமைந்துள்ளது.

இடைக்கால உரைநடை

பத்தாம் நூற்றாண்டு முதல் உரையாசிரியர்களின் தேவையினால் தமிழ் உரைநடை வளர்ச்சியுற்றது. உரைநடை தெளிவாகவும் தருக்கமுறையாகவும் வளரக்கூடிய வகையில் செய்யுள் வடிவிலானவற்றுக்கு உரை எழுதி விளக்கும் சூழல் உருவானது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார் முதலான உரையாசிரியர்கள் உரைநடையை வளர்த்தனர்.

பிற்கால உரைநடை

உரையாசிரியர்களின் உரைநடைப்பணியின் தொடர்ச்சியை நாயக்கர் காலத்திலும் ஐரோப்பியர் காலத்திலும் காணமுடிகிறது. ஐரோப்பியர் தொடங்கி வைத்த நடை தமிழிற்குப் புதிதானது. வைத்தியநாத தேசிகர், சுப்பிரமணிய தேசிகர், தத்துவபோதக சுவாமிகள், வீரமா முனிவர் முதலானோர் உரைநடை வளர்ச்சிக்கு உழைத்தனர்.

ஐரோப்பியரின் உரைகள்

ஐரோப்பியர் காலத்தில் இயற்கையான ஒரு மொழிநடையாக உரைநடை உருவானது. இதற்கு அடிகோலியவர்கள் ஐரோப்பியராவர். அக்காலகட்டத்தில் ஐரோப்பியர் வளர்த்த உரைநடையில் அனைவர்க்கும் புரிந்த இயற்கை நடையும் இருந்தது. பேச்சுத் தமிழைக் கொண்டே, தமிழுக்கு ஒருவித புதிய நடையினைப் படைத்தவர் ஐரோப்பிய அறிஞர்களே ஆவர். இவர்களது எழுதுபொருள், அச்சுப் பொறிகளின் வரவால் உரைநடை விரைந்து பரவி வளர்ந்தது.

இந்திய மொழிகளிலேயே உரைநடை நூல் முதன் முதல் தோன்றியது தமிழ்மொழியில்தான். அம்பலக்காட்டில் 1577-இல் வெளியான 'கிருஸ்துவோபதேசம்' என்ற நூலே தமிழில் அச்சான முதல் நூல் என்பார் கால்டுவெல். இப்போது அந்நூல் கிடைக்கவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடை

அச்சு இயந்திரங்களின் உதவியால் பல உரைநடை நூல்கள் வெளிவர ஆரம்பித்தன. இக்கால கட்டத்தில் பல நூல்களை அச்சிட்ட பெருமை காலின் மெக்கன்சி, ஜான் மெர்டாக் என்பவர்களைச் சாரும். இவர்கள் இருவரும் புராணம், வாழ்க்கை வரலாறு, நாடகம், தத்துவம், வானநூல், மருத்துவம், சமயம், சட்டம், அறிவியல், மொழியியல், இதழில் போன்ற பல துறை நூல்களைத் தொகுத்து முன்னுரையோடு அச்சிட்டு வெளியிட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடை ஓங்கி வளர்ந்தது. விரைந்து சிறந்தது. இதற்குரிய காரணங்கள்: நாடெங்கும் அச்சகங்கள் தோன்றியதும் கிறித்தவ மதம் பரப்ப எண்ணற்ற நூல்களை மிஷனரிகள் வெளியிட்டதுமேயாம். இதுகண்டு விழிப்புற்ற இந்துக்கள் தங்கள் இதிகாச புராணங்களை வசனங்களாக வடிக்கத் தொடங்கினர். சென்னை கல்விச் சங்கம் தோன்றிப் பாட நூல்களையும், மொழிபெயர்ப்புக்களையும் வெளியிட்டது. மேலை நாட்டுக் கல்வியின் பயனாக, விஞ்ஞான, மெய்ஞ்ஞான உளவியல் கருத்துகளை வெளியிடும் வகையில் உரைநடை ஓங்கியது. கலைகளும், கருத்துகளும் அறிவாக்கமும் பெருகப் பெருக அவற்றிற்கு ஈடுகொடுக்கும் வகையில் உரைநடை விரிந்தது. உள்ள உணர்வுகளைப் பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தும் ஆர்வம் கொண்டு உரைநடையினைப் பயன்படுத்தியதால் பல்வகை நடைகள் பிறந்தன. தத்தம் புலமையைக் காட்டித் தனித்துவம் காட்ட முனைந்தமையாலும் நடையில் மாறுபாடுகள் மலர்ந்தன.

சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை போன்ற புதிய இலக்கிய வடிவத்தால் தமிழன்னையைப் பலர் அழகுபடுத்தினர். எண்ணற்ற ஆசிரியர்கள் உரைநடை வாயிலாகப் பல நூல்களை எழுதி வெளியிட்டனர்.

தமிழ் உரைநடை வளர்ச்சியும் கிறித்துவர்களும்

தமிழில் உரைநடையானது கல்வெட்டுகள், சாசனங்கள், பண்டை இலக்கிய – இலக்கணங்களுக்கு எழுதப்பட்ட உரைகள் போன்றவை உரைநடையில் கிறித்துவர்கள் வருகைக்கு முன்பே அமைந்திருந்தன. ஆயினும், தற்கால உரைநடையின் (Modern Prose) தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஐரோப்பாவிலிருந்து வந்த கிறித்துவர்களும், இந்தியக் கிறித்துவர்களும் முன்னோடிகளாக அமைந்தனர் எனில் மிகையன்று.

உரைநடை வளர்ச்சிக்கு உதவியாக அச்சு இயந்திரங்களைக் கிறித்துவர்கள் அறிமுகப்படுத்தினர்; அகராதிகளைப் படைத்தனர்; இதழ்களையும் வெளியிட்டனர். இவை உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. பேச்சுத் தமிழைத் தரப்படுத்தி, எழுதும் தமிழாகச் சீர்மைப்படுத்தியவர்களும் கிறித்தவர்களே ஆவர். சொற்றொடர்களைச் சங்கிலித் தொடர்போல் எழுதி வந்த வழக்கை மாற்றி, சந்தி பிரித்து, பத்திபத்தியாக அமைத்து எழுதியது கிறித்துவர்களின் தனிச்சிறப்பாகும்.

கிறித்துவ உரைநடை முன்னோடிகள்

பேச்சுத் தமிழுக்கு உயிரூட்டி, பேச்சுத் தமிழுக்கும் செந்தமிழுக்கும் இடைப்பட்ட ஒரு நடையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு கிறித்துவர்கள் தமிழை வளப்படுத்தினர். இவ்வகையில் ஹென்றிக்ஸ் அடிகள், தத்துவப் போதகர் வீரமாமுனிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

ஹென்றிக்ஸ் அடிகள் (Henriques 1520-1600)

தொடக்கக்காலக் கிறித்துவ உரைநடை நூல்கள் பெரும்பாலும் சமயம் சார்ந்தவையாகவே இருந்தன. அவை ஐரோப்பிய மொழிகளிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டவை ஆகும். *'தம்பிரான் வணக்கம்'* என்னும் நூல் அச்சில் வெளிவந்த முதல் தமிழ் நூலாகும். இதனை ஹென்றிக்ஸ் அடிகள் 1578இல் வெளியிட்டார். இது கிறித்துவ வழிபாட்டு நூலாகும். இவரது நடை எளிமையானது; மக்கள் பேசியும் எழுதியும் வந்த மொழியை அடிப்படையாகக் கொண்டது.

தத்துவப் போதகர்(1577-1656)

இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் இராபர்ட் டி நொபிலி (Robert de Nobili). இவர் சமயம் பரப்பத் தமிழகம் வந்தவர்; இருபதிற்கும் மேற்பட்ட உரைநடை நூல்களைத் தமிழில் எழுதியுள்ளார்; 'தமிழ் உரைநடையின் தந்தை' எனவும் குறிப்பிடப்படுகிறார்; 'ஞானோபதேசகாண்டம்', 'ஆத்தும நிர்ணயம்', 'புனர்ஜென்ம ஆட்சேபம்', 'நித்திய சீவன சல்லாபம்', 'தேவ மாதா சரித்திரம்' முதலிய நூல்கள் குறிப்பித்தக்கவை ஆகும்.

வீரமாமுனிவர் (1680-1742)

பழந்தமிழ் உரைநடைக்கும் தற்கால உரைநடைக்கும் பாலமாக அமைந்தவர் வீரமா முனிவர் ஆவார். இவரது இயற்பெயர் ஜோசப் பெஸ்கி (Joseph Besche). இலக்கணம், அகராதி, எழுத்துச் சீர்திருத்தம் போன்ற துறைகளில் இவர் செய்த பணிகள் உரைநடை வளர்ச்சிக்குப் பெருமளவில் துணை செய்தன எனில் மிகையன்று. கற்றோருக்குச் 'செந்தமிழ்' நடையிலும், பாமரருக்குப் பேச்சுத் தமிழை அடிப்படையாகக் கொண்ட 'கொடுந்தமிழ்' நடையிலும் இவர் எழுதினார்.

செந்தமிழ் நடைக்கு எடுத்துக்காட்டாக 'வாமன் சரித்திரம்' என்ற கதையைக் கூறலாம். கொடுந்தமிழுக்கு எடுத்துக்காட்டாக, பரமார்த்த குரு என்னும் கதையைக் காட்டலாம். தற்காலப் புனைகதை இலக்கியத்திற்கு முன்னோடியாக இக்கதைக் கருதப்படுகிறது. அக்கால மடாதிபதிகளின் முட்டாள்தனத்தையும், அவர்களது சீடர்களின் அறியாமையினையும் நகைச்சுவையாக, இக்கதையில் அவர் படைத்துள்ளார். வீரமாமுனிவரைப் பின்பற்றிப் பலரும் தமிழில் உரைநடை நூல்கள் எழுதினர்.

விவிலிய மொழிபெயர்ப்புகள்

கிறித்துவர்களின் மொழிபெயர்ப்புத் தமிழ் உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுள்ளது. அதில் விவிலியம் (Bible) தனியிடம் பெறுகின்றது. முதன்முதலாகச் சீகன்பால்கு (1683-1719) விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். தரங்கம்பாடியில் அச்சுக் கூடமும் நிறுவினார். இவரது நடை பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டது. இவருக்குப் பின் பெப்ரிஷியஸ் (1711-1796) என்பவர் விவிலியத்தை முழுமையாக மொழிபெயர்த்து வெளியிட்டார். கற்றோருக்கும் பாமரருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் இவரது நடை அமைந்திருந்தது.

இரேனியஸ் (1790-1838), ஹென்றி பவர் (1813-1885), ஆகியோர் செய்த மொழிபெயர்ப்புகளும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை ஆகும். இலங்கையில் ஆறுமுகநாவலர் துணையோடு பெர்சிவெல் என்பவர் செய்த மொழிபெயர்ப்பு சிறப்புடையதாகும். கால்டுவெல், ஜி.யு.போப் போன்றோரும் தமிழில் உரைநடை நூல்கள் எழுதியுள்ளனர். பேச்சு வழக்கிற்கும் செந்தமிழ் வழக்கிற்கும் இடைப்பட்ட ஒரு நடையைப் பின்பற்றுவது சரி என்று விவிலிய மொழிபெயர்ப்பாளர்கள் நினைத்தனர்; கூடிய வரை சமஸ்கிருதச் சொற்களைத் தவிர்ப்பது எனவும் முடிவு செய்தனர். இது தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

மொழிநடை

மொழி மனிதன் படைத்த கருவி, எனினும் மொழியானது எல்லா மனிதருக்கும் ஒரே மாதிரி அமைவது இல்லை. இதனை மொழியின் சிறப்பு என்று கூடச் சொல்லலாம். காலம் மாற மாற மக்களின் பண்பாடும் நாகரிகமும் மாறுகின்றன. அப்போது அவர்களுக்குப் புதுபுதுச் சொற்கள் தேவைப் படுகின்றன. காலத்திற்கேற்பப் புதுச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறே மொழியின் நடையும் காலத்திற்கேற்ப மாறிக்கொண்டே வரும்.

மனிதனைத் தனித்துக் காட்டுவது மொழிநடைதான். அவரவருடைய சிந்தனை வேகத்திற்கேற்பச் சொற்கள் அமையும்போது அது மொழிநடையாக உருவம் பெறுகிறது. எழுத்தாளர்கள் அனைவரையும் இனம்பிரித்துக் காணுவதற்கு மொழிநடைதான் துணை புரிகிறது.

"ஒருவரின் மொழிநடை போன்றே இன்னொருவரின் மொழி நடையும் அமைவதில்லை. இன்றைய திறனாய்வுலகத்தில் இலக்கியப் படைப்பாளிகளை இனங்கண்டு கொள்வதற்குரிய உத்தியாகவே நடையியல் மதிப்பீடுகள் அமைகின்றன"[8] என்கிறார் இ.சுந்தரமூர்த்தி. ஒரு நல்ல படைப்பாளரின் நடையினைச் சிறுசிறு சொற்களாலான தொடரமைப்பு, தனிச் சொற்களாட்சி, குறியீடுகள் மிகுதியாக ஆளப்படல், கருத்துத் தெளிவு, எளிமை, முன்னோர் மொழி போற்றல், கிளைக்கதை கூறல், பிறமொழிச் சொற்களை எடுத்தாளும் பாங்கு, வினாக்களை அடுக்கி வரல், புதிய சொல்லாக்கம் போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டிருத்தலைக் கொண்டு அறியலாம்.

நடை என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி இருபத்திரண்டு பொருளைத் தருகிறது[9] இவற்றுள் பாஷையின் போக்கு, வாசிப்பினோட்டம் என்னும் இரண்டு பொருள்கள் மட்டுமே மொழிநடையோடு தொடர்பு உடையவனவாகத் தென்படுகின்றன.

ஓர் எழுத்தாளன் தான் படைக்கின்ற இலக்கியம் மக்கள் மனதை எட்டிப்பிடிக்கின்ற வகையில் அமைந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறான். எனவே, தான் கூறுகின்ற கருத்தை மக்களுடைய உள்ளத்தில் பதிய வைப்பதற்கு அவன் தன்னுடைய இலக்கியத்தில் சில எளிய வடிவங்களை மேற்கொள்கிறான். அப்படிப்பட்ட வடிவங்களுள், உணர்த்தும் முறைகளுள் ஒன்றே நடை ஆகும்.

சாமுவேல் பவுல் ஐயரின் உரைநடை

தமிழ் உரைநடை வரலாறும் விவிலிய மொழிபெயர்ப்பு வரலாறும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. விவிலிய மொழிபெயர்ப்புகளில் காலந்தோறும் பலவகையான நடையியல் மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன.

எளிய நடை

எளிய நடை என்பது படித்தவுடன் அதன் அர்த்தம் புரிந்துகொள்ளும்படி அமைவதாகும், இது நீண்ட நெடிய தொடராக அல்லாது சிறுசிறு வாக்கியங்களாகவும் அமைவது ஆகும்.

"வஸ்திரத்தைக் கழற்றினார்.
அதைத் தூரத்தில் சுருட்டி வைத்தார்.
ஒரு சீலையை எடுத்தார்.
அதை அரையிலே கட்டிக்கொண்டார்.
ஒரு பாத்திரத்தைத் தேடி எடுத்தார்.
தண்ணீர்க் குடத்தண்டைப் போனார்.
தண்ணீர் வார்த்தார்." [10]

என ஆத்தும நேசரின் அங்கமகத்துவம் என்னும் நூலில் விளக்குகிறார்.

இவ்வாறான எளிய நடை சாமுவேல் பவுல் ஐயரின் படைப்புகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம், உரைநடை அதிகப் பக்கங்களைக் கொண்டுள்ளதால் எளிய மொழிநடை இயல்பாகவே அமைய வாய்ப்பிருக்கிறது.

"நோயாளிக்கு வைத்தியன் வேண்டும்
நோயற்றோனுக்கு அவன் வேண்டாம்,
நான் நீதிமான்களை அழைக்க வரவில்லை
நான் பாவிகளை மனந்திருப்ப வந்தேன்" [11]

"ஆவியே நாலு காற்று
திசையிலுமி ருந்து
வந்து லர்ந்த எலும்பு
உயிரடையச் செய்யும்." [12]

"ஒன்றும் ஒன்றும் இரண்டென்றே
உபாத்தி மாரும் சொன்னாரே
ஒன்றும் ஒன்றும் ஒன்றென்றே
அன்பின் சட்டம் சொல்லிற்றே" [13]

"பாருங்கள் பாலகனை
சேருங்கள் பாலகனை
தாழுங்கள் பாலகன்முன்
பணிவாக." [14]

என்றவாறு அவருடைய நூல்களில் பாமர மக்களும் பாடும் வண்ணமாக எளிய நடையில் பாடல்கள் அமைந்துள்ளன.

தூய தமிழ் நடை

பிற மொழிக் கலப்பின்றித் தமிழ்ச்சொற்களை மட்டும் கையாண்டு படைக்கப்படும் படைப்புகளின் நடை அமைப்பைத் 'தூய தமிழ் நடை' எனலாம்.

> ***"தமது திருவசனமாகிய திவ்விய உமிழ்நீரை அவர் எனக்குத் தந்திருக்கிறதோடு தாமும் தமது ஆவியின் மூலமாய் என் இருதயக் கதவைத் தட்டி, நீ குருடனாய் இருக்கிறாய். நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களில் கலிக்கம் போடட்டுமா"*** [15] **என்று கேட்கிறார்.**

என்று வரும் ஆசிரியரின் உரைநடையின் ஒரு பகுதி தூய தமிழ் நடைக்குச் சான்றாகின்றது. உரைநடையில் ஆசிரியரே தமது கருத்துக்களை எடுத்துரைத்துச் செல்லும்போது இவ்வாறான தூய நடை பொதுவாகவே அமைவது உண்டு.

விளக்க நடை

கதையில் சொல்லப்போகும் மையக் கருத்தை முதன்மைப்படுத்தி எளிய சொற்களைக் கொண்டு விளக்க முற்படும் நடையமைப்பை 'விளக்க நடை' எனலாம். கதைகளில் மையக் கருத்தை விளக்க முற்படும்போது அவ்வாறான மொழிநடை பயின்று வரக் காணலாம். யூதாஸ்காரியோத்து இயேசுவைக் காட்டிக் கொடுத்த தன்மையைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்.

கலிலேயன் அல்லாத இவன் ஒருவன் மட்டும் 12 சீடர்களில் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவன் குழுவின் செலவுக்காகப் பணப்பை வைத்திருந்தான். அவனுக்கு இயேசுவைக் காட்டிக்கொடுத்த பாவத்தை உணர்ந்துகொள்ள முடிந்தது. நம் நம்பிக்கையில்லாமை, மரணத்தைத் தேர்ந்தெடுக்கலாம். அல்லது நாம் செய்த குற்றத்திற்காக வருந்துதல், மன்னிப்பு, நம்பிக்கை, நிலையான வாழ்வு இவைகளைத் தேர்ந்தெடுக்கலாம். இயேசுவின் இலவசமான பரிசுகளை ஏற்றுக்கொள்ள அவன் நமக்கு ஞாபகப்படுத்துகிறான். அல்லது காட்டிக்கொடுப்பவனாக இருப்பது, மோசமான நிலைமையை அனுபவிப்பது"[16] என்று வருவது விளக்க நடைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

> ***"... ஒரு சீடன் கால்களைக் கழுவ இழுத்தார்.***
> ***அவன் கால்களைக் கழுவினார்.***
> ***கழுவினபின் துடைத்தார்.***
> ***பின்பு இரண்டாம் சீடன் கால்களைக் கழுவினார்.***
> ***கழுவினபின் துடைத்தார்.***
> ***இப்படியே பன்னிருவரையும் கழுவினார்.***
> ***பன்னிருவரையும் துடைத்தார்."*** [17]

என்றவாறு ஆத்தும நேசரின் அங்கமகத்துவம் நூலில் விளக்கநடை பயன்படுத்தப்பட்டுள்ளது.

வட்டார நடை

மக்கள் தாங்கள் வாழும் வட்டாரத்தின் வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்பவும், செய்யும் தொழில்களுக்கு ஏற்பவும், பழக்கவழக்கங்களுக்கு ஏற்பவும் சொற்களை அமைத்துக்கொண்டு அச்சொற்களின் உச்சரிப்பு அளவைக் குறைத்தும், நீட்டியும், கொச்சையாகவும் பயன்படுத்தும் சொற்களையும் உரைநடையில் காணமுடிகிறது. இத்தகைய நடை அமைப்பை 'வட்டார நடை' எனலாம்.

"இவன் மாமிசநேசபுரி என்னும் ஒரு பெரிய பட்டணத்தில் உள்ளவன். கிறிஸ்தியானுடைய ஊருக்கும் இதற்கும் மெத்தவும் சமீபந்தான்"[18] என்று வரும் நடையமைப்பு வட்டார மொழிநடை அமைப்பைக் கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் மாவட்டங்களுக்கு ஏற்ப தமிழ்மொழி நடையே; உச்சரிப்பே மாற்றம் கொண்டுள்ளதைக் காணலாம்.

கடித நடை

கடிதம், நாட்குறிப்பு இவற்றின் வழி படைப்பாளன் கடிதம் எழுதுவது போன்று நூல்களில் அமைவதுண்டு. தொலைவில் இருப்பவர்களிடம் தன் கருத்தை வெளிப்படுத்தும் விதமாக இந்த நடை அமையும். வேரில் பழுத்த பலாவானது அலுவலகத்தைக் கதைக் களமாகக் கொண்டுள்ளதால் ஏராளமாகக் கடிதப் பரிமாற்றங்கள் நடந்துள்ளன.

இவர் 1871ஆம் வருடத் துவக்கத்தில் குருப்பட்டாபிஷேகத்துக்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனை,

"ஒரு குடத்தை உயிரில் வைத்துப் பாதுகாக்கத் தன் தானத்தை விட்டுத் தூக்குவதுண்டு. அல்லது அது வேண்டாம் என்று உடைத்துத்தள்ள தூக்குவதுமூண்டு. என் இரட்சகரே நீர் மண்பாண்டமாகிய என்னை இக்காலத்தில் ஒரு சந்தோஷமான வார்த்தையால் என் ஆதி ஸ்தாபனத்தை விட்டுத் தூக்குகிறீர். திடீர் என்று போட்டு உடைக்கவோ அல்லது உமது சபையென்னும் உயர்ந்த உறியில் ஏற்றி வைக்கவோ நான் அறியேன். ஆண்டவரே என் பாவங்களை உமக்கு முன்பாக அறிக்கையிட்டு என்னை உடையாமல் காக்க மன்றாடுகிறேன்"[19] என்பதும்,

"நான் குருப்பட்டத்துக்குத் தகுந்தவனா? என் வயது சொற்பம், என் படிப்பு கொஞ்சம், அனுபவம் அற்பம். பின்னை ஏன் என்னைத் தெரிந்து கொள்ளுகிறீர் தெரிந்துகொண்டது நிஜமானால் என் குறைவை முந்தி நிறைவாக்கும்"[20] என்று 1871ஆம் வருட ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி எழுதிய தினசரிக் குறிப்பில் மேற்கண்டவாறு எழுதி வைத்துள்ளதும் கடித நடைக்குச் சான்றாக இது அமைகின்றது.

வருணனை நடை

நாவலில் ஆசிரியர் விரும்பும் அளவு வருணனை இடம்பெறும். கதை

மாந்தர்களின் தோற்றத்தையும், இயற்கைக் காட்சியையும், குறிப்பிட்ட ஒரு இடத்தையும் நிகழ்ச்சியையும் வருணித்தும் விவரித்தும் எழுதுவது வருணனை எனலாம்.

"புலன்களால் உணர்வனவற்றை அல்லது புலன்களின் வழியாக உணரும் புதுக்காட்சிகளைச் சொற்களால் மொழிபெயர்த்துக் காட்டுவதே வருணனை ஆகும். எழுதுவார் ஒரு பொருளையோ, மனிதரையோ, இடத்தையோ, வருணிக்கும் நிலையில் அவ்வகை உரைநடையை வருணனை உரைநடை என அறிஞர்கள் பாகுபாடு செய்வர்"[21] என்பார் மா. இராமலிங்கம். நாவலில் பல இடங்களிலும் சூழ்நிலைகளிலும் வருணனை நடை இயல்பாகவே பயின்று வரும். அவ்வாறே வலிந்து புகுத்தாத வருணனைகள் மோட்சப் பிரயாணத்தில் காணப்படுகின்றன.

"இடுக்கமான பாதை மலையேறும் கடினமான பாதையாக இருப்பதைக் கண்ட சம்பிரதாயன், வெளி வேசக்காரன் இருவரும் மற்ற இரண்டு பாதைகளிலும் தனித்தனியே பிரிந்து சென்றார்கள். இடதுபுறம் அபாயப் பாதையில் சென்றவன் அடர்ந்த காட்டினுள் வழிதப்பி அலைந்தான்! வலதுபுறம் அழிவின் பாதையில் சென்றவன் செங்குத்தான பாறையிலிருந்து விழுந்து உயிர் துறந்தான்! இடுக்கமான பாதை வழியே மிகக் கடினத்துடன் பாதையேறத் துவங்கினான் கிறிஸ்தியான். போகப்போகப் பாதை செங்குத்தானபடியால் தவழ்ந்தபடி ஏற நேரிட்டது"[22] என்ற வருணனைப் பகுதியானது கிறிஸ்தியான் அப்பொல்லியனைச் சந்திக்கும்போதும் தாழ்மைப் பள்ளத்தில் பயணம் மேற்கொள்ளும்போதும் வருணிக்கப்படுகிறது.

"உற்சாகத்தோடு கச்சை, மார்க்கவசம், தலைச்சீரா, காலில் போடும் பாதரட்சை இவற்றை அணிந்துகொண்டான் கிறிஸ்தியான். பட்டயத்தையும், கேடகத்தையும் கையில் பிடித்துக்கொண்டான். இவ்வாறு கவசம் அணிந்தவனாக அவர்களுடன் புறப்பட்டு, மீண்டும் வாசலண்டை வந்தான். ஐயா, யாராவது இந்த வழியே சென்றார்களா? என்று காவல்காரனிடம் கேட்டான்"[23] என்று வரும் வருணனைப் பகுதி கிறிஸ்தியான் சண்டை மேற்கொள்ளும்போது ஏற்றுக்கொண்ட ஆயத்தமான சூழ்நிலையை விவரிப்பதாக அமைந்துள்ளது.

"இமயமலையேறி
கன்னிமுனை பாரும்
வங்காளக்கடல் நீந்தி
மேற்குக்கடல் வாரும்
இந்துமாந்தர் யாவரும்
பேயின் சங்கிலியினால்
வதைகிறார்கள் பாரும்
இரட்சிப்பாரில்லாமல்." [24]

"குருசில் தலை சாய்ந்தே
மாண்ட தேவமைந்தரே,

சாய்ந்த தோளில் சாய்கிறேன்
இரட்சகா தஞ்சம், தஞ்சம்" [25]

உரையாடல் நடை

உரையாடல் இல்லாத கதை இலக்கியங்களே இல்லை என்றே சொல்லிவிடலாம். பாத்திரப் படைப்புகள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வது போன்ற நடையமைப்பு எதார்த்தமாகவே கதைகளில் இடம்பெறும். அதை வலிந்து உட்புகுத்த வேண்டிய தேவையில்லை எனலாம். கதைப் பாத்திரத்தின் பண்பை விளக்குவதற்கோ, கதையின் நிகழ்ச்சியைப் புலப்படுத்துவதற்கோ உரையாடல்கள் அமைதல் உண்டு[26] என்பார் டாக்டர் மு. வரதராசனார். "மென்மையான உணர்வுகளை நுட்பமாக உணர்த்துவதில் உரையாடலுக்கு ஈடு இணையே கிடையாது"[27] என்பார் டாக்டர் இரா. தண்டாயுதம்.

புனைகதையுள் வரும் பாத்திரங்களைப் பார்க்கும்போது அவற்றின் சிறப்பிற்கு அடித்தளமாக அமைவது உள்ளத்தைத் தொடும் உரையாடல் என்றும் அவ்வாறு அமையும் உரையாடல்கள் பாத்திரங்களின் பண்பை விளக்குவதோடு அன்றிக் கதை நடக்கவும் உதவியாக இருக்க வேண்டும் என்றும் கருதுவதுண்டு. எனவே, உரையாடல் பாத்திரப் பண்பையும், கதையின் நிகழ்ச்சியையும், மென்மையான உணர்வுகளையும், இயக்கத்தையும் புலப்படுத்தி நடத்திச் செல்வது புலனாகிறது.

கதை இலக்கியங்களில் ஆசிரியர் தாமே கதை சொல்வது போலவும், கதை மாந்தர்களே உரையாடிக் கதையை நகர்த்துவது போலவும் படைக்கிறார்கள். உரையாடல்கள் கதைக்குப் பக்கபலமாகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவும் அமைகின்றன.

"உரையாடல்... பாத்திரங்களினுடைய மனம், பண்பு, குறிக்கோள், உணர்ச்சிகள் முதலியவற்றை நமக்கு எடுத்துக்காட்டும் கண்ணாடி. ஆசிரியன் உரையாடலை அமைக்கும்போது பேசுபவன், பேசும் சந்தர்ப்பம், வெளிப்படுத்தப்படும் உணர்ச்சி, நிலைக்களம், சூழ்நிலை முதலியவற்றை மனத்துட்கொண்டுதான் அமைத்தல் வேண்டும்"[28] என்று உரையாடல் பயில வேண்டியச் சூழலைச் சுட்டிக்காட்டுவார் அ.ச.ஞானசம்பந்தன்.

"ஏன் ஐயா, என்னை இழுத்தீர்கள்? என்று வியப்புடன் கேட்டான் கிறிஸ்தியான். இந்த வாசலுக்குச் சற்றுத் தொலைவில்தான் சாத்தானின் கோட்டை இருக்கிறது. அவன் இங்கே நுழைபவர்களைக் கண்காணித்து, அம்பெய்து கொல்லத் தயாராக இருக்கிறான். சிலர் அவ்வாறு அவன் அம்பால் குத்தப்பட்டு இந்த வாசலினுள் நுழையுமுன்பே இறந்து போயிருக்கிறார்கள். அதனால்தான் உன்னை அவசரமாக உள்ளே இழுத்தேன் என்று விளக்கிய தயாளன், அதுசரி உனக்கு இந்த வழியைக் காட்டியது யார்? என்று கேட்டார்"[29] சித்தரித்துக்காட்டுவது உரையாடல் நடைக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

'கிறி : அப்படி வழியை விட்டுத் திரும்பி வந்து பார்க்கும்படியான அதிசயம் என்ன இருக்கிறது?

தேமா : இங்கே ஒரு வெள்ளிக்கேணி இருக்கிறது.

திடநம்பி : அப்படியானால் போய்ப் பார்ப்போம்.

கிறி : நான் வரமாட்டேன். அந்த இடத்தைக் குறித்து நான் முன்னமே கேள்விப்பட்டிருக்கிறேன்.'[30]

என வரும் உரையாடலும் மோட்ச பிரயாணத்தில் முக்கிய உரையாடலாக அடையாளம் காணமுடிகிறது. காரணம், கிறிஸ்தியான் அந்தக் கிணற்றுப் பக்கம் சென்றிருந்தால் இறந்துபட்டிருப்பான். மோட்சத்தை அடைந்திருக்க மாட்டான்.

'பிலாத்து : 'நீ யூதருடைய இராஜாவா?'

இயேசு : 'நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ அல்லது மற்றவர்கள் என்னைக் குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ?'

பிலாத்து : 'நான் யூதனா! உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். என்ன செய்தாய்?'

இயேசு : 'என் இராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதல்ல, என் இராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடி என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல.'

பிலாத்து : 'அப்படியானால் நீ இராஜாவோ?'

இயேசு : 'நீர் சொல்லுகிறபடி இராஜாதான்: சத்தியத்தைக் குறித்து சாட்சிகொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்.'[31]

அடுக்குத்தொடர்

ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள் இரண்டுமுறை அடுக்கி வருவது அடுக்குத் தொடராகும். ஒரு கருத்தை அழுத்திக் கூறும்போதும், வலியுறுத்திச் சொல்லும்போதும் படைப்பாளர்கள் அடுக்குத் தொடரைப் பயன்படுத்துவர்.

'வாரும் வாரும் புண்ணிய குருவே!'[32]
'என்ன? என்ன? இணங்கனே!'[33]
'போடா. போடா இனி நீ பிழைத்திருக்கப்பாத்திரன் அல்ல.'[34]
'நாஸ்திகன் விழுந்து விழுந்து சிரித்தான்.'[35]

என்பன போன்று வரும் அடுக்குத் தொடர்ச் சொற்கள் மிகுதியாகவே மொழிநடையில் பயின்று வந்து சிறப்பிடம் பெறுகின்றன.

ஓசை நயம்

உள்ளத்து உணர்ச்சிகளை கவிதையாக்கும்போது ஓசை நயத்துடன் அவைகள் உருக்கொண்டுள்ளதைச் சாமுவேல் பவுலிடம் காணமுடிகிறது.

"வாருங்கள் வாருங்கள்
வந்தெங்களைக் கேளுங்கள்
பாருங்கள் பாருங்கள்
பட்டபாட்டைப் பாருங்கள்"[36]

என்று துள்ளிவரும் சந்தத்தில் தமது தனித் திறனை வெளிப்படுத்துகிறார்.

"மா இன்ப நதிதான்
ஓடுதே பார்!
பளிங்கொளி போலதான்
தோன்றுதே பார்
ராஜபாதையாக
நடப்பவருக்காக
மா இன்ப நதிதான்
ஓடுதே பார்!"[37]

என அழகிய இன்னிசை சந்தச் சிறப்பையும், அவரின் ஆற்றலையும் காட்டுகிறது.

"ஓர் இலக்கியப் படைப்பாளன் வழங்க விரும்பும் செய்தி அல்லது அடிக்கருத்து தவிர, ஏனையவை அனைத்தும் உத்தி முறையில் உருவாக்கப்பட்டவையே"[38] என்பதால் சாமுவேல் பவுலின் ஓசைநயக் கவிதைகள் சிறந்த உத்திமுறைகளைக் கொண்ட உருவகமாகக் காணப்படுகின்றன.

கவிதைக்கு உணர்ச்சி, கருத்து, கற்பனை, வடிவம் என்ற நான்கும் இன்றியமையாதவை ஆகும். உணர்ச்சி, கருத்து இரண்டும் கவிதையில் வலியுறுத்தப்படுகின்ற பொருளொடு தொடர்புடையன. வடிவம் கவிதையின் புறவமைப்பைப் பற்றியது. கவிதையில் கற்பனையின் பங்கு இன்றியமையாதது. அது கவிதையின் பாடுபொருள், வெளியீட்டு முறை ஆகிய இரண்டோடும் தொடர்புடையது. அணிகளைப் படைப்பதற்குக் கற்பனை அடிப்படையாக அமைகிறது. கவிதையில் அணிகள் இயல்பாக அமைதலையே அறிஞர்கள் விரும்புவர்; அதுவே முறையென்றும் சுட்டுவர்.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட் கிடனாக வுணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"[39]

என்னும் நன்னூல் நூற்பா, கவிதைகள் அணிகளைப் பெற்றிருக்க வேண்டும் எனச் சுட்டுகின்றது. எனவே உரைநடைகளின் இடையே சாமுவேல் பவுல்

படைத்தளித்துள்ள கவிதைகளில் பயின்றுவரும் அணி வகைகளைக் காணுதல் இன்றியமையாததாகிறது.

உவமையணி

"பண்பு, தொழில், பயன் என்பனவற்றின் அடிப்படையில் ஒன்றாகியும் பலவாகியும் பொருளொடு பொருள் இயைய ஒப்புமை புலப்படப் பாடுவது"[40] என உவமையணிக்கு இலக்கணம் கூறுகிறார் தண்டியாசிரியர்.

"உவமை என்பது வெறும் கவிதை உத்தியல்ல. அது மர்மங்களைப் பார்க்க உதவும் ஞானக் கண்"[41] என்ற அப்துல் ரகுமானின் கூற்றுக்கு ஏற்பவே உவமைகள் பயின்று வருவதைக் காணமுடிகிறது.

கவிதையில் அறிந்த பொருளை அறியாத பொருளுக்கு உவமை கூறுதலும், இல்லாத பொருள்களையும், பொருள்களில் இல்லாத இயல்புகளையும் உவமை காட்டும் மரபு உண்டு.

பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும் அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவிகொடாதபடிக்குத் தன் காதை அடைக்கிற செவிட்டு விரியனைப் போல் இருக்கிறேன்[42] என்பது இல்பொருள் உவமை அணிக்குச் சான்றாகிறது.

உலகில் இயல்பாக நடைபெறுகின்ற நிகழ்ச்சியின்மீது கவிஞன் தன் குறிப்பினை ஏற்றி வைத்துக் கூறுவது தற்குறிப்பேற்றணி. கற்பாரை ஈர்க்கும் வல்லமை இந்த உத்திக்கு உண்டு.

இறைவன் உண்டு என்று சாமுவேல் பவுல் ஐயர் தன் கருத்தை அறிவிக்கும்போது,

"தேவன் இல்லை யென்பார் பித்தர்
துக்கம் இல்லை என்பார் இல்லர்
கஷ்ட காலம் கேட்கும் சத்தம்
ஆவி ஏவும் சத்தம் போலாம்" [43]

என்பது இந்த அணிக்குச் சிறப்பான எடுத்துக்காட்டாக உள்ளது.

"உள்ளதை உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி. கவிஞன் தன் அனுபவத்தை மனத்தின் உயர்ந்த நிலையிலிருந்து வெளிப்படுத்தும்போது சொல், சொற்பொருள், ஒலி நயம், கற்பனை ஆகியன அவ்வெளிப்பாட்டுக்கு காரணிகளாய் அமைந்து விடுகின்றன."[44] அத்தகையதோர் நிலையினைச் சாமுவேல் பவுலிடம் காணலாம்.

"பாதாளத்தின் சிங்கத்தை
பீறிப்போடும் யேசுவே
வல்லசர்ப்பத் தலையை
நசுக்குவீர் யேசுவே." [45]

என வரும் கவிதையை உயர்வு நவிற்சியாகப் பாடுகிறார்.

உள்ளதை உள்ளபடியே வைத்துக் கூறுவது இயல்பு நவிற்சி என்பர்.

"நீர் என்னுடையவர்
நான் உம்முடையவன்
என்னை மீட்டுக்கொண்டீர்." [46]

என வரும் பகுதியும்,

"தலையில் முள் முடியோ!
கையில் மூங்கில் தடியோ!
ஆ இது என் பாவமே
முகத்தில் உமிழ்நீரோ!
முதுகில் சிலுவையோ!
ஆ இது என் பாவமே." [47]

என வரும் பகுதியும் இயல்பு நவிற்சியைக் கொண்டுள்ளன.

ஒரு பாடலில் முதலில் வந்த சொல்லோ பொருளோ பின்னர் பலவிடத்திலும் வருதல் பின்வருநிலையென்னும் அணியாகும். இது சொல் பின்வருநிலை, பொருட்பின்வருநிலை, சொற்பொருட் பின்வருநிலை, உவமைப் பின்வருநிலை என நால்வகைப்படும். இவற்றுள் சாமுவேல் பவுலின் கவிதைகளில் சொல்பின்வரு நிலையே அதிகம் காணமுடிகிறது.

"பரலோக இராஜாவே, வாழ்க!
தூதர்களின் இராஜாவே, வாழ்க!
பரிசுத்தவான்களின் இராஜாவே, வாழ்க!
சர்வலோகத்தின் இராஜாவே, வாழ்க!
இரஷண்ய இராஜாவே, வாழ்க!
என் சொந்த இராஜாவே, வாழ்க!" [48]

என வரும் அடிகளில் 'இராஜாவே வாழ்க!' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து இயேசுவின் பெருமையினைச் சுட்டிக்காட்டுகிறது.

ஒன்றைச் சொல்லி மற்றொன்றை விளங்க வைப்பது பிறிது மொழிதல் அணி. கவிஞர் தாம் கருதிய பொருளைக் கூறாது மறைத்து, அதனை வெளிப்படுத்தத்தக்கப் பிறிதொரு பொருளைச் சொல்வது பிறிது மொழிதலாகும்.

"முள்முடி தாங்கும் சிரசே நமஸ்காரம்
கோலடி தாங்கும் சிரசே நமஸ்காரம்
தெய்வீக தீர்க்கதரிசியே நமஸ்காரம்
தெய்வீக ஆசாரியே நமஸ்காரம்
தெய்வீக இராசாவே நமஸ்காரம்" [49]

என வரும் கவிதையில் இயேசுவின் சிலுவைப்பாடுகளைக் குறிப்பதாக இருந்தாலும் இதன் மூலம் நாம் அவரை வணங்க வேண்டும் என்ற இறை நம்பிக்கையையே எடுத்துரைக்கின்றது.

மோட்சப் பிராயாணத்தில் முற்றுருவகம்

மோட்சப் பிரயாணத்தில் படைக்கப்பட்டுள்ள மாந்தர்கள் உண்மை வாழ்வில் உள்ளவர்களே. இவர்களில் நல்லவர்களும் தீயவர்களும் நடுநிலையில் உள்ளவர்களும் உள்ளனர். இவர்களது பெயர்கள் அனைத்தும் மக்களின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவகங்களாகப் படைக்கப் பட்டுள்ளன. சாமுவேல் பவுல் ஐயர் மாந்தர்களின் பெயர்களை மொழியாக்கத்தில் உள்ளது போல் படைக்காமல் காப்பியக்கதைக்கு ஏற்ற வகையில் உருவகமாகப் பெயர்சூட்டிப் படைத்துள்ளார்.

பாவத்தில் உழன்ற ஒருவனே கிறிஸ்தியானாக உருவகம் செய்யப்பட்டுள்ளான் எனும் பெயரைக் கொண்டு காப்பியத் தலைவன் தனக்கு ஏற்பட்ட சோதனைகள் அனைத்தையும் வென்று மோட்ச பிராயாணத்தில் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்குகிறான். கிறித்துவனின் பல்வேறு பெயர்கள் அனைத்தும் மக்களின் பல்வேறு பண்புகளைக் குறிக்கும் வண்ணம் உருவகமாகப் படைக்கப்பட்டுள்ளன.

ஆன்மீகம், ஆத்துமா, லோகஞானி, அப்பொலியோன், பாப்பு ராட்சதன், வாயாடி, சுவிசேஷகர், உபாயி, ராட்சதன், அறிவீனன், முகஸ்துதி எனும் பல்வேறு பண்புகளைக் குறிக்கும் பெயர்கள் உருவகமாகச் சூட்டப்பட்டுள்ளன. இப்பெயர்கள் மூலம் கிறித்தவர்களின் அனைத்துப் பண்புகளும் தெரியலாகின்றன. காப்பியத்தில் லோகஞானி, அப்பொலியோன், பாப்பு ராட்சதன் ஆகியோரை இன்றியமையா மாந்தர்களாகக் குறிப்பிடலாம். யாத்திரையில் கிறிஸ்தியனின் மனம் சோர்வுறும் போதெல்லாம் அவனிடம் தோன்றி அவனை நெறிப்படுத்துபவராகச் சுவிசேஷகர் விளங்குகிறார்.

யாத்திரையில் கிறிஸ்தியானுக்கு அறிவீனன், முகஸ்துதி ஆகிய இருவரும் வழியில் துணைவர்களாக இணைகின்றனர். இறுதியில் இருவரும் மரண ஆற்றைக் கடந்து முத்தியடைகின்றனர். துணைமாந்தர்களாகப் படைக்கப் பட்டுள்ள மென்னெஞ்சன், வன்னெஞ்சன், காமமோகிதன், பிரபஞ்சன், சகாயன், அழிம்பன், விமலன், அறிவீனன், நிலைகேடன், தூர்த்தன், அறப்பகை, விடாதகண்டன், கார்வண்ணன், இணங்கு நெஞ்சன், மாயசாலகன், மாயவேடன், கண்ணிலி, நன்றிலி, குரோதி, காமி, வீணன், துணிகரன், வம்பன், விரோதி, சழக்கன், நிட்டூரன், இருட்பிரியன், முழுப்பொய்யன், விவேகி, யூகி, பக்தி, சிநேகிதி எனும் மாந்தர்பெயர்கள் அனைத்தும் பண்பு உருவகப் பெயர்களே. மனத்தின் நன்மை, தீமைக் கூறுகளே நல்ல மாந்தராகவும் தீய மாந்தராகவும் உருவகமாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

கதைக்களத்தில் உருவகம்

மோட்சப் பிராயாணத்தில் இடம்பெற்றுள்ள இடங்களின் பெயர்களும் உருவக அடிப்படையில் அமைந்துள்ளன. திட்டிவாசல், கோட்டை, கஷ்டகிரி, சிங்கார மாளிகை, மாயாபுரி, திரவியகிரி, தேவநதி, ஆனந்தமலை, மயக்கபூமி

போன்றவை பல்வேறு பண்புகளின் அடிப்படையில் உருவகமாக அமைந்த பெயர்களாகும். கிறிஸ்தியான் மோட்சப் பிரயாணம் செய்யும்போது இவ்விடங்களின் வழிசென்று இறுதியில் இரட்சணியத்தை அடைகிறான்.

நிகழ்ச்சிகளில் உருவகம்

கிறிஸ்தியான் அழிம்பனோடு செய்யும் போர் தீயமனத்தோடு செய்யும் உருவகப் போரேயாகும். கிறிஸ்தியான் தாழ்மைப் பள்ளத்தாக்கைக் கடந்து செல்லும்போது அழிம்பன் எனும் அரக்கன் கிறிஸ்தியான் முன் தோன்றுகிறான். அவனைச் சாமுவேல் பவுல்,

"அவ்வின்பம் கண்டவன்
இப்பூமியை
வாங்கத் தனக்குள்ள
எல்லாம் விற்பான்
ராஜபாதையாக
நடப்பவருக்காக
மா இன்ப நதிதான்
ஓடுதே பார்!" [50]

எனக் கூறுகிறார். கிறிஸ்தியான் அழிம்பனின் அஞ்சத்தகும் தோற்றத்தினையும் ஆரவாரத்தினையும் கண்டு அஞ்சினாலும் தேவ வல்லமையினால் அழிம்பனை எதிர்த்து நிற்கிறான். அழிம்பனின் நயவுரைகளைக் கேட்ட கிறிஸ்தியான், அழிம்பனை நோக்கி நீ சொல்வது வீடுதோறும் சென்று மீதமுள்ள உணவை உண்ணும் நாய் ஒரு சிங்கத்தினை நோக்கி, உனக்கு முடிசூட்ட வழி செய்வேன் எனக் கூறுவது போல் இருக்கிறது என்றான். பின்னர் இருவருக்கும் இடையே கடுமையான போர் நடைபெறுகிறது.

அழிம்பன் எரிமுக, வசை, கார்முக, கொடுஞ்சொல், சாபம், பகைமை, சினம் எனும் அம்புகளைக் கிறிஸ்தியான் மீது செலுத்துகிறான். அதைக் கிறிஸ்தியான் விசுவாசம் எனும் கேடயத்தால் முறியடித்து விடுகிறான். சின அம்புகளால் காயமுற்று கிறிஸ்தியான் மயங்குகிறான். அசதியின் காரணமாகச் சிறிது நெகிழ்ந்த பட்டயம் இறைவனின் திருவருளால் கரங்களில் மீண்டும் வந்தது. இறுதியாக அழிம்பனது மார்பில் திருமறை எனும் மந்திரவாளைச் செலுத்தி வெற்றி ஆரவாரம் செய்கிறான். அழிம்பன் மார்பில் வாளைப் பாய்ச்சி ஆன்மிகன் வெல்வது தீயமனதை நல்மனம் வெற்றி கொள்வதாகும்.

பாடல்களில் உருவகம்

இவ்வாறு காப்பியமே முற்றுருவகக் காப்பியமாக அமைந்திருப்பதோடு பாடல்களிலும் உருவக அணி பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாகப் பரிசுத்த ஆவியின் செயல்களை உழவுத் தொழில் முறைமை மாறுபடாமல் உருவக முறையில் ஆசிரியர் பின்வருமாறு பாடியுள்ளார்.

"பேயாளும் பேயேல்செபூலும் – என்னோடு
போராட அழிம்பனை விட்டானே பாரும்
அக்கினிப்பாணங்களோடும் – இன்றவனை
விட்டேனோ? நான் அவனை விட்டேனோ? கேளும்." [51]

எனும் இப்பாடலில் பரிசுத்த ஆவி மனம் எனும் வயலை உழுது, மெய்ப்பக்தி எனும் விதைவிதைத்து, அதனைப் பாதுகாத்து, அன்பு எனும் நீர்ப்பாய்ச்சி நலிவு எனும் களையகற்றி முளைத்த பயிரை வாடாமற் காத்து நற்கதி எனும் விளைச்சலை விளைவித்து அடியவர்களை வாழச் செய்யும் என்று கூறுகிறார். உருவக இலக்கியங்களில் மோட்ச பிரயாணம் தனிச்சிறப்பு கொண்டதாக விளங்குகிறது. காப்பிய மாந்தர், இடங்கள், நிகழ்ச்சிகள் முதலிய பல்வேறு நிலைகளில் மோட்சப் பிராயாணத்தில் முற்றுருவகத் தன்மை முழுமையும் செழுமையும் கொண்டதாகத் திகழ்கின்றது.

படிமம்

மரபுக் கவிதை உவமையையும் உருவகத்தையும் கையாளுகிறது. புதுக்கவிதைப் படிமத்தையும், குறியீட்டையும் கையாளுகிறது. உவமை உருவகங்களைவிடப் படிமம், குறியீடுகள் உயர்ந்தவை. ஏனெனில், படிமம் உள்ளார்ந்த அந்தரங்கமான, ஆழமான உறவுகளைக் காட்ட, குறியீடோ பல பொருள்களைச் சுரந்து கொண்டே இருக்கும்.

"புதுக் கவிதையினைப் பிறவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டிச் சிறக்கச் செய்வது படிமம் ஆகும்"[52] என்கிறார் தமிழ்க்குடிமகன். "புதுக்கவிதைகளில் உருவகங்களின் காட்சித் தோற்றம் மனத்தில் அழுத்தமுற்றுப் படிமங்களாக மாறுகின்றன"[53] என்கிறார் சு.இராசரெத்தினம். "பண்டைய உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி, ஒட்டணி கூட்டுக்கலவையே படிமம்"[46] என்கிறார் க.ப.அறவாணன்.

"பாவிகள் தான் பாதாளத்தில்
புலம்பியே அழுகையில்
பரிசுத்தர் பாடுகிறார் – அல்லேலூயா.
கெத்செமனேத் தோட்டத்தில்
என்னை மீட்க வென்று நீர்
இரத்த வேர்வை சிந்தினீர்
இரட்சகா! தஞ்சம், தஞ்சம்!
சிலுவைபாரம் ஏந்தி
பாவபாரம் இறக்கி
மானிடரை இரட்சித்தீர்
இயேசுவே! தஞ்சம், தஞ்சம்!" [54]

என்று குறிப்பிடுவது போலவே, படிமங்களின் ஆதிக்கத்தை கவிதைகளும் உரைநடைகளும் கொண்டுள்ளதைக் காணலாம்.

மனிதனின் பேச்சு, நடை, உடை, பாவனை எல்லாம் சமூகக் கட்டுப்பாடுகளில் உருவாக்கப்படுபவை. அதனால் போலியானவை. மனிதனில் உண்மையான ஆசைகள், எண்ணங்கள் எல்லாம் சமூகக் கட்டுப்பாட்டுக்கு அஞ்சி ஆழ்மனத்தில் சென்று ஒளிந்து கொள்ளும். அங்கே அவை படிமங்களாகவே உலாவிக் கொண்டிருக்கும். இந்தப் படிமங்களை வெளியே கொண்டு வந்தால் அதுதான் அசல் உண்மை என்பதை அறியும்போது பிரமிப்பு ஏற்படுகிறது.

குறியீடு

படைப்பாளன் தான் கூற விரும்பும் கருத்தை நேரடியாகக் கூறாது குறிப்பாக உணர்த்துவதுண்டு. அவ்வாறு குறியீட்டின் மூலம் உணர்த்துவது தற்கால இலக்கியங்களில் பெரும்பான்மையாகக் காணமுடிகின்றது.

சமீபகாலமாகப் பாத்திரத்தின் புறச்சூழ்நிலையில் இருக்கும் சில பொருள்களையும், பாத்திரத்தின் பார்வையில் அடிக்கடி கண்ணில்படும் காட்சிகளையும் பயன்படுத்தி அவற்றைப் பற்றிச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சிந்தனையில் வருவித்து வருணிப்பதாலும், விளக்குவதாலும் அந்தப் பாத்திரத்தின் மன உளைச்சலையும் சலனத்தையும் வெளியிடுவது ஆசிரியரின் ஒரு புதிய உத்தி.

கதைமாந்தரின் அனுபவங்களில் அடிக்கடி இணைந்து நிற்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை வைத்துக் கதைப் போக்கில் வருணிப்பதைக் குறியீட்டு உத்தி என்று சொல்லலாம்[55] என்னும் கருத்துக்கு ஏற்ப,

வெண்மேகங்களும் கார்மேகங்களும் காற்றினால் அடிபட்டு அகன்றுபோகிறதை நான் காணும்போதெல்லாம் இந்தத் தயவான வாக்குத்தத்தத்தை நான் நினைவுகூர்ந்து உம்மை ஸ்தோத்தரிப்பேனாக. என்னை மீட்டுக்கொண்ட இயேசுவே, உம்மிடத்தில் என்னைத் திருப்பியருளும், அப்போது நான் திரும்புவேன்[56] என வருவதில் வெண்மேகங்களும் கார்மேகங்களும் என்பது பாவங்களுக்கும் வருந்தாமைக்கும் குறியீடுகளாகும். மேலும், தியான ஆலயம் நூல் முழுவதும் குறியீட்டு உத்தியைப் பயன்படுத்தி எழுதப்பட்ட நூலாகவே காட்சியளிக்கிறது. காரணம், இயேசுவின் சிலுவைப் பாடுகளையும், இயேசுவைப் பற்றியுமே இந்நூல் விளக்குகிறது.

"நான் சாகும்போதென் ஆவியை
நீர் சேர்த்துக்கொள்ளும் மோட்சத்தை
அடையச் செய்யும் கர்த்தரே
புகழ் உமக்குண்டாகவே!" [57]

இலக்கியத்தில் அர்த்தம் என்பது படைப்புக்குள் இருப்பது அல்ல. அது எப்போதும் படைப்பை விட்டு வெளியேற முயலக்கூடியது. ஒன்று இன்னொன்றை உணர்த்துவதைக் குறியீடு எனக் கொள்ளலாம்.

"குறிக்கும் பொருளும் உணரப்படும் பொருளும் இயல்பான தொடர்பாக இல்லாமல் வலிந்து அல்லது விழைந்து தொடர்பு ஏற்படுத்தப்பெறும் பொழுது குறியீடுகள் தோன்றுகிறது"[58] எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளலாம்.

இலக்கியக் குறியீட்டில் குறிப்பான் குறியீட்டை நோக்கி நம் மனத்தைத் திருப்பி வைக்கிறது. அர்த்தம் மெல்ல மெல்லத்தான் உருவாகிறது. இலக்கியக் குறியீடுகள் அர்த்தத்தின் திசைகளைச் சுட்டுகின்றனவே தவிர எல்லைகளைச் சுட்டுவதில்லை எனலாம். வாசகரின் அனுபவத்திற்கேற்ப அது பல அர்த்தங்களோடு விரிந்து செல்லும்.

"ஒரு சரியான குறியீட்டைப் படைப்பதோடு கவிஞனின் பணி முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு அந்தக் குறியீடு தனித்துச் சுதந்திரமாக இயங்க ஆரம்பித்துவிடும். வாசகன் நினைக்கிற பொருள் எல்லாம் கவிஞனுக்கு உரியதல்ல, குறியீட்டுக்கு உரியது"[59] என்பதால் வாசகனின் புலமை குறியீட்டை விரிவடையச் செய்கிறது என்றால் மிகையன்று.

"எனக்காக இயேசுவின்
கைகள், கால்கள், விலாவில்
உண்டான காயம் ஐந்தும்
எந்நாளும் தஞ்சம், தஞ்சம்!
குருசில் தலை சாய்ந்தே
மாண்ட தேவ சுதனே!
சாய்ந்த தோளில் சாய்கிறேன்!
இரட்சகா! தஞ்சம், தஞ்சம்!"[60]

என வரும் குறியீடுகளில் கைகள், கால்கள், விலா என்பது பக்தர்களின் வறுமை, பாவம், நிம்மதி, அமைதி, மனித நேயம், சமய ஒருமையின்மை பின்பற்ற இயேசு கிறிஸ்து அனைவரின் பொருட்டுத் தன்னைச் சிலுவையில் அறைந்து கொடுத்ததை உணர்த்தி அந்தக் குறியீடுகளின் பொருள் விரிகிறது.

குறியீடு வெளியீட்டு உத்திமுறைகளில் ஒன்று என்பதால் மட்டுமே இலக்கியத்தில் இடம்பெறவில்லை. குறியீடு சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் இடம்பெற்று வருவதாலும், மனிதப் பண்பாட்டிலும் உணர்விலும் அது ஒன்றி நின்று பயன்பட்டு வருவதாலும் இலக்கியத்தில் இடம்பெறுகிறது[61] என்ற கருத்துக்கேற்ப, சாமுவேல் பவுல் அவர்களின் படைப்புகளில் குறியீடு பயின்று வந்துள்ளது.

பதினெட்டு, பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ் உரைநடை வளர்ச்சி வரலாற்றில் கிறித்தவ அருட்தொண்டர்களின் பெரும் பங்களிப்பினை அறியமுடிகிறது. தமிழ் உரைநடையின் தொன்மையை விளக்கி, காலந்தோறும் உரைநடையில் ஏற்பட்ட மாற்றங்கள் முற்கால உரைநடை, இடைக்கால உரைநடை, பிற்கால உரைநடை என தற்கால உரைநடைப் போக்குகள் வரை இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

காலந்தோறும் உரைநடை பற்றிய அறிஞர்களின் கருத்துகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலைநாட்டிலிருந்து வந்து தமிழுக்குத் தொண்டாற்றிய ஹென்றிக்ஸ் அடிகள், தத்துவப் போதகர், வீரமாமுனிவர், பர்தலொமேயு சீகன்பால்கு முதலியோரின் பங்களிப்பும், தமிழ்க் கிறித்தவர்களின் உரைநடை வளர்ச்சிக்கான பங்களிப்புகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

சாமுவேல் பவுல் ஐயரின் நூல்கள் உரைநடையில் அமைந்துள்ளதால் உரைநடையின் சிறப்பினை எளிய நடை, விளக்க நடை, என்றவாறு அவருடைய நூல்களின் மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மலைப்பகுதிகளில் வாழும் தொழிலாளர்களிடத்திலும் அவருடைய சமயப்பணி விரிவடைந்ததால் அப்பகுதி மக்களும் விளங்கிக் கொள்ளும் வட்டார மொழிநடை இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. நூலாசிரியர் அருட்தொண்டராக விளங்கியதால் நாட்குறிப்பு, கடிதம் எழுதுவதை நாள்தோறும் மேற்கொண்டுள்ளார். அதன் தாக்கம் அவருடைய நூல்களில் உள்ளதை அறிய முடிகிறது.

இயேசுகிறிஸ்து, மோட்சப்பிரயாணம், தியான ஆலயம், தியானச் சோலை, ஆத்துமநேசரின் அங்கமகத்துவம் ஆகியவை உரைநடையில் இயற்றப் பட்டுள்ள காவியங்கள். ஆகவே நூலில் இடம்பெற்றுள்ள வருணனை நடை, ஓசை நயம், பழமொழிகள் முதலானவை உரைநடையின் உயிரோட்டத்தை ஏற்படுத்தும் வண்ணம் இயல்பாகவே அமைந்துள்ளன.

ஜான் பனியனின் 'பில்கிரிம்ஸ் பிராகரஸ்' என்னும் நூல் தமிழில் மோட்சத்துக்குப் பயணம் மேற்கொள்ளுதல் என்னும் பொருள்படச் செய்யுள் வடிவத்திலும் உரைநடையிலும் தழுவல் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சாமுவேல் பவுல் ஐயரின் 'மோட்சப் பிரயாணம்' குறிப்பிடத்தக்க நூல். கதை முற்றுருவகமாகப் படைக்கப்பட்டது. ஆகையால் மோட்சப் பிரயாணத்தின் முற்றுருவகம் கதைக்களத்தில் உருவகம், நிகழ்ச்சிகளில் உருவகம், பாடல்களில் உருவகம் என நயம்பட அமைந்த நூலின் மேற்கோள் பகுதிகளை எடுத்துக்காட்டி விளக்குகிறது. மேலும், படிமம், குறியீடு முதலான உத்திமுறைகளைக் கொண்டு விளக்கும் ஆசிரியரின் உரைத்திறனையும் அறியமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. மா.இராமலிங்கம், *புதிய உரைநடை*, ப.9.
2. இரா. தண்டாயுதம், *தற்காலத் தமிழ் இலக்கியம்*, ப.9.
3. சிதம்பர ரகுநாதன், *இலக்கிய விமர்சனம்*, ப.116-117.
4. மா.இராமலிங்கம், *மு.நூ.*, ப.12.

5. *தொல்காப்பியம்*, செய்யுளியல், நூற்பா 163.
6. மேலது, *நூற்பா 229*.
7. இரா. தண்டாயுதம், *மு.நூ.*, ப.29.
8. இ. சுந்தரமூர்த்தி, *பாரதி நடையியல்*, ப.7.
9. *தமிழ்ப் பேரகராதி*, தொகுதி 4, பகுதி ஒன்று, ப.21
10. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.25.
11. சாமுவேல் பவுல், *புதிய ஏற்பாட்டு வேத புருஷர்*, ப.109.
12. சாமுவேல் பவுல், *தெளிவான பிரசங்கங்கள்*, ப.41.
13. சாமுவேல் பவுல், *கர்த்தருடைய ஜெபம்*, ப.46.
14. சாமுவேல் பவுல், *இயேசு கிறிஸ்து*, ப.36.
15. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.109.
16. சாமுவேல் பவுல், *புதிய ஏற்பாட்டு வேத புருஷர்*, ப.196-221.
17. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.26.
18. சாமுவேல் பவுல், *மோட்ச பிரயாணம்*, பக்.14.
19. எஸ்.ஜி.தானியேல், *சாமுவேல் பவுல் ஐயர் வாழ்க்கை வரலாறு*, ப.16.
20. மேலது, ப.17.
21. மா. இராமலிங்கம், *மு.நூ.*, ப.116.
22. சாமுவேல் பவுல், *மோட்ச பிரயாணம்*, பக்.69-71.
23. மேலது, பக்.76-8.
24. சாமுவேல் பவுல், *இயேசு கிறிஸ்து*, ப.656.
25. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.327.
26. மு. வரதராசன், *இலக்கிய மரபு*, ப.132.
27. இரா. தண்டாயுதம், *நாவல் வளம்*, ப.134.
28. அ.ச. ஞானசம்பந்தன், *இலக்கியக் கலை*, பக்.356-357.
29. சாமுவேல் பவுல், *மோட்ச பிரயாணம்*, பக்.183-207.
30. மேலது, ப.143.
31. சாமுவேல் பவுல், *புதிய ஏற்பாட்டு வேத புருஷர்*, ப.228.
32. சாமுவேல் பவுல், *மோட்ச பிரயாணம்*, ப.113.
33. மேலது, ப.7.

34. மேலது, ப.126.
35. மேலது, ப.184.
36. மேலது, ப.183.
37. மேலது, ப.148.
38. சி.இ. மறைமலை, *புதுக்கவிதை உத்திகள்*, ப.19.
39. *நன்னூல்*, நூற்பா 268.
40. *தண்டியலங்காரம்*, நூற்பா 31.
41. அப்துல் ரகுமான், *இது சிறகுகளின் நேரம்*, ப.75.
42. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.90.
43. சாமுவேல் பவுல், *கர்த்தருடைய ஜெபம்*, ப.8.
44. க. கைலாசபதி, *கவிதை நயம்*, ப.30.
45. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.130.
46. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.129.
47. சாமுவேல் பவுல், *தியான ஆலயம்*, ப.248.
48. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.145.
49. சாமுவேல் பவுல், *மோட்ச பிரயாணம்*, ப.149.
50. மேலது, ப.75.
51. மு. தமிழக்குடிமகன், *பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்*, ப.36.
52. சு.இராசரெத்தினம், புதுக்கவிதையில் உருவகம், தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை, ப.77.
53. க.ப.அறவாணன், *கவிதையின் உயிர் உள்ளம் உடல்*, ப.374.
54. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.151.
55. இரா. தண்டாயுதம், *நாவல் வளம்*, ப.134.
56. சாமுவேல் பவுல், *தியானச்சோலை*, ப.25.
57. மேலது, ப.45.
58. பாலா, *தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள்*, ப.74.
59. அப்துல் ரகுமான், *சோதிமிக நவகவிதை*, ப.120.
60. சாமுவேல் பவுல், *ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்*, ப.151.
61. இரா. சம்பத், *புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம்*, ப.29.

பின்னிணைப்புகள்

1. நிழற்படங்கள்

2. சாமுவேல் பவுல் ஐயரின் கிடைக்கப் பெறாத நூல்கள்

   அ. சுயமாய் எழுதின புஸ்தகங்கள்

   ஆ. மொழிபெயர்த்த புஸ்தகங்கள்

   இ. சுயமாய் எழுதின சிறு புஸ்தகங்கள்

   ஈ. மொழிபெயர்த்த சிறு புஸ்தகங்கள்

   உ. ஒற்றைத்தாள் பிரதிகள்

   ஊ. முகமதியருக்காக

3. சாமுவேல் பவுல் ஐயரைப் பற்றிய CMS (London) அறிக்கைகள்

1. நிழற்படங்கள்



ராவ்சாகிப்

சாமுவேல் பவுல் ஐயர்

1844 – 1900



சாமுவேல் பவுல் ஐயர் கடைசி 12 ஆண்டுகள் இறைப் பணியாற்றிய சிலுவை வடிவில் கட்டப்பட்ட தூய மாற்கு ஆலயம் (சாட்சியாபுரம் - சிவகாசி) முகப்புத் தோற்றம்

வலப்பக்கத் தோற்றம்



சாமுவேல் பவுல் ஐயரால் வடிவமைக்கப்பட்டு
தற்போதும் பயன்பாட்டிலுள்ள பிரசங்க பீடம் (சாட்சியாபுரம்)



சாமுவேல் பவுல் ஐயரைப் பற்றிய நினைவுக் கல்வெட்டு
(திரித்துவ பேராலயம் - பாளையங்கோட்டை)

தவச உற்சவ விழா சாமுவேல் பவுல் ஐயரால் ஏற்படுத்தப்பட்டது.
நூற்றாண்டு நினைவு மேடை

நூற்றாண்டு நினைவுக் கல்வெட்டு



சிவகாசி தாலுகாவிலுள்ள சாட்சியாபுரத்தில் சாமுவேல் பவுல் ஐயரின் கல்லறை

கல்லறை வாசகம்

2. சாமுவேல் பவுல் ஐயரின் கிடைக்கப் பெறாத நூல்கள்

அ. சுயமாய் எழுதின புஸ்தகங்கள்

1.	ஜெபபுஸ்தகச் சரித்திரம்	-	1875
2.	ஜெபபுஸ்தகத் திறவுகோல்	-	1876
3.	வேதசித்தாந்தப் பிரமாணங்கள் மேல் வியாக்கியானம்	-	1877
4.	வேதஸ்திரீகள்	-	1879
5.	வேதசாஸ்த்திர வினாக்கள்	-	1881
6.	தேவாலயமும் கூடாரமும்	-	1888
7.	வியாதிப்படுக்கைத்தோழன்	-	1898

ஆ. மொழிபெயர்த்த புஸ்தகங்கள்

1.	ஆங்கிலேயத் திருச்சபைச் சரித்திரச் சுருக்கம்	-	1873
2.	ஆயாளும் துரைசானியும்	-	1873
3.	சூரியோதயம்	-	1876
4.	சித்திரக்கதைகள்	-	1880
5.	பாலர் பாடங்கள்	-	1884
6.	இரண்டாம் புஸ்தகம்	-	1884
7.	ஜெசிக்காளின் முதலாம் ஜெபம்	-	1884
8.	கற்பனையின் மேல் கற்பனை	-	1884
9.	ராஜதயாளம்	-	1885
10.	குடும்ப ஜெபத்துணை	-	1885
11.	ராஜகட்டளை	-	1886
12.	என் ராஜா	-	1886
13.	காலைமணிச்சத்தம்	-	1886
14.	சிறுதலையணைகள்	-	1886
15.	மோட்ச ஏணி	-	1888
16.	ஜீவத் தண்ணீர்	-	1891
17.	இந்தியக் கிறிஸ்தவர்களின் குடும்ப ஜெபங்கள்	-	1896
18.	சட்டதிட்டம்	-	1896
19.	கமலம்	-	1896
20.	சுகுணா	-	1896
21.	இஸ்லாம் மார்க்கம்	-	1898
22.	இயேசுவின் அன்பான வார்த்தைகள் (4 பாகங்கள்)	-	1898
23.	சர்ச்சுமிஷன் சங்கத்தின் நூறுவருஷச் சரித்திரப்பொழிப்பு	-	1899
24.	குழந்தை ஞானஸ்நானம்	-	1898

இ. சுயமாய் எழுதின சிறு புஸ்தகங்கள்

1.	மோட்சத்தையும் நரகத்தையும் கண்டது யார்	- 1867
2.	களவுபோன பிள்ளை கதை	- 1870
3.	பூமிசாஸ்திரம், சென்னபட்டணம்	- 1873
4.	மோசேயின் சரித்திரம் அல்லது இடையன் அரசனான கதை	- 1875
5.	நீலகிரில்லாத பூமிசாஸ்திரம்	- 1875
6.	நற்கருணைத்தோழன்	- 1875
7.	இராட்சதன் கதை	- 1875
8.	வாழைப்பழக் கதை	- 1875
9.	தன்னை விற்றவன் கதை	- 1875
10.	தம்பியைக் கொன்றவன் கதை	- 1875
11.	ஒரு மந்திரி கதை	- 1876
12.	தைப்பொங்கல்	- 1876
13.	ஆயுதபூஜை	- 1876
14.	தீபாவளி	- 1876
15.	ஏவாள் - ஆதித்தாய்	- 1879
16.	எஸ்தர் ராணி	- 1879
17.	கன்னிமரியம்மாள்	- 1879
18.	சாராளின் சரித்திரம்	- 1879
19.	மஹாமகம்	- 1897
20.	எச்சரிக்கையாயிரு, நிலைத்திரு	- 1899
21.	திருநெல்வேலி சபையின் வளர்ச்சி	- 1899
22.	சுய ஆதரவு	- 1900

ஈ. மொழிபெயர்த்த சிறு புஸ்தகங்கள்

1.	சிறுவர்க்கு நற்செய்தி	- 1869
2.	ஜமீன்தாரையும் சமுசாரியையும் பற்றிய கதை	- 1871
3.	இராஜபூஷணம்	- 1871
4.	ஆட்டுக்குட்டிகதை	- 1871
5.	தமிழ் முதற்புஸ்தகம் - பதவுரையும் பொருளுரையும்	- 1871
6.	குஷ்டரோகி சுகமான கதை	- 1872
7.	முதல் மனுஷன் கதை	- 1872
8.	ஓநாய்க்கதை	- 1872
9.	செவப்புத்தாவணி	- 1872
10.	திராட்சப்பழக்கதை	- 1872
11.	கிருஷ்ணன் கதை	- 1872
12.	பிள்ளையார் கதை	- 1872
13.	கெட்ட குமாரன் கதை	- 1872
14.	திரு அவதாரச்சரிதை	- 1872
15.	கைதிகளுக்கு நல்லாலோசனை	- 1873

16. கடைகாரருக்குச் சொல்லும் நல்லாலோசனை – 1873
17. பிறனைக்கொன்றவன் கதை – 1873
18. கல்விப்பயன் – 1873
19. வாழைப்பழம் தின்கிற புதுவகை – 1873
20. நீரூற்றும் மேகமும் – 1873
21. சூரிய ஒளியை வரவிடு – 1873
22. பூர்வ பாஷை – 1873
23. இராமனுடைய படப்புஸ்தகம் – 1873
24. சின்னத்திருடன் கதை – 1873
25. சண்டைக்காரிகள் கதை – 1873
26. சீர் அழிந்த பிள்ளை கதை – 1873
27. பொய்யர் அகப்பட்ட கதை – 1873
28. ஒரு புஷ்பத்திற்காகப் பிராணனை இழந்தவன் கதை – 1873
29. வெள்ளாட்டுக்கதை – 1873
30. நன்றாய் உத்தரவு சொன்ன பிள்ளைக்கதை – 1873
31. பாலர் ஜெபங்கள் – 1873
32. ஆண்பெண் பிள்ளைகள் கதை – 1873
33. சுத்தத்தின் பிரயோஜனம் – 1873
34. சுத்த ஜலத்தின் பிரயோஜனம் – 1873
35. அரசனைப்போல் குடிகள் – 1874
36. யோசேப்பின் சரித்திரம் – 1875
37. பகையை வெல்லும் மருந்து – 1875
38. விடுதலைபெற்ற குருவிகள் கதை – 1875
39. கிரயத்துக்கு வாங்கப்பட்டவன் கதை – 1875
40. பையன்கள் கதை – 1875
41. பெண்பிள்ளைகள் கதை – 1875
42. பாடசாலைப்பிள்ளைகள் கதை – 1875
43. பாம்புக்கதை – 1875
44. பூர்வ இங்கிலாந்து – 1875
45. அடையாளங்களின் புஸ்தகம் – 1875
46. சித்திரப்படக்கதைகள் – 1875
47. கதாசரம் – 1875
48. பாலிய இரத்த சாட்சிகள் – 1875
49. முத்து வியாபாரி கதை – 1875
50. தக்கராமன் கதை – 1876
51. செங்குள்ள ராட்சதன் கதை – 1876
52. இராஜகுமாரனாகும் வகை – 1876
53. எஸ்தர் இராணியின் சரிதை (Pictorial Series) – 1876
54. தானியேலும் சிங்கமும் – 1876
55. யோசேப்பின் சரித்திரம் – 1876
56. மோசேயின் சரித்திரம் – 1876

57.	சாலமோனின் சரித்திரம்	–	1876
58.	மோட்சப் பிரயாணி	–	1876
59.	யோனா தீர்க்கதரிசியின் சரிதை	–	1876
60.	வேதத்திலுள்ள மிருகங்கள்	–	1876
61.	பாலர் ஆராதனை	–	1884
62.	மிஷன் லித்தினி	–	1888
63.	சாவால் ஜீவன்	–	1889
64.	உயிரோடு புதைக்கப்பட்ட பிள்ளை	–	1889
65.	எஸ்தர்	–	1892
66.	ரூத்	–	1892
67.	தேவாலய அஸ்திபார ஆராதனை	–	1896
68.	பஸ்காவும் ஈஸ்தர் நற்கருணையும்	–	1896
69.	பிள்ளை இன்னும் சிலநாள் தாமதிக்கலாம்	–	1896
70.	ஞானத்தாய் தகப்பன்மார்	–	1896
71.	நாம் தேவனுடைய பிள்ளைகளா ?	–	1896
72.	பெரிய வெள்ளிக்கிழமை	–	1896
73.	மேலே, மேலே, மோட்சத்துக்கு நேரே	–	1896
74.	சுவிசேஷத்தின் உண்மை(மகம்மதியருக்காக)	–	1897
75.	பாவமில்லாத நபி	–	1897
76.	இயேசு கிறிஸ்து	–	1897
77.	இயேசு கிறிஸ்துவின் பாடுகளும் உயிர்த்தெழுதலும்	–	1897
78.	இயேசு கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள்	–	1897
79.	முகம்மது	–	1897
80.	தேவனுடைய நாமங்கள்	–	1897
81.	சத்திய இஸ்லாம்	–	1897
82.	இயேசுவோ மகமதுவோ யார் நாம் நம்பத்தக்கவர்	–	1897
83.	கிராமசுகாதார விளக்கம்	–	1897
84.	பயங்கரமனிதன்		
85.	அன்புக் கதைகள்		
86.	புதையல் தேடுதல்		
87.	சுடர்விளக்கு		
88.	அரசனையும் வேலைக்காரனையும் குறித்த கதை		
89.	தவச உற்சவ ஆராதனை		
90.	தவச உற்சவ கீதங்கள்		
91.	ஸ்திரீகளுக்குரிய மரியாதை		
92.	தேவாராதனையிலிருக்க வேண்டிய ஒழுக்கம்		
93.	ஒழுக்கம்		
94.	கடைசித் தருணம்		
95.	நான் கோவிலுக்குப் போகிறதில்லை		
96.	பரிசுத்த வேதாகமும் மனைவியின் சகோதரியும்		

97. திடப்படுத்துதல்
98. லெந்துநாட்கள்

உ. ஒற்றைத்தாள் பிரதிகள்

1. புகைவண்டி
2. மங்களவிளக்கு
3. எல்லாம் ஒன்றல்ல
4. இருவழி நாட்டம்
5. வீண்சாக்குப்போக்கு
6. புயல்காற்று
7. தராசுநிறை
8. நீ ஜெபம் செய்கிறாயா ?
9. கள்ள ரூபாய்
10. நாமம் போடுதல்
11. மணியா பதரா ?
12. உனக்கு வயதென்ன ?
13. புகைவண்டிச் சீட்டு
14. இரண்டு வீடுகள்
15. நீர் என்னைப் பார்க்கிற தேவன்
16. சங்கிலி உபமானம்
17. மதிகெட்ட படவுக்காரன்
18. கங்காதீர்த்தம்
19. எருதும் அதின் எஜமானும்
20. நடக்கப்படித்தல்
21. நன்றாய் முடிவது எல்லாம்நன்றே
22. ஒரே மத்தியஸ்தர்
23. வெள்ளை அங்கி
24. இனிமேல்
25. தீபாவளி உற்சவம்
26. பொங்கல்
27. மஹாமகம்

ஊ. முகமதியருக்காக

1. உண்மையான மார்க்கம் எதுவென்று தேடுவது நம்முடைய கடமை
2. இஞ்சிலையைப்பற்றிக் கோரான் சொல்வதென்ன ?
3. பாவமன்னிப்பைக் கேள்
4. பாவமில்லாத நபி
5. இயேசு கிறிஸ்து
6. இயேசுவா, மகமதுவா யாரை நம்புவாய் ?
7. பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா.
8. மோட்சத்துக்குப் போகும் சரியான வழி.

5. சாமுவேல் பவுல் ஐயரைப் பற்றிய CMS (London) அறிக்கைகள்

Annual Report of Church Missionary society (CMS)

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, Seventy – Seventh –Year, 1875-76, Page 129,130

Edward Garbett

There being no federal native church council with which this outstation is connected, its native minister. The **Rev. Samuel Paul** cannot be regarded as an agent of the native church but rather as holding the inferior office of an assistant Missionary. Mr. Paul is under the Superintendence of the Rev. R.C. Macdonald at Madras, though he is assisted by a local native church committee. The native Christian number 244, the communicants being 118. There were three adults baptism during the year. One of these converts was a young man in the jail, who had once been a pupil is the mission school. Among the domestic servants of the European residents and visitors **Mr. Paul** has almost daily opportunities of making known way of salvation. On market-days he preaches in the bazaar, and occasionally visits other places. In this food work he sometimes has the voluntary assistance of members of his church committee. Upwards of 1500 tracts have been sold by him. In the schools 132 children are receiving instruction.

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, Annual Report – Seventy – Eighth Year / Madras and South India Mission – Tirunelvely, vol.78, 1876-77,Page 121

OTACAMUND

The **Rev. S. Paul**, native brother, has change of this station, under the Superintendence of Rev. R.C. Macdonald of Madras. The number of baptized Christians is 270 of these 135 are communicant. 6 adults were baptized during the year. A sum of Rs.147 was raised by the contribution of native Christians for church purpose. The Anglo-vernacular school contains 102 boys. If as for its headmaster a native Christian who is an under graduate of Madras University. Mr. Paul has no doubt that spiritual state of his flock is "gradually increasing".

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, 1881-82 / Vol.83, page 126.

By the Rt. Rev. of Ossari and France

OOTACAMUND

The **Rev. S. Paul** with the native pastor of the congregation of 350 souls...... Many of the members are scattered over different estates; but those of Ootacamund itself "with the few exception says Mr. Paul attend services regularly and the read the word of God in their homes; and the number of houses that hold regular family prayers as increased."...... **Mr. Paul also engages in literary works. He has written a book on *the Women of the Bible* for the Christian Vernacular Education Society and a new Tamil version of the Pilgrim Progress for the Madras Tract Society.**

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, The History of the CMS – Vol.II, 1916, Page 198

Honorary Canons

The following have been appointed by the Bishop's Honorary Canons of the respective dioceses.

W.H. Ball and F.T. Cole of Calcutta. E. Sell M. Goldsmith of the late F.W.W. Alexander of Madras.

Indian Clergy: The Indian clergy have in the 15 years increased in number from 142 to 246. During this period; 146 have been ordained and on the other hand there have been many death. Many pastors involved literary works, nearly 43 yrs. Service, under Koshi Koshi of Travancore, as his successor Arch deacon Oorren Mamen, after 48 yrs, and several valued pastors in Tinnevely, particularly the

Rev. Samuel Paul honoured by the government with the title of **Rao Sahib** for important literary work. The Rev. A. Vedanayagam Thomas learned in the classics and in 7 different languages and so on.

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, 1895, Page 214

Literary Work – "A remarkable book"

The Rev. S. Paul wrote a "Life of Christ" which the Tract Society published. This is Mr. Paul's tenth work, besides eleven books he has translated and which have been published by various societies. He has written for publication all together some 140 different treaties. The Bishop of Madras is anxious to see his labours recognised by Lambeth degree.

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, 1898-99, page 279.

Rev. Samuel Paul, Chairman of the Sachiapuram and Vegeikulam Circle Committee,

Translation work of a native clergyman recognized by the late viceroy.

A native writer of two hundred books

The last two circles on the list, the Sachiapuram and Vegai kulam circles, are in north Tinnevelly. The late **Rev. Samuel Paul**, whose death was mentioned in last year's Annual Report (page 292) and whose valuable literary work in translating are adapting various books (great and small his publications are said to have numbered more than 200) obtained for him as a Queens' birth day honour in 1897 the title of Rao Sahib, was the chairman of both these circles. It has, unhappily, not been found possible to fill him place from the ranks the Indian clergy as those who were eligible for appointment not the spared from their present spheres. Consequently Rev. E.S. Carr, the chairman of the district council, took on chairmanship temporarily, and now the Rev. F.W. Breed accepted the position. His appointment makes no change the relation of the circles to the District Council.

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, 1899, page 478.

Eugene Stock

Literary work of Native Christians

Much of good work of this kind was done also by native Christian writers.... **the Rev. Samuel Paul translated or wrote eleven Christian books in Tamil and these, with tracts made up 140 publication from his pen, among them being translation of two or three of Miss Havergal's books – which books have been reproduced in various Indian languages at the expense of the F.R. Havergal memorial fund; also a History of the Church of England, a History of the Prayer – Book, and a Tamil version of Mr. Sell's Faith of Islam.**

The Viceroy of India has lately conferred on Mr. Paul the honorable title of Rao Sahib. Rao meaning chief or Prince. It is an interesting fact that he and another Tinnevely Pastor, the **Rev. Joshua Paul,** are sons of the great Tamil preacher, **the Rev. Paul Daniel**, noticed in chapter XLIII. This ought to have been mentioned there, but the inversion of what we should call the surnames concealed the fact until after Vol.II was printed.

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, Annual Report 1899-1900 Page 314

Mission Property respected.

"THIS IS A CHRISTIAN HOUSE" **S. PAUL**

The most serious mischief was done at Sivagasi, where, after the fighting twenty-three corpses many of them headless, were found representing; probably; less than half the number killed, since the Maravars, the attacking party. Always carried of their dead and wounded to fear of recognition. The Christians of course were not involved in the dispute, and so the mission property in Sivagasi itself escaped untouched in the midst of the destruction of some eight hundred houses by full. At first too the converts themselves were spared, and indeed the chief of the rioters promised that they should not be molested. Thus, the late **Rev. S. Paul** wrote:

Many Christian wrote in front of their houses, **"This is a Christian's house,"** and thus escape from the lootings. A few hang up Christian pictures, so that the mob might have their house free from molestation. However as the mob grew strong they became unimaginable consequently over Christians in two villages suffered much. Mr. CARR also mention about the looking.

Proceedings of the CMS for Africa and the East Asia, London: Church Missionary Society, Salisbury Square, The annual Report – one-hundred-and-first year. 1900 , page 292.

Rev. S. Paul

On March 11, 1900, the death of the **Rev. S. Paul** occurred at Sachiapuram, Tinnevelly, at the age of fifty-seven years. Son of a devoted and gifted nature clergyman, the Rev. Daniel Paul, he was educated at Palamcotta Preparandi Institution, and was ordained by

the Bishop of Madras in 1874. He was the first to organize the Tamil Mission in Ootacamund, where he had previously worked as a Catechist. After-wards he was connected with the Northern Pastorate, in the city of Madras, and did a great deal for the development of the congregation at Black town. Subsequently Sachiapuram, in the Tinnevelly district, was his inadequate, and he was appointed Vice-Chairman of the native church council in Tinnelvelly, and Chairman of the Sachiapuram and Vageikulam circles **Mr. Samuel Paul** also did a good work for Tamil Christian Literature. He prepared for publication in a large number of important works – original and translation – which have been widely read by Tamil Christians. Chiefly for his literary work he was honoured by Government not long ago with the title of **"Rao Sahib"** ("Rao" is a Hindu title for a Chief or Prince). In his death the nature church loose a faithful and devoted worker.

துணைநூற் பட்டியல்

I. முதன்மை ஆதாரங்கள்

1. சாமுவேல் பவுல் ஐயர் **வேதோபகரணம்,**
Madras CKS Press,
சென்னை, 1882.

2. ...., **பழைய ஏற்பாட்டுப் புருஷர், பாகம் 1,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, 1886.

3. ...., **பழைய ஏற்பாட்டுப் புருஷர், பாகம் 2,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, 1888.

4. ...., **துக்கசாகரத் தோணி,**
The Religious Tract and Book Society,
S.P.C.K. Press, வேப்பேரி,
சென்னை, 1898.

5. ...., **தெளிவான பிரசங்கங்கள்,**
London Mission Press,
நாகர்கோவில், 1957.

6. ...., **இயேசு,**
சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்,
சென்னை, இரண்டாம் பதிப்பு, 1958.

7. ...., **தியானச் சோலை,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, மறுபதிப்பு, 1996.

8. ...., **தியான ஆலயம்,**
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
சென்னை, மூன்றாம் பதிப்பு, 1996.

9. ...., **கர்த்தருடைய ஜெபம்,**
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
சென்னை, மறுபதிப்பு, 1996.

10. ...., **உங்களோடு ஒரு நிமிடம்,**
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
சென்னை, 1996.

11. ...., **புதிய ஏற்பாட்டுப் புருஷர்**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, மறுபதிப்பு, 1997.

12. ...., **ஆத்தும நேசரின் அங்கமகத்துவம்,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, பதினான்காம் பதிப்பு, 2011.

13. ...., **மோட்ச பிரயாணம்** (மொழிபெயர்ப்பு),
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
சென்னை, ஏழாம் பதிப்பு, 2011.

II. துணைமை ஆதாரங்கள்

அ. தமிழ் நூல்கள்

14. ஆரோக்கியசாமி, இரா., **இக்கால கிறிஸ்தவ தமிழ் இலக்கியம்,**
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
சென்னை, 1983.

15. ...., **கிறித்தவ இலக்கிய வரலாறு,**
பூரண ரீத்தா பதிப்பகம்,
தஞ்சாவூர், 2010.

16. இம்மானுவேல் டேவிட் **கிறிஸ்தவ வாழ்வில் திருமறை,**
தமிழ்நாடு இறையியல் கல்லூரி,
மதுரை, 1986.

17. இராமலிங்கம், மா., **புதிய உரைநடை பண்பும் பயனும்,**
தமிழ்ப்புத்தகாலயம், பைகிராப்ஸ் ரோடு,
சென்னை, 1978.

18. ...., **இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம்,**
தமிழ்ப்புத்தகாலயம், பைகிராப்ஸ் ரோடு,
சென்னை, மூன்றாம் பதிப்பு, 1985.

19. இராமலிங்கனார் . மு **தொல்காப்பியம் செய்யுளியல்** - விளக்கம்,
மீனாட்சி புத்தக நிலையம்,
60, மேலக்கோபுர தெரு,
மதுரை, 1974.

20. இன்னாசி, சூ., **கிறித்தவத் தமிழ்க்கொடை,** தொகுதி - 1,
மெய்யப்பன் தமிழாய்வகம்,
சிதம்பரம், 2001.

21. இஸ்ரவேல் சீனிவாசகம், ம.,
ஜெயசந்திரன், ம., & **உலகம் போற்றும் உத்தமர்கள்,**
Bible Book Club,
பாளையங்கோட்டை,
இரண்டாம் பதிப்பு, 2009.

22. கிளோவிஸ் ஜி. சேப்பல் **வேதாகம வீரர்கள் பிரசங்கங்கள்,** சுவிசேஷ ஊழிய நூல் நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2005.

23. கைலாசபதி, க., **தமிழ் நாவல் இலக்கியம்,** நியு செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை, 1984.

24. சச்சிதானந்தன் **ஒப்பிலக்கியம்,** ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடி பிரஸ், 1985.

25. சந்திரன், வீ., **மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்,** பாரிநிலையம், சென்னை, 1990.

26. சம்பத், இரா.,, **புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம்,** உமா பதிப்பகம், பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை, 1992.

27. சார்லஸ் இ. கவ்மேன் **பாலைவன நீரோடைகள்,** சுவிசேஷ ஊழிய நூல் நிலையம், சென்னை, மறுபதிப்பு, 2012.

28. சிதம்பர ரகுநாதன் **இலக்கிய விமர்சனம்,** அஸ்வினி பதிப்பகம், மேற்கு சைதாப்பேட்டை, சென்னை, 2009.

29. சீனிச்சாமி, து., **தமிழில் காப்பியக் கொள்கை,** முதற்பகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

30. சுந்தரமூர்த்தி, இ., **பாரதி நடையியல்,**
ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி,
சென்னை, 1985.

31. . ..., **நடையியல் ஓர் அறிமுகம்,**
அன்பு நூலகம்,
சென்னை, 1978.

32. ஞானசம்பந்தன், அ.ச., **இலக்கியக் கலை,**
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை, எட்டாம் பதிப்பு, 1989.

33. ஞானசிகாமணி, வீ., **எ.ஆ. கிருஷ்ண பிள்ளையின் நூல்கள்**
- ஓர் ஆராய்ச்சி,
வேதாகம மாணவர் பதிப்பகம்,
சென்னை, 1978.

34. ஞான இராபின்சன் **திருமறை விளக்கவுரை** - இரண்டாம் பகுதி,
புதிய ஏற்பாடு,
இறையியல் நூலோர் குழு,
மதுரை, 1990.

35. ...., **தமிழ்க் கிறிஸ்தவ மரபு,**
தமிழ்நாடு இறையியல் நூலோர் குழு,
மதுரை, 1985.

36. தண்டாயுதம், இரா., **தற்காலத் தமிழ் இலக்கியம்,**
தமிழ்ப்புத்தகாலயம், பைகிராப்ஸ் ரோடு,
சென்னை, மூன்றாம் பதிப்பு, 1983.

37. ...., **நாவல் வளம்,**
தமிழ்ப்புத்தகாலயம், பைகிராப்ஸ் ரோடு,
சென்னை, 1986.

38 தயானந்தன் பிரான்சிஸ், தி. **கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் :**
சில செய்திகள்,
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, 2000.

39. ...., **யாமறிந்த நூல்களிலே,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, 1996.

40. ...., **கிறிஸ்தவ அருட்கவிஞர்கள்,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, 1981.

41. தானியேல், எஸ்.ஜி., **சாமுவேல் பவுல் ஐயர் வாழ்க்கை வரலாறு,**
கிறிஸ்தவ இலக்கிய சங்கம்,
சென்னை, 1999.

42. பரமானந்தம் ஐயர், சா., **கிறிஸ்தற்ற கிறிஸ்து மார்க்கம்,**
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்,
கிறிஸ்தவ ஜீவியம்,
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, மறுபதிப்பு, 2013.

43. பாலா **தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள்,**
அன்னம், தஞ்சாவூர்.

44. பென்னட், ஆர்.ஜே.சி., **திருமறை வரலாற்றுப் பாத்திரங்கள்,**
கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்,
சென்னை, 2011.

45. மனுவேல், இர. ஆ., **தவக்கால தினசரி தியானங்கள்,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997.

46. மீனாட்சி முருகரத்தினம் **கல்கியின் சிறுகதைக் கலை,**
சர்வோதயா இலக்கிய பண்ணை,
மதுரை, 1976.

47. முருகேச பாண்டியன், ந., **மொழிபெயர்ப்பியல்,**
உயிர் எழுத்து பதிப்பகம்,
திருச்சி, 2008.

48. வரதராசன், மு., **இலக்கிய மரபு,**
பாரி நிலையம்,
சென்னை, 2000.

49. வில்லியம் மெக்டொனால்டு, **இன்றைய இறைத்தூது,** (மொழிபெயர்ப்பு)
மோரியா ஊழியங்கள்,
சென்னை, 2008.

50. வெள்ளைவாரணனார் **தொல்காப்பியம் செய்யுளியல் - உரைவளம்,**
மதுரை காமாராசர் பல்கலைக்கழகம்,
மதுரை, 1989.

51. வேங்கடசாமி, மயிலை. சீனி., **கிறித்துவமும் தமிழும்,**
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,
சென்னை, 2000.

52. ஜேக்கப், ஆர்.எஸ்., **தமிழில் முதல் சிறுகதை எது?**
நியு செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்,
சென்னை, 2012.

ஆ. தொகுப்பு நூல்கள்

53. **பரிசுத்த வேதாகமம்**
இந்திய வேதாகம சங்கம்,
பெங்களூர்.

54. **இவர்களைத் தெரியுமா?**
நெல்லைப் பேராய இலக்கிய நிலைவரக் குழு,
பாளையங்கோட்டை, 2007.

55. **தினதியானம்,**
வேதாகம ஐக்கிய சங்கம்,
சென்னை, 2012.

56. **தின தியானம்** - மாலை வேளைக்குரியது,
சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்,
சென்னை, 1996.

இ. ஆங்கில நூல்கள்

57. John Bunyan **The Pilgrim's Progress,**
Lutterworth Press,
London, 1966.

58. Christian Missionary Society **CMS Report - 1899**
London.

59. Madras Religious Tract and Book Society **Seventy - Sixth Annual Report 1894,** SPCK Press,
Vepery, Chennai, 1895.

ஈ. அகராதி/ Dictionary

60. கதிரைவேற் பிள்ளை, **தமிழ்ப் பேரகராதி,** மதுரை காமாராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1899.

61. **பரிசுத்த வேதாகமம் பெயர் பொருள் விளக்கம்,** நற்செய்தி பதிப்பகம், திருவில்லிபுத்தூர்.

62. Oxford University **Oxford Collocations,** Oxford University Press, Newyork, 2002.

63. James Hastings **Encyclopaedia of Religion**, Vol.8, T&T Clark Ltd., Edinburgh, 1980.

உ. இணையதளம்

64. http://:image.library/yele.edu.divinitycontent./dayepl

சாமுவேல் பவுல் ஐயரின்

புகழ்வாய்ந்த இலக்கியப் படைப்புகள்

- ஆத்தும நேசரின் அங்கமகத்துவம்
- வேதோபகரணம்
- மோட்சப்பிரயாணம்
- தியானச்சோலை
- தியான ஆலயம்
- கர்த்தருடைய ஜெபம்
- புதிய ஏற்பாட்டுப் புருஷர்
- பழைய ஏற்பாட்டுப் புருஷர்
- வேத ஸ்திரீகள்
- துக்க சாகரத்தோணி
- தெளிவான பிரசங்கங்கள்
- இயேசு கிறிஸ்துவின் ஜீவியம்
- சாமுவேல் பவுல் ஐயரின் வாழ்க்கை வரலாறு